
# மெய்ப்பொருள்

மெய் - 01 | ஆண்டு 2000/2001 | இதழ் - 01



## இந்துப் பண்பாட்டுக் கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

இலங்கை

B.P. Shanthy.

# மெய்ப்பொருள்

மெய் - I

கல்வியாண்டு 2000/2001


*இதழாசிரியர்*

செல்வன். T.மகிந்தன்

*இணை இதழாசிரியர்*

செல்வி. S.யுகந்தினி



இந்துப் பண்பாட்டுக் கழகம்

யாழ் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

யாழ்ப்பாணம்

இலங்கை.

2002.

# துணைவேந்தரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துப் பண்பாட்டுக் கழகத்தினால் முதன்முதலாக வெளியிடப்படுகின்ற "மெய்ப்பொருள்" எனும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்துக்களின் வாழ்க்கை வரலாறு கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது. வரலாற்றில் கல்வியை மட்டுமன்றி கல்வியோடு தொடர்புடைய புதிய செல்நெறியையும், புதிய பரிமாணமிக்க ஆய்வுகளையும், சமூகத்தின் வளர்ச்சிக்கான பங்களிப்பினையும் நாட்டில் உயர் கல்விப்பீடமாக விளங்கும் பல்கலைக்கழகமே வழங்க வேண்டும். இந்த வகையில் எமது பல்கலைக்கழகத்தின் இன்று செயற்படுகின்ற பல்வேறு துறை சார்ந்த கழகங்கள், மன்றங்கள் சிறந்த முறையில் காலந்தோறும் மலர்கள், சஞ்சிகைகளை வெளியிட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இவற்றுள் உள்ளடங்கும்ஆக்கங்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பன மென்மேலும் அவர்களது சிறந்த ஆளுமையைக் கொண்டனவாக அமைதல் வேண்டும்.

இந்துநாகரிகம், இந்து மெய்யியல், சமஸ்கிருதம் ஆகிய கற்கை நெறி சார்ந்த விரிவுரையாளர்களினதும் மாணவர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி முதன்முறையாக இந்துப் பண்பாட்டுக் கழகத்தினால் வெளியிடப்படுகின்ற இச்சஞ்சிகையானது அவர்களிடையேயுள்ள திறமைகளை வெளிக்கொணர்வதோடு சிந்திக்கும் ஆற்றலையும் ஆளுமையையும் மென்மேலும் வளர்ப்பதற்குத் தளமாக அமையும்.

சிறந்த ஆக்கங்கள் அவ் ஆக்கங்களைக் கொண்ட சஞ்சிகைக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்குகின்றன. அந்த வகையில் இம்மூன்று கற்கைநெறிகள் அடங்கி வெளிவரும் "மெய்ப்பொருள்" எனும் சஞ்சிகையும் புதிய பரிமாணத்தைப் பெறுகின்றன. இவ்வாறாக இச்சஞ்சிகை காலந்தோறும் தொடர்ந்து வெளிவருதல் வேண்டும்.

இச்சஞ்சிகை வெளிவர உழைத்த விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இந்துப்பண்பாட்டுக்கழகத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்.

# கலைப்பீடாதிபதியின் ஆசியுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையின் நீண்டகால வளர்ச்சியின் வெளிப்பாடாக "மெய்ப்பொருள்" என்ற சஞ்சிகை உதயமாவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இத்துறையின் தலைவராகப் பல வருடங்களாகப் பணியாற்றிய எனக்கு இந்துநாகரிகம், இந்துமெய்யியல் சார்ந்த மாணவர்களின் இவ்வரிய முயற்சி இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. பல்கலைக்கழக இலட்சியங்களாகிய கற்றல், கற்பித்தல், ஆய்வு செய்தல் ஆகியவற்றை எட்டுவதற்கான சிறந்த ஊடகமாக இச்சஞ்சிகை மிளிர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கல்வியின் உண்மையான நோக்கம் ஒழுக்கம், பண்பாடு மிக்க மாணவர்களை உருவாக்குவதே. அத்தகைய நோக்கங்களுக்கு மாணவர்களை இட்டுச் செல்லும் சிறந்த சஞ்சிகையாக "மெய்ப்பொருள்" விளங்குமெனத் திடமாக நம்புகிறேன். எமது பண்பாட்டின் சீர்மைபெற்ற விழுமியங்களை கலைசார்ந்த நுட்பங்களை - உயர்ந்த தத்துவங்களை - சமய வாழ்வியல் சார்ந்த அம்சங்களை யாவரும் உணர்ந்து நயக்கத்தக்கதாக சிறந்த ஆக்கங்களைத் தாங்கி "மெய்ப்பொருள்" வெளிவருவது வரவேற்கத்தக்கது. மாணவர்களின் அறிவின் விரிவாக்கத்திற்கு "மெய்ப்பொருள்" உந்து விசையாக அமைவதாகுக.

மெய்ப்பொருள் நாட்டமே அறிவுக்கு அடிப்படை, எனவேதான் அறிவு உடைமை என்ற அதிகாரத்தில் வள்ளுவப் பெருந்தகை,

**"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

எனத் தெளிவுபட கூறியுள்ளார். வள்ளுவன் வழிநின்று "மெய்ப்பொருள்" தன் பணியை சிறப்பாக நிறைவேற்றுமென நம்பிக்கை கொள்கிறேன். இச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்து மாணவர்களது சிந்தனைக்கும் எழுத்தாற்றலுக்கும் தளமாக அமைவதாகுக. இச்சஞ்சிகை வெளியீட்டில் மனமகிழ்ந்து நிற்கும் துறைத்தலைவர், துறைசார் விரிவுரையாளர்கள், இந்துப்பண்பாட்டுக் கழகத்தினர், மாணவமணிகள் ஆகிய அனைவருக்கும் எனது நல்லாசிகளும் பாராட்டுக்களும் உரித்தாகுக!

**பரமேஸ்வரனது புண்ணிய பூமியிலிருந்து "மெய்ப்பொருள்"**
**பரப்பும் சிந்தனைகள் திக்கெட்டும் சென்றடைவதாகுக!**

**கலைப்பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**பேராசிரியர் கலாநிதி**
**ப.கோபாலகிருஷ்ண**

# பெருந்தலைவர் - துறைத்தலைவரின் வாழ்த்துரை

"ஓம் தஸ்மை ஸ்ரீ குருவே குமராய நம"

இந்து நாகரிகத்துறையின் "இந்துப்பண்பாட்டுக் கழகத்தி"னரால் "மெய்ப்பொருள்" என்னும் அதியற்புத நாமம் கொண்ட ஒரு புதுமலரின் முதலாவது கலையிதழ் மலர்ந்து வெளிவருவதனையிட்டு நாம் அளவற்ற மகிழ்வடைகின்றோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தினரின் ஏனைய துறைசார்ந்த மன்றங்களைப் போன்று "இந்துப் பண்பாட்டுக்கழகம்" எமது பல்கலைக்கழகத்தின் நீண்ட நெடும் வரலாற்றுப் பயணத்தில் தனது சின்னஞ்சிறிய முதல் பாதங்களைப் பதிக்கின்றமை எமது துறைக்குப் பெருமை சேர்ப்பதாகும். இம்மலரானது அறிவு சார்ந்த புலமையாளரது நுண்மான் நுழைபுலமிக்க கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளால் பொலிவுடன் விளங்கவும், புதிய தகவல் தொழில்நுட்பத்திலும் தமது பன்முகப் பரிமாணங்களையும் பலதுறை ஆற்றல்களையும் வளர்க்க உதவும் கட்டுரைகளையும் தாங்கி வெளிவர வேண்டும் என வாழ்த்துகிறோம்.

அறிவுத்துறையில் மட்டுமன்றி ஆன்மீகத்துறையிலும் இந்துப் பண்பாட்டுப் பாரம்பரிய விழுமியங்களைக் கட்டிக் கண்போலக் காப்பதிலும் இம்மலருக்குப் பெரும் பங்கும் பொறுப்புணர்வும் கடப்பாடும் உண்டு என்பதனையும் இக்கழகத்தினர் உணர்ந்து வாக்கும் வாழ்வும் ஒன்றாகி செயலாற்ற வேண்டும் எனவும் நல்லைக்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

*"கருத்தரிய சிற்சபையில் நர்த்தனமிடும்*
*கருணாகரக் கடவுளே*
*திரிகரணசுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்"*

*"சிவமயமே எங்கும் சிவமயமே*
*சிவமாக்கும் நெறியே சித்தார்த்தமாகும்"*

திருமதி கலைவாணி இராமநாதன்
தலைவர்/இந்துநாகரிகத்துறை,
பெருந்தலைவர்/
இந்துப்பண்பாட்டுக்கழகம்,

# பதிவாளரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எத்தனையோ மலர்கள் மலர்கின்றன. அவற்றில் ஒன்றாக இல்லாது தனக்கென ஓர் தனித்துவத்துடன் "இந்து பண்பாட்டுக் கழகத்தின்" அரும்பெரும் ஆக்கமாக இந்துப்பண்பாட்டுப் பாரம்பரியத்தை வேரூன்ற வைக்கும் ஓர் அரிய வெளியீடாக "மெய்ப்பொருள்" மலர்கின்றது. தமிழர்களாகிய நாங்கள் எத்தனையோ இன்னல்களுக்கும் மத்தியில் எங்கிருந்தாலும் எமது தனித்துவப் பண்பாட்டுப் பாரம்பரியத்துடன் வாழ்ந்து வருகின்றோம் என்றால் அதற்கு வித்தாக விளங்குவது எங்களில் ஊறியுள்ள இந்தப் பாரம்பரியமே என்பது வெள்ளிடைமலை.

இத்தகைய ஒரு வரலாறு கொண்ட பாரம்பரியம் பேணப்பட, புத்துயிர் பெற, புதுவேராக அல்லி விடுவதுதான் "மெய்ப்பொருள்".
தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறுகின்றார்

**"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்**
**அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"** என்று

அதே போல் யாழ்.பல்கலைக்கழகத்தின் மகுட வாசகமான "மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் மெய்ப்பொருள் உணர்ந்து வாழ்ந்து வருவோமானால் என்றும், எங்கும், எப்பொழுதும் ஓர் துன்பம் இல்லாமல், துன்பம் எங்களை நெருங்காமல் அமைதியான பண்பான வாழ்க்கையை அனுபவிக்க இயலும் என்பதே அங்ஙனம் வாழ்ந்தவர்கள் எங்களுக்கு காட்டிய வழியாகும்.

எனவே இன்று மலரவிருக்கும் "மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் மெய்ப்பொருள் உணர்ந்து வாழ்ந்து வருவோமானால் என்றும், எங்கும், எப்பொழுதும் ஓர் துன்பம் இல்லாமல், துன்பம் எங்களை நெருங்காமல் அமைதியான பண்பான வாழ்க்கையை அனுபவிக்க இயலும் என்பதே அங்ஙனம் வாழ்ந்தவர்கள் எங்களுக்கு காட்டிய வழியாகும்.

எனவே இன்று மலரவிருக்கும் "மெய்ப்பொருள்" அதன் ஒவ்வொரு இதழும் வாடாமல்லிகையாக மணம் பரப்பி உடல், உள வளர்ச்சிக்கும், அறிவியல் சிந்தனைக்கும் அருமருந்தாக அமைந்து விளங்கவும் இந்த மலர் தொடர்ந்து வீசுகின்ற நறுமணத்தின் மூலம் மக்கள் நலம்பெற வேண்டும் என்று நல்லாசி கூறி இம்மலரின் மூலம் மக்கள் அமைதி அடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கும்.

திருமதி. நாகேந்திரராணி தங்கராஜா
பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்.

# இந்துப் பண்பாட்டுக்கழகப் பெரும் பொருளாளர் ப.கணேசலிங்கம் அவர்களின் வாழ்த்துரை.

இந்துப் பண்பாட்டு விழுமியங்களை பல்கலைக்கழக மத்தியிலும் சமூகத்தின் மத்தியிலும் நிலைநிறுத்தப் பாடுபடுவதுடன், இந்துப் பண்பாட்டுக் கற்கைகள் மாணவர்களின் பல்துறை சார் எழுச்சிக்கும் வழிவகுப்பதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு 31.01.2001 அன்று புதன்கிழமை இந்துப் பண்பாட்டுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்துநாகரிகம், இந்து மெய்யியல் கற்கைநெறிகளைப் பயில்கின்ற மாணவ, மாணவிகளை உள்ளடக்கிய ஓர் அமைப்பினை உருவாக்கி இந்துப்பண்பாட்டு விழுமியங்களை பல்கலைக்கழக மட்டத்திலும், சமூக மட்டத்திலும் பேண வேண்டும் என்ற கலைப்பீடாதிபதியும் இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கலாநிதி.ப.கோபாலகிருஷ்ண ஐயர் (அகில இலங்கைச் சமாதான நீதிவான்) அவர்களின் நீண்டகாலச் சிந்தனையில் உதித்ததே இக் கழகமாகும். இக் கழகத்தின் வளர்ச்சிக்கு இந்து நாகரிகத்துறையைச் சார்ந்த துறைத்தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் உறுதுணையாக விளங்குகின்றனர். இந்துப் பண்பாட்டுக் கழகத்தின் துணைநோக்கங்களுள் ஒன்று, இந்துப்பண்பாடு தொடர்பான கருத்துக்களையும் கண்ணோட்டங்களையும் எழுத்து வடிவில் வெளிக்கொணருதல். இந் நோக்கத்தினை நிறைவு செய்யும் வகையில் மாணவர்களினதும், விரிவுரையாளர்களினதும் ஆக்கங்கள் தாங்கி "மெய்ப்பொருள்" என்னும் சஞ்சிகை முதன் முறையாக வெளிவருவதையிட்டு ஈழத்து இந்து சமூகம் பெரும் மகிழ்ச்சியடைகின்றது. குறிப்பாக யாழ்.பல்கலைச் சமூகம் பெருமையடைகின்றது.

இந்துப் பண்பாட்டுக் கழகச் சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்கள் ஒவ்வொன்றும் இந்து சமூகத்தினரை பலநிலைகளிலும் வழிப்படுத்தும் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. இம் முயற்சியில் ஈடுபட்டுழைத்த இந்துப்பண்பாட்டுக் கழகத்தினரைப் பாராட்டுகின்றேன். அத்துடன் இச் சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**"சிவாயநம என்று சிந்தித்திருப் போர்க்கு**
**அபாயம் ஒருநாளுமில்லை"**

நன்றி.

ப.கணேசலிங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

28.04.2002.

# தலைவரின் உள்ளத்தில் இருந்து

யாழ் பல்கலைக்கழக இந்துப் பண்பாட்டுக்கழகத்தின் முதலாவது ஆக்கமாகிய மெய்ப்பொருள் எனும் சிறப்பு மலர் வெளிவருவது தொடர்பாக ஓரிரு வார்த்தைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது கழகம் குறித்த கால பகுதியில் தன்னாலியன்ற பணிகளைச் செய்துள்ளதையிட்டு மனப்பூரிப்படைகிறேன். இந்துப் பண்பாட்டுக்கழகம் இந்துநாகரிகம், இந்து தத்துவம், சமஸ்கிருதத்துறை சார்ந்த மாணவர்களை உள்ளடக்கி வளர்ந்து வருகிறது.

இந்துப்பண்பாட்டு மெய்ப்பொருள் இன்றைய யுகத்தின் சமூகத்துக்கு தேவையான சமய பண்பாட்டினை எடுத்துக் காட்டுவதாக விளங்குகிறது. இந்நூல் வெறும் வாசனை நூலாக மாத்திரமன்றி சமய பண்பாட்டு காவல் நூலாகவும் விளங்க வேண்டும் என்பதே எமது வேணவா ஆகும். இந்நூல் இந்துக்களின் மத்தியில் சமய, சமூக விழிப்பை ஏற்படுத்துவதன் மூலம் எமது சமயத்திற்கு கிடைத்த வெற்றியாகும். இந்நூல் பல்கலைக்கழக மாணவருக்கு மாத்திரமன்றி இந் நாட்டு மக்களுக்கும் வழிகாட்டியாக மிளிருமென நம்புகிறேன்.

இம் மலர் வெளிவருவதற்கு எமக்கு பல்வேறு வழிகளிலும் ஆலோசனை வழங்கி செயலாக்கம் தந்த கலைப்பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி.ப.கோபாலகிருஷ்ணஐயர் அவர்கட்கும் மன்ற பெருந்தலைவர் கலைவாணி இராமநாதன் அவர்கட்கும் மன்ற பெரும் பொருளாளர் திரு.ப.கணேசலிங்கம் அவர்கட்கும் மற்றும் இந்து நாகரிகத்துறை சார்ந்த, துறை சாராத பல்கலைக்கழக விரிவுரையாளர், மாணவ, மாணவிகள் அனைவர்க்கும் எனது நன்றிகள்.

எமது கழக எதிர்காலப் பணிகள் மேலும் சிறக்கவும் வெற்றி பெறவும் எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரனின் திருவருளைப் பிரார்த்தித்து விடைபெறுகிறேன்.

நன்றி

தலைவர்,
இந்துப்பண்பாட்டுக் கழகம்.

# மன்றச் செயலாளரின் இதயத்திலிருந்து........!

இந்துக்களின் தனித்துவமான பண்பாட்டையும் சமயகலாசார அம்சங்களையும் மேம்படுத்தும் முகமாக தோற்றுவிக்கப்பட்ட கழகம் இந்துப் பண்பாட்டுக்கழகம் ஆகும்.

எமது கழகம் பிரசவிக்கப்பட்டு ஒரு வருடத்தினுள் தன் கன்னி நூலை வெளியிடுகின்றது. யாழ் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடம் சார் ஒவ்வொரு துறையினரும் தத்தமக்கு ஒவ்வொரு கழகத்தை வைத்திருப்பதும் எமது இந்துநாகரிகத்துறைசார் மாணவரின் வளர்ச்சிக்கும், ஆளுமை விருத்திக்கும் வெளிப்பாட்டிற்குமான தேவையை உணர்ந்து இன்றைய கலைப்பீடாதிபதி பேராசிரியர்.கலாநிதி.ப.கோபாலகதிருஷ்ண ஐயர் அவர்களால் 31.01.2001 அன்று இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

எமது கழக நிதித்தேவையை வளப்படுத்தும் முகமாக நாம் 'சாக்ஸ விளையாட்டு' ஏற்பாடு செய்து நடாத்த திட்டமிட்டு இடம் கேட்டபோது தந்துதவிய புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி அதிபர் உயர்திரு.எஸ்.ஆறுமுகம் அவர்கட்கும் பாடசாலை சமூகத்திற்கும் நிகழ்வின்போது உதவிய கல்லூரி மாணவர்களும் நன்றிக்கு உரியவர்கள்.

வீரதீரச் செயல்களைச்செய்து மக்கள் மனங்கவர்ந்த வடமராட்சி சாண்டோ துரைரத்தினம் அவர்களின் கழகத்தினர்க்கும் கராட்டி நிகழ்வுகளை நடாத்தி எம்கழக நிதிசேகரிப்புக்கு ஒத்துழைப்புத்தந்த A.O.M.O கழகத்தினர்க்கும் றேமன் மாஸ்டருக்கும் நாம் என்றென்றும் நன்றிக்குரியவர்கள். இன்னும் இந்நிகழ்வு சிறப்புற நடைபெற உதவிசெய்த புத்தூர் சிறுப்பிட்டி நண்பர்களும் ஒலி அமைப்புச்செய்த நாதன் சவுண்ட் சேவிஸ் முதலானவர்களும் இங்கு நினைவு கூரத்தக்கவர்கள்.

இவை யாவற்றிற்கும் மேலாக நாம் சோர்ந்த போதெல்லாம் எமக்கு உற்சாகமளித்து எமது செயற்பாட்டின் குறைகளை சுட்டி நிறைகளை பெற எம்மை வழிநடத்திய வழி நடத்துகின்ற எமதுகழக பெரும்பொருளாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் உயர்திரு ப.கணேசலிங்கம் அவர்கள் எமது வணக்கத்திற்கும் நன்றிக்குமுரியவராவர். இன்று எமது கழகத்திற்கு உறுதுணையாக நின்றுதவுகின்ற இந்துநாகரிகத்துறை தலைவர் திருவாட்டி கலைவாணி இராமநாதன் அவர்களும் நன்றிக்குரியவராவர்.

எமது கழகம் வருங்காலங்களில் தனது செயற்பாட்டை நூல் வெளியிடுதலுடன் நிறுத்தாது கருத்தரங்குகள் மற்றும் மக்கள் மத்தியிலான சைவசமய விழிப்புணர்வு, மதமாற்றங்களை தடுத்தலுக்கான செயற்பாடுகள் என விஸ்தரிக்கவுள்ளது.

வாழிய கழகம்!

செயலாளர்

இந்துப்பண்பாட்டு கழகம்.

# இதழாசிரியர்களின் எண்ணத்திலிருந்து ..........

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

யாழ் பல்கலைக்கழக பண்பாட்டுக்கழகம் தன்னுடைய முதல் வெளியீடான "மெய்ப்பொருள்" எனும் சஞ்சிகையினை (இதழ் 1) புதியதோர் பரிமாணத்தில் இவ்வாண்டு உங்கள் கரங்களில் தவழவிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றது. இந்நூலானது பல கஷ்டங்கள், இன்னல்கள் மத்தியிலும் எமது கழகத்தின் உறுப்பினர்களது அயராத முயற்சியினாலும், துறைசார்ந்த மாணவர்களின்து கடின உழைப்பினாலும் வெளிக்கொணரப்படுகின்றது.

இன்று உலகம், விஞ்ஞானம் தொழில்நுட்பம், பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றில் பெருவளர்ச்சி கண்டு உலகம் சுருங்கிய நிலையில் காணப்பட்டாலும். அவற்றின் செயற்பாட்டிற்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று காணப்படுகின்றது. அதுவே "மெய்ப்பொருள்" எனும் தத்துவத்திற்கு அமையவே எம் துறை சார்ந்தவர்களிற்கு மட்டுமன்றி அனைத்துத் துறைசார்ந்தவர்களிற்கும் பயன்படக்கூடிய வகையில் இது அமைகின்றது.

"மெய்ப்பொருள்" ஆனது தனக்குரிய காலப்பகுதியில் வெளிவரமுடியாமைக்கு பல இடஞ்சல்களும், தடங்கல்களும் ஏற்பட்டமையால் உங்கள் கரங்களில் தவழ முடியவில்லை என்பதற்கு இதன் இதழாசிரியர்கள் என்ற ரீதியில் மனம் வருந்துகின்றோம். இச் சஞ்சிகை சிறப்புற வெளிவரத் தரமான ஆக்கங்களைத் தந்துதவிய விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இதற்கு பெருமைசேர்க்கும் வகையில் ஆசிச் செய்திகள் வழங்கிய துணைவேந்தர், கலைப்பீடாதிபதி, துறைத்தலைவர், பெரும் பொருளாளர் ஆகியோரிற்கும் நாம் சென்ற போதெல்லாம் பல வழிகளிலும் ஆலோசனைகளை வழங்கி எம்மை நெறிப்படுத்திய துறைத்தலைவர், திருமதி கலைவாணி-இராமநாதன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன், பெரும் பொருளாளர் திரு.ப.கணேசலிங்கம் (சிரேஷ்ட விரிவுரையாளர்) மற்றும் துறைசார்ந்த விரிவுரையாளர்களுக்கும், நம்மோடு தோள்நின்று உழைத்த மாணவ நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எனி வரும் ஒவ்வொரு ஆண்டிலும், உரிய காலப்பகுதியில் "மெய்ப்பொருள்" சஞ்சிகையானது தனது பெயரிற்கு ஏற்ப பல கட்டுரைகளைத் தாங்கி வரவேண்டும். அதற்கு தொடர்ந்து வரும் செயற்குழுக்கள் அயராது உழைக்க வேண்டும் என்பதோடு பல்துறை சார்ந்த வகையிலும் கழகத்தின் என்பதோடு பல்துறை சார்ந்த வகையிலும் கழகத்தின் செயற்பாடுகள் அமைந்து எமது கழகத்திற்கும், துறைக்கும் பெருமை சேர்க்க வாழ்த்தி விடைபெறுகின்றோம்.

நன்றி.

**இந்துப்பண்பாட்டுக்கழகம்,**
**யாழ் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி.**
**யாழ்ப்பாணம்.**

இதழாசிரியர்கள்
**த.மகிந்தன்**
**செ.யுகந்தினி**

உ
ஸ்ரீஇராம ஜெயம்
"இருளிலிருந்து என்னை ஒளிக்கு இட்டுச் செல்வாயாக"

# இந்துப் பண்பாட்டுக் கழக செயற்குழு
## 2000/2001

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | – | திருமதி கலைவாணி இராமநாதன் (துறைத்தலைவர்) |
| பெரும் பொருளாளர் | – | திரு.ப.கணேசலிங்கம் B.A(HONS) M.Phil |
| தலைவர் | – | செ.ரூபகுமார் |
| துணைத் தலைவர் | – | சு.சுதர்சன் |
| செயலாளர் | – | தி.செல்வமனோகரன் |
| துணைச் செயலாளர் | – | ச.நாகேஸ்வரி |
| இளம் பொருளாளர் | – | க.தாட்சாயினி |
| பத்திராதிபர் | – | த.மகிந்தன் |
| இணைப்பத்திராதிபர் | – | செ.யுகந்தினி |
| நிர்வாகசபை உறுப்பினர் | – | ச.முகுந்தன்<br>கி.கந்தவேள்<br>ப.தமிழ்மாறன்<br>சௌ.சரிகுமாரசர்மா<br>கா.இராசதுரை<br>சீ.மகிந்தினி<br>பா.பத்மநாதன்<br>செ.ஜெயக்குமார்<br>க.ரூபினி |

# இந்துப் பண்பாட்டுக் கழகம்
# யாழ் பல்கலைக்கழகம் - திருநெல்வேலி.
## செயற்குழு - 2000 / 2001



இருப்பவர் :- (இடமிருந்துவலம்) தி.செல்வமனோகரன், செ.ரூபகுமார், திருமதி.கலைவாணி இராமநாதன் (பெருந்தலைவர்), பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர்), பேராசிரியர்.ப.கோபாலகிருஷ்ணன் (கலைப்பீடாதிபதி), திரு.ப.கணேசலிங்கம் (பெரும்பொருளாளர்), க.தாட்சாயிணி

நிற்பவர் :- (இடமிருந்துவலம்) சீ.மகிந்தினி. க.ரூபினி, செ.ஜெயக்குமார், பா.பத்மநாதன், த.மகிந்தன், சு.சுதர்சன், ச.முகுந்தன், கா.இராசதுரை, கி.கந்தவேள், சௌ.சசிகுமாரசர்மா, செ.யுகந்தினி, ச.நாகேஸ்வரி

## மெய்யின் உள்ளே.......


| | |
|---|---|
| ❖ துணைவேந்தரின் ஆசிச்செய்தி | III |
| ❖ கலைப்பீடாதிபதியின் ஆசியுரை | IV |
| ❖ பெருந்தலைவர் – துறைத்தலைவர் வாழ்த்துரை | V |
| ❖ பதிவாளரின் ஆசிச்செய்தி | VI |
| ❖ பெரும்பொருளாளரின் வாழ்த்துரை | VII |
| ❖ தலைவரின் உள்ளத்திலிருந்து | VIII |
| ❖ மன்றச் செயலாளரின் இதயத்திலிருந்து | IX |
| ❖ இதழாசிரியர்களின் எண்ணத்திலிருந்து | X |
| ❖ இந்துப்பண்பாட்டுக்கழக செயற்குழு | XI |
| 01. பஜகோவிந்தம் | 01 – 07 |
| 02. சேர் பொன் இராமநாதன் அவர்களின் ஆன்மீக வழிகாட்டல் | 08 – 11 |
| 03. கௌடில்யர் கூறும் அரசும் சமூகநலசேவையும் | 12 – 16 |
| 04. திருக்குறளும் மனித வாழ்வும் | 17 – 23 |
| 05. இராமகிருஷ்ணரும் இராமலிங்கரும் | 24 – 29 |
| 06. சைவசித்தாந்தத்தில் ஆகம அளவை | 30 – 34 |
| 07. இந்துப்பண்பாட்டு மரபில் சித்தர்களால் வளர்த்து எடுக்கப்பட்ட "வர்மக்கலை" அருகி வரும் ஓர் அறிவியல் விந்தை | 35 – 39 |
| 08. அகந்யா | 40 – 42 |
| 09. வீரசைவம் | 43 – 48 |
| 10. ஓவியக்கலை மரபில் சித்தன்னவாசல் ஓவியங்கள் | 49 – 52 |
| 11. திருக்கோயில் விக்கிரக அமைப்புக்களும் பூசை வழிபாட்டு முறைகளும் | 53 – 57 |
| 12. திருமூலர் காலமும், வரலாறும் | 58 – 62 |
| 13. இந்துப்பெண் (கவிதை) | 63 |
| 14. காளிதாசர் காட்டும் தர்மம் | 64 – 66 |
| 15. அறிவாராட்சியியல் நோக்கில் அனுமானப்பிரமாணம் | 67 – 73 |

| | |
|---|---|
| 16. சைவாலயக் கிரியை முறைகளில் இசைக்கருவிகளும் பண் அமைவுகளும் | 74 – 79 |
| 17. சிவனின் திருத்தாண்டவம் | 80 83 |
| 18. இந்துப்பண்பாட்டு மரபில் சித்தர்கள் | 84 – 88 |
| 19. சைவ சித்தாந்தம் கூறும் முக்திக் கோட்பாடு | 89 – 95 |
| 20. காயத்திரி மந்திரமகிமையும் அதன் விளக்கமும் | 96 – 99 |
| 21. வள்ளலாரின் ஆன்மநேய ஒருமைப்பாடு | 100 – 101 |
| 22. இருக்கு வேதத்திற்கு மேலைநாட்டவரின் பங்களிப்பு | 102 – 106 |
| 23. சர்வமத சம்மத சாயி | 107 – 110 |

பேராசிரியர் கலாநிதி
ப.கோபால கிருஷ்ண ஐயர்
இந்துநாகரிகப் பேராசிரியர்
யாழ்.பல்கலைக்கழகம்.

## பஜகோவிந்தம் சில சிந்தனைகள்

இந்துக்களின் ஆத்மீக வாழ்வு வளம்பெற வழிகாட்டும் நூல்களுள் பஜகோவிந்தம் குறிப்பிடத்தக்கது. மனிதன் தன்வாழ்வை பயன் உள்ளதாக ஆக்க முயல வேண்டும். ஆனந்தம், உண்மை, தியாகம், ஆகியவை இறைவனின் பொக்கிஷங்கள். மனிதனுக்கு மனிதன் இருக்க வேண்டிய உறவை நாம் விளங்கும் போதுதான் நாம் மகிழ்ச்சி உடையவர்களாக விளங்குவோம். மகிழ்ச்சி என்பதன் பொருள் யாது? கவலையின்றி இருத்தலே மகிழச்சி என்ற விடை கிடைக்கிறது. எனவே கவலையிலிருந்து நீங்கும் வழிமுறை யாது என காண வேண்டும். தன்னைச் சூழவுள்ள மனிதத்துவத்துடன் பகிர்ந்து கொள்ளாமல் மனிதன் எதுவுமே பெற முடியாதென்பதை மனிதன் முதற்கண் உணர்ந்து கொள்ளாமல் மனிதன் எதுவுமே பெற முடியாதென்பதை மனிதன் முதற்கண் உணர்ந்து கொள்ள வேண்டும், என்பது ஞானிகளின் போதனை. எம்மைச் சூழ உள்ளவரின் மகிழ்ச்சியே எமது சொந்த மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதைை நாம் நம்பவேண்டும்.

இந்த உண்மையை நாம் எக்காலத்தும் உணர்ந்து கொள்ளத்தக்கதாக நாம் நற்செயல்களில் பங்கு கொள்ள வேண்டும். நல்லாருடன் இணைதல் வேண்டும். பெரியோரிடமிருந்து நல்லுரை களை நாம் கேட்க வேண்டும். இதைத்தான் வள்ளுவர் சான்றாண்மை எனக் கூறுகிறார். நல்ல மகனாய்ப்பிறந்தும் சும்மா திரியாதே! சான்றோன் எனத்திரி! என்பது ஔவை வாக்கு. "ஆண்டு பலவாகியும் என் தலையில் ஏன் நரையில்லை தெரியுமா? நான் வாழும் ஊரில் சான்றோர் பலர் வாழ்கின்றனர்". இது புறநானூறு காட்டும் புதுமை. மனிதப்பண்புக்கு முதலிடம் கொடுக்கும் வகையில் திருக்குறளில் 100ம் அதிகாரமாகப் பண்புடைமை கூறப்பட அதற்கு முன்னே 99ம் அதிகாரமாக சான்றாண்மை கூறப்பெற்றிருக்கிறது. ஞானிகள் கூறும் மனித மேம்பாட்டுக்கு இது சிறந்த அடிப்படையாகும். சான்றாண்மை இல்லையேல் மனிதப் பண்பே இல்லை. விலங்குக்குச் சமன் என்பது ஆன்றோர் விளக்கம்.

**உள்ளத்தால் தீமைதனை ஒருபொழுதும் எண்ணாதே**
**வாயால் தீமைதனை ஒருபொழுதும் சொல்லாதே**
**உடலால் ஒருபோதுந் தீமைதனைச் செய்யாதே**

என்பது பிறிதோர் புலவர் உபதேசம். சான்றோரை நமக்குக் காட்டுவது அவரது குணநலன். பிற நலன்கள் அல்ல. எல்லா நலன்களையும் அடக்கி அதற்குமேல் உயர்ந்து நிற்பது குணநலன். பிற நலன்கள் அல்ல. எல்லா நலன்களையும் அடக்கி அதற்குமேல் உயர்ந்து நிற்பது குணநலன் ஒன்றேயாகும். அது இன்றேல் ஒருவ்ன் சான்றோனில்லை.

இந்தப் பண்பினை இளந்தலைமுறையினரிடையே வளர்த்தலே ஞானிகள் ஞானிகள் நன்கு செயல்களை செய்யும்படி வற்புறுத்துகின்றனர். நல்ல குரு-சிஷ்ய உறவினாலே இது சித்திக்கும் என்பது ஞானிகளின் போதனை. வசிட்டருக்கும் இராமனுக்கும் உள்ள உறவு கோவிந்த பகவத்பாதருக்கும் ஆதிசங்கருக்கும் இருந்த உறவு, சுக மகரிஷிக்கும் பரீஷித்துக்கும் இருந்த உறவு சிறந்த குருசீட உறவுக்கு சிறந்த உதாரணங்கள். புனித மரபுகள் உருவாகவும் இன்றுவரை அம்மரபில் வந்த

சிந்தனைகள் பிரகாசிக்கவும் அவை வழிவகுத்ததை உலகில் வேறு எங்கும் காணமுடியாதது. ஆனால் ஞானி வினா எழுப்புகின்றார் இன்று அந்த குருசீட உறவு எங்கே? நாம் சிறந்த குரு-சீட உறவின் முக்கியத்துவத்தினையும் தேவையையும் முழுமனதாகவும், தூய உள்ளத்துடனும் ஏற்றுக்கொள்ளும்போதுதான் எமது மரபின் உயர்ந்த அம்சங்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும். உயர்ந்த ஆன்மீக சிந்தனையற்ற கல்வியினால் எத்தகைய பயனும் இல்லை. மாணவர்களுக்கு மூன்று முக்கிய பண்புகள் தேவை.

ஒழுக்கம்

அன்பு/ பக்தி

கடமையுணர்வு

அப்பொழுதுதான் அவர்கள் சமூக நலனுக்குரிய சக்தியாய் பரிணமிப்பர். கல்வியினால் பெற்றதைச் சாதனைக்கு கொண்டுவர முயலவேண்டும் என்ற வகையில் கல்வியின் உயர் நோக்கினை ஞானிகள் வற்புறுத்துகின்றனர். இப்பாதை யில் குரு-சீட உறவின் புனிதத்துவத்தை எமது மரபு தெளிவுபடுத்துகின்றது.

நாம் வாழும் உலகு மித்திய-லோகம் எனப்படுகிறது. உலகை உண்மை எனக் கொண்டால் அது விரைவில் மறையும் அல்லது மாற்றம் பெறும். அது உண்மைக்கும் பொய்மைக்கும் இடைப்பட்ட தொன்று. ஆகவே அது சத் என்றும் அசத் என்றும் இருநிலைகளில் அழைக்கப்படு கின்றது. எது உண்மை? எது பொய்மை என்பதை இனம் காண வேண்டும். எமது வாழ்க்கை அநித்தியமானது. நிலையானது அல்ல. உடலோடு தொடர்புடைய இன்பங்களும் உலகியல் இன்பங்களும் புலநுகர்ச்சியும் எமக்கு நிரந்தர இன்பத்தைத் தரா. உண்மையான இன்பத்தை நாம் பெற இளம்வயதே அதனைப் பற்றிச் சிந்திப்பதற்கு உரியதாகும். இந்த வாழ்வைப் பற்றியோ அல்லது இறப்பின் பின் உள்ள வாழ்வைப் பற்றியோ சிந்திப்பவர் மிகச் சிலரே. சிந்திப்பவருக்கும் அதற்கேற்ப வாழ முயல்பவர் வெகு சிலரே. தமது நேரத்தையும் செல்வத்தையும் இன்பத்தைப் பெற செலவு செய்பவர்களைக் கண்டு தமது வாழ்வை வளம்படுத்துகின்றனர் என நாம் தவறாக அவர்களை பெரிய மனிதர் என எடை போடுகின்றோம். தமது உடல் நலத்திற்காக பாடுபடுவோரை புத்திசாலிகள் என நாம் பாராட்ட முனைகிறோம். இத்தகைய எண்ணங்கள் தவறு என ஞானிகள் சுட்டகின்றனர். காலதத்துவம் எமக்கு விளங்காத புதிராக உள்ளது. அடுத்த கணம் நடப்பது யார் அறிவார்? எனினும் எமது தன்மைகளை மாற்றுவதன் மூலம் உடலை வெல்லலாம். உள்ளத்தை வெல்லலாம். எமது அறிவையே வெல்லலாம். இறப்பைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் எமக்கு ஏற்படும். இந்த உலகில் இருக்கும் வரை இந்த உண்மையை விசாரணை் செய்ய இளந்தலைமுறையின் கடமைப்பட்டவர் களாக உள்ளனர்.

இந்த உடல் எத்தகையது? இந்த உலகோடு அதற்குரிய தொடர்பு யாது? உதித்தெழும் கதிரவனின் ஒளிக்கதிர்களைப் போன்று இளம் மாணவர்களின் உள்ளங்க ளில் ஆத்மீக அறிவை பெறுதற் குரிய விருப்பாகிய விதையை விதைப்பதே எமது பண்பாட்டின் இலட்சியம்.

எமது புலன்களைச் சரிவர அடக்கும் திறமை கொண்டால் மாத்திரமே நாம் பெற்ற கல்வி அர்த்தமுள்ளதாகும். சரியான வழியில் எமது அறிவை பயன்படுத்த வேண்டும். மனதைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். இத்தகைய அம்சங்களைக் கொண்ட கல்வியை வெறுப்பவனே உண்மையான மாணவன். அவனே வித்தியார்த்தி.

குருசீட உறவு எமது மரபுவழி வாழ்வில் மிகவும் புனிதமானது. இவ்விடயத் தில் பஜகோவிந்தம் என்ற பெயரில் எழுந்த பாடல்கள் மிகவும் முக்கியத்துவம்

பெறுகின்றன. இந்த சமயத்தில் இந்நூலுக்கு தனியிடம் உண்டு. ஆத்மீகப் பயணத்தில் மனிதனுக்குரிய கடமைகள், அவனது செயல்கள் எவ்விதம் அமைய வேண்டும் என்பதை பஜகோவிந்தம் வற்புறுத்திக் கூறுகின்றது.

ஸ்ரீ ஆதிசங்கரர் ஒரு ஞானமூர்த்தி. ஒரு மகாமேதை. பாரதத்தில் ஆத்மீக வளம் குன்றியிருந்த காலத்திலே அவதார புருஷராகத் தோன்றி ஞான மரபுக்கு வழிகாட்டியவர். சுருதி, ஸ்மிருதி புராணங்கள் ஆகிய அனைத்துக்கும் ஆலயமாக விளங்குபவர். பிரஸ்தானத்திரயம் என்ற உபநிடதம், பிரமசூத்திரம், கீதை ஆகிய வற்றுக்கு உரை கண்ட பெருமைக்குரியவர். சங்கரபாஷ்யம் என தத்துவ உலகில் பிரபலமானது. ஷண்மத பிரதிஸ்தாபகர் என்ற பெருமையும் இவருக்குண்டு. பல சமய தத்துவ நூல்களை இயற்றிய பெருமைக் குரியவர்.

பஜகோவிந்தம் என்ற தலைப்பில் 32 பாடல்களை எழுதி சமய உலகுக்கு தம்மூலமாகவும் தம் சீடர் மூலமாகவும் அர்பணித்த பெருந்தகை. இப் பாடல்கள் அவற்றின் முக்கியத்துவம் கருதி நாளுக்கு ஒன்றாகக் கொண்டு பகவான் சிறந்த அருளுபதேசம் மாணவர்களுக்கு நிகழ்த்தி யுள்ளார். பஜகோவிந்த சிந்தனைகள் உலகிற் சீருடன் பரவ சங்கரரது சீடர்களே காரணமாக விளங்கினர்.

இந்த நூலில் உள்ள பாடல்களில் வேதம், சாஸ்திரம், புராணம் ஆகியவற்றின் தெளிந்த சாரம் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. நாட்டில் தர்மம் குன்றும் போது அதனை நிலைநிறுத்த அவதாரம் இடம்பெறுவது எமது சமய நம்பிக்கை. பழைய மரபுகளை நிலைநிறுத்தவும் தர்மத்தை ஓங்கச் செய்யவும் அவதரித்தவரே சங்கரர். அத்வைத கோட்பாட்டின் அடிப்படையில் பண்டைய தர்மத்தை சீர்பெறச் செய்தவர் சங்கரர். இந்தியா எங்கணும் உயர் ஞான பீடங்களை நிறுவினார்.

இந்தியாவில் பாரதப்போர் நிகழ்ந்த காலத்தில் தர்மம் குன்றியது. ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவதாரமெடுத்து தர்மத்தை நிலைநிறுத்தினார். அதேபோன்று கி.பி.8ம் நூற்றாண்டு (788-820) கேரளாவில் உள்ள காலடி என்னுமிடத்தில் சங்கரர் அவதரித்தவர். 5ம் வயதில் அவர் காயத்திரி மந்திரத்தை அறிந்தார். காயத்திரி மந்திரத்தை முறையாக அறிந்து அதன் வழியே பதினான்காம் வயதில் வேதங்களில் அடங்கியிருந்த அனைத்தையும் கற்றறிந்தார். அதன்பின் ஆன்மீக நெறியை பரப்பும் தெய்வீகப் பணியை மேற்கொண்டார். அனைத்து மக்களின் நன்மைக்காக உபநிடதங்களை மிகவும் எளிய நடையில் விளக்கிய பெரும் அறிஞர். புனித இந்திய பண்பாட்டை இந்தியா எங்கும் பரவச் செய்யும் வகையில் தமது வாழ்நாளையும் தம் உடல், சக்தி முழுவதையும் அர்ப்பணித்தவர். இந்தப் பெரும் பணியில் ஈடுபட்ட வகையில் அவர் இந்தியா முழுவதும் திக்விஜயம் செய்தார். அக் காலத்தில் வரணாசியில் சிலகாலம் தங்கினார். அவருடன் 14 சீடர்கள் கூடவே சென்றனர். தமது சீடருடன் வாரனாசி வீதிதோறுஞ் சென்று தத்துவ உண்மைகளை விளக்குவதிலும் பரப்புவதிலும் ஈடுபடலானார்.

வாரனாசியில் உள்ள பல் அந்தணப் பெருமக்களின் இல்லங்களுக்குச் சென்று அவர்களுக்கு வேதங்களின் சிறப்பை எடுத்துரைத்தார். அவ்வாறு வீதிகள் தோறும் சென்று பணியாற்றும்போது ஒரு நாள் சங்கரர் ஒரு வயோதிப அந்தணர் தமது வீட்டில் இலக்கணச் சூத்திரங்களை உச்சாடனஞ் செய்துகொண்டிருப்பதை அவதானித்தார். உடனே சங்கரர் உள்ளே சென்று அந்த அந்தணரோடு உரையாடலானார். இவ்விலக்கண விதிகளை உச்சரிப்பதன் நோக்கம் யாது? என வினவினார். அதற்கு அந்த அந்தணர் தனது குடும்பம் பெரியது என்றும் தனது குடும்பத்தைக் காப்பாற்று வதற்கு தேவையான பொருளைத் தேடும்நோக்கில் இலக்கண அறிவைப் பெற

விரும்பியதாகவும் கூறினார். இலக்கண விதிகளை உச்சாடனஞ் செய்வதனால் பயன் ஒன்றும் இல்லை எனக்கூறி அவ்வங்கண னுக்குத் தேவையானவற்றை அறிவுறுத்தி னார். தமது அறிவுரைகளைப் பாடல்களாகப் பாடினார். தமது சீடருடன் அவர் பாடலானார்.

''ஓ மதி மயங்கியவனே'' (மூடமதி) மரண சமயம் நெருங்கிய பொழுது இலக்கணச் சூத்திரம் உன்னை ஒரு பொழுதும் காப்பாற்றாது. ஆகையால் கோவிந்தன் புகழ் பாடு. கோவிந்தனைச் சேவி'' என்ற பொருளில் பாடலானார்.

சங்கரரின் புலமை இப்பாடல் வழி வெளிப்பட்டவுடன் அவரது ஆற்றல் மிகுந்த சீடர்களும் தமது புலமை வெளிப் படுத்துவதன் மூலம் தமது குருவை மனநிறைவு கொள்ளச் செய்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடல் பாடி அவ்வேளை 14 பாடல்கள் பாடப்பட்டன. ஆதி சங்கரர் இதன் மூலம் திருப்தியுற்று அதன் வெளிப்பாடாக 12 பாடல்களைப் பாடினார். அவை துவாதச மஞ்சரி எனப் புகழடைந்தன. இதனை கற்பிப்பதற்கும் பரப்புவதற்கும் அதன் முழுப் பயனைப் பெறுவதற்கும் குருவின் ஆசீர்வாதம் அவசியம் என்பதை உணர்ந்து அவ்வகையில் மேலும் நான்கு பாடல்கள் பாடினார். இவ்வாறு 31 பாடல்கள் உருவாயின. மோகமுத்கர என்ற பெயரும் வழங்கப்பட்டது. பின்னர் அது பஜகோவிந்த பாடல் வரிசையாக விளங்கியது. ஒரு சில பாடல்கள் கூறும் கருத்துக்களை இக்கட்டுரை ஆராய முயல்கின்றது.

முதற் பாடலில் முக்கியமான பதம் மூட மதே என்பதாகும். ஒன்றைப் பற்றி அறியாதவகையில் மதிமயங்கியவன் என்று பொருள். மூடமதியுடையவன் யார்? என்பதற்கு சங்கரர் ஓர் அருமையான விளக்கம் தந்துள்ளார் ''நாஸ்திகோ மூட உத்யதே'' கடவுளை நம்பாத நாஸ்திகள் அல்லது ஆத்மாவை நம்பாத அனாத்ம வாதியே மூடன் என இங்கு குறிக்கப் படுகின்றார். மகாபாரதத்தில் தர்மனும் இதே விளக்கத்தைத் தருகின்றார். இன்றைய நிலையில் உலகாயதத்தில் ஆழ்ந்துள்ள வனை மூடமதியடையவன் என விளக்கம் கொள்ளலாம் என்பது சமய அறிஞர் கருத்து.

இந்த உடல் அநித்தியமானது நான் என்ற உயிர் நித்தியமானது, எனது விருப்பு வெறுப்புக்களுக்கு நான் ஏன் கடவுளை வழிபட்டு அவரது அருளை பெற வேண்டும். இதனைவிட வேறு ஒன்றுமில்லையா? என்ற நிலையில் இவ்வாறு வினவுபவர்களும் உண்டு. இந்த பூமாதேவி எமக்கு தரும் நலன்களுக்கும் இயற்கை எமக்கு தரும் நலன்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டள்ளோம். நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ ஆகிய ஐந்து பூதங்களுக்கும் பின்னே இறைவன் விளங்குகின்றான். இங்ஙனம் பூதங்களின் சக்திகளுக்கு அப்பால் இறை ஆற்றல் நிலவுகின்றது. எமது நாளாந்த வாழ்வில் மனிதனுக்கும் இந்த ஐந்து சக்திகுளுக்குமிடையே உள்ள ஈடிணையற்ற தொடர்பு விளங்கும் வரையில் பரமாத்ம தத்துவத்தை மனிதன் விளங்கிக் கொள்ள இயலாது. பரமாத்மாவின் தெய்வீக மகிமையை உணர இந்த 5 பூதங்களின் தன்மையை இந்த உலகில் நாம் பயன்படுத்தலாம். இந்த சக்திகள் யாவும் இறையம்சமே என்ற உண்மையை ஒருவன் உணர்தல் மூலமே அவன் சரியான வழியில் சிந்திக்கின்றான். எனக் கூறலாம். இந்த உண்மையை அறியாதவன் மூட மதியுள்ளவன் என்பது தத்துவ ஞானிகள் கருத்து. எமது முயற்சியை இறை அருள் பெறுவதில் ஈடுபடுத்தல் வேண்டும். அதனைவிட்டு எம்மை சுற்றியுள்ள இவ் ஐம்பெரும் பூதங்களோடு எமது வாழ்வையும் செயற்பாடுகளையும் குழப்பிக் கொள்ளக் கூடாது. அவ்வாறு செய்வோமாயின் எமது வாழ்நாள் வீணே - மூடமதியுள்ளவரது வாழ்வாக அமையுமே தவிர வேறில்லை.

அடுத்த வரியில் இறப்பின் தன்மை பற்றி பேசப்படுகின்றது. இலக்கண சூத்திரங்களை உச்சரிப்பதால் பயனில்லை

எனக் கூறப்படுகின்றது. மரண காலத்தில் இறைவன் ஒருவரே உயிர்த்துணையாவார். எமது நூல் அறிவு மரண பயத்தை நீக்காது.

பஜகோவிந்தம் என்பதற்கு அறிஞர்கள் பல விளக்கங்கள் தந்துள்ளனர். கோவிந்தம் என்ற சொல்லுக்கு பல விளக்கமுண்டு. கோவிந்தம் என்றால் பசுக்களை மேய்ப்பவன் என்று பொருள். அதன் உள்பொருள் யாதெனில் மனிதனிலுள்ள விலங்குத் தன்மையை அடக்குபவன் என்பதாகும். மனிதனின் சில விலங்குத் தன்மைகள் உண்டு. இவ் விலங்குத் தன்மை மாற்றப்பட்டு சீர்பெறச் செய்யப்படவேண்டும். மனிதனிலுள்ள இந்த விலங்கு குணத்தை மாற்றியமைக்க கூடியவரே கோவிந்தன். ஒரு விலங்குக்கு மனிதப் பண்பு ஓர் இலட்சியமாக அடைய முடியாதது. ஆனால் மனிதனுக்கு தெய்வீகப் பண்பு இலட்சியமாக அடையப்படத்தக்கது. மனிதனின் விலங்குணர்வு யாது? புல்லைக் கண்ட மாத்திரத்தே விலங்கானது வாலை அசைத்து தனது மகிழ்ச்சியைக் காட்டும். அது போன்று பணத்தைக் கண்டால் மனிதன் கவரப்படுகின்றான். மனிதர் என்ற நிலையில் நாம் எதற்கும் அஞ்சுதல் ஆகாது. மற்றவரை அஞ்சச் செய்வதும் ஆகாது. உண்மைக்கு பரிவும், அநீதிக்கு தண்டனையும் வழங்குவதே நியாயம். தவறு செய்பவன் தண்டிக்கப்படத்தக்கவன். எனவே "கோவிந்த" என்ற சொல்லை நாம் உச்சரிக்கும் போது நல்லவற்றையும் தீயவற்றையும் இனங்காணுதல் வேண்டும். தீயனவற்றை ஒதுக்குதலும் நல்லனவற்றைப் போற்றுதலும் வேண்டும் என்பது ஞானிகளின் போதனை.

மனிதத் தன்மையை சீர் செய்வதும் தெய்வத்திற்கு அருகில் எம்மை இட்டுச் செல்வதுமே "கோவிந்த" என்பதன் அம்சமாகும். ஒவ்வொரு நாளும் கோவிந்தனை நினைத்தல் வேண்டும். அவன் நாமங்களை உச்சரித்தல் வேண்டும். அவனில் நம்பிக்கையும், சிரத்தையையும் நினைக்க வேண்டும் என்பது சமயவாதி தரும் போதனை. இதில் நம்பிக்கையுடையவர்கள் பின்பற்றி மகிழ்வர்.

கோவிந்த என்ற சொல்லில் ஒலிச் சிறப்பையும் ஞானிகள் விளக்குகின்றனர். ஒலியின் வடிவமே கோவிந்தன். அனைத்தையும் பிரதி பலிப்பவன் கோவிந்தன். பூமியிலும் சொர்க்கத்திலும் இடம்பெறும் அனைத்தும் கோவிந்தனே பின்னணியாக உள்ளான். வேதங்கள் என்றவுடன் கோவிந்தனைப் புகழும் கருத்துக்கள் உள்ளன. உடலும் உள்ளமும் உறுதி பெற வேண்டும். பிறவாத நிலைக்குரிய வழியை அறிந்தவரே புத்திசாலி. அதனை அறியாதவர் விலங்குக்குச் சமன். மாதவனை அடைவதற்கு உரிய நேர்வழி மனதைக் கட்டுப்படுத்தலாகும். உடல் உள்ளம் ஆகியவற்றின் உறுதி பற்றி பகவான் பல உதாரணங்கள் மூலம் விளக்கம் தருகின்றார். இறைவன் எம் உள்ளத்தே உளன் என்ற உணர்வை வளர்த்தல் வேண்டும் என்பதே ஞானியின் போதனை. அனைவரிலும் இறைவன் உளன். தன்னில் நம்பிக்கை இல்லாதவன் இறைவனிலும் நம்பிக்கையற்றவன். ஆத்ம தத்துவத்தை உணரும் பயிற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும். இறைவனில் நம்பிக்கை கொள்ளச் செய்யும் வகையில் சங்கரர் மூடமதியுடையவனை ஒரு கருவியாக பயன்படுத்துகின்றார். சங்கரர் மூடமதி உடையவனை அடித்தளமாகவும், முக்தமதி உடையவனை அடைய வேண்டிய இடமாகவும் கொள்கின்றார். ஓர் ஏணியாக உருவகம் செய்து இந்த அடித்தளத்திற்கும் உயர் நிலைக்கு மிடையே உள்ள 29 படிகளாக 29 பாடங்களைக் கொண்டு வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை எடுத்துக் கூறுகின்றார். எமது அறியாமை நீங்குவதற்கான வழிவகைகள் அடுத்தடுத்த பாடல்களில் கூறப்படுகின்றது. சங்கரர் பஜகோவிந்தப்பாடல் வழி எமக்கு எதைச் சொல்ல நினைத்தாரோ அதை தெளிவாக கூறுகின்றார். முதற் பாடல் அறியாமையிலிருந்து முத்திக்கு வழிகாட்டுகின்றது.

பிறப்பு, இறப்பு என்ற சுழற்சியிலிருந்து விடுபடுவதற்குரிய வழிவகைகள் அடுத்துக் கூறப்படுகின்றது. 7ம் பாடலில் குழந்தையாயிருக்கும் போது விளையாட்டில் பற்று. இளம் வயதில் பருவப் பெண்ணிடம் பற்று. வயது முதிர்ந்த பொழுது கவலை. பரப்பிரம்மத்திடம் பற்றுக்கொள்பவன் எவனுமில்லை. வாழ்வு ஒரு மாலையைப் போன்றது. மாலைக்கு இரு நிலைகள் உண்டு. ஒன்று பிறப்பு மற்றது இறப்பு. இந்த இரு நிகழ்வுகளுக்க இடையில் மாலை பல பூக்களைக் கொண்டுள்ளது. எங்கள் கனவு, சிந்தனை, கருத்துக்கள், கவலை, இன்பம் போன்றவை பல மலர்களை நிகர்ப்பன. இந் நிலையில் எம் வாழ்வை மாலையாக கருதுவதா வாழ்வோடு உடல் வாழ்வோடு கொண்டுள்ள கொண்டுள்ள தொடர்பை மாலையாக கருதுவதா என நாம் தீர்மானிக்க வேண்டும். இறப்பும் பிறப்பும் உடலுக்கே அன்றி உடலிலுள்ள சீவனுக்கல்ல என்பதை உணர வேண்டும். அனைத்து சுக துக்கம், இன்பம் துன்பம் உடலுக்கேயன்றி உயிருக்கல்ல. ஆத்மா எந்த மாறுதலுக்கும் உட்படுவது இல்லை. உடல் தன் இளமை முதுமை என்ற மாறுதலுக்குரியதாகின்றது. மனிதனின் உடல் பெறும் மாறுதல்களில் தன்மைகளை விட புனிதமான ஆத்ம தத்துவத்தையும் ஒருவர் உணர முயலவேண்டும். ஒவ்வொரு நிலையிலும் பந்துக்களை வளர்த்து வாழ்வின் முழுக்காலமும் செலவாகின்றது.

கடந்த பிறப்பில் நல்வினைகள் செய்தவர்களுக்கே கடவுள் நம்பிக்கை கைகூடும். மறுபிறப்பின் சிறப்பு எடுத்துக் கூறப்படுகின்றது. இறைவனை உணர்வதற்கு ஆத்ம தத்துவ அறிவே துணைபுரிய வல்லது என்று வற்புறுத்தப்படுகிறது. ஒருவனது ஆத்மாவை அறிய முயல்வதே முத்திக்குரிய வழி. நாம் எவ்வளவு காலம் இந்த உடலோடு வாழ்கின்றோம் என்பது முக்கியமல்ல. எப்போதோ எமது உடலை விட்டு உயிர் நீங்கவே போகின்றது. நாம் இவ் உடலில் இருக்கும் வரை கிடைக்கும் காலத்தை கடவுளை உணர்வதற்குரியதாக ஆக்குதல் வேண்டும் என்பதே முக்கியம். கடவுளோடு ஒன்று படுவதற்குரிய வழிவகைகளைக் காணுதல் வேண்டும். வெளியிலிருந்து வரும் செய்திகளை அறிய ஆவல் உள்ளவர்களாக இருக்கின்றோம். ஆனால் எமது உள்ளத்தில் இருந்து என்ன செய்தி வருகின்றது என்பதை அறிய ஆவல் அற்றவர்களாக இருக்கின்றோம். அந்தச் செய்தியே முக்கியமானது. இன்றைய செய்தித்தாள் நாளை குப்பைத் தொட்டிப்பொருள். அதுபோன்று எமது வாழ்வை பிறப்பு இறப்பு சுழற்சிக்கு உரியதாக்கினால் எமது வாழ்வை குப்பைத் தொட்டிப் பொருளாகவே ஆக்குகின்றோம். இவ்வாறு சங்கரர் மக்கள் சிந்தனையை கடவுளிடம் செலுத்தும் வண்ணம் பல காரியங்களை செய்துள்ளார். இளந்தலை முறையினர் இறைவனது தெய்வீகக் காட்சிக்குரிய வகையில் தூய சிந்தனைகளை வளர்த்தல் வேண்டும். சங்கரர் வழங்கும் அடுத்த சிந்தனை சத்சங்கம் பற்றியது. நல்லோரிணக்கம்:

நல்லவர்களோடு ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்புபால் பற்றற்ற நிலை ஏற்படுகின்றது. பற்றற்ற நிலையினால் அழிவுள்ள தொடர்புகள் நீங்கிவிடுகின்றன. அழிவுள்ள தொடர்புகளின் நீக்கத்தினால் உள்ளத்தின் உறுதி சித்திக்கின்றது. உள்ளத்து உறுதி ஜீவன் முத்திக்கு வழிகாட்டுகின்றது என்பதே பொருள்.

மனிதனது வாழ்வில் இரு முக்கிய அம்சங்களுண்டு. ஒன்று தனது ஆத்மாவில் நம்பிக்கை வைத்தல். மற்றது தனது உள்ளத்தை தூய்மைப்படுத்தல். மனிதன் தன்னந்தனியே வாழ்வது சாத்தியம் ஆகாது. முழு உலகமும் சமுதாய அமைப்பிலேயே தங்கி உள்ளது. ஒரு சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் ஏதோ ஒரு வகையில் பிணைக்கப்பட்டுள்ளான். புனிதமான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே

ஒரு சமூகம் எமது நாட்டில் இருப்பது நாம் செய்த அதிர்ஷ்டமே. எமது சமூகத்தில் காணும் பொறுமையின் தன்மை வேறெங்கும் காணப்படமுடியாதது. எமது சமயத் திருநூல்களில் கூறப்பட்டுள்ள உயர்ந்த அறிவுரைகளாகிய "தாயைத் தெய்வமாகப் போற்று, தந்தையைத் தெய்வமாகப் போற்று, குருவை தெய்வமாகப்போற்று" போன்றவை மறக்கப்படத்தக்கவையல்ல. அத்வைத தத்துவத்தை உலகெங்கும் போதித்த சங்கரர் தமது சீடர்களுடன் நாட்டில் எங்கும் சென்று பரமாத்மாவைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் கடவுளைப் போதனைகள் செய்தார். சத்சங்கமாகிய நல்லோருடன் வாழ்வதனால் ஏற்படும் முக்கியத்துவத்தை வற்புறுத்தினார். ஒருவனது விடுதலைக்கு சத்சங்கம் 1வது படியாகவும், இன்றியமையாத முயற்சி யாகவும் உள்ளது.

நல்லவர்களோடு வைக்கும் இணக்கமே சத்சங்கம். "நல்ல" என்ற சொல்லுக்கு பல உதாரணங்கள் மூலம் விளக்கம் தரப்படுகிறது. எமது நண்பர்கள் இன்னலுறும் போது எமது வல்லமைக்கேற்ற வகையில் உதவுதல் வேண்டும். மனிதனுக்கு மனிதன் வேற்றுமை பாராட்டாதவனாக இருத்தல் வேண்டும். ஆத்ம உணர்வே மனிதத்தத்துவத்தில் ஊடுருவி உள்ளதாக உணர வேண்டும். இந்த உணர்வே சகோதரத்துவத்தை ஏற்படுத்த உதவும். எம்மிலுள்ள தெய்வீகத்தை உணரலாம். உயர்ந்த உண்மையை உணர்வதற்கு சத்சங்கம் இன்றியமையாதது. மனிதனது நல்ல தீய பண்புகளை சமூகத்தில் மற்றவர்களோடு இணையும் போதே இறுதி வடிவம் பெறுகின்றது. ஆத்ம தத்துவத்தை உணர சத்சங்கத்தை நடைமுறையில் கொண்டு வருதல் வேண்டும். எமது ஆற்றலிலும் எம்மிலும் நம்பிக்கை உருவாக வேண்டும். இவ்வாறாக மனிதன் மெய்ப்பொருளை உணர்வதற்கேற்ற பல நல்ல சிந்தனைகள் பஜகோவிந்தத்தில் விரவிக் காணப்படுகின்றன.

"எப்பொருள் யார் யார்வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க பஜகோவிந்தம் மெய்ப்பொருள் பற்றிய விளக்கத்திற்கும் மனித விழுமியங்களின் மேம்பாட்டிற்கும் சிறந்த வழிவகைகளை கூறி நிற்பதை எமது சிந்தனைக்கு உரியதாக நாம் கொள்ளுதல் பயன் தருவதாகும்.

---

திருமதி.க.இராமநாதன்,
தலைவர்/இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் ஆன்மீக வழிகாட்டல்கள்

"மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற எமது பல்கலைக்கழக மகுட வாசகத்திற்கு முற்றுமுழுவதும் பொருத்தமானவர் சேர்.பொன்.இராமநாதன் அவர்கள். பல்துறை சார்ந்த கல்விக் கோட்பாடுகள் பல்துறை ஆற்றல் மிக்க விற்பன்னர்களால் கற்பிக்கப்பட்டாலும் அவ்வத்துறைகளினூடாக மெய்ப்பொருளைத் தேடும் ஆர்வமும் அறிந்தபின் அதனை அடுத்தவர்க்கு வழங்கும் திறனும் மெய்ப்பொருள் தேடலின் முடிவான பயன்பாடாகும். எத்துணைத் தேடினும் அத்தனை சுலபத்தில் மெய்ப்பொருள் காண்பதென்பது அரிதினும் அரிதாகவே உள்ளது. அந்த வகையிலே உலகியல் சார்பான சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொருளைச் சம்பாதித்த சேர்.பொன்.அவர்கள் அச் சொத்துக்களை எல்லாம் மெய்ப்பொருள் நாட்டத்தை அதிகரிக்கச் செய்யும் பணிகட்கே செலவிட்டமையினை அன்னாரால் விட்டுச் செல்லப்பட்ட நினைவுச் சின்னங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவையனைத்தும் அப் பெருமகனாரின் ஆன்மீக உயர்வினையும் ஆத்மஞானமடைதலின் அத்தியா வசியத்தையும் உணர்த்துவன வாகவுள்ளன.

இராமநாத வள்ளலின் மாபெரும் கொடைகளான கொழும்பு பொன்னம்பல வாணர் ஆலயமும் சைவ சமய வளர்ச்சிக்கென அன்னார் வழங்கிய நினைவு நிதிகளும், தானங்களும், பன்னிரு திருமுறைப் பயிற்சிக்கான கொடைகள், சைவாசிரிய பயிற்சிக்கான நிதிஉதவிகள், இரண்டு கல்லூரிகள் என்பனவற்றுள் தனித்துவம் வாய்ந்த பல்கலைக்கழக அமைப்பு ஒன்றிற்கான உறுதியுரையுமே அவரது ஆன்மீக விழுமியங்களின் மொத்த வெளிப்பாடுகளாயின. இவையனைத்தும் அவரது மாண்புமிகு மனித நேயத்தையும் ஆன்மீக வளர்ச்சியில் அவர்கொண்ட பற்றுறுதியையும் தொலைநோக்கினையும் புலப்படுத்துகின்றன.

1851ம் ஆண்டில் கொழும்பு செட்டித்தெருவில் உள்ள மாளிகையில் பிறந்த அன்னார் ஈழத்திருநாட்டையும் யாழ்ப்பாண சமூகத்தையும் நேசித்த பாங்கினை இன்றைய இளைய தலைமுறையினர் எண்ணி மனங்கொள்வது அவசியமாகும். அன்றும் அன்னியராட்சியில் நேர்ந்த கலாசார அவலங்களிலிருந்து சைவத்தையும் தமிழையும் பாதுகாப்பதற்கு 28 வயதாக இருந்தபொழுதே நரேந்திரனை இராமகிருஷ்ண பரமஹம்சர் தேர்ந்தது போல - நாவலர் பெருமானால் இராமநாதன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்றோ நமது இளைய சந்ததியினர் யாழ் மண்ணையும் பண்பாட்டையும் விட்டு ஓடுவது எங்கள் சமுதாய ஆத்மீக மரபின் பலவீனத்தையே காட்டுவதாகவுள்ளது. அனைத்து சமயங்களின் உயர் விழுமியங்களையும் உள்வாங்குதல் அவையனைத்தினதும் வேறுபாடுகளை கடந்து நிற்றல்-மனித குலத்தினை ஒரு சமுதாயமாக நேசித்தல் - இவையே ஆன்ம ஞானத்தின் மகத்தான விழுமியங களாகின்றன. இத்தகைய மேம்பாடுகளை இராமநாதன் அவர்கள் இயல்பாகவே

பெற்றிருந்தார். நாவலர் பெருமான் காட்டிய வைதிகசுத்த சைவசித்தாந்தமே அவரது வாழ்வியலானது.

அத்துடன் தமிழ்நாட்டைச் சேர்ந்த தவத்திரு அருட்பரமானந்தசுவாமிகளின் திருக்கண்ணோக்கத்திற்கு இளம்பராயத்திலே ஆளாகும் பாக்கியமும் பெற்றிருந்தார். சுவாமிகளை சற்குருவாக அடைந்த பின்னர் இராமநாதன் அவர்களது வாழ்க்கையின் இலக்கும், நோக்கமும் ஓர் மாபெரும் திருப்பத்தை அடைந்தன. அதன் பின்னர் சமயங்களின் உலகியல் இலக்குகளையும் கடந்தோர் ஆத்மஞானியாக தமக்குள்ளே தமதுள்ளத்தில் இயல்பான அமைதியும் கண்டார். 1915ம் ஆண்டு மே மாதம் நடந்த ஓர் கலவரம் பற்றிப் பாராளுமன்றத்தில் பேசும்போது "....நாங்கள் உலகாயத தீமைகளை எதிர்ப்பவர்கள் ஆன்மீகவாதிகள் ஆத்மஞான ஆராய்விலே தீவிர பற்றுக்கொண்டவன் நான். அவ்வாறே சிங்கள, பாளி மொழிகளைக் கற்று, அவற்றின் வாயிலாக ஆன்மவிசாரத்தில் ஈடுபட்டு எல்லையறு பரம்பொருள் பற்றிய உணர்வை அடையாத ஒருவன் சிங்களவனே அல்ல என்றே கூறுவேன்" எனக்குறிப்பிட்டார். இதிலிருந்து ஈழத்து அரசியல் மரபில் அரசியலிலும் ஆன்மீகத்தைக் கலந்த முன்னோடியும் முதல்வரும் இராமநாதனே என்பதற்கு மேல்வரும் கூற்று நல்லதொரு சான்றாகும்.

அன்னார் நாவலரது ஆன்மீக மரபிற்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தவர். "நாவலர் மரபிற்கோர் காவலர்" எனவும் புகழப்பட்டார். "இராமநாதன் அவர்களது வாழ்க்கை இலட்சியத்தை இயக்க சக்தியை நாம் தேடிக்கண்டு கொண்டு அதனை நமதாக்கி நம்மை நாமே ஆழமாக ஆத்மசோதனை செய்து உண்மைகளைத் தெளிவுபடுத்துவது அன்னாரின் பணிகளை முன்னெடுப்பதாகும் என்றார் மறைந்த பேராசிரியர் அமரர்.க.கைலாசபதி அவர்கள். இராமநாதன் அவர்களது பணிகள் யாவும் இவ்வாறு அரசியல், கல்வி, பொருளாதாரம் என்பவற்றுடன் மட்டும் நில்லாது சைவம், மொழி, கலை, பண்பாடு ஆன்மீகம் ஆகிய அனைத்துத் துறைகளையும் தழுவிநின்றது. அவரது எல்லையற்ற மனிதநேயம் சைவ கலாசாரம் தழுவிய ஆத்மீகமாக மலர்ந்தது. அதனால் தமிழ் மக்கள் சைவத் தமிழ் பண்பாட்டுடன் ஆங்கிலக் கல்வியையும் இணைத்து வாழ்வதற்காகப் பல வழிகளை உருவாக்கினார். தமது கலாசாரத்தை அவர்கள் நடை, உடை, பாவனை, பழக்க வழக்கங்களிலும் பின்பற்ற வேண்டும் என்பதற்காகவும், தமிழ்மொழியில் சைவப் பண்பாட்டுச் சூழலில் கல்விகற்பதற்காகவும் 1921ல் ஆண்கட்கென திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியையும், 1923ல் பெண்கட்கெனச் சுன்னாகத்தில் இராமநாதன் கல்லூரியையும் நிறுவி ஏராளமான சொத்துக் களையும் மானியமாக இப்பாடசாலைகட்கு அர்ப்பணித்து அவை தொடர்ந்து இயங்கு வதற்கும் வழிசமைத்தார்.

இவற்றின் இலட்சிய நோக்குப்பற்றி 1910ம் ஆண்டு சென்னைப் பத்திரிகை யொன்றிற்கு அளித்த பேட்டியில் "பத்து வயதிற்கும் பத்தொன்பது வயதிற்கு மிடைப்பட்ட பெண்கள் பண்புமிக்க ஆங்கில இந்துப் பெண்களிடம் கல்வி பெறுவர்"எனக் கூறியது போல் அன்னாரின் ஆத்மீக உணர்வுகள் அக்கல்லூரிகளாகத் தோற்றம் பெற்றன. "சைவப் பண்பாட்டு விழுமி யங்களில் பெண்கள் பயிற்சி பெற்று பல நல்ல காரியங்களை ஆற்றும் நல்ல பெண்மணிகளாக-மனைவியராகத் திகழ வாய்ப்பு ஏற்படுத்தப்படும்" எனவும் "கடந்த பதினெட்டு மாதங்களில் பல உள்நாட்டுப் பாடசாலைகள் இக்கல்லூரியிற் கற்பதற்குப் பெண்களைத் தயார்ப்படுத்துமாறு உருவாக்கப்பட்டுள்ளன" எனவும் அப் பேட்டியில் அவர் தெரிவித்தார். அவ் எண்ணக்கருவானது யாழ்ப்பாணத்தில் அவர்

நாவலர் பெருமானுடன் சேர்ந்து பல சைவப் பாடசாலைகளும், இந்துக் கல்லூரிகளும் தோற்றம் பெறுவதற்கும் உந்து சக்தியாகியது. இவை அன்னாரின் தொலை நோக்கிற்கும் தீர்க்க தரிசனத்திற்கும் ஓர் உரைக்கல்லாகும்.

மேலும் விஞ்ஞானம் என்னும் பௌதிகம் சார்ந்த அறிவியல் மெய்ஞானம் என்கின்ற ஆத்மீக ஞானமாக மலர்ந்து விட்டால் அவர்களது அறிவு கூர்மையுடையதாய் தீர்க்க தரிசனமுற்றதாய் ஒரு சமுதாயத்தின் நீண்டகாலத் தேவைகளை திட்டமிட்டுச் செயலாற்றும் நுண்மாண்நுழை புலமுடையதாக அமைந்து விடுகின்றது. இராமநாதன் அவர்களது அறிவியல் நோக்கும் ஆத்மீகத்தையே அடித்தளமாக கொண்டிருந்தது. அறிவியல் அடிப்படையற்ற ஒரு முடம் என்பது 20ம் நூற்றாண்டு அணு விஞ்ஞானி அயன்ரீன் என்பாரின் கூற்றும் இவ்விடத்தில் அவதானிக்கத்தக்கது.

மெய்ஞானம் என்பது தன்னலமற்ற சுயவிருப்புக்களைக் கடந்த எல்லையற்ற பேரன்பு நெறி என்பதனை இராமநாதன் அவர்கள் தமது ஒவ்வோர் செயலிலும் சேவையிலும் - பணிகளிலும் நிலைபெறச் செய்த மாமனிதராக விளங்கினார். அத்தகைய பேரன்பு நெறியே சைவப் பாடசாலைகளாக கல்லூரிகளாக - பயிற்சிக் கலாசாலைகளாக - பல்கலைக்கழகமாக - இந்து ஆலயங்களாக - கலைக்கூடங்களாக தான தருமங்களை முன்னெடுக்கும் அறக் கட்டளைகளாக - அரசியல் ஞானமாகவும் காலந்தோறும் பரிமாணம் பெற்று வளர்ந்து செல்வதாயிற்று. மேற்கு நாடுகளில் எல்லாம் விவேகானந்தர் வேதாந்த ஞானத்தை எடுத்துச் சென்று பரப்பியதைப்போல இவரையடுத்து சேர்.பொன்.இராமநாதன் மேலை நாடுகளில் சைவசித்தாந்த ஞானத்தை பரவச் செய்த பெருமகனாயும் விளங்கினார்.

சிறுபிள்ளைகளும் ஆரம்பத்திலிருந்தே சமய ஞானத்துடன் கூடிய கல்வி வளர்ச்சி பெறவேண்டும் என்பதற்காக 1923ம் ஆண்டில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை அமைத்து அதன் முதல் தலைவராகவும் முகாமையாளராகவும் இருந்து கடமையாற்றினார். மேலைநாட்டுப் பெண்ணான அன்னாரின் துணைவியார் சீமாட்டி லீலாவதி அம்மையாரும் அவரின் மறைவின்பின் அவருடைய ஆன்மீக வழிகளில் நின்று அன்னாரது பணிகளையெல்லாம் தொடர்ந்தும் மேற்கொண்டு நடாத்தி - பின்வந்த சைவப்பெண்கட்கெல்லாம் உதாரணமான பெண்மணியாக வாழ்ந்து காட்டியமை இராமநாதனது ஆன்மீக இலட்சியங்கட்கெல்லாம் செயல் வடிவம் கொடுப்பதாக அமைந்தது.

அடுத்து கல்லூரிப் பழைய மாணவியர் தொடர்ந்தும் ஆன்மீக மேம்பாடுகளைப் பேணி விருத்தியுறச் செய்ய வேண்டுமென்ற விருப்பினால் 1927ம் ஆண்டில் "சைவ மங்கையர் சபை" ஒன்றையும் நிறுவினார். அங்கே தமது ஆரம்ப உரையில் "சைவமங்கையரான பழைய மாணவியரும் ஆசிரியர்களும் நல்லறிவுச் சுடரையும், தம் சமய ஒழுக்கத்தையும், தாம் மேற்கொண்ட வாழ்வு வட்டத்தில் ஒளிபெறச் செய்து ஒன்றிணைய வேண்டும்" என அச்சபையின் குறிக்கோளைத் தெளிவுபடுத்தினார். யாழ்ப்பாணச் சைவத் தமிழ்ப்பாரம்பரியம், சமுதாய மரபுகள் அனைத்தும் சைவசித்தாந்த கலாசாரத்தைப் பின்புலமாகக் கொண்டவை என்ற அடிப்படையில் நுண்கலைகட்குரிய அடிப்படைகளையும் கட்டியெழுப்பினார். பெண்களது வாழ்க்கை மேம்பாடுகட்குரிய விருத்திகள் யாவும் "ஆன்மீக மயப்படுத்தல்" என்னும் புனிதநோக்குடனேயே அழகியற் கலைகளிலும் அவரது அணுகுமுறைகள் அமைந்தன.

இராமநாதன் அவர்களால் பல்நூல்கள் எழுதப்பட்டன. பகவத்கீதையை

முதன் முதல் தமிழில் தந்த இல்லறஞானியாக விளங்கிய அன்னாரை ஈழம் தந்த ரிஷிஞாக்யவல்கியராகவே காணலாம். அன்னார் தமது ஆன்மீக ஆற்றலினை அனைத்துத் துறைகளிலும் ஊடுருவச் செய்ததன் மூலம் பெரும் சாதனைகளை படைத்தவரானார். அவரது இலட்சியக் கனவே இன்று இராமநாதன் நுண்கலைக் கழகமாகவும் - உலகிலேயே "இந்து நாகரிகம்" என்ற ஒரு துறையினையும் உள்ளடக்கிய யாழ் பல்கலைக்கழகமாகவும் பரிமாணம் பெற்று உயர்கல்வி உலகிற்கும் ஒளியூட்டுவதாகவும் விளங்குகின்றது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த அப்பெரியார் தனக்கென வாழாதகைசால் சாதுவானவர். அனைத்தும் அறமே என்னும் நினைப்பும் நிகழ்வுமாக யாவற்றையும் "பரமேஸ்வரன் சொத்தாக" கொண்டு சைவசித்தாந்த வாழ்வு கைவரப்பெற்ற பெருந்தகையாவர்.

அன்னாரது நினைவுநாளினை வருடம்தோறும் நினைவுகூர்ந்து போற்றுகின்ற நிகழ்வுகள் யாவும் தமிழ்ச் சமூகமும் அவருக்குக் காட்டும் நன்றி உணர்வினைப் புலப்படுத்துவதாகும். அதேசமயம் அந்த அவதாரபுருசரின் ஆன்மீக வழிகாட்டல்களாக எவையெல்லாம் நமது இந்துப்பண்பாட்டுப் பாரம்பரியத்தில் வேரூன்றியுள்ளனவோ அவையனைத்துப் பணிகளும் தொடர்ந்தும் சைவத் தமிழ் மக்களால் பேணி வளர்த்தெடுக்கப்படுவது இன்றியமையாத தாகும். ஒவ்வொரு தலைமுறையினரும் தத்தம் காலச் சூழ்நிலைகட்கேற்ப - தாம் சமாளிக்க வேண்டிய வாழ்க்கைச் சவால்கட்கமைய - தமது முன்னோர் வாழ்க்கைச் சரிதங்களிலிருந்து துணிவும், தெளிவும், நம்பிக்கையும் பெற வேண்டும் என்பதே இராமநாதன் அவர்களது வரலாறு காட்டும் பாடமாகும்.

பேராசிரியர் சிவசாமி

# கௌடில்யர் கூறும் அரசும் சமூகநலசேவையும்

இந்துசமய மரபில் சமயம், தத்துவம், பண்பாடு, சமூகம் மட்டுமன்றி அரசியல், சட்டம், பொருளியல் முதலியனவற்றிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்துள்ளது. இந்து சமய ஞானிகளும், அறிஞர்களும் ஆத்மீகத்தில் மட்டுமன்றி உலகியலிலும் நன்கு கவனம் செலுத்தி வந்துள்ளனர். ஆத்மீகமும், உலகியலும் முறைப்படி மனிதவாழ்வில் இடம்பெற வேண்டும் என அவர்கள் கருதினர். உலக வாழ்வின் முடிவான இலட்சியம் ஆன்ம ஈடேற்றமே. எனவே மனித வாழ்க்கையின் இலட்சியங்களாக அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருஷார்த்தங்களும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன. அறத்தின் வழிநின்று செல்வத்தை ஈட்டி, உலக இன்பங்களைத் துய்த்து முடிவில் வீடுபேற்றினை அடைதலே வாழ்க்கையின் குறிக்கோளாகும். உலகியலைப் பொறுத்த மட்டில் அரசியல், பொருளியல் ஆகியன வற்றின் முக்கியத்துவம் குறைத்து மதிப்பிடப் படவில்லை.

இவைபற்றிய சிந்தனைகள் இந்துமரபில் வேதகாலம் தொட்டாவது நிலவிவந்துள்ளன. வேதகாலத்திற்கு முந்திய சிந்துவெளி காலத்திலுமிவை நிலவினாலும் இவை பற்றிய விபரங்களை அறியமுடியாதுள்ளது. வேதகாலம் தொட்டு நிலவி வந்துள்ள புராதன இந்து சமயசார்பான அரசியல், பொருளியல் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் நூலாகவே அர்த்தசாஸ்திரம் விளங்குகின்றது. இதனை இயற்றியவரான கௌடில்யர் கி.மு.4ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாரததேசத்தின் பெரும்பகுதியைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவந்த மௌரியப் பெரு மன்னனான சந்திரகுப்தனின் நண்பனாகவும், முதன் மந்திரியாகவும் விளங்கியவர். ஒருவகையில் புராதன கிரேக்கப் பேரரசனான மகா அலெக்சாந்தருக்குக் குருவாக விளங்கிய அரசியல் ஞானியான அரிஸ்டோட்டில் போலக் கௌடில்யரும் சந்திரகுப்த மௌரியனுடைய பிரதம ஆலோசகராகவும் குருவாகவும் விளங்கினார் எனலாம். சில அறிஞரின் கருத்துப்படி இந்நூல் ஒரு தொகுப்பு நூலெனக் கருதப்படினும், இதன் முக்கியமான பகுதியாவது மேற்குறிப்பிட்ட மௌரியப் பெருமன்னன் காலத்தியதெனப் பலவரலாற் றாசிரியர் கருதுகின்றனர். எவ்வாறாயினும் நூலாசிரியர் தமக்கு முற்பட்டகால சமகால அறிஞர்களும் ஞானிகளும் அரசியல், பொருளியல் பற்றிக் கூறியுள்ள கருத்துக் களையும், தமது அனுபவ வாயிலாகப் பெற்ற கருத்துக்களையும் தொகுத்தும், பகுத்தும் தமக்கேயுரியபாணியிலே கூறியுள்ளார். புராதன இந்துக்கள் உலகியலை விட்டு ஆத்மீகத்திலே மட்டுமே கவனம் செலுத்தினர் எனத் தவறாகப் புரிந்து கொண்ட ஐரோப்பியரின் கருத்தினை நிராகரிக்கும் வகையிலிது அமைந்துள்ளது. இந்நூல் நீண்டகாலமாக இந்து இளவரசர் கற்கவேண்டிய கைநூல் போலவே விளங்கி வந்துள்ளது. ஒருகால கட்டத்தின் பின் இந்துக்களில் பலர் இதனை அறிந்திலர். பின்னர் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிது கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே இதன் சிறப்பினை மீண்டும் பலரும் அறியமுடிந்தது. இது தெரியப்படாமல் இருந்ததனாலேயே

ஐரோப்பிய அறிஞர் சிலர் மேற்குறிப்பிட்ட கருத்தினைத் தவறாகக் கூறினர் என்பதும் குறிப்பிடற்பாலது.

அர்த்த சாஸ்திரத்திலே வைதிக இந்து சமயச் சார்பான அரசியல், சமூகம், பொருளியல், சட்டம் முதலியன பொதுவாக விவரிக்கப்படினும் சில இடங்களில் ஒழுக்கவியலுக்குப் புறம்பான கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன. இந்நூல் 15 அதிகரணங்களும் 150 அத்தியாயங்களும், 6000 சுலோகங்களும் கொண்டுள்ளதென நூலிலே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

கௌடில்யர் முடியாட்சியையே பெரிதும் விரும்பினார் எனினும் கண அரசுகள் அக்காலக் (குடியரசுகள்) பலமுள்ளனவாக இருந்தால் அவற்றையும் அங்கீகரித்தவர். அவை பலமற்றிருந்தால் அவற்றை முடியரசுகளுடன் சேர்க்க விரும்பினார். நூலின் தொடக்கத்திலே நான்கு வர்ணங்களின் கடமைகளைக் கூறும் போது வேள்விசெய்தல், கொடைவழங்குதல், போர்நடவடிக்கை, உயிர்களைப்பாதுகாத்தல் ஆகியன மன்னர் கடமைகளாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்(1-3) மேலும் அரசன் பொருளியல் (வார்தா), தண்டநீதி பற்றியும் நன்கு அறிந்திருக்க வேண்டும். ஆன்வீஷிஹி (தத்துவஞானம், தர்க்கம்), வார்தா (பொருளியல்), வேதங்கள் ஆகியவற்றைச் செயற்படுத்தற்குத் தண்டநீதி (தண்டனை, அரசறிவியல்) அவசியமாகும். வரும் காலத்தில் அரசனாக விளங்கும் அரச குமாரனுக்கு இளம்வயதிலேயே தக்கபயிற்சி அளிக்கப்படும். கணிதம், எழுத்து முதலியன தொடக்கத்திலே தக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். பூணூல் தரித்தபின்னர் வேதங்களையும், ஆன்விஷிஹி முதலிய வற்றையும் அவன் சிறந்த ஆசிரியரிடம் கற்பான். அவன் வயது முதிர்ந்த, அநுபவமுள்ள,ஒழுக்கமுள்ள அறிஞர்களிடம் பழகி வருவான். இத்தகைய தொடர்பு அவனுக்கு மிக்க பயனளிக்கும். இவ்வாறு பல விதமான அறிவியல்களையும் நன்கு கற்று, குடிகளுக்கு நல்ல அரசாட்சியை ஏற்படுத்தி மக்கள் அனைவருக்கும் நன்மைபுரியும் மன்னன் பூமியை(இராச்சியத்தை) எதிர்ப்பின்றி நீண்டகாலம் அனுபவிப்பான் என அர்த்த சாஸ்திரம் கூறுகிறது. மேலும் அரசனுக்குப் புலனடக்கமே மிக அவசியமாகும். "தருமம், பொருளாதாரம் முதலியவற்றிலிருந்து விலகாது அவன் பூமியைத் துய்க்க வேண்டும். அறம், பொருள், இன்பமாகியவை ஒன்றிலொன்று தங்கியுள்ளன. அரசன் இவற்றைச் சமநிலையிலே பின்பற்றி எப்பொழுதும் மகிழ்ச்சிகரமாக இருக்க வேண்டும். இவற்றுள் ஏதேனும் ஒன்றையாவது அளவுக்குமிஞ்சித் துய்க்கக் கூடாது. ஏனெனில் ஒன்று மற்றொன்றிலே தங்கி இருப்பதால் இதனைத் தவிர்க்க வேண்டும். கௌடில்யருடைய கருத்துப்படி பொருளே மிகமுக்கியமாகும். ஏனெனில் தருமத்திற்கும் இன்பத்திற்கும் அஃது அவசியமாகும் என்பதே(1.7). "ஒற்றைச்சில்லு அசையாதது போல இறைமையை உதவியுடனேதான் ஏற்படுத்த முடியும். எனவே மன்னன் அமைச்சர்களை நியமித்து, அவர்களின் ஆலோசனைகளுக்குச் செவிசாய்க்க வேண்டும்" என நூலாசிரியர் குறிப்பிடுகிறார். மிகுந்த நம்பிக்கை, அரசவிசுவாசமுள்ளவர்களையே அமைச்சராக நியமிக்க வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசன் என்றும் தனது நன்மையினை விட்டுக் குடிகளின் நன்மையிலேயே கவனத்தைச் செலுத்த வேண்டும். "குடிகளின் மகிழ்ச்சியிலேயே அரசனின் மகிழ்ச்சி உள்ளது. அவர்களின் நலனிலேயே அவனுடைய நலம் உள்ளது. தனக்கு மகிழ்ச்சி அளிப்பனவற்றை நல்லவை எனக்கொள்ளாது குடிகளுக்கு நன்மை அளிப்பவற்றையே நல்லவையென அவன் கருத வேண்டும்" எனக் கௌடில்யர் கூறுகிறார்.

அக்கினி புராணம் அரசனை ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு ஒப்பிடுகிறது.

எவ்வாறு கர்ப்பமுற்றிருக்கும் பெண் வயிற்றில் உள்ள தன் குழந்தையின் நலனுக்காக தான் விரும்புபவை குழந்தைக்குத் தீமை பயக்குமாயின் உண்ண மாட்டாளோ, அதுபோலவே அரசனும் குடிகளின் நன்மைக்காக எதையும் தியாகம் செய்ய வேண்டியவன் ஆகிறான் எனக் கூறப்பட்டுள்ளதை மேற்குறிப்பிட்ட அர்த்தசாஸ்திரக் கருத்துடன் ஒப்பிடலாம். இவ்வாறு பலவிதமான பயிற்சியும், ஒழுக்கமும் உள்ள நல்ல அரசன் குடிகளை நன்கு கவனிப்பான் எனக் கூறப்பட்டுள்ளது. அரசிலே மக்களின் நலனுக்காகவே அவன் செயற்படுவான். சில அனர்த்தங்கள் இயற்கையாகவோ, செயற்கையாகவோ ஏற்படும் போது அவன் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் பற்றிக் கௌடில்யர் கூறியவற்றைச் சுருக்கமாக நோக்கலாம்.

சமூகத்தில் நலிந்த மக்களுடைய நலனை மன்னன் கவனிக்க வேண்டும். எடுத்துக் காட்டுகளாக பெற்றோரை இழந்த பிள்ளைகள், முதியோர், பலவீனமுடையோர், துன்புற்றோர், வேறு உதவியில்லாதோர் ஆகியோருக்கு அரசு உதவியளிக்கும். இதேபோல உதவியில்லாத பெண்களுக்கும், அவர்களின் பிள்ளைகளுக்கும் உணவு, உடை, உறைவிடம் முதலியவற்றை வழங்கும்(2.1)

வயது வருமுன் பெற்றோரையிழந்த பிள்ளைகளின் உடைமை முதலியன வற்றைக் கிராமங்களிலுள்ள முதியோர் அவர்களுக்கு வயது வரும்வரை கவனிப்பது போலவே தேவாலயங்களுக்குரிய உடைமை களையும் சீர்ப்படுத்துவர்.

ஒழுக்க நெறிதவறியவன், திடகாத்திரமுள்ள ஒருவன் தனது பிள்ளை, மனைவி, தாய், தந்தை, வயதுவராத சகோதரர்கள், சகோதரிகள், கணவனை இளம் வயதில் இழந்த பெண்கள்(சகோதரிகள்) ஆகியோரை கவனிக்காவிடின் தண்டிக்கப்பட்டுத் தண்டப்பணம்(12பணம்) செலுத்த வேண்டி நேரிடும். தன்மனைவி, பிள்ளைகளுக்குப் போதிய அளவு பொருளாதார வசதிகள் ஏற்படுத்தாது துறவறத்தை மேற்கொள்ளு வோர் தண்டிக்கப்படுவார்கள். இதேபோல, ஒரு பெண்ணைத் துறவி ஆக்க முயற்சிப் போரும் தண்டிக்கப்படுவர். வயது முதிர்ந்த பின் ஒருவர் தாம் உழைத்துப் பெற்ற செல்வத்தைப் பிள்ளைகளுக்குப் பகிர்ந்து அளித்த பின்னர் துறவறத்தை மேற்கொள்ள வேண்டும். அல்லாவிடில் தண்டிக்கப் படுவர்.(2.1)

கிராமங்களிலுள்ள விவசாயிகளின் முயற்சிகளையும், வாழ்க்கைமுறையினையும் பாதிக்கும் வகையில் நடத்தப்படும் களியாட்டங்கள் முதலியன தடுக்கப்படும். அரசனே அதிகம் செலவுள்ள விளையாட்டுக் களைத் தவிர்க்க வேண்டும். கொடூரமான தண்டப்பணம், சம்பளமற்று வேலை செய்தல், வரிகள் முதலியனவற்றின் கொடுமைகளி லிருந்து விவசாயத்தையும், கள்வர், காட்டிலுள்ள கொடிய விலங்குகள், நச்சுத்தன்மையுள்ள பிராணிகள் முதலியன வற்றிலிருந்து மந்தைகளையும் அரசன் காப்பாற்ற வேண்டுமெனக் கௌடில்யர் கூறுகிறார். மேலும் மக்கள் செல்லும் வழிகளிலிடையூறுகளை ஏற்படுத்தக் கூடிய அதிகாரிகள், தொழிலாளிகள், கள்வர்கள், எல்லைக்காவலர்கள் முதலியோரையும் அவர் பதவிநீக்கம் செய்ய வேண்டும்.(2.1)

அக்காலத்திலே மக்களுக்கு இயற்கை அனர்த்தங்களாலேற்படக்கூடிய பெரிய கஷ்டங்களைக் கௌடில்யர் நன்கு அறிந்திருந்தார். இவ்வகையில் நெருப்பு, வெள்ளப் பெருக்கு கொள்ளை நோய்கள், பஞ்சம், எலிகள், காட்டிலுள்ள பேய் பிசாசுகள், கொடிய விலங்குகள், பாம்புகள் ஆகிய எட்டினாலும் ஏற்படக்கூடிய அனர்த்தங்களையும் அவற்றிற்கான நிவாரணச் செயற்பாடுகளையும் அவர் குறிப்பிடுகிறார்(4.3).

நெருப்பினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் பெருமளவு தவிர்க்கக்

கூடியவை. இதனை அதிகாரிகளும் கவனிப்பர். இத்துடன் சமயரீதியான கிரியைகளும், பிரார்த்தனையும் இவ் அனர்த்தம் வராது தடுப்பதற்குச் செய்யப்படும்.

பெருமழை பொழியும் போது குறிப்பாக நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும். இதனால் மக்கள் பலவற்றை இழந்து இருப்பிடங்களை விட்டு வெளியேற நேரிடும். எனவே இத்தகைய நிலையில் பாதிக்கப்பட்ட மக்களைப்பாதுகாப்பாக வேறிடங்களுக்குக் கொண்டு செல்ல அக்காலத்திய சூழ்நிலையில் மரக்குற்றிகள், பலகைகள், வள்ளங்கள் முதலியன பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவி செய்யாதவர்கள் தண்டிக்கப்படுவர். அதே வேளையில் சமயரீதியிலான சில கிரியைகளும், வழிபாடுகளும் இடம்பெறும். அமாவாசை, பௌர்ணமி நாட்களில் ஆறுகளை வணங்க வேண்டும். வேதங்கள், மாயாயோகம் முதலியனவற்றினை நன்கு அறிந்தவர்கள் அப்போது மழை அதிகம் பொழியாதிருக்க மந்திரங்களை ஓதி மழையைக் கட்டுப்படுத்த முயற்சிக்க வேண்டும். இதேபோல வரட்சிக் காலங்களில் இந்திரன், கங்கையாறு, மலைகள் முதலியோருக்கு வழிபாடு செய்வதன் மூலம் வரட்சி நீங்கி மழை பொழியும். பருவமழையில்லாவிட்டாலும், மழை அதிகம் பெய்தாலும் பயிர் அழிவு, உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுப் பஞ்சமும், கொள்ளை நோய்களும் ஏற்படும். கொள்ளை நோய்களைத் தடுப்பதற்கு மருத்துவ வசதிகள் அரசாங்கத்தால் செய்யப்படும். அதே வேளையில் இவற்றைத்தடுப்பதற்கு சமயரீதியிலே கிரியைகளும், தெய்வ வழிபாடும் செய்யப்படும். மந்தைகளுக்கு பெரிய அளவில் நோய் ஏற்பட்டாலும் இதேமுறையில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

மேற்குறிப்பிட்டவாறு பஞ்சம் ஏற்படும்போது அரசன் மக்களுக்கு உணவும்(விதை) தானியமும் வழங்குவான். ஏனைய அனர்த்தங்களுக்குப் போலவே இதற்கும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அரசன் தான்சேகரித்து வைத்தவற்றைப் பெற்றுப் பகிர்ந்து கொடுப்பான் அல்லது தன்னுடைய நண்பரான அரசரிடம் இருந்தும் உதவிபெற்று மக்களுக்கு வழங்குவான். மேலும் மாற்று நடவடிக்கையாகச் செழிப்பான இடத்துக்கு மக்களுடன் அவன் புலம் பெயர்வான். சில வேளைகளில் வேட்டையாடுதல், மீன் பிடித்தலைப் பெரிய அளவில் மேற் கொள்ளுவான்.

பாரத தேசம் ஒரு விவசாய நாடு. இங்கு பயிர்களுக்கும் மனிதருக்கும் எலிகள் கூடுதலாக கேடுவிளைவிப்பன. எனவே அவற்றை அழிப்பதற்கு பூனைகள் வளர்த்தல் ஒரு வழி முறையாகும். நஞ்சூட்டிய உணவினை வைத்தும் அவற்றை அழிக்கலாம். மேலும் சமயக்கிரியைகள் வழிபாடுகள் மூலமும் எலிகளின் தொல்லைகளை நீக்கலாம். வேட்டையாடு வோரைத் தவிர்ந்த ஏனையோர் தத்தம் நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டும். விவசாயத்திற்குப் பங்கம் விளைவிக்கும் பூச்சிகள், புழுக்கள், பறவைகளுக்கு எதிராகவும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மனிதனுக்கும் பயிர்களுக்கும் இடையூறு விளைவிக்கும் கொடிய காட்டு விலங்குகளைப் பொறிவைத்துக் கொல்ல லாம். அல்லது வேறு வழிகள் மூலம் அவற்றை அழிக்கலாம். அதே வேளையில் இத்தகைய விலங்கினால் பாதிக்கப் பட்டிருக்கும் ஒருவரை மற்றவர்கள் கண்டும் அவருக்கு உதவிசெய்யாவிட்டால் அவர்கள் தண்டிக்கப்படுவர். மேலும் இத்தகைய இடர்களை நீக்க சில சமயவழிபாடுகளும் இடம் பெறும்.

அதர்வ வேதத்திலுள்ள கிரியை களை அறிந்தவர்களும், மந்திரவாதிகளும் பேய்பிசாசுகளினால் ஏற்படும் இடையூறு களை நீக்குவதற்குச் சில கிரியைகளைச் செய்வர். இவற்றை விடக்குறிப்பிட்ட நாட்களில் தெய்வவழிபாடும், பலியிடல், அமுதுவைத்தல் போன்றனவும் இடம் பெறுவன.

தன்னுடைய குடிகளில் நலிவுற்றவர் களையும், துன்புற்றோரையும் பிள்ளைகளைத் தந்தை காப்பாற்றுவது போல அரசன் எப்போதும் பாதுகாக்க வேண்டும் எனக் கௌடில்யர் வலியுறுத்தியுள்ளார்(4.3)

மேலும் அனர்த்தங்கள் வராமல் தடுப்பதற்கும், வந்தால் அவற்றை நீக்குதற்கு மான மாந்திரிகத்திறன், அமானுஷிக சக்தியுள்ள துறவிகளையும், பிறரையும் மன்னன் கௌரவிக்க வேண்டும். அவர்கள் குறிப்பிட்ட அரசிலே வாழவசதி யளிக்க வேண்டும் எனவும் கூறப்படுகின்றது.

மேலே குறிப்பிட்ட அனர்த்தங்கள் நிகழாதிருப்பதற்கும், நிகழ்ந்தபின் அவற்றின் வழிமுறைகளிலே வழக்கமான நிவாரணத் திற்குமான பரிகாரங்கள் மட்டுமன்றிச் சமயம் மாந்திரிக ரீதியிலான பரிகாரங்களும் கூறப்பட்டுள்ளமை அக்காலத்திய மக்களின் நம்பிக்கைகளின் அடிப்படையில் இடம் பெற்றுள்ளன எனலாம். இத்தகைய நடவடிக்கைகள் சில இன்னும் சில பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை சுட்டிக்காட்டப்பட்டுள்ள வற்றைத் தொகுத்து நோக்கும்போது புராதன இந்து அரசிலே குடிகளுக்கு ஆபத்துக்கள், துன்பங்கள் நேரிடும் போது அரசன் குடிகளின் நன்மைக்காகப் பலவகையான பொதுநல சேவைகளைத் தனது சொந்தப் பிள்ளைகளின் நலனிற்குப் போல முன்னின்று செய்ய வேண்டும் எனக் கௌடில்யர் கூறி இருப்பது மனம்கொள்ளற்பாலது. எனவே குடிகளுக்கு ஏற்படும் தீங்குகள் வராது தடுத்தலும் அவை வந்தால் அவற்றைத் தடுப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் புராதன இந்து அரசியல் ஞானிகளும் யதார்த்தமாகவே சிந்தித்துள்ளனர். இத்தகைய பொதுநல சேவை பற்றிய சிந்தனைகள் ஐரோப்பியர் வருகை, குறிப்பாக ஆங்கிலேயர் வருகையின் பின்னரே தென் ஆசியாவில் ஏற்பட்டன எனக் கொள்ளுவது பெருந் தவறாகும். புராதன இந்து மன்னர்கள் குடிகளின் நலனுக்காக அக்காலச் சூழ்நிலைக்கேற்ப அனர்த்தங்களை எதிர்நோக்கினர் என்பதும் இத்தால் புலப்படுகிறது.

07781 56158

இ.சாந்தகுமார்
இந்துநாகரிகம்-சிறப்புக்கலை
இரண்டாம் வருடம்.

# திருக்குறளும் மனித வாழ்வும்

தமிழ் நூல்கள் அனைத்தினுள்ளும் உருக்கமுடைய உயர் அறிவுப் பொக்கிசமாக உள்ளவைகளில் திருக்குறள் தனித்துவமுடைய நூலாகும். திருவள்ளுவருடைய அறிவு பூர்வமான கருத்துக்கள் உலகளாவிய ரீதியில் சிறப்புப் பெற்றதுடன், பல்வேறு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு அனைத்து மக்களும் பலன் பெறும் வகையில் அமைந்துள்ளன.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்
புகழ் கொண்ட தமிழ் நாடு"

என்று போற்றி புகழப்படும் பெரும் புலவர் திருவள்ளுவர். இவர் தெய்வத் திருவள்ளுவர் என்னும் திருப் பெயரைப் பெற்றவர். இவரது தந்தையார் பகவன் தாய் ஆதி என்று கூறப்படுகின்றன.

தமிழ்நாடு எங்ஙனம், திருவள்ளுவர் ஆண்டு வழக்கிலுள்ளது. தமிழ் நாட்டில் கட்டப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டம், கன்னியாகுமாரியில் கட்டப்பட்டுள்ள வள்ளுவர் சிலை என்பன, வள்ளுவரின் பெருமையையும் அவர் செய்த திருக்குறளின் அருமையையும் பறை சாற்றி நிற்கின்றன.

திருவள்ளுவரருளிய திருக்குறள் நூல் உலகப் பொது மறையாக விளங்குகின்றது. இந் நூல் அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.133 அதிகாரங் களையும் 1330 குறட்பாக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இரண்டு வரிகளையும் ஏழு சொற்களையும் கொண்டு ஒரு அதிகாரத்தில் பத்துக் குறள்களையும் கொண்டுள்ளது.

"யாமறிந்த புலவர்களிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணும் பிறந்ததில்லை"

என்று புரட்சிக்கவி சுப்பிரமணிய பாரதியாராலும் போற்றப்பட்டவர் வள்ளுவர் எனின் மிகையாகாது. இப்பொழுது "தமிழ்மறை" என தனித்துயர்த்திப் போற்றப் படுவது திருக்குறளேயாகும். இப் போற்றுதல் இன்று நேற்றுத் தொடங்கியதன்று. திருக்குறள் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை வாழ்ந்த அறிஞர் பெருமக்கள் திருக்குறளைத் "தமிழ்வேதம்" எனவும் "தமிழ்மறை" எனவும் போற்றுவர். "பொய்யில் புலவன் பொருளுரை" என மணிமேகலை திருக்குறளின் உயர்வை உரைத்துள்ளது. "தொல்லுலகில் எழுதுண்ட மறையன்றோ" என்று கம்பன் திருக்குறளை "மறை" எனப் போற்றுகின்றார். "திருவள்ளுவ மாலை" எனும் நூலிலுள்ள பல வெண்பாக்கள் திருக்குறளைத் தமிழ்வேதம் எனவும், வடமொழி வேதங்களிலும் திருக்குறள் சிறந்ததெனவும் கூறுகின்றன. "மெய் வைத்தசொல்" என்று வள்ளுவருடைய திருவாக்கை உமாபதி சிவம் போற்றினார். திருக்குறள் சாதாரண மறையன்று "வான்மறை" என்று பாடினார் பாரதியார்.

உலகத்திலே மறைகள் எனப் போற்றப்படும் நூல்களிலே திருக்குறளைத் தவிர்ந்த யாவும் சமயச் சார்புடையனவாகவும் ஒரு நாட்டினருக்கோ, ஒரு இனத்திற்கோ ஒரு காலத்திற்கோ உரியதாக இருக்கின்றன.

ஆனால் திருக்குறளோ எந்தச் சமயச் சார்பற்றதாகவும் உலகத்து மக்கள் யாவருக்கும் பொதுவானதாகவும், எக்காலத்துக்கும் பொருந்துவதாயும், மக்கள் கூட்டம் ஒரு குலமாக வாழ்வதற்கு வழி செய்வதாயும் விளங்குகின்றது. இத் திறம்பாட்டைக் கல்லாடர் கூறும்போது,

> "சமயக் கணக்கர் மதிவழி கூறாது
> உலகியல் கூறிப் பொருளினது
> வென்ற வள்ளுவன்"

எனப் போற்றுகின்றார். சுருங்கக் கூறின் இன்று ஐக்கிய நாடுகள் நிறுவனம் போன்ற உலகப் பொது மன்றங்கள் கைக் கொள்ளத்தக்க ஓர் உலகப் பொதுமறை யாவர்க்கும் இனியமறை, இத் தமிழ் மறையே எனலாம். மக்கள் தம் வாழ்விலே வெற்றி காணாது வருந்துவதற்கு காரணம் அவர்கள் தங்களுடைய ஆற்றலை அறியாமையேயாகும். இதனால் தாழ்வு மனப்பான்மையும், சோர்வு மனப்பான்மையும், தோல்வி மனப்பான்மையும் உண்டாகின்றன. இவை ஏற்பட்டால் மக்களும், அவர்களுடைய இன்னமும் உயர்வடைய முடியாது. இந்த மனப்பான்மைகளை வளர்ப்பதற்கு "எல்லாம் விதியின் விளையாட்டு" என்று காரணம் கூறப்படுகின்றது. இந்த "எல்லாம் விதிப்படி" என்ற கொள்கை மக்களுக்குச் செய்த மாபெரும் கொடுமைகளையெல்லாம் கண்டார் வள்ளுவர். இது பற்றி இவர் ஓர் அதிகாரத்தில் விளக்குகின்றார் விதியிலும் மிகுந்த வலிமையுள்ளது வேறொன்றுமில்லை என்று கூறுவதை இவர் ஏற்றுக் கொள்கிறார்.

> "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினுந் தான் முந்துறும்"

என்றியம்புகின்றார். இத்தகைய பேராற்றல் வாய்ந்தது என்று கூறப்படும் விதியையும் வெல்லலாம். கம்பன் கூறுவது போல "விதிக்கும் விதியாகலாம்" என்று உறுதி கூறுகின்றார். தளராத முயற்சியால் விதியை வெல்லலாம் என்று வழி காட்டுகின்றார்.

இத் திருக்குறள் விதியின் "விளையாட்டு" ஊழின் விளைவு "தெய்வச் செயல்" என்று கூறிக்கூறி சோர்ந்து உக்கி, உடைந்து போன உள்ளங்களுக்கு நம்பிக்கை எனும் ஊசி மருந்தை ஏற்றி ஊக்கமளிக்கின்றது. இதனையே திருவள்ளுவர்,

> "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன்
> மெய் வருந்தக் கூலி தரும்"

என்று கூறுகின்றார்.

அன்பு, அறம், அருள் எனும் இம்மூன்றும் தமிழில் தனிச் சிறப்பு மிக்க சொற்களாகும். இவை தமிழரின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் எடுத்துக் கூறும் சிறப்புமிக்க செந்தமிழ்ச் சொற்கள் பல்லாயிரமாண்டுகள் வாழ்ந்து உள்ளத்திருந்திய தமிழினம் வாழ்வின் உயர்நிலையை உள்ளவாறுணர்ந்து வாழ்வு வளம் பெறுவதற்குரிய பண்புகளையெல்லாம் உள்நிறுத்தி இம் மூன்று சொற்களும் வழங்கின. இம் மூன்றிலும் முதலானதான "அன்பு" இந்த உலகத்து மக்களையெல்லாம் ஒருவரோடொருவர் பிணைப்பது. அன்பு கொள்வோர் தொடர்பிற்கேற்ப இது பல திறப்படும். தாய்மை, காதல் ..... .. .. என இவை மாறுபடும். இவை யாவற்றிலும் முதலிடம் பெற்று விளங்குவது தாயன்பு ஆகும். தாயினுடைய அன்பைத் தமிழ் மக்கள் நன்குணர்ந்து போற்றினர். அன்பின் உச்சி நிலையில் தாயை எடுத்துக் காட்டிப் பேசியவர்கள் அடியவர்கள். இத்தகைய தாயை, தம்மை ஈன்றாளை வள்ளுவர் பாடும்போது,

> "ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக் கேட்ட தாய்"

என தமிழ் இனத்தின் உயர்ந்த குறிக்கோளை படம் பிடித்துக் காட்டுகின்றார்.

ஐயிரு திங்கள் சுமந்து பெற்று பாலூட்டித் தாலாட்டி சீராட்டி வளர்த்த தம்தாயை மக்கள் பொன்னே போற் போற்றுவர். தாயிற் சிறந்த தெய்வம் பிறிதில்லை எனக் கொண்டாடுவர். பெற்றதாயைப் பசியால் வருந்த விடுதலே இந்த உலகத்திலுள்ள பழி பாவங்களில் மிகக் கொடியது என்பது தமிழினம் உருவாக்கிய உயர்ந்த கொள்கைகளில் ஒன்றாகும். தீய வழிகளில் பணத்தை வீணாகச் செலவுசெய்து அடையும் அறஞ் சாரா வறுமை யாவராலும் வெறுக்கப்படும். இந்த வறுமையின் இழிவை மக்கள் உள்ளத்தில் பதியச் செய்வதற்கு வள்ளுவர் பெருமான் இதனுடன் ஈன்ற தாயை தொடர்புபடுத்துகிறார். எந்த இழிவையும் பொறுக்கும் தாய் கூட அறஞ்சாரா வறுமை காரணமாகப் பண்பினின்றும் பிறழ்ந்து விடுவாள்.

அறஞ்சாரா வறுமையெய்தியவனைப் பெற்றதாய் தன் மகனாகக் கருதாது பிறன் போலக் கருதுவாள் எனில் இவ் வறுமையின் கொடுமையை என்னவென்பது? ஒருவன் சால்பு உடையவனா என்பதை எவ்வாறு அறியலாம்? என்பதற்கு வள்ளுவர் ஓர் உரை கல்லைத் தருகின்றார். இது தம்மிலும் குறைந்தவர்களிடத்தும் தோல்வியை ஏற்றுக் கொள்ளும் அரிய செயலாகும். ஆனால் இன்று பலரிடம் காணப்படும் போக்கு "விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை" என்பதாகும்.

நண்பர்களை ஆராய்ந்தே கொள்ளுதல் வேண்டும். நண்பர்களெனும் போர்வையில் அடுத்துக் கெடுப்பாருமுளர். தமக்கு நன்மை கிடைக்கும் வரையும் நண்பராயிருந்து வருவாய் கிடைக்காவிடில் பிரிபவரும் உளர். எனவே உண்மையான நண்பர்களை அறிவது எப்படி என வள்ளுவர் ஓர் அளவுகோல் தருகிறார். துன்பம் வரும்போது சேர்ந்து நின்று தோள் கொடுப்பவனே உண்மையான நண்பன் என்று கூறுகின்றார். துன்பத்தைக் கண்டு பாராமுகமாய் திரிபவர்கள் உண்மையான நண்பர்களல்ல என்பது வள்ளுவர் நெறிமுறை.

அன்புதான் வாழ்வின் உயர்நிலை, குடும்பப் பயிரை வளர்க்கும் நீர். சமுதாயத்தைப் பிணைக்கும் கயிறு. இந்த அன்பு உள்ளத்திலே உண்டாவது. அன்பு மிகுதியாக உள்ளவர்களையும், அன்பு இல்லாதவர்களையும் எப்படியறியலாமெனின், பிறருக்காகத் தன் உயிரையும் கொடுப்ப வர்களே அன்புடையவர்கள். பிறருக்கு எதையும் கொடுக்காது தனக்கென வைத்துக் கொள்கிறவர்களே அன்பில்லாதவர்கள்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்புமுரியர் பிறர்க்கு"

என்று கூறுகின்றார். மக்களுக்கேயன்றிப் பிற உயிர்களுக்கும் வரும் இடர்களையும் தமக்கு வருவனவாகக் கொண்டு அவற்றை காத்தலே அறிவின் பயன் என்கிறார்.

"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
தந்நோய் போற் போற்றாக்கடை"

மேலும் தமக்குத் தீமை செய்கின்றவர் களுக்கும் தீமை செய்யாது விடுதலே தலையான அறிவு என்கிறார் வள்ளுவர்.

"அறிவினுள்ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்"

ஒருவன் உயர்ந்த குடியில் பிறந்தவனா என்பதனை அறிவதற்கு பல வழிகளுள்ளன. அவற்றிலெல்லாம் சிறந்தது அவர் வாயிலிருந்து வரும் சொற்களே என்கிறார். ஒரு நிலத்தினுடைய இயல்பை நல்ல நிலமா? சான்றா என்பதை அதில் முளைத்த முளை காட்டும் அதுபோல ஒருவருடைய வாயிலிருந்து பிறக்கும் சொற்கள் அவருடைய குடி உயர்ந்ததா என்பது பற்றிக் கூறும்.

"நிலத்திற் கிடந்த மை கால் காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தோர் வாய்ச் சொல்"

என்கிறார்.

மக்கள் வாழ்வை மண் வாழ்வு எனலாம் மனமில்லாத வாழ்வு மாக்கள் வாழ்வே. மக்களுக்குரிய குணங்களுள் எல்லாம் அடிப்படையானது மனமே மனம் சேராத எக்குணமும் எச் சொல்லும் எச் செயலும் சிறப்பளிப்பதில்லை. தமிழினம் மானத்தை உயிரினும் சிறந்ததாக கொண்டு வாழ்ந்ததும் மானத்தை இழக்க நேர்ந்தால் உயிரை விடல் வேண்டுமென்ற குறிக்கோள் உடையது. எனவே வள்ளுவர் பெருமானும் மானத்தைக் காப்பாற்றுவதற்கு உயிர் நீக்க வேண்டுமாயின் அதனைச் செய்யவும் என்கிறார்.

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர் நீர்ப்பார் மானம் வரின்"

இன்று உலகிலுள்ள தீமைகளுள்ளே மிகக் கொடியது புறங்கூறுதலாகும். புறங் கூறுதலென்பது ஒருவர் இல்லாதவிடத்து அவரைப் பழித்துரைப்பதாகும்.

"புறங் கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங் கூறும் ஆக்கந்தரும்"

என்கிறார்.

மனித வாழ்வு மேம்படைவதற்கு பொருளும் ஒரு காரணமாக உள்ளது. பொருளீட்டிலும் வரவையும் செலவையும் ஆராய்ந்து பார்த்தே தொழிலைச் செய்ய வேண்டும் என்பதை

"அழிவதும் ஆவதும் ஆதி வழி பயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்"

என்று கூறுகின்றார்.

ஒருவன் தன்னைத்தானே காதலிப்பானாயின் எந்த வித தீய காரியங்களையும் செய்ய மாட்டான். தீய செயல்களைச் செய்பவன் தன்னைத்தான் காதலிப்பதில்லை.

"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்"

மனித வாழ்விற்கு அடிப்படையான பல கருத்துக்கள் கூறப்பட்டாலும் அவற்றை ஆதாரம் காட்டி நிறுவுகிறார் வள்ளுவர். மேலும், மனித வாழ்வு பற்றிய கருத்தினை நோக்குவோமாயின் எமது வாழ்வின் பண்பு அன்பு தான் என்கிறார். அன்பு செயலாகும் போது அது அறமாக (தர்மம்) மிளிர்கிறது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

உலகிலே நாம் எத்தனை பயன்களை அடைகிறோம் அனுபவிக்கிறோம் இத்தனைக்கும் மூல காரணம் அன்பு அன்பில்லையேல் இல் வாழ்க்கையில்லை அன்பின் உயர் தன்மையே எம்மையும் பிறரையும் வாழ வைக்கிறது.

"அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு"

எனக் கூறுகிறார்.

திருவள்ளுவர் குறிப்பிடுவது சிற்றின்பமல்ல. அது அகத்தின் ஆனந்தம். இதையே சாயி பகவானின் மனித மேம்பாட்டில் சாந்தி என்கிறார். எங்களுடைய அன்புதான் எம்மை உயர்ந்தோராகக் காட்டும்.

மனித வாழ்வு உயர்வடைய பல காரணிகள் இருந்தாலும் சில காரணிகள் இதற்குத் தடையாக இருக்கலாம் இதை நாம் யார் சொல்லியேனும் கேட்பினும் அதனை ஆராய்ந்து அதன் தன்மையினை இயல்பினை அறிதல் அவசியமாகிறது. அதன் அர்த்தம் அறிவு என்று கூறிச் சென்றுள்ளார். இத்தகைய அறிவு நமக்கு

முக்கியமானதும் அவசியமானதும் ஆகும்.

"எப்பொருள் எத்தன்மையாயினும் அப்பபொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்னும் குறள்களினூடாக அறிவு செயற்றிறனும் கொண்டிருக்க வேண்டுமெனவும் கூறுகின்றார். மனித வாழ்விலுள்ளம் தெளிவாக இருக்க வேண்டும். சிந்தனை, செயல், சொல் என்ற மூன்றும் மனித வாழ்வை நிர்ணயிக்கின்றன. மனிதன் தன்னைத்தானே உணர வேண்டும். நான் யார்? என் உள்ளம் யார்? எனக்குள்ளிருக்கும் பொருள் என்ன? என்ற கேள்வியினை கேட்கின்ற போது மனம் அன்பின் மேல் நிலையினை எடுத்துக் காட்டுகின்றது.

நாம் பேசும் சொற்கள் இனிமையாகவும் அன்பு தழுவியதாகவும், வஞ்சனை பொய்யற்றனவாயும் இருக்க வேண்டும். கேட்பவர் மகிழும்படி பேசுபவர் இனிமையான சத்தியத்தை உணர்ந்தவர். இனியவை கூறல் அறமாகும். இதனை வள்ளுவர் செம்பொருள் இரண்டு என்கிறார்.

"இன்சொல்லால் ஈரம் அளை இப்படிறிலவாம்
செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்"

எங்களுடைய சொல்லினால் பிறருக்குத் தீங்கு ஏற்படாத வகையில் சொற்களை ஆராய்ந்து மேம்பட்ட கருத்தினைக் கூறல் வேண்டும். இனிய சொற்களிருக்க தீய சொற்களைப் பேசுவது கனியிருக்க காயைத் தின்பது போன்றதாகும்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்றே" என்கிறார்.

மனித வாழ்வின் மேம்பாட்டினைக் கட்டிக் காப்பதில் முதலிடம் வகிப்பவள் பெண்ணே. "பெண் என்றால் பேயும் இரங்கும்" என்பார்கள். பெண் கற்பு நெறியில் நின்று வழுவாது வாழ்தல் வேண்டுமென்ற கருத்தை வள்ளுவர் முன்வைக்கிறார். இல்லற வாழ்வுக்கேற்ற மாண்பை(பண்பு) உடையவளாய் தனது கணவரது வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துபவளே வாழ்க்கைத் துணைவி. இந்தக் கருத்தினை பொய்யாமொழி

"தற்காத்து தற்கொண்டார் பேணி
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

பெண்ணின் பெருமை பற்றிக் கூறும்போது கற்பு என்னும் திண்மை ஒரு பெண்ணுக்கு உண்டு என்றால் அந்தப் பெண்ணை விடப் பெருமை உடையவை வேறு என்ன இருக்கின்றன? என்று வினாவுகிறார். இந்த நிலையின் சிறப்பினை எடுத்துக் காட்டி மேன்மைப் படுத்துகிறார்.

எமது பெயர் புகழ், பட்டம் சுக அனுபவம் எல்லாம் சமூகத்திலிருந்தே கிடைப்பனவாகும். சமூகத்திலே நாம் நிறைவு காண்கிறோம். ஆகவே நாம் சமூகத்திற்கு நன்மை செய்யாவிடின் வேறு யார் செய்வார்? நாம் எதிர்பார்க்காத வகையில் அன்புடன் கூடியதாக இருக்க வேண்டும் பிறர் நமக்குச் செய்யும் நன்றியினை நாம் எக்காலத்திலும் மறத்தலாகாது. அவ்வாறு மறந்தோமாயின் அதற்குப் பிராயச்சித்தமே இல்லை. நன்றி இல்லாத மனிதன் காட்டு மிருகங்களிலும் கேவலமானவன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

ஒருவர் எமக்குச் செய்த நன்றியை மறப்பது அறமல்ல அவர் நன்மை தராத செயல்களைச் செய்திருப்பினும் அதை அன்றே மறப்பது அறமாகும்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

மனித வாழ்வில் உயிர்களைக் கொல்லாமை உயர்ந்த தர்மமாகும். தன்னுயிர் போய்விடும் ஒரு நிலை ஏற்பட்டாலும் வேறோர் உயிரை நீக்கும் செயலைச் செய்யக் கூடாது

''தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தன்னுயிர் நீக்கும் வினை'

இந்தக் கருத்துக்கு எதிர் விதமாக ''உன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லுதல் பாவமன்று'' என மகாத்மா காந்தி கூறுகின்றார். ''தர்மத்திற்காகவும், கடமைக்காகவும் உன் கடமையினைச் செய்'' என்கிறார். கண்ணன் கீதையிலே ''உயிர்க்கொலையை எண்ணி நீ கலக்கமுறத் தேவையில்லை'' என்று அர்ச்சுனனை யுத்தம் செய்யும்படி கூறுகின்றார். வள்ளுவர் இது பற்றிக் கூறும்போது

''கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்'' என்கிறார்

கல்வியில் சிறந்தவர், அறிஞர், நற்குணம் நிறைந்தவர்கள், பழி செய்யாதோர், நட்பின் இனியவர், பயனுள்ள சொற்களை செய்பவர், தாயின் பெருமைக்குரியவர் இப்படியானவர்களை சிறப்பித்து வள்ளுவர் கூறும்போது ''சான்றோன்'' என்கிறார். சான்றோர்க்கு அணியாக இருப்பது நடுவுநிலைமை என்ற உயர் குணமாகும்.

''கேடும் பெருக்கமும் இல்அல்ல நெச்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி''

கேடும் பெருக்கமும் யார்க்கும் இல்லாதவையல்ல எனவே நெஞ்சின் நடுநிலை தவறாது இருப்பதே சான்றோர்க்கு அணி என்கிறார்.

''சமன்செய்து சீர்தூக்கும் கோல் போலமைந்
தொருபாற்கோடாமை சான்றோர்க்கு அணி''

ஒருபக்கமும் சாராது நடுநிலைமை யாகி தராசு போல நிற்றல் வேண்டும். இதுவே தர்மமும் அறமும் ஆகும்.

மனித வாழ்வில் ''ஒழுக்கம்'' என்பது வெறும் வெளிப்பார்வைக்கான நன்நடத்தை யல்ல ஒழுக்கமுடையவன் தெய்வத்தின் வழியே வாழ்பவன் தனது ஆசைகளை மறந்தவன் பொறாமை முதலிய தீய குணங்களை தவிர்ப்பவன். சத்தியம் கடைப்பிடிப்பவன் என்கிறார் வள்ளுவர்.

''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்''

ஒழுக்கம் உயிரினும் மேலானது ஒழுக்கமுடையவன் அனைத்துமுடையவ னாகக் கருதப்படுவான்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்''

ஒழுக்கம் மனித வாழ்வின் அடிக்கல்லாகத் திகழ்கிறது. அடி அத்திவாரம் திறம்பட இடும் கட்டத்தில்தான் அதன் அடிக்கட்டிடம் சிறப்பாக அமையும். இவ்வாறே ஒழுக்கமுடையவனின் வாழ்வும் மேன்மையடையும்.

திருவள்ளுவர் கடவுள் பற்றி மனித வாழ்வோடு இணைத்துக் கூறுகின்றார். நல்லறம் செய்து வாழ்வான் தெய்வத்துள் ஒருவனாக மதிக்கப்படுவான்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்று கூறிய வள்ளுவர் சமய உணர்வற்றவர் என்று குறிப்பிட முடியுமா? வள்ளுவரிடத்தும் சமய உணர்வும் சமூக உணர்வும் மேலோங்கி நிற்கிறது. ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்கிறார் அப்பர். இறைவன் எல்லா உயிர்கள் மீதும்,

உயிரற்றவைகளிலும் நீக்கமற நிறைந்து நிற்கிறான் என்னும் அப்பரடிகளின் சமய உணர்வு சமூக உணர்வாக மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதனை உள்ளடக்கியுள்ளது.

திருமூலர் "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்கிறார் சம்பந்தரும் "ஆழ்க தீயதெல்லாம் வையகமும் துயர் தீர்க்கவே" என்றே வேண்டி நின்றார்.

திருவள்ளுவர் திருக்குறளிலே கூறிய விடயத்தினை நாம் முற்றாக ஆராய முடியாதுள்ளது. அதாவது திருக்குறள் பெரிய கடல் போன்றது அதனை நாம் பருக முயல்வது எமது அறியாமை அதன் ஒரு சிறிய பகுதியான "திருக்குறளும் மனிதவாழ்வும்" எனும் தலைப்பிலான குறிப்பிட்ட விடயத்தினை நோக்கி உள்ளேன். ஆனால் அன்று இருந்த திருக்குறள் வாழ்வு இன்றைய நாகரீக வளர்ச்சிக்குப் பொருந்துமா? என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. இன்றைய நிலையில் மானம், அன்பு,கருணை, தயை, ஜீவகாருண்ணியம், ஆத்மநேயம் தாய் போற்றப்பட வேண்டியவர். நடுநிலைமை நன்றிமறவாமை ஒழுக்கம், அறம், புறம் கூறாமை, மனையாள் பெருமை, இன்சொல், பிறர்நலம் பேணல் இவ்வாறு பலவற்றினை ஆராய்கின்றோம். இவை அனைத்தும் இன்றைய நிலையில் பொருந்துமா? இவை இன்று நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனவா? இவற்றினைச் செய்கிறார்களா? அல்லது செய்வார் போன்று நடிக்கிறார்களா? இதனை நிலை பெற வைக்க யாது செய்ய வேண்டும்? இவை இன்று இத்தகைய நிலையில் நின்று மாறுபடுவதற்கு என்ன காரணம்? இதனுடைய எதிர்கால நிலை என்ன? என்ற பலவகையாக கேள்விகள் எழுகின்றன? இதற்கு விடைகாண முடியுமா? அல்லது புரியாத புதிராக இருக்கின்றனவா?

திருக்குறளில் அரிய பல கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டாலும் அவை இன்றைய நிலையில் மக்களை நெறிப்படுத்தும் அரிய நூல் என்றே கூறலாம். இதனை சரியான முறையில் அணுகி அதைச் சுவைத்து அதில் திளைத்தவர்கள் திருக்குறள் முக்காலத்துக்குமுரிய பெறுதற் கரிய கனியாக இருக்கின்றது என்று கூறுகின்றமை வியப்புக்குரிய விடைய மாகவும் விரும்பத்தக்க விடயமாகவும் உள்ளது என்றால் மிகையாகாது.

**நன்றி**

**என்னை இறைவன் படைத்ததே தன்**
**அடியார்க்கு நன்கு பணி செய்யுமாறே"**

**உசாத்துணை நூல்கள்**


1. **சாயியின் குறளும் வள்ளுவர் குறளும்**
பேராசிரியர்.செ.சிவஞானசுந்தரம் (நந்தி)

2. **தமிழ் மறையிலிருந்து**
கா.பொ.இரத்தினம்
(தமிழ் மறைக் கழகத்தின் இருபதாவது திருக்குறள் மன்ற வெளியீடு நூல் - சென்னை)

3. **ஞான அறிவுச் சுடர்**
2001 ஜுன், ஜுலை இதழ்

4. **சைவ சித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள்**
திருமதி.கலைவாணி ராமநாதன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 1997

கார்த்திகா சரவணபவன்
உதவி விரிவுரையாளர் இந்துநாகரிகம்
யாழ் பல்கலைக்கழகம்.

# இராமகிருஷ்ணரும் இராமலிங்கரும்

இந்தியாவில் குழப்பமும் அமைதியின் மையும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தபொழுது அமைதியையும் அறிவொளியையும் நல்க இந்திய வானில் விடிவெள்ளியாகத் தோன்றியவர் இராமகிருஷ்ண பரமஹம்சர். இவர் 1834 ஆம் ஆண்டு ஹக்ளி மாவட்டத்தில் காமர்புகூர் என்ற கிராமத்தில் பிராமண குலத்தில் தோன்றியவர். 1886ம் ஆண்டு இவர் மகாசமாதி அடையும் வரை 11 ஆண்டுகளுக்கு எளிய சொற்களில் இனிய நடையில் கதைகள், நீதிக்கதைகள், சமயதத்துவக்கருத்துக்கள் எனபவற்றை எவரும் புரிந்து கொள்ளும் வண்ணமும் போதித்தார். அன்னை சாரதாதேவியார் இவருக்கு உற்ற துணையாக இருந்து இவருடைய சமயப் பணிகள் சரிவர நடைபெறப் பல்லாற்றாலும் துணைபுரிந்தார்.

தில்லையின் வடமேற்கு மருதூரில் குக்கிரான் என்ற கிராமத்தில் 1823ம் ஆண்டு தோன்றியவர் இராமலிங்க வள்ளலார். ஆன்மீக வேட்கை உடையவரின் வாழ்க்கை அமையும் விதத்திற்கு இவரது வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இறை இன்பம் பெற்ற ஒருவராகவும் மற்றவர்களுக்கும் வழிகாட்டும் ஓர் ஆன்மீகச் செல்வராகவும் விளங்குபவர் சுவாமி இராமலிங்க வள்ளலார்.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் சிந்தனைகளுக்கும் இராமலிங்கரது சிந்தனைகளுக்குமிடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. உதாரணமாக நோக்கினால் இருவரும் பிறர் துயர் கண்டு இளகியவர்கள். இருவரும் தயாமூல தர்மத்தை அடிப்படையாகக்கொண்ட பக்தி நெறியில் சென்றவர்கள். அதே திருநெறி பிடித்து ஒழுகுமாறு உலகத்திற்கு உபதேசித்தவர்கள்.

## பிரேமை

ஏழைகளின் துயர்துடைப்பதை அதிமுக்கியமாகக் கருத்திற் கொண்டவர் பரமஹம்சர். அவர் ஏழைகளின் உடம்பிலேயே இறைவனைக்காணும் பக்குவம் பெற்றவர். ஒருமுறை காசிக்கு சேத்ர யாத்திரை சென்றபோது வழியில் ஒரு கிராமத்தில் பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட மக்களைக் கண்டார். தன்னுடன் வந்தவர்களை நீங்கள் காசிக்குப் போகலாம் என்று கூறி எனக்கு காசி விஸ்வநாதரின் வடிவங்கள் இந்த ஏழை மக்களே நான் இவர்களுடன் இருப்பேன் எனக்கூறி ஏழைகளுடன் கலந்துகொண்ட செயல் அவரது பரந்த உள்ளத்தை எடுத்துக்காட்டுகிறது.

இதே போன்று இராமலிங்கரும் உயிர்களுக்கு உதவுவது எத்துணை மேம்பாடுடையது என்று கூறியுள்ளார். அன்பே உருவமாகக் கொண்டு எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டி வாழ்வோரது உள்ளத்தில் எம்பெருமான் சத்சித் உருவாக நின்று நடனம் புரிகிறார் என அறிவுறுத்துகிறார். அதுமட்டுமன்றி எல்லா உயிர்களையும் தம் உயிர்போல எண்ண வேண்டும் என்று குறிப்பிட்டு இரக்கம் குறைந்தால் என்னுயிர் போய்விடும் என இறைவனை நின்பதத்தாணை என்று ஆணையிட்டுள்ளார். இரக்கத்தன்மை காரணமாகவே மனுமுறைகண்ட வாசகம், ஜீவகாருண்ய விளக்கம் எனும் நூல்களை எழுதினார்.

## வழிகாட்டிகள்

இராமகிருஷ்ணரின் சரித்திரத்திலும் இராமலிங்கரின் சரித்திரத்திலும் ஒரு சாதகர் அரும்பெரும் சாதனைகளால் தம் குறிக்கோளை அடைந்து யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற

மனநிறைவுடன் உலகப் பணியில் ஈடுபட்டதைக் காட்டுகின்றது. இறைவனை நெருங்கி அவன்தாள் பற்றி தான்மட்டும் பேறுபெற்றால் போதும் என்ற எண்ணம் இம்மியளவுமின்றி இருவரும் தம் ஆன்மீக கருத்துக்களை வாரி வழங்கி மற்றவர்களது ஈடேற்றத்திற்கு வழிவகை செய்தனர். இராமகிருஷ்ணர் தான் உருவாக்கிய உன்னத சீடரான விவேகானந்தர் சமூகப்பணி செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் ஒரு நிகழ்வு இதற்கு உதாரணமாகும். ஒரு சமயம் பரப்ரம்மத்தை அடையும் நிர்விகல்ப சமாதியை தமக்கு அருளும்படி விவேகானந்தர் வேண்டிய பொழுது குருநாதர் மிகச்சினம் கொண்டவராய் அவரைப்பார்த்து "உனக்கு வெட்கமில்லையா? நீ பெரிய ஆலமரமாய் நின்று ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிழல் தருவாய் என்றல்லவா உன்னை நான் நினைத்தேன் நீயோ உனது விமோசனத்தை மட்டுமே நாடுகிறாய்" என்று அவரது சமூகப் பணியை பிறர்க்குதவும் வகையில் நினைவூட்டினார். ராமகிருஷ்ணரது உபதேசங்கள் அவரது சமயக் கொள்கையின் உரைக்கல்லாக விளங்குகிறது. எனவேதான் அவர்தம் உபதேசங்கள் மாந்தர் கேட்டு உய்திபெறும் பொருட்டு குட்டிக்கதைகள், உவமைக் கதைகள் மூலம் வெளிப்பட்டன.

இராமலிங்கர் அனைத்து உயிர்களையும் பொதுநோக்குடன் நோக்கி உபதேசிக்கின்றவர்கள் எவர்களோ அவர்களே அனுபூதிச் செல்வர் என்கிறார். எனவேதான் அவர்தன் அக உணர்வுகளையும் எண்ணங்களையும் பட்டறிந்த உண்மைகளையும் வரிவடிவங்களாக்கி நமக்கு வழங்கியுள்ளார். பிரார்த்தனையின் சக்தியைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டு ஆன்ம வளமும் அருட்பிரகாசமும் பெற்றவர்கள் இவர்கள்.

## ஜாதி

இராமகிருஷ்ணர் இளம் வயதிலேயே சாதி ஆசாரங்களைப் புறக்கணித்தார். அவர்தம் உபநயனச் சடங்கின்போது தமது முதற்பிச்சையினை (உஞ்சவிருத்தி- பிராமணர் கடமைகளுள் ஒன்று) "தானி" எனப்பெயர் கொண்ட கொல்லசாதிப் பெண்ணிடம் பெற்றுக் கொண்டார். பிராமணவகுப்பிற் பிறந்து இவை செய்தல் தகாது எனக்கூறியோரை அவர் பொருட்படுத்தவில்லை. "அந்தணர் என்போர் அறவோர்" என்பதை செயலால் நிறுவினார்.

"நல்ல அந்தணர் ஒருவர்க்கு சுயநலப்பற்று சிறிதும்
இல்லையாயின் தீண்டத்தகாதவன் எனக் கருதப்படுவோரிடத்தும்
உணவை ஏற்கலாம் என்பார்"

அவ்வாறே இராமலிங்கரும் சாதி ஆசாரங்கள் முதலியவற்றை வெறுத்து சகோதர சமதர்ம பிரகாரம் செய்தார். திருமந்திரத்தில் குறிப்பிடப்படுகின்ற ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற சமரசக் கோட்பாட்டுக்கு இராமலிங்கர் புத்துயிர் அளித்தார். சமுதாய முன்னேற்றத்திற்கு தடையாயுள்ள சாதிசமயம் ஒழியவேண்டும் எனச் சுட்டிக் காட்டியுள்ளார். உண்மைப் பத்திரிகையில் இனி பலவகைப்பட்ட சமய பேதங்களும் சாத்திர பேதங்களும் ஜாதி பேதங்களும் போய் சுத்த சன்மார்க்க பொதுநெறி ஒழுக்கம் விளங்கும் என்ற கருத்தை வெளிப்படுத்தினார்.

"வரையிர் உயர்குலம் என்றும் தாழ்குலம் என்றும் வகுக்கின்றீர்
இருகுலமும் மாண்டிடக் காண்கின்றீர்"

என வரும் அடிகள் இதனைப் புலப்படுத்தும். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மனிதரிடம் தொடர்பு கொள்ளும்போது எல்லோரும் இறைவனது குழந்தைகள் என்ற பொதுநோக்குடன் விளங்க வேண்டும் என்கிறார். எனவேதான் சமரசன்மார்க்கத்தை நிறுவி அம்மார்க்கம் கடைப்பிடிக்க வேண்டுவோர் சாதி சமயம் முதலியவற்றில் சிறிதும் நம்பிக்கை வைக்கக்கூடாது எனவும் வைத்தால் தயவின் தன்மை தடைப்பட்டு சன்மார்க்க ஒழுக்கம்

கைவராது என வலியுறுத்தினார். அதேவேளை உலகிலுள்ள யாவரும் சன்மார்க்க ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கூறியதால் நிச்சயம் எல்லோரும் ஜாதிப் பிரிவுகளை மறக்கவேண்டும் என்பதே அன்னாரின் போதனையாகின்றது.

## மதம்

மதபேதம் பற்றி கூறும்போது பரமஹம்சர் எல்லாச் சமயங்களும் உண்மையையும் நன்மையையும் அறத்தையும் ஆன்ம விடுதலையையும் தான் போதிக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. மனிதன் கருணை காட்டுவதில் கிறிஸ்தவனாகவும் மார்க்க அனுட்டானத்தில் முஸ்லிமாகவும் உயிர்களை மதித்தலில் இந்துவாகவும் இருக்க வேண்டும் என்ற சமயசமரசத்தை போதித்தார். மேலும் ஒருவன் கிறிஸ்தவனாகவோ முஸ்லிமாகவோ இந்துவாகவோ இருக்கலாம் ஆனால் உண்மையான பக்தியும் சிரத்தையும் அவனிடத்தில் இருக்குமாயின் எம்மதத்தின் மூலமும் சர்வேஸ்வரனை அடையலாம். இறைவனை அடைவதற்கு மார்க்கங்கள் பலவாக இருக்கலாம் முடிவிடம் ஒன்றே என வழிகாட்டினார்.

இராமலிங்கர் மதபேதம் பற்றிக் கூறும்போது ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மனிதனுடன் தொடர்பு கொள்ளும்போது எல்லோரும் இறைவனது குழந்தைகள் என்ற பெருநோக்குடன் விளங்க வேண்டும் என்கிறார். மேலான இறைவன் இவ்வேறுபாடுகளைக் கடந்தவன்.

"ஜாதியும் மதமும் சமயமும் காணா ஆதி
அனாதியாம் அருட்பெரும் ஜோதி"

என்றும்

"சாதியும் மதமும் சமயமும் தவர்த்தென்
சாத்திரக்குப்பையும் தவிர்த்தேன்" என்றும்

எம்மதநிலையும் நின்னருள் நிலையில்
இயங்குதல் அறிந்தனன் – எல்லாஞ்
சம்மதமாக்கிக் கொள்கிறேன்

என்றவாறு மதபேதம் கடந்த நிலையை புலப்படுத்தினார்.

## இறைவன் ஒருவனே

இந்துக்களின் ஆத்மிக உணர்வின் ஊற்றாகிய வேதத்தில் காணப்பட்ட சமய சிந்தனைகளையும் பரமஹம்சரது சீர்திருத் தங்களில் காணலாம். அதாவது 1ம் மண்டலம் 164ம் சூத்திரத்தில் காணப்படும் "ஏகம் சத்விப்ரா பகுதா வதந்தி" அதாவது சத்தியமான பொருள் ஒன்றே அதனையே பலவாறாகக் கூறுவர் என்ற அடிப்படைக் கருத்து இராமகிருஷ்ணருடையது.

இராமலிங்க அடிகளாரும் இவையாவும் உணர்த்துகின்ற பரம்பொருள் ஒன்றே என தமது அனுபவத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார். ஒருவனேயான இறைவனை "உருவமும் அருவமும் உபயமும் உளதாய் உளதலதாய் ஒளிர் ஒரு தனி முதலே" என திருவருட்பா தெரியத்தருகின்றது.

## பற்றறுத்தல்

இராமகிருஷ்ணர் அம்பிகையிடம் தாயே புற அழகினை என்னிடமிருந்து பறித்துவிட்டு அதற்கு மாறாக உன் அக எழிலை ஆத்ம சுத்தியை எனக்குத் தந்துவிடு எனக் கேட்கிறார். இளமையிலேயே இவர் சிற்றின்பங்களைத் துறந்த சித்தரானார். விலைமாதர்கள் இவரிடம் வந்தபோது அவர்களிடமும் தேவியைக் கண்டு சமாதிநிலை அடைந்தார். அன்னை சாரதாதேவியை லோமாதாவாக பாவனை செய்யும் பக்குவம் சாதாரண நிலை அல்லவே. காமம், ஆசை என்பன பக்தியின் இருபெரும் சத்துருக்கள் என அனுபவவாயிலாக அறிவுறுத்துகிறார்.

இதேபோல் காமத்தின் கடுமைபற்றி

இராமலிங்கர் பல பாடல்களில் குறிப்பிடுகிறார்.

"காமக் கடுமயக்கம் பேரறிவைக்
கொள்ளை கொள்ளும் பித்தம் காணும்"

என்றும்

"நோவதொழியா நொறில்காம வெப்பினிடையே
ஆவதறியா தழுந்தினையே"

எனவும்

"காமாநத்காரம் என்னும் கள்ளுண்டு
கண்மூடி ஏமாந்தேன்" என்றும்

காமத்தின் கடுமையை விளக்கியுள்ளார்.

பொன்னாசையையும் அதன் கேடுகளையும் உணர்ந்து அவைபற்றி தம் உபதேசங்களில் தெளிவுபடுத்தியவர் பரமஹம்சர்.

"பணத்தால் உணவை மட்டும்தான் பெறக்கூடும்
ஆகவே அதுவே உன் புருஷார்த்தமெனக் கருதாதே"

என்றும் செல்வம் செல்வாக்கு பெயர் இவைகள் சிலநாட்களுக்கே. இவை இறந்த பிறகு தொடர்வதில்லை என்கிறார். செல்வம் படைத்தவரிடத்து தர்மத்தில் நாட்டமுடைய வர்கள் அவதானத்துடன் பழக வேண்டும். ஏனெனில் அவர்களுக்கு துன்பம் செய்யு மாற்றல் பணம்படைத்தவர்க்கு உண்டு என்கிறார். வாழ்வுக்கு பொருளும் அருளும் அவசியம் ஆயினும் தராசின் எடைபோல இரண்டும் சமனாக இருக்கையிலேயே ஞானம் பிறக்கும் என்பார்.

இராமலிங்கரும் பொன்னாசை பற்றி விளக்கியுள்ளார். செல்வமுடையவர்கள் துன்பத்திலேயே உழல்வர். இதுதவிர சுகம் என்பது ஏதுமில்லை என்றும் வீணான ஆசை என இந்த பொன்னாசையைத் துறக்க வேண்டும் என்கிறார். செல்வம் என்பது நிலையில்லாமல் சென்றுகொண்டே இருக்கும் இயல்புடையது என்று தெளிய வைக்கிறார்.

"தத்துகின்ற பொன்னுடையார் துன்பப் புணரியொன்றே
அல்லது றென்னுடையார் கண்டிங் இருந்தனையே"

என்று கூறி பொன்னாசை பற்றி புரியவைக்கிறார்.

## பக்தி

பெயரும் உருவமும் உள்ள இறைவனிடம் ஒருமுகப்பட்ட மனத்துடன் அன்பு செலுத்துவது பக்தி என்று தொன்றுதொட்டு கருதப்பட்டு வருகிறது. பக்தியினால் இறை தரிசனம் கிடைக்கிறது என்று நம்பப்படுகிறது. அனால் பரமஹம்சரின் பக்தி மிக உயர்ந்த பொருளை உள்ளடக்கியது. பக்தன் ஒருவன் குணமற்ற மெய்ப்பொருளை அனுபூதியில் அடைய தீவிரமாக ஏங்குவானேயாகில் இறைவன் தன் கருணையால் அதனை நல்குகிறான். ஆனால் பக்தி என்பது பெயரையும் உருவத்தையும் கடந்த ஆதீத நிலையையும் தன்னுள் கொண்டது. பரம்பொருளிடம் அளப்பரிய அன்பு செலுத்துவதே பக்தி என இராமகிருஷ்ணரும் இராமலிங்கரும் பக்தி வெள்ளத்தில் இரவுபகல் எந்நேரமும் திளைத்தனர் வள்ளலார்.

"அறிவு ஒரு சிறிது இங்கு அறிந்தநாள் முதல்
என்னப்பனே நினை மறந்தறியேன்
செறிவு இலா சிறிய பருவத்தும் வேறு
சிந்தை செய்து அறிந்திலேன்

என்றவாறு பக்தியின் தாற்பரியத்தை வரையறுத்தார்.

## அன்னதானம்

மனிதன் மனிதனாக வாழவேண்டும் ஆயின் பசிக்கொடுமையை அகற்றுவது அவசியமாகிறது. இதனை மனம்கொண்டு அடிகள் 23.05.1867ல் அன்னம் பாலிக்கும் தர்மசாலை ஒன்றை நிறுவினார். வயிற்றுப்பசி போக்கிய பின்பே அறிவுப் பசி என வயிற்றுப்பசிக்கு வழி வகுத்தார்.

இராமகிருஷ்ணர் தம் குறிக்கோளில் பசித்தோர் பசிப்பிணி தீர்ப்பது முக்கியமானது என்று கூறி தானங்களில் சிறந்தது அன்னதானமே என்று விளக்கியுள்ளார்.

"அன்னதானம் அறிவுத்தானம் இரண்டும் முக்கியமானவை

இரண்டையும் நிஷ்காமியாகச் செய்ய வேண்டும் என்கிறார்.

மக்கட்கு அன்னதானம் செய்வது
ஈஸ்வர ஆராதனைக்கு நிகர்''
என்கிறார்.

## உருவ வழிபாடு

உருவ வழிபாடு பற்றி இராமகிருஷ்ணர், வள்ளலார் என்போரிடையே ஒற்றுமை காணப்பட்டது. இராமகிருஷ்ணர் கிரியைகளும் வடிவங்களும் என்றென்றைக்கும் போற்றப்பட வேண்டும் என யாரேனும் இயம்புவாராயின் அது தவறேயாம். ஆனால் இக்குறிகளும் கிரியைகளும் ஆன்மாவின் தாழ்ந்த முதிராத நிலையில் அதன் வளர்ச்சிக்குத் துணையாவன என்று அவர் உணர்வாராயின் அது சரியே.

உருவ வழிபாடு நன்றே அது மனித இயல்பில் உள்ளதாதலின் அதற்கு அப்பாற்செல்ல யார்க்கு இயலும். பூரண மனிதர் ஒருவர்க்கே தெய்வத்தன்மை பெற்ற மனிதர்க்கே இயலும் ஏனையோர் அனைவரும் உருவவழிபாடு இயற்றுபரே என்பார்.

இராமலிங்கர் உருவ வழிபாடு பற்றி கூறும்போது ''பிரம்மத்தை அறியத் தொடங்கினோர் அறிதல் வேண்டும். விக்கிரக ஆராதனை செய்யத் தொடங்கினோர் செய்தல் வேண்டும். இவ் இரண்டையும் அதற்குரிய பக்குவர்களுக்கு அடுத்தவைகள் என்று அறிய வேண்டும். விக்கிரகம் என்பது விசேட இடமென்று பொருள்படும். ஆன்மா இருப்பதற்கு கிரகம் மனிதர் முதலியன ஜீவ தேகங்கள். பிரமப்பிரகாரம் இருந்து வெளிப்படுவதற்கு விக்கிரகம் தேவதேகங்கள். அத்தேவ தேகங்களாகிய விக்கிரகங்களில் விதிப்படி பக்தியோடு உபாசிக்கலில் பிரமப்பிரகாரம் எளிதில் வெளிப்பட்டு அனுக்கிரகிக்கும் என்ற கருத்தைத் தந்தார்.

## ஆணவம்

ஆன்மாவை மயக்குவிக்கும் ஆணவத்தைப்பற்றி தன் உபதேசங்களில் தெளிவுபடுத்துகிறார் பரமஹம்சர். அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும் முத்தியும் கைகூடா என்றார். இந்த ஆணவம் அழிந்து நான் எனும் முனைப்பு அழியும்போது அவ்வன் பிறப்பாகிய பந்தத்திலிருந்து விடுபட்டு ஞானமும் முத்தியும் பெறுவான் என்கிறார்.

இராமலிங்கரும் ஆணவத்தின் சேட்டைகளை ''நெஞ்சறிவுறுத்தல்'' எனும் பகுதியில் விளக்கியுள்ளார். இந்த ஆணவம் பயனற்ற துன்பத்தை உருவாக்கும் ஒருவனது அழிவுப்பாதைக்கும் இதுவே காரணம் என ஆணவத்தை விவரிக்கிறார்.

''தீது செயும் வீணவத்தை யெல்லாம் விளைக்கும் திறல்மூல ஆணவத்தினாலே அழிந்தனையே''

எனவரும் அடிகள் இதனை செப்பும். உள்நின்ற மெய்ப்பொருளை உணரமுடியாது இந்த ஆணவமானது நான் என்று முனைத்து நலிவுறும்.

ஊனின்ற ஒன்றின் உளவறியாய் அந்தோ நீ
நானென்று சொல்லி நலிந்தனையே

என்று ஆணவ இயல்பு விளக்கப்பட்டது.

## உடல் நிலையாமை

உலகப் பற்றுக்களினின்று விடுபடலே ஆன்ம ஈடேற்றத்திற்கான முதல்படி எனக் கூறப்படுகிறது. ஆன்ம ஈடேற்ற சாதனம் உடல். ஆயினும் இது நிலையற்றது. இந்த சரீரம் அழியும் வஸ்துக்களாலானது. தோல், தசை, எலும்பு, இரத்தம் கலந்தது. இது உயிர் இருக்கும் வரைக்குமே இதன் உபயோகம் என உடல் நிலையாமையை பரமஹம்சர் தெளிவாக்கினார்

இராமலிங்கரும் யாக்கை நிலையாமை எனும்பகுதியில் இச்சரீரம் பற்றிக் கூறும்போது,

தொக்குறுதோல் கூடென்கோ
இவ்வுடம்பைக் கோள்வினை நீர்
ஏட்டில் ஏடென்கோ
நீர்மேல் எழுத்தென்கோ.

என்றும் இவ்வுடம்பு ஏழுவகைத் தாதுக்களாலாய தோல்பை என்றும் இது நீர்மேல் எழுத்துப் போல் அழியக்கூடியது என்றும் கூறப்பட்டது.

மாமுடிக்கும் வாழ்வுநிலை அன்றி மைப்பின் மாறுகின்ற தென்று வீழ்வுகொடு வாளா விழுகின்றாய்.

என உடலின் நிலையாமையை வள்ளலார் விவரிக்கிறார். இவர்கள் இருவரும் ஆன்ம அனுபவம் மட்டுமல்ல உலக அனுபவமும் உண்டு. இவர்கள் ஏதோ ஒரு தனி உலகில் தனித்திருந்தவர்களாய் தம் வாழ்வை கழித்தவரல்லர். உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் இருந்து மக்களுக்கு வழிகாட்டியவர்கள்.

"தாமரை இலைத் தண்ணீர் போல்
சக்த்தோ கூடி வாழ்வார்
பாமரர் போல் காண்பிப்பார்
பண்டித்திறமை காட்டார்"

என வர்ணிக்கப்படும் அளவிற்கு வாழ்ந்தவர்கள். இராமகிருஷ்ணரை காயாவில் கோவில் கொண்டிருக்கும் கதாதரர் என்ற திருமாலின் அவதாரமாக்கும் கதை உண்டு. இராமலிங்கரையும் முருகக் கடவுளின் அம்சமென்று கருதுவர்.

இறை பக்தியும் மனிதநேயமும் சிறந்த வாழ்வும் கொண்டோராய் மாந்தர்க்கு முன்மாதிரியாக, தம் கருத்துக்களின்படியே வாழ்ந்து மக்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்கு உழைத்தவர்கள் இவர்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டிய முறைமையை எடுத்தியம்பி மாந்தர்க்கு அன்பைப் போதித்த ஒப்பரும் ஞானிகள் இவர்கள். அன்பின் தழுவுகையிலே விலங்குகள் கூட எம்மோடு ஒன்றுபடுகின்றன. அவ்வகையில் மானிட உள்ளங்களை அன்பால் பிணிப்பதன் ஊடாக இறைவனை அடையமுடியும் என்ற வாழ்வின் நோக்கத்திற்கு ஆதார சக்தியாய் மிளிர்ந்தவர்கள். இவ்விதமாக தென்நாட்டு பரமஹம்சர் எனக்குறிப்பிடப் படும் வள்ளலாரது சிந்தனைகளுக்கும் வடநாட்டு வள்ளலார் எனக்குறிப்பிடப் படும் இராமகிருஷ்ணரது சிந்தனைகளுக்குமிடையில் அரிய பல ஒற்றுமைகளைக் காண முடியும்.

## உசாத்துணை நூல்கள்

01. வெள்ளை வாரணனார், க – திருவருட்பாசிந்தனை – மணிவாசகர் பதிப்பகம் சென்னை –1985.
02. பாலசுப்பிரமணியம், மி– வள்ளலார் நற்பணிமன்றம் நாகர்கோயில் –1980
03. துரைசாமிப்பிள்ளை, சு – திருவருட்பா மூலமும் உரையும் அண்ணாமலை பல்கலைக்கழகம், 1954.
04. சுத்தானந்த பாரதியார் – அருட்சுடர் வள்ளலார் – அன்புநிலையம் – 1940.
05. திருவருட்பா – விரிவுரை குகத்திரு இரசபதி அடிகள் – ரத்தினம் கிளை அச்சகம் – 1987
06. கலைவாணி, இ – இந்து தர்மமும் வர்ண தர்மமும் – ஸ்ரீரெங்கா பிரிண்டர்ஸ் – மதுரை –1992.
07. குலரத்தினம், க – இந்து நாகரிகம் – ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை – 1980
08. பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் – உபகதைகள் – இராமகிருஷ்ணமட வெளியீடு – 1959
09. பேராசிரியர் சுப்பிரமணியன் – ஏ – பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் – இராமகிருஷ்ணமடம் – 1984
10. சுவாமி வித்யானந்தர் – ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவடிகளில் – ஸ்ரீஇராமகிருஷ்ணமடம் – 1984
11. பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் – உபதேச மொழிகள் – ஸ்ரீ இராமகிருஷ்ணமடம்
12. பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் – ஸ்ரீ இராமகிருஷ்ண உபதேச மஞ்சரி – திருப்பராய துறை இராமகிருஷ்ண தபோவனம்.

செல்வி.சிறீரதிதேவி.மார்க்கண்டு
(B.A.Hons .M.phil)
விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை.
யாழ்.பல்கலைக்கழகம்.

# சைவசித்தாந்தத்தில் ஆகம அளவை

அளவை என்பது அளந்தறியப் படுவதாகும். இது வடமொழியில் பிரமாணம் எனப்படுகிறது. நேரில் கண்டுணரவும் சில வற்றில் கருவியாகக் கொண்டு ஆராய்ந்து ணரவும் முடியாத உண்மைகளை நூல்கள் வழியாக உணர்தலே தமிழில் உரையளவை என்றும் வடமொழியில் ஆகமப் பிரமாணம் என்றும் வழங்கப்படுகின்றது. தத்துவ சிந்தனைகளைத் தர்க்க ரீதியில் விளக்கு வதற்கு அளவை அறிவு இன்றியமை யாததாகும். இந்தியத் தத்துவப் பரப்பில் விளங்குகின்ற தத்துவப் பிரிவுகள் அனைத்தும் தத்தமக்கு ஏற்புடைய வகையில் அளவைப் பிரமாணங்களை ஏற்றுத் தமது கொள்கைகளை விளக்கு கின்றன. இந்தியத் தத்துவப்பரப்பில் பிரதியட்சம், அனுமானம், ஆப்தம், அனுபலப்தி, அருந்தாபத்தி, உவமானம், ஐதீகம், சம்பவம், பாரிஷேடம், சுபாவம் என வேதவியாசரால் எடுத்தாளப்படுகின்ற பத்துப் பிரமாணங்களில் ஆப்தம் முதன்மையா னதாகவும் முக்கியமானதாகவும் விளங்கு கின்றது.

ஆப்த என்பது முதல்வன் வாக்காகக் கருதப்படுகிறது. காட்சிகளாலும் அனுமானத் தாலும் அறியப்படாத பொருளையும் அறிவிக்கும் ஆப்த வாக்கியமாகிய சாத்திரமே ஆகமப் பிரமாணமெனக் கழகத்தமிழகராதி வரையறுக்கின்றது. நிட்சிதமாயிருக்கின்ற அர்த்தத்தைக் கூறுபவன் ஆப்தனாகின்றான். பௌஷ்கராகமம் இதே கருத்தின் சாயலில் எடுத்துக் காட்டுகின்றது. சிவஞான முனிவரும் உண்மைப் பொருளைக் கூறுபவனையே ஆப்தன் என்கின்றார். அருணந்தி சிவாச்சாரியார் ஆப்தவாக்கி யத்தை உணர்த்துவதற்குத் தமது சிவஞானசித்தியாரில் "அனாதியே அமலநாய அறிவன்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். உண்மையை உணர்த்து வதற் குரியவன் என்பதே இதன் கருத்தாகும். இதிலிருந்து மலசகிதனாயுள்ளவன் உண்மையை உணரானாதலின் அவன் வாக்கு ஆப்த வாக்கியம் ஆகாது என்பது தெளிவுறுத்தப்படுகின்றது.

ஆகமஅளவை, சப்தப்பிரமாணம், ஆப்தன் வாக்கியம், ஆப்தன் உரியோன் என்பன ஒரு பொருளையே சுட்டி நிற்கின்ற வகையில் ஆப்தனானவன் உண்மைப் பொருளைக் கூறுபவனாக எடுத்தாளப் படுகின்றான். ஆகமப் பிரமாணமானது வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவியாகும். சிற்சக்தியுடன் கூடிய சத்தமே வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவியாகும். சிற் சக்தியுடன் கூடிய சத்தமே வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவியாதலால் ஆகமப் பிரமாணம் எனப்படுகின்றது. வாக்கியப் பொருளுணர்ச்சி எனும் போது சத்தத்தின் பதப் பொருளுணர்ச்சியினால் உருவாகும் அறிவாகும். இங்கு சப்தம் என்பது ஆப்தனது வாக்கியத்தையும் பதமென்பது ஆற்றலால் பொருளை உணர்த்துகின்ற எழுத்தொலி யையும் ஆற்றல் என்பது வாசகமாகிய சப்தத்திற்கு வாச்சியமாகிய பொருளோடு உளதாகிய கற்பித சம்பந்தத்தையும் குறித்து நிற்கின்றது. வாக்கியத்தின் பிரமாணத்தன்மை பொருட் தகுதியால் உணரப் படுகின்றது. இங்ஙனமே வாக்கியப் பொருளுணர்ச்சிக்குக் கருவியாகிய சத்த உணர்ச்சியுடன் கூடிய

சிற்சக்தியே ஆகமப் பிரமாணம் எனப்படுகின்றது.

சைவசித்தாந்திகளின்படி ஆகம வாக்கியங்களுடன் தொடர்பான சிற்சக்தியே சத்தப்பிரமாணம் ஆகும். ஆத்மசித் சக்தியை உள்ளடக்கியுள்ள சிவனுடைய சத்தம் பரநாதம் எனப்படுகின்றது. "அண்ணலருளால் அருளும் சிவாகமம்" என்கின்ற திருமூலரின் திருமந்திர அடிகளை இதற்கு எடுத்துக் கட்டாகக்கொள்ளலாம். சிவனருளால் அருளப்பட்ட தெனும்போது சாதாரணமாக வெளிப்பட்டதாக இருக்க முடியாது. சூக்கும உடலின் சப்தமே வெளியில் கேட்கப் படுகின்றது. பௌஷ்கர விருத்தியும் இதனையே விளம்புகின்றமை குறிப்பிடற் பாலது.

அநாதி சுத்தனும் வியாபகனும் நித்யனும் சுவதந்திரனும் நிரவதி சர்வஞ்ஞனும் சர்வகர்த்தாவும் சர்வானுக்கிர காரகனுகம் பரிபூரணனும் சாந்தனும் பட்சபாதமற்றவருமாகிய ஈஸ்வரனே பரமாப்பதன் எனப்படுகின்றான். பரமாப் பதனால் உபதேசிக்கப்பட்ட பாரமார்த்திக வாக்கிய சமூகமே ஆதிச்சுருதி எனப் படுகின்றது. பிரதியட்ஷ அனுமானங்களால் உணரப்படாத புருஷார்த்த உபாயங்களைத் தகுதியாக உணர்த்தும் வாக்கியமே சுருதியாகும். சுருதி என்பதற்கு ஈஸ்வரனிட மிருந்து கேட்கப்பட்டதென்பது பொருளாகும். 'யாதொருவன் பிராந்த விபரலம்பகன் ஆகாதவனோ அவனுடைய சத்தத்தின் படியே அர்த்தமுண்டாகிறது. அத்தன் மையனே ஆப்தனாதலின் அனாதி நின்மல நிரதிசயானந்த சொரூபியாய் சர்வஞ்ஞனும் சர்வ கர்த்தாவுமாய் இருக்கின்ற சிவனே பரமாப்தன். அவன் வாக்கியமாதலின் வேதமும் சிவாகமும் பிரமாணமே என்கின்ற சிவாக்கிரயோகிகளின் விளக்கம் இவ்விடத் திற் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும். அந்த ஈஸ்வர வாக்கியமானது பிரமாணமாகும். அந்த பரமேஸ்வரன் பஞ்ச தந்திர தனுவுடைய சதாசிவனாய்ச் சிவபேதமான பத்தும் உருத்திர பேதமான பதினெட்டுமாயிய இருபத்தெட்டு ஆகமங் களை அருளினர் எனப் பௌஷ்கர ஆகமும் பகருகின்றது. ஆப்த வாக்கியமானது சித்தாந்தமேயாகும். சிவன் ஒருவனே ஆப்தனாயுள்ள காரணத்தினால் அவன் வாக்கு சித்தாந்தமெனப்படுகிறது. அந்த சித்தாந்தம் ஆப்தனாகிய பரமசிவன் என்னும் பொருளுடன் சமானமாக வேறொரு பொருள் மேம்பாட்டை உண்டுபண்ணுவதில்லை என்ற இரத்தினத்திரய அடிகளும் இதற்கு அழுத்தங் கொடுக்கின்றன.

ஆப்த வாக்கியமானது வேதத்தைச் சேர்ந்ததாகவும்(வைதிகம்) அல்லது உலகியற் கூற்றாகவும் அலோகிகம் அமையலாம். வேதத்திற் கூறப்பட்டுள்ள விடயங்கள் இறைவனுடைய கூற்றுக்களா தலால் இவற்றின் சான்றுரைகள் நிறைவுள்ளனவாகவும் தவறற்றன வாகவு முள்ளன. ஆனால் உலகியற் கூற்றுக்கள் நம்பிக்கைக்குகந்த சான்றோரிடமிருந்து கிடைத்தால் மட்டுமே சரியாகவும் அதிகார பூர்வமானவையாகவும் அமைகின்றன. "பெருமை மிக்க வேதங்கள் ஆகமங்கள் யாவும் தீர்க்க தரிசிகள் அருளிய அருள் வாக்குகளின் மூலச்சான்றுகளாகும். அந்த அருள் வாக்குகள் வேதங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன' என்ற டாக்டர் ராதாகிருஷ்ணனின் கூற்று இவ்விடத்தில் நினைவு கூரத்தகுந்ததாகும்.

மந்திரங்களைக் கூறும் அறிவே ஆகம அளவையாகும். இது தந்திரம் மந்திரம் உபதேசம் என மூன்றாகப் பிரிக்கப்படுகின்றது. உரை மூன்றென்பது ......"வுரை தந்திர மந்திரத்தோடுபதேசச்சொல் என மூன்றாம்" என்ற சிவஞானசித்தியா ரடிகளால் உணர்த்தப் படுகின்றது. தந்திரக் கலையானது செய்வன தவிர்வனவற்றை உணர்த்துவது. வேதத்தில் கர்ம

காண்டத்தையும் சிவாகமத்தில் சரியா பாதத்தையும் இதற்கு உதாரணங் களாகக் கூறலாம்.

தந்திரம் எனும் பதத்துக்கு "அறிவு பரவுவதற்கு ஏதுவாயுள்ளது" என்பது பொருள். "தந்துவத்துக்கும் மந்திரத்துக்கும் பொருள் கூறுவதாலும் மனிதனை அன்மீக விடுதலை பெறச் செய்வதாலும் இது தந்திரமென வழங்கப்படுகின்றது" என் கின்றது காமிகாமம். தந்திர கலை முன்னொடு பின் மலைவின்றி முதல் இரண்டு கருத்தை உள்ளடக்கியுள்ளது. அதாவது சப்த சாமர்த்தியம் அர்த்த சாமர்த்தியத்தை உள்ளடக்கியுள்ளன. கர்மகாண்டகங்களிற் சொல்லப்பட்ட வாஸ்து சப்தா என்பது நூலின் சாரத்தை ஒரு வசனத்தில் விளக்குவதாகும். மகா ஆப்தனால் விளக்கப் பட்ட ஆகமமே முன்னொடுப்பின் மலைவின்றி விளங்குமென்பதற்கு,

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முத நூலாகும்" என்ற தொல்காப்பிய சூத்திர அடிகளே எடுத்துக்காட்டாக விளங்கு கின்றன.

மந்திரக் கலையானது, கடவுள் வழிபாட்டு முறையை உணர்த்துகின்றது. மந்திரம் யோக முறையைக் கூறுகின்றது. உள்ளவயவங்களைச் சரியான கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். வேதத்தில் உபாசனா காண்டத்தையும் சிவாகமத்துள் கிரியா யோக பாதங்களையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். தன்னை அறியும் முறையை ஆகமங்களி லிருக்கும் மந்திரங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம் என்பது சிவாக்கிர யோகிகளின் கருத்தாகும். இதிலிருந்து ஆகமங்கள் ஒரு பக்தனுக்கு யோக நிலையைப் புரிந்து செயற்படுவதற்கு உதவுகின்றன என்பது தெளிவாகின்றது.

பொருளினியல்பை ஆராய்ந்து உணர்த்துவதே உபதேச கலையாகும். வேதத்தில் ஞானகாண்டத்தையும் சிவாகமத்தில் ஞான பாதத்தையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இது சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருளான பதி, பசு, பாசம் பற்றிய விளக்கத்தை தருகின்றது. ஆகமங்களில் எண் குணங்கள் உள்ள வராகவும் அனாதியானவராகவும் வர்ணிக்கப் படுகின்ற சிவன் என்ற மேலான பொருளுக்குள்ளேயே பசு, பாசம் ஆகிய இரண்டும் அடங்கியுள்ளன. உபதேச காலத்தில் அறிவேயுருவான சிவனைப் பற்றியும் ஆத்மா சடமான உடல், பாசம் என்பனவற்றின் உண்மையான நிலையும் நிலையற்ற தன்மையும் அறியப்படுகின்றது. இதனையே சிவாக்கிரக யோகிகளும் ஏற்று விளங்குகின்றமை காணலாம். நான்கு வேதங்களும் இருபத்தெட்டு சிவாகமங்களும் இறைவனாலேயே அருளிச் செய்யப் பட்டதால் அவற்றை ஏற்க வேண்டுமென்றும் இதற்கு எடுத்துக்காட்டாக ஸ்ரீகண்ட பாஷியத்தையும் குறிப்பிடுகின்ற சிவஞான யோகிகள் இந்த விடயத்தில் நையாயிகரின் கருத்தை நிராகரித்து நிற்பதும் இவ்விடத்திற் சுட்டத்தக்கது.

இந்த வகையில் வேத ஆகமங்கள் உண்மையானவை என்பதும் அவை இறைவனால் அருளிச் செய்யப்பட்டன என்பதும் அவற்றில் வேதம் பொது ஆகமம் சிறப்பு என்ற சித்தாந்திகளின் கருத்தும் முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றன. "மகேஸ்வரரே காமிகம் போன்ற ஆகமங்களை உருவாக்கினார்" என்ற மகாபாரத அடிகளும் சிவனே ஆகமங்க ளுக்குத் தலைவர் என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றன. இதே கருத்தை "அவனிடத்தி னின்றும் வேத மூன்றும் பிறந்தன" என்ற சுருதி உண்மையாலும் அறிந்து கொள்ளலாம்.

அனைத்துக்கும் மூலமாக எழுத்து விளங்குகின்றது. இந்த எழுத்துருவமான சக்தியினாலேயே சத்தம், கருத்து, உருவம்,

பெயர் என்பன உருவாகின்றன. சிற் சக்தியே அனைத்துக்கும் கருவாக அமைகின்றது. சிவன் நிமித்த காரணனாகவும் விந்து சடப் பொருளாகவும் விளங்குகின்றன. ஆத்மாக்களின் தொழிற்பாட்டைக் கொண்டே இதன் தாக்கம் ஏற்படுகின்றது. இதற்கு ஒவ்வோரு ஆத்மாவின் கர்மாவே காரணமாக அமைகின்றது.

எழுத்து விந்துக்கு மாறானதல்ல. அனைத்தினதும் உருவாக்கத்துக்கும் விந்து தேவையாகின்றது. உருவாவதெதுவும் அழிவுக்குக் காரணமாகின்றது. ஆனால் இந்த எழுத்துக்கள் ஊழிக் காலம் வரை நிலைத்து நிற்கின்றன. சொல், எழுத்து என்பன ஒன்றாகச் சேர்க்கப்பட்டதே வசனமாகும். இந்த வகையில் வேதங்கள் தரமாக உருவானவையாகும். விந்து விலிருந்து உருவாக்கப்பட்ட இவை சத்தமாக உருவாவதற்குச் சக்தியே காரணமாக அமைகின்றது. எழுத்துக்கள் உலகுக்கு தாய். சிவனருளால் உருவாக்கப் பட்ட எழுத்துக்கள் தெய்வமாகவும் கருதப்படுகின்றன. உலகுக்கு மூலமாக விளங்குகின்ற இந்த எழுத்துக்களை ஞான சக்தி எனலாம். பின்பு இவற்றிலிருந்தே வேறுபட்ட சத்தங்கள் கருத்துக்கள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் வருகின்றன. இதன் பின்பே சிவன் எழுத்துக்களாக விளங்குகின்ற சக்தியைக் கொண்டு வேத ஆகமங்களை உருவாக்குகின்றார். வேதங்கள், காமிகம், சர்வ ஞானோத்திரம் போன்ற ஆகமங்களும் சிவனால் செய்யப்பட்டதால் சித்தாந்தத்திலுள்ள பௌதிகவதீதக் கொள்கைகளுக்கு நிருபணமாக விளங்குகின்றன. இறுதியில் சிவஞான வழிக்குக் கொண்டு சேர்ப்பதே சப்த பிரமாணத்தின் நோக்கமாகும்.

சைவ சித்தாந்த பரிபாஷையில் சப்த பிரமாணத்தின் தன்மையை விளக்குகின்ற சூரியப்பட்டர் சிவ ஞானத்தை அடைய விரும்புபவர். நிருவாண தீட்சை பெற வேண்டுமென்கிறார். எல்லா விடயங்களிலும் ஆர்வமுள்ளவராயும் எல்லாவற்றையும் அறிய வேண்டுமென்ற ஆர்வமுள்ளவருமே சிவஞானத்தை அடையத் தகுதியுள்ள வராவர். இந்தத் தகுதி வாய்ந்தவரே நிருவாண தீட்சையைப் பெற முடியும். இவர் ஆகம வாக்கியங்களை விருப்புடன் கேட்பவராக விளங்குவார்.

ஆகம வாக்கியங்கள் ஒரு தகுந்த குருவினால் வெளிப்படுத்தப்படும் போது, வர்ணா பற்றிய சிந்தனை இவருக்கு எழுகின்றது. இவை நாதவிந்துக்களேயாகும். இதன் பின் ஆகமத்திலிருக்கும் சொற்க ளுடன் தன்னிடமுள்ளவற்றை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி அதற்கேற்ப வழிப்படுத்திக் கொள்கின்றார். இதுவே ஆகமப் பிரமாணமாகும்.

சைவ சித்தாந்தத்தில் இறையருள் ஆத்மீக முன்னேற்றத்தில் தீவிரமான நிலையில் விளங்குகின்றது. அனைத்துக்கும் அவனுடைய அருளே தேவைப்படுகின்றது. அவனருளாலேயே அவன் தாளையும் வணங்க வேண்டுமென்ற மணிவாசகரின் வாக்கிலும் "தனது கெட்டித்தனத்தால் ஒருவன் முத்தியடைவதில்லை என்ற "பௌஷ்கர ஆகம அடியிலும் பிரதிபலிக்கக் காண்கின்றோம். "எல்லாத் தீமைகளையும் அகற்றும் சிவனே முத்தி தருவது சர்தியமென்ற நிச்வாசாகமமும் இதனையே வலியுறுத்துகின்றது. நெருப்பிலிருந்து சூட்டைப் பிரிக்க முடியாதவாறு சிவனிடம் விளங்குகின்ற சக்தியே ஆன்மாவையும் சிவனையும் தொடர்புபடுத்துகின்றது. பல சக்திகளால் பிரகாசமடைந்த உள்ளடக்கிய சிவனைக் காண்கின்ற ஆத்மா பேரானந்தப் பெரும்பேற்றை அனுபவித்துத் திளைக் கின்றது.

## உசாத்துணை நூல்கள்


Indian Philosophical Annual Vol .14.1980 - 1981

Mahadevan.T.M.P. — Out lines of Hinduism,1971, Chetana Limited,Bombay.

வித்துவான் சிவானந்தையர் (மொழிபெயர்ப்பு) — தருக்க சங்கிரகம், 1910, கொக்குவில் சோதிட பிரகாச யந்திரசாலை.

அருணந்த சிவாச்சாரியர் — சிவஞானசித்தியார் சுபபக்கம், 1971, யாழ்ப்பாணக் கூட்டுறவு தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம், யாழ்ப்பாணம்.

ஞானகுமாரன்.நா — சைவசித்தாந்தத் தெளிவு, 1984, செல்வம் வெளியீடு, பருத்தித்துறை.

சண்முகசுந்தரமுதலியார்.கொ — பௌஷ்கராகமம், 1950, சிந்தாரிப்பேட்டை, சென்னை.

கிருஷ்ணசாத்திரிகள் நா.சுப்பிரமணிய சாஸ்திரிகள் மு (தமிழ் மொழிபெயர்ப்பு) — இரத்தினத்திரயம், போககாரிகை, நாதகாரிகை, மோட்ச காரிகை, பரமோட்ச நிராச காரிகை இவற்றின் மூலமும் விரிவுரையும், தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம்.

ச.முகுந்தன்
இந்துநாகரிகம் சிறப்பு
இறுதி வருடம்.

# இந்துப் பண்பாட்டு மரபில் சித்தர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட "வர்மக்கலை" அருகி வரும் ஓர் அறிவியல் விந்தை.

வேத ரிஷிகளால் வித்தூன்றப்பட்டு காலதேச வர்த்தமானங்களைக் கடந்து நின்று நிலைத்து வளர்ந்து இந்துப் பண்பாடு என்ற கற்பக விருட்சம் ஆகும். பௌராணிகப் பிரதாபங்களைப் பற்றியுமே அதிகம் சிந்தித்து வந்துள்ளனர் எனச் சில நவீன சிந்தனையாளர்கள் விமர்சித்து வந்துள்ளனர். இக்குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை ஆகும். பேராசிரியர் இராதாகிருஸ்னன் அவர்கள் கூறியுள்ளது போன்று இந்துமதம் என்றோ முடிந்து போன வெற்றுக் கொள்கை விளக்கமன்று அது வாழ வேண்டிய வாழ்வியல் நெறிமுறையாகும்.

நடைமுறை வாழ்வியலைப் பண்படுத்திச் செல்வதன் மூலமாக ஒவ்வொரு சாதாரணனையும் சாதனையாளனாக பரிணமிக்க வைப்பதே இந்துபண்பாட்டுச் சிந்தனைகளின் தாற்பரியம் ஆகும். இந்துக்களின் சமயம், தத்துவம், கலை அறிவியல் போன்ற அனைத்துத் துறைகளும் இந்த நோக்கத்தையே அடிநாதமாக கொண்டுள்ளன. மண்ணினல்ல வண்ணம் வாழ்ந்து தெய்வத்துள் வைக்கப்படுகின்ற பக்குவத்தைக் கற்பிக்க முயல்வதே அனுபூதிமான்களால் வெளிப்படுத்தப்பட்ட இந்து சாஸ்திரங்களின் தலையாய நோக்கம் ஆகும்.

அந்த வகையிலே அறிவியல் யுகமாகப் பேசப்படுகின்ற நடப்பியலிலே இந்துக்களின் பாரம்பரிய அறிவியற் சிந்தனை முகிழ்ப்புகள் பற்றிய வினாக்கள் பல தரப்பினராலும் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்குப் பதில் சொல்லும் வகையிலே இந்து அறிவியல் விஞ்ஞானம் என்ற பிரிவும் இந்து நாகரிகத் துறை சார்ந்த பாடப்பரப்புக்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்துப் பண்பாட்டு மரபிலே முகிழ்ந்த சில அறிவியற் சிந்தனைகள் நூல் வடிவம் பெற்றும் உள்ளன. இந்த வரிசையிலே வட மொழியிலே வராஹமிகிரர் எழுதிய வான நூலும், ஆர்யப்பட்டர் எழுதிய ஆர்யப்பட்டீயம் என்ற கணித நூலும் குறிப்பிடத்தக்கவை. மருத்துவத்துறை பற்றி சரகரின் சரக சங்கிதை, சுஸ்ருதரின் சுஸ்ருத சங்கிதை போன்ற நூல்கள் ஆழ்ந்த கருத்துக்களை தந்துள்ளன. தமிழ் மொழியில் சித்தர்களின் பாடல்கள் அளப்பரிய மருத்துவப் பொக்கிஷங்களாகத் திகழ்கின்றன. திருமந்திரம், நிசானந்தபோதம், சிவயோகசாரம், அகஸ்தியர் ஞானம், ஞானசரநூல், காகபுசுண்டர் ஞானம், உள்ளிட்ட சித்தர் பனுவல்கள் மருத்துவ வாகடங்களாகவே திகழ்கின்றன என்றால் மிகையில்லை.

இந்த வகையில் உடற் கூற்றியலைப்பற்றியும் பிணிதீர்க்கும் உபாயங்கள், தற்காப்பு போர் முறைகளைப்பற்றியும் சித்தர்களின் அறிவியற் சிந்தனையில் முகிழ்த்த உபாயமே வர்மக் கலை ஆகும். வர்மக்கலையைப் பதினெண் சித்தர்கள் தமது அருட் பாடல்களிலே மர்மம், ரகசியம், மறைபொருள், ஏமம், வன்மம், அடக்கம், சூட்சுமம், ஒடிவு ஆகிய கலைச் சொற்களூடாக குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் வர்மக் கலையினைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ள சித்த மருத்துவ

நூல்கள் பல தென்னாட்டில் காலத்துக்கு காலம் சித்தர்களாலும் மறை ஞானிகளாலும் அருளிச் செய்யப்பட்டன. அவற்றுள் வர்ம ஆணிநூல், வர்ம ஊசிமுகம், வர்மக் கண்ணாடி, வர்மகுடோரி, வர்ம சிலோற்பவம், வர்மசூத்திரம், வர்ம சூத்திர விளக்கம், வர்ம பஞ்ச சூத்திரம், வர்ம லாட சூத்திரம், வர்ம திறவுகோல், வர்ம ஒடிவு முறிவு நிகண்டு, வர்ம நரம்பு சூத்திரம், வர்ம பஞ்சவித பதிவிடங்கள், வர்ம பீரங்கி, வர்ம வில்லும் விசையும், வர்ம புலிப்பாணி போன்ற நூல்கள் பிரசித்தி பெற்றவை ஆகும்.

வர்மக் கலையின் தாற் பரியம் என்ன என்பதை அடுத்து நோக்கலாம். நமது உடலில் லட்சக் கணக்கான நரம்புகள் உள்ளன. அவற்றின் ரத்தக் குழாய்கள் செல்லும் ஒரு சில குறிப்பிட்ட நரம்புகளின் முடிச்சுக்களும், என்புகளின் இணைப்புக் களும் "வர்ம நிலைகள்" அல்லது "வர்மப் புள்ளிகள்" எனப்படுகின்றன. இந்த வர்மப் புள்ளிகளினைத் தொடுதல், அழுத்தி விடுதல், தாக்குதல் போன்ற செயற்பாடு களினால் உடலில் சில நோய்களினால் செயலிழந்து போன சில பகுதிகளைத் திரும்பவும் செயற்படுமாறு செய்ய முடியும். அது போலவே எதிரிகளிடமிருந்தோ காட்டு விலங்குகளிடமிருந்தோ தற்காத்துக் கொள்வதற்காக இக் கலையைப் பயன்படுத்தும் போது தாக்கப்படுபவரின் உடலியற் செயற்பாடுகள் சிலவற்றையும் ஸ்தம்பிதமடையச் செய்ய முடியும்.

வர்மக் கலையினை பிரயோகிக்கும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு நான்கு பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளனர். அவையாவன

1. படுவர்மம்
2. தட்டு வர்மம்
3. தொடு வர்மம்
4. நோக்கு வர்மம்

என்பனவாகும்.

படு வர்மம் என்ற வகையில் பன்னிரண்டு உப பிரிவுகள் உள்ளன.

1. திலவாதத வர்மம
2. நட்சத்திர வர்மம்
3. செவிக்குத்தி வர்மம்
4. பிடரிக்கால வர்மம்
5. உறக்ககால வர்மம்
6. தும்மிக்கால வர்மம்
7. நேர் வர்மம்
8. அடப்பகால வர்மம்
9. உறுமி வர்மம்
10. வலிய அத்தி சுருக்கி வர்மம்
11. சிறிய அத்தி சுருக்கி வர்மம்
12. கல்லடைக்கால வர்மம்

இவை பெரும்பாலும் தற்காப்புக்காகப் பயன்படுத்தப்படுவனவாகும்.

தட்டு வர்மம் என்ற பிரிவில் 8 உப பிரிவுகள் உள்ளடக்கியுள்ளன.

1. பெருமூளை வர்மம்
2. நேம வர்மம்
3. பொற்சைக்கால வர்மம்
4. புயவர்மம்
5. மைய வர்மம்
6. மூச்சடக்கி வர்மம்
7. மூர்த்திர கால வர்மம்
8. கச்சை வர்மம்

தொடு வர்மம் என்ற வகையீட்டில் ஆதிவர்மம் தொட்டு அடங்கல் வர்மம் ஈறாக 96 உப பிரிவுகள் உள்ளன. உடலிலுள்ள வர்மப் புள்ளிகளில் குறிப்பிட்ட முத்திரைகள் கொண்டு (நாட்டிய முத்திரைகள் போல வர்ம முத்திரைகள் உள்ளன) அழுத்துவதே தொடு வர்மமாகும்.

சித்த மருத்துவத்துறையில் அதிக ளவில் பயன்படுத்தப்பட்ட வர்மப்பிரிவு இதுவேயாகும். பக்கவாதம், கீல் வாதம், காக்கை வலிப்பு நோய், பெரு நரம்புச் சுருக்கம், கழுத்து நரம்பு நெரிவுகள், இளவயது வழுக்கை, ஆஸ்துமா, காச நோய் போன்ற பல நோய்களை

குணப்படுத்துவதற்குரிய அரிய நுணுக்கங்கள் இப் பிரிவில் அடங்கியுள்ளன. இதுவே தாக்குதலுக்காகப் பயன் படுத்தப்படுகின்ற போது தாக்கப்படுபவருக்கு நோய்களை பரிசாக கொடுக்கும் தன்மையும் உடையது.

வர்மக் கலையின் பிரதான நான்கு பிரிவுகளில் நோக்கு வர்மம் தவிர்ந்த ஏனைய மூன்றையும் செயற்படுத்துவதற்கு வர்ம முத்திரைகள் இன்றியமையாதன. நாட்டியக் கலையில் பிரயோகிக்கப்படும் முத்திரை களைப் போன்று வர்மக் கலைக்கும் விசேட முத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் யானை முக முத்திரை, சக்தி முத்திரை, குதிரை முக முத்திரை, சங்கு முத்திரை, சக்கர முத்திரை, விஷ்ணு முத்திரை, வேல் முத்திரை, திரிசூல முத்திரை, சர்ப்ப முத்திரை, பஞ்ச முத்திரை, நடுவில் முத்திரை, புறங்கால் முத்திரை ஆகிய பன்னிரண்டு முத்திரைகள் பிரதானமானவை. இவற்றில் குறித்த சில முத்திரைகளை குறித்த சில வர்மப் புள்ளிகள் மீதே பிரயோகிக்க முடியும். இதனால் ஏற்படும் விளைவுகள் அல்லது உடற் செயற்பாட்டில் ஏற்படும் மாற்றங்களும் பலவித வேறுபாடுகளை உடையன இந்த விபரங்கள் யாவும் சித்தர் பாடல்களிலே துல்லியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நோக்க வர்மம் என்ற நான்காவது பிரிவு ஏகாக்கிரக சித்தங்கொண்டு அட்டாங்க யோகமும் முழுமையாகக் கைவரப்பெற்ற அனுபூதி மான்களுக்கு மாத்திரமே சித்திக்கக் கூடியதாகும். எதிரில் உள்ளவரின் உடலை வர்ம முத்திரை கொண்டு தீண்டாமலேயே தமது பார்வையின் வலிமையால் ஏற்படுத்தும் திறனே நோக்கு வர்மம் ஆகும். வர்மக் கலையின் அதி உன்னத நிலையாகக் கருதப்படுவது இதுவேயாகும். நோக்கு வர்மத்தையே "மெய் தீண்டாக்கலை" எனச் சித்தர்கள் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

"அறுபத்து நாலுகலையாவும்
அறிந்தோம் அறிந்தோம்"
மெய் தீண்டாக் கலை
அதற்குமேல் ஒரு கலையான
தறிந்தோம்.

என்ற பாம்பாட்டிச் சித்தரின் பாடல்வரிகளும் இதையே குறிப்பிடுகின்றது. இந்துக்களின் பௌராணிக மரபிலே ரிஷிகள் தமது தவவலிமை பெற்ற திருஷ்டியின் மூலம் தம் எதிரில் நிற்பவரைச் செயலிழக்க /செயற்படச் செய்ததாகக் கூறப்பட்டுள்ள சம்பவங்களை இந்த நோக்கு வர்மத்துடன் தொடர்புபடுத்திச் சிந்திப்பது பொருத்தமே.

வர்மக்கலை பற்றிய விபரங்களை தருகின்ற நூல்களில் இடைகலை, பிங்கலை, சுழிமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம், சங்கினி, குரு ஆகிய தசநாடிகள் பற்றிய தெளிவான விளக் கங்களும் அவற்றின் நடை மாத்திரை அளவுகளும் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. நரம்பு மண்டலம், குருதிச் சுற்றோட்டம், பிராணன் அபானன் முதலிய தசவாயுக்களின் தன்மைகள் ஆகியவை பற்றியும் அவற்றின் குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக,

"மூலத்தி லெழுபத்தீ ராயிரமாம் நாடி
முளைத்தெழுந்து வலைபோல
முடிந்ததோடே
கோலமாய்ப் பதின் மூவாயிர நரம்புங்
கோர்வையாய் சூழ்ந்திருக்கும்
கூட்டிற்குள்ளே
காலமாம் நாடிபத்து, வாயு பத்துங்
கதித்ததெல்லோ முக்கோர்வைப்
பகையினாலே......"

என்று தொடரும் சித்தர் பாட லொன்றை குறிப்பிடலாம்.

வர்மக் கலையில் அறுவை, ஊதல், ஒத்தடம், கட்டு, கலிக்கம், களி, கீறல், கொம்புகட்டல், சுட்டிகை, தொக்கணம், நசியம், நாசிகாபரணம், புற்று, பூச்சு, பொடி,

முறிச்சல் ஆகிய புற மருத்துவ முறைகளுடன் சில விசேடமான வர்ம மருந்து வகைகளும் அவற்றைத் தயாரித்த அவசியமான மூலிகைகளின் விபரங்களும் அவற்றின் அளவுப் பிரமாணங்களும் இடம் பெற்றுள்ளன.

அவற்றில் போகர் திருமேனி எண்ணெய், வர்மசாந்திமெழுகு, அகத்தியர் வர்ம சூளிகை, குரு வர்மக் குளிகை, குரு வர்ம கஷாயம், நரம்பு வசைவு எண்ணெய், வர்மக் கருமுனி தைலம், வர்மக்கஞ்சி, வர்ம அண்டத் தைலம், அச்சுவாரித்தைலம், தேரையர் தைலம் போன்ற மருந்து வகைகள் பற்றி ஓரளவு அறியக் கூடியதாக உள்ளது.

முதுகு வலி, காசநோய், இருமல், இளைப்பு போன்ற நோய்களை குணப்படுத்தவல்லதான வர்மக் கஞ்சி என்ற மருந்தை தயாரிக்கும் முறை பற்றி அகத்தியரால் அருளப்பட்ட பின்வரும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

"போமப்பா திரிகடுகு மதுரம் திப்பிலி
பொருத்த நல்ல சீரகமும் ஈர் உள்ளி
வாமப்பா குன்றிவேர் அருகன் வேரும்
மகத்தான உழிஞையோடு கடலாடி தானும்
நாமப்பா மருந்தெல்லாம் கிழியாய்க் கட்டி
நன்மையுள்ள கஞ்சி வைத்துக் குடிக்கும் போது
போதவே புளிப்பு நீக்கம் செய்து
புத்தியுடன் பத்து நாள் குடிப்பாயானால்
ஏதுவான ஈளையோடு இருமல் தோசம்
ஏங்கிளைப்பு புட்டி வலிப்பு காசம் தீரும்
- - - - - - - - - - - - - - - - - - - - - -
- - - - - - - - - - - - - - - - - - - - - -
- - - - - - - - - - - - - - - - - - -
என்குரு சொன்ன மொழி தன்னைக் கேட்டீர்
சதுவான காலமெல்லாம் தீர்ந்து போகும்
சத்தியமாம் இந்த வர்மானி சாற்றினேன்"

மேலும் வர்ம இளக்க முறைகளில் பலவகையான எளிய முதலுதவி முறைகள் விபரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக காதின் பின்புலத்தில் முள்ளந்தண்டுக்கு அருகில் உள்ள சிறுதண்டுப் பகுதியில் உள்ள வர்மப் புள்ளியிலே தாக்குதலுக்கு உட்பட்ட ஒருவருக்கு வாயில் நுரைதள்ளும், விழிகள் பிதுங்கி சுயநினைவற்று வீழ்வார். இவ்வாறு தாக்கப்பட்ட ஒருவருக்கு 23 நாழிகைக்குள் முதலுதவி அளிக்காவிடில் (வர்ம இழக்கு) அவர் இறப்பைத் தழுவ நேரிடும். இதற்குரிய முதலுதவி பற்றி பின்வரும் பாடல் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

"மாறும் பார் மறு புறத்தில் ஊன்றிக் குத்தி
மகத்தான கண்விழியும் தடவித் தாழ்து
குருபரனை நினைத்துக்கை மடக்கிக் கொண்டு
கூசாமல் இருபுறமும் தடவித் தாழ்த்து
கருவறிந்து கைபிணைத்துத் தலைமேல் வைத்து
கமலத்தில் அடியடித்து காதில் ஊத
அருகிருந்தோர் அறியாமல் இளகும் பாகு
அரிசியிட்டு அன்னப்பால் சுக்குமாமே"

"அடிபட்ட செவிப்பகுதிக்கு மறுபுறம் உள்ள செவிப்பகுதியில் வர்மப் புள்ளியை நீவி அவர் பின்கையை மடக்கி செவியின் இரு புறங்களிலும் குறித்த வர்மப்பகுதியில் இறைவனைத் தியானித்துக் கொண்டு மேலிருந்து கீழாக தடவிக் கொடுக்க வேண்டும். பின்னர் அவருடைய பின் உச்சி மயிரை இரு கைகளாலும் பற்றி பின்கையால் உச்சந்தலையில் மூன்று முறை தட்டியபின் இதயப் பகுதியிலும் இரண்டு முறை தட்டிவிட வேண்டும். பின்னர் சுக்கை மென்று பாதிக்கப்பட்டவரின் நாசி, செவித் துவாரங்களில் ஊதியபின் அரிசிச் சாதத்தில் வடித்த கஞ்சியில் சுக்கைச் சேர்த்து அருந்தக் கொடுக்க வேண்டும்" என்பதே இப் பாடலின் பொருள் ஆகும். இது போன்றே உடலிலுள்ளதாக கருதப்படுகின்ற நூற்றுப் பதினாறு வர்ம நிலைகளுக்கு உரிய வர்ம இளக்கு முறைகள் பற்றிய தெளிவான விபரங்கள் சித்தர்களால் குறிப்பிடப் பட்டுள்ளன.

சித்தர்களால் வைத்திய முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட இக்கலையானது காலப் போக்கில் தற்காப்பு வித்தையாகவும் பரிணாமம் பெற்றது. பழந்தமிழ் நாட்டை

ஆண்ட மூவேந்தர்களுக்கும் வர்மக்கலையில் தேர்ச்சி பெற்ற வீரர்களே மெய்ப்பாது காவலர்களாகக் கடமை புரிந்தனர்

என்று

எம்.என்.ராஜன் என்ற அறிஞர் குறிப்பிட் டுள்ளார். மேலும் வனாந்தரங்களுடாக நெடும்பயணம் மேற் கொண்ட அரச தூதுவர்களும், ஒற்றர்களும், தவசிரேஷ்டர் களும் கொடிய வனவிலங்கு களிடமிருந்தும் திருடர், பகைவர்களிடமிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வர்மக் கலை நுணுக்கங்களை அறிந்து வைத்திருந்தனர்.

வர்மக்கலையின் மூலம் ஒருவரைத் தொடர்ந்து சிரித்தபடியே இருக்கச் செய்யவும், பேச்சிழந்து போகச் செய்யவும், சித்தப்பிரமை உடையவர்களாக்கவும், குருடர்களாக்கவும், தும்மிக் கொண்டே இருக்கச் செய்யவும் இயலும். எதிரிகளிடம் அகப்பட்ட வேளைகளில் ஒற்றர்கள் இந்த வித்தையைத் தமக்குத்தாமே பிரயோகித்து தம்மை ஊமைகளாகவும், சித்த சுவாதீனமற்றவர்களாகவும் தற்காலிகமாக ஆக்கிக் கொண்டு ராஜ ரகசியங்களைப் பாதுகாத்துக் கொண்டனர்.

பதினெண் சித்தர்களில் ஒருவரான "போகர்" என்பவர் சீனாதேசத்துடன் கொண்டிருந்த தொடர்பினால் வர்மக்கலை சீனாவிலும் பரவியது என்றும் கால கதியில் அதுவே அக்குபஞ்சர் சிகிச்சை முறையாகப் பரிணாமம் பெற்றது என்றும் இந்திய அறிஞர்கள் கூறுகின்றனர். ஆயினும் இதனைச் சீனர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் இந்த நூற்றாண்டில் மருத்துவ உலகில் பிரபல்யமாகி வருகின்ற 'யோகதிரபி", "பிசியொதிரபி", காந்த சிகிச்சை முறை போன்ற துறைகள் இந்துக்களால் கண்டறியப்பட்ட வர்மக் கலையின் உருமாறிய விம்பங்களாகவே திகழ்கின்றன.

இந்துக்களிடையே காணப்படும் முறையான ஆவணப்படுத்தலில் ஆர்வமற்ற தன்மை, கையளிப்புப் பாரம்பரியச் சிக்கல்கள், தகுதியான மாணவர்கள் இன்மை, மட்டுப்படுத்தப்பட்ட குருகுல கல்வி, சமுதாயத்திற்கும் சித்தர்களுக்கும் இடையே காணப்பட்ட இடைவெளி, போன்ற காரணங்களால் இந்துப் பண்பாட்டுக்குரிய முதுசமாகத் திகழ்ந்து வந்த வர்மக்கலை கால கதியில் அருகி வரலாயிற்று. இக்கலை பற்றிய முறையான ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படாது விடின் இன்னும் ஓரிரு தசாப்தங்களுக்குள் வர்மம் என்ற அரிய வித்தை இந்து நாகரிகம் என்ற விலை மதிக்கவொண்ணாக் கலைக் களஞ்சியத்தி லிருந்து தொலைவுற்ற ஒரு அத்தியாய மாகவே ஆகிவிடும் என்பது கசப்பான உண்மையே.

## உசாவியவை


01. சிவசாமி.வி, சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள், நியூ, இரா பப்ளிகேசன்ஸ், யாழ்ப்பாணம், 1989
02. சித்தர் பாடல்கள் பாகம் 11, பிரேமா பிரசுரம், சென்னை, 1959
03. வேணுகோபாலபிள்ளை, மே.வி. (பதிப்பாசிரியர்) , சித்தர் ஞானக்கோவை, சென்னை, 1947.
04. ராஜன், எம்.என், வர்மக்கலை, உமா பதிப்பகம், சென்னை. 1997.
05. திருமந்திரம் மூவாயிரம் (திரு.ப.இராமநாதபிள்ளை எழுதிய விளக்கம்) திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் சென்னை, 1963.
06. சரவணமுத்துப் பிள்ளை, வா (தொகுப்பு) பெரிய ஞானக் கோவை. திருமகள் விலாச அச்சுநிலையம், சென்னை, 1954.

ஸ்ரீபதி சர்மா - கிருஷ்ணானந்த சர்மா
விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை,
பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

# "அகந்யா"
## (கொல்லத்தகாதன - பசுக்கள்)

தொன்மைமிக்க நமது இந்துசமயம் அனைத்து உயிர்களும் நலமுடன் இன்புற்று வாழ வழிகாட்டுகின்றது. எந்த உயிரையும் துன்புறுத்தாதவனே இந்து ஆவான் என லோகமான்யதிலகர் கூறுகின்றார்.(ந ஹிம்ஸியாத் சர்வா பூதானி) எந்தப் பிராணிகளையும் கொல்லக்கூடாது என்ற வேதவாக்கியம் ஜீவஹிம்ஸையை அறவே ஒழிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது. (பூத தயாம் விஸ் தராய) எல்லா உயிர்களிடத்தும் அன்பு ஏற்படல் வேண்டும் என்பது திருமூலர் வாக்கு. சிவம் சைவசம்மந்தமுடையது. இது அன்பு வைதிகம். வேத சம்பந்தமுடையது. அறிவுவயப்பட்டது. அறிவுநெறி அன்பு நெறியில் முற்றுப்பெற வேண்டும் என்பது பண்டிதமணி அவர்களின் கூற்று.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து பசுவும் தோன்றியது. வடமொழியில் யாஸ்கர் எழுதிய நிருக்தம் எனும் நிகண்டு நூலில் அக்ந்யா, உஸ்ரா, உஸ்ரியா, அஹீ, மஹீ, அதிதி, இளா, ஜகதீ, சக்வரீ, கோ எனப் பத்துப் பெயர்கள் பசுக்களைக் குறிப்பனவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் "கோ" எனும் சொல் சிறப்புமிக்க எந்த ஒன்றின் உதவி கொண்டு வேள்விகளை நடத்தவும், வெகுமதிகள் வழங்கவும், ஒருவருக்கொருவர் உதவிகளைப் பெறவும், நற்பலன்களைப் பெறவும் முடிகின்றதோ அது "கோ" என அழைக்கப்படும் என விளக்கப்படுகின்றது.

கிருஷ்ணயசுர் வேதம் பசுக்கள் பற்றியும் அவற்றின் பெருமையையும் கூறுகின்றது. அதர்வ வேதம், கோசாலை, பசுக்களின் செழுமை, பசுவினுடைய விசுவரூபம் என்பன பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. சகல தேவர்களும் சகல புண்யதீர்த்தங்களும் பசுவில் இருக்கின்றன. முழுமை பொருந்திய தெய்வத்தன்மையுடையதாக இங்கு பசு குறிப்பிடப்படுகின்றது.

ருத்திரர்களின் தாய், வசுக்களின் பெண், ஆதித்தியர்களின் உடன்பிறந்தவன், அம்ருதத்தின் இருப்பிடமானவள் என பலவாறு இருக்குவேதம் பசுவை வர்ணிக்கின்றது. தெய்வங்கள் யாவற்றிற்கும் இருப்பிடமாக இவள் நினைத்து வழிபடப்படுவதனாலேயே "மஹீ" என சிறப்பாக அழைக்கப்படுகிறாள்.

கொல்லத்தகாதவைகளான பசுக்கள் புற்களை நிறைய மேய்ந்து மிகுதியான பாலைத் தந்து அதன் மூலம் வேள்விகளின் அவிப்பாகத்திற்கு உதவ வேண்டுமென யசுர் வேதம் கூறுகின்றது. உயிர் வதையை அறவே ஒழிக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்ற வேதங்கள் "அக்ந்யா" எனப் பசுவை சிறப்பாக பல இடங்களில் அழைக்கின்றன. "அகந்யா" எனில் "கொல்லத்தகாதவை" என்பது பொருள். ஜீவஹிம்ஸையை ஒழிக்க வேண்டும் எனப் பொதுவாகக் கூறுகின்ற வேதங்கள் ஒரு பிராணியைச் சிறப்பாக கொல்லத் தகாதவை என அழைப்பதன் மூலம் மற்றைய பிராணிகளைக் கொல்லுவதால் உண்டாகும் பாவத்தைப் போல பன்மடங்கு பாவம்

பசுவ்வதையால் உண்டாகும். அதனால் ஒருபோது இதனைச் செய்தல் கூடாது என வலியுறுத்துகின்றன. (ப்ரனுவோசம் சிகிதுஸே ஜநாய மாகாமனாகாமதிதிம் வதிஷ்ட என "அறிவுள்ளவனுக்குச் சொல்லுகிறேன். குற்றமற்றதும் பெருந்தன்மையுள்ளதுமான பசுவைக் கொல்லாதீர்கள்" என இருக்கு வேதம் கூறுகின்றது. அக்னியின் மூலம் உயிரும் வாயுவினால் சரீரமும், சூரியனால் புலன்களையும் கொண்டு உருவாக்கப்பட்ட இப்பசு அக்னிஹோத்ரி எனச் சிறப்பாக அழைக்கப்படுகிறாள். உயிர்களைக் காப்பதில் கருத்துடைய இறைவன் பசூனாம் பதி: என அழைக்கப்படுகின்றாள். அக்னியானாம் பதி: எனும் சிறப்புப் பெயரும் பசுக்களைக் காப்பதனால் ருத்திரனுக்கு வழங்கப்படுகின்றது.

மகாபாரதம் உயிரினங்களின் தாய் தர்மதேவதை எனப் பசுக்களைப் போற்றி இவை சொர்க்கத்திற்கு இட்டுச் செல்லும் ஏணி எனவும் கூறுகின்றது. கருடபுராணம் பிதிருக்கள் பசுவின் மூலம் வைதரணி ஆற்றைத் தாண்டிச் சொர்க்கத்திற்குச் செல்கிறார்கள் எனக் கூறுவதனையும் நோக்கலாம்.

மனிதர்களே தேவர்கள் அவளைப் புசிப்பதற்காக உனக்குத் தரவில்லை, அவைகள் கசாப்புக் களத்திற்குச் செல்லுவதில்லை என அதர்வவேதமும் பசு விரோதம் செய்தாலும் விரோதஞ் செய்தல் கூடாது, இவற்றைக் கொல்ல வேண்டுமென மனதினாலும் நினைத்தல் கூடாது. இவற்றின் கொலையில் விருப்பமுடையவர்கள் சுகமடையமாட்டார்கள். பிறவிப் பிணியை அறுக்கமாட்டார்கள் என மனுதர்ம சாஸ்திரமும் இவைகளைக் கொலைசெய்ய உத்தரவிடுபவன், கொல்பவன். அறுப்பவன், விற்பவன், வாங்குபவன், சமைப்பவன், பரிமாறுபவன், உண்பவன் ஆகிய எல்லோரும் இம்மையிலும் மறுமையிலும் சொல்லொணாத் துன்பமனுபவிப்பர் என ஸ்மிருதி நூல்களும் தர்மதேவதையான பசுவைக் கொல்லக்கூடாது என சத்யார்த்த பிரகாசம் எனும் நூலும் கூறுகின்றன. "நஷ்டேமூலே நைவ பலம் நபுஷ்பம்" என மரத்தின் வேரானது அறுபட்டபோது புஷ்பங்களும் பழங்களும் எங்கே கிடைக்கும் எனத் தருமத்தின் வடிவத்திற்குத் துன்பம் விளைந்தால் இவ் உலகு எவ்விதம் நன்மை அடையும் என விருத்த சாணக்கியத்தில் வினா எழுப்பப்படுகின்றது.

சாஸ்திரங்களும் புராணங்களும் சப்தமாதர்களில் ஒன்றாக பசுவைக் குறிப்பிடுகின்றன. தினமும் தரிசித்து வணங்கவேண்டிய ஒன்றாக பசுவைக் குறிப்பிடுகின்றன. தினமும் தரிசித்து வணங்கவேண்டிய மங்கலப் பொருட்களி லொன்றாகவும் பசு குறிப்பிடப்படுகின்றது. பசுக்கள் காலையில் மேய்தலுக்கு செல்லும் நேரமும் அவை திரும்பும் நேரமும் கோதூளிலக்ன முகூர்த்தம் என ஜோதிஷ சாஸ்திரங்கள் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன.

"க்ஷீராபிஷேக மீசஸ்ய வதந்தி முனயர் ப்ரியம்

கல்பாதல்ப்பதரம் வாபி கவ்யாந்யபிச பஞ்சவா"

என பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பவற்றினால் இறைவனை அபிஷேகத்த லின் சிறப்புப் பற்றி ஆகமங்கள் கூறுகின்றன. "பானெய் சேரானஞ்சுமாடிகண்டாய்" என நாவுக்கரசரும் இறைவனைப் புகழ்ந்து பாடுகின்றார்.

இருக்குவேதத்தில் மழைத் தெய்வம் பற்றிய பாடலில் பசுக்களுக்குக் குடிப்பதற்கான நன்னீர் எங்கும் உண்டாகட்டும் எனப் பிரார்த்திக்கப் படுகின்றது. இங்கு "ஆழி மழைக் கண்ணா......வாழ உலகினில் நீ பெய்திடாய் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து ........தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் நீங்காத செல்வம் நிறைந்து" என்ற ஆண்டாளுடைய

திருப்பாவைப் பாசுரங்களிலும் இருக்குவேத மந்திரத்தின் உட்கருத்து நன்கு பிரதிபலிப்பதனைக் காணலாம்.

பசுவினை நிழல் போல் பின் தொடர்ந்து அதனிஷ்டம் போல அதனை உலாவவிட்டு புற்கவளங்களை அதற்குக் கொடுத்து உபசரித்தல் வேண்டும் என இலக்கியங்கள் கூறுகின்றன. ஆவுராய்ஞ்சு கல், நீர்த்தொட்டி என்பன அமைத்துப் பசுக்களைப் பராமரித்த செய்திகளையும் இலக்கியங்களிலிருந்து அறியலாம். குன்றெடுத்தாநிரைகாத்த கண்ணனுக்கு வைகுந்தத்திலும் கூட பசு மேய்ப்பதே இனிதாயிருக்கின்றது என "திவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி செங்களிவாயெங் களாயர் தேவே" என நம்மாழ்வார் பாடுவதனையும் காணலாம். திருவள்ளுவரும் "கொல்லாமை" எனும் அதிகாரத்தில் கோரஷணம் பற்றி வலியுறுத்தியுள்ளமை நோக்கத்தக்கது. மஹாலஷ்மியினுடைய வடிவம் ஆகப் போற்றப் படுகின்றது பசு. பசுவினுடைய பிருஷ்டபாகத்தில் மஹாலஷ்மிநித்யவாஸம் செய்வதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. பசுவழிபாடு அசரீரியர் எகிப்தியர்களிடையேயும் நிலவிவந்த சிறப்புடையது. தர்மவடிவான தெய்வத்தன்மை வாய்ந்த "அக்ந்யா" எனச் சிறப்பாகப் போற்றப்படுகின்ற பசுக்களைப் பாதுகாத்துப் பேணுவது இந்துக்களின் கடமையாகும்.

"தர்மோ ரஷதி ரஷித: தாமம் ரஷித ரஷித:" தர்மத்தை எவன் காப்பாற்றுகிறானோ அவனைத் தர்மம் காப்பாற்றும் என்பது வேதம் கூறும் உண்மை.

செ.ஜெயக்குமார்
3ம் வருடம்
இந்து மெய்யியல்
யாழ் பல்கலைக்கழகம்.

# வீர சைவம்

சிவம் என்ற பரம்பொருளை முழுமுதற் கடவுளாக கொண்ட சைவ சமயம் இந்திய சைவ வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தினை பெற்றுள்ளது. "சைவம் சிவனுடன் சம்பந்தமாகுதல்".... என்ற திருமந்திர பாடலடியிலே முதல் முதலில் சைவம் என்ற சொல் காணப்பட்டதாக கருத்துக் கூறப்படுகின்றது. உண்மைப் பொருளை சிவன் பரம்பொருளாக விளங்கும் சைவசமயம் நீண்ட வரலாற்றினை உடையது. இச் சைவசமயம் போன்ற நீண்ட வரலாறுகளை கொண்ட சமயங்கள் உலகில் மிகச் சிலவே காணப்படுகின்றன. இந்தியாவில் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகால வரலாற்றினைக் கொண்ட சைவசமயம் காலத்திற்கு காலம் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களினூடாக சென்று இன்றுவரை நிலையான ஓரிடத்தினை பெற்றுள்ளது. இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் சைவசமயத்தை பின்பற்றுபவர்களை காணலாம். வடக்கில் காஷ்மீர் தொடக்கம் தெற்கில் இலங்கை வரையும் மேற்கில் ஆப்கானிஸ்தான் தொடக்கம் தென்கிழக்காசிய நாடுகள் வரையும் இம்மதம் பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சைவ சமயத்திலே ஏராளமான பிரிவுகள் காணப்பட்ட பொழுதிலும் முதன்மையான பிரிவுகளாக மூன்று பெரும் பிரிவுகள் காணப்படுகின்றன. அவை

* காஷ்மீர் சைவம்
* வீர சைவம்
* சைவ சித்தாந்தம்

எனும் மூன்றுமாகும். இதில் காஷ்மீர் சைவம் பெயருக்கேற்ப காஷ்மீரத்தில் தோன்றியது. வீர சைவம் இன்றைய கர்நாடக பிரதேசத்திலும், சைவ சித்தாந்தம் ஆகம மரபின் சான்றாகவும் தமிழ் நாட்டின் சைவ பக்தி இயக்கத்தின் விளைவாகவும் அமைந்தது. சைவசமயம் பல பிரிவுகளுக்குட்பட்டதாய் விளங்கிய போதிலும் இந்தியாவின் வடபுலத்தில் காஷ்மீர் சைவமாகவும் தென்புலத்தில், இலங்கை போன்ற சில நாடுகளில் சைவ சித்தாந்தமாகவும், கன்னடம், ஆந்திரா போன்ற சில இடங்களில் வீர சைவமாகவும் பரந்து செழிப்படைந்து இருந்தமையுடன் இன்றும் நிலைத்திருக்கும் மதம் என்பது சைவ மதத்தின் தனிச் சிறப்பாகும். வீர சைவர்கள் வீரம், வாதுளம் போன்ற ஆகமங்களை பிரமாணங்களாகக் கொள்வர். இவர்கள் லிங்கங்களை மட்டுமே வழிபடுவர். இதனாலேயே லிங்காயுத்துக்கள் எனவும் இவர்களை அழைப்பர்.

கி.பி.12ம் நூற்றாண்டில் ஜைனமும், வைணவமும் உயர்நிலைக்கு வந்தது சைவசமயம் தளர்வடைந்து ஒரு நிலையில் சைவ சமயக் கருத்துக்களை புரட்சியுடையனவாய் ஆக்கினார். ஒரு தலைமகனார், அவருடைய முயற்சியானது வீரம் வாய்ந்தது அடைந்த பயனும் விளக்கமானது அத்தலைமகனார் யாரெனில் அப்போதைய கன்னட மானிலத்து முதலமைச்சராக இருந்த "பசவேசர்" என்பவராவார். இக்காலத்திலேயே வீரசைவம் என்ற பெயரையும் பெற்றது. வீரம் நிறைந்த

சமயம் சமயக் கொள்கை என்பது வீரசைவம் என்பதற்குரிய விளக்கமாகும். சைவ வர்ணாச்சிரம முறைகளினால் உண்டாகிய கேடுகளைத் தகர்த்து வெற்றி கொண்ட சமயம் வீரசைவம்.

வீர சைவத்தின் தோற்றத்தை கூறும் மரபுவழிப்பட்ட வரலாறு ஒன்றுண்டு. இது காலம் கடந்த தொன்மையானது பந்சாசாரியர் எனப்படும். இரேணுகாசாரியார், நாருகாசாரியர், ஏகோராமராத்யர், பண்டிததாராத்யர், விஸ்வராத்திரியர், என்கின்ற ஐந்து ஆச்சாரியர்கள் பரமசிவனின் ஐந்து முகங்களிலிருந்து வெளிவந்து அவர்களால் தோற்றுவிக்கப்பட்டதே வீர சைவம் என்று கருத்துக் கூறப்படுகின்றது. எனவே வீர சைவத்தின் தோற்றம் தொன்மையானதென்றும் பின்னர் கி.பி.12ம் நூற்றாண்டில் பசவேசரினால் வளர்த்தெடுக்கப்பட்டது. எனவே வீரசைவம் என்ற பெயரில் பசவேசரினால் வளர்க்கப்பட்டதெனக் கொள்ளலாம்.

ஆசிரியர் கருத்துக்களை மறுத்தவர்கள் வீரசைவர்கள் என்பது மறைமலை அடிகளின் கருத்தாகும். திருமூலர் காலத்திலே வீரசைவம் இருந்ததாகவும் கூறப்படுகின்றது. வீர - என்ற சொல்லில் வி-என்பது விகற்பம், ர-என்பது ரகிதம் எனக் குறிப்பிட்டு விகற்ப ரகிதமான சைவம் மாறுபாடுகளை நீக்கிய சைவம் அதாவது மாறுபட்ட வேதவாக்கியங்களை இணைத்துக் காட்டி ஏற்றுக் கொண்ட சைவம் வீரசைவம் என கூறப்பட்டது. இவ்வாறாக கருத்துக் கொண்டுள்ள வீரசைவத்தின் சமயக் கொள்கைகளையும் அதன் சிறப்பம்சங்கள் பற்றியும் நோக்குவோம்.

சிவனின் செம்பொருள் நெறிகளை ஐவகை ஒழுக்கம் என்றும் மெய்யறிவு உணர்வுகளை ஆறுநிலைகள் என்றும் கைக்கொண்ட வீரசைவம் ஐம்பெரும் துறவிகளால் தோற்றுவிக்கப்பட்டு பின்னர் பசவேசரினால் வளர்க்கப்பட்டது. இவைகளை அடியொற்றி வீர சைவ திருமடத் தலைவர்கள் மக்களைக் கவர கொணர்ந்த கட்டுப்பாட்டு முறைகளை எண்வகை காப்பு எனும் அஷ்டாவரணம் என அழைப்பர். எனவே வீரசைவ நெறி இரண்டு அடிப்படைத் துறைகளாக முதலில் வகுக்கப்பெற்று பின் மூன்று துறைகளாயின அவை.

* எண்வகை காப்பு - (பஞ்சாசாரம்)
* ஐவகை ஒழுக்கம் - (அஷ்டடாவரணம்)
* ஆறு நிலை - (சடுத்தலம்)

என்பனவாகும். இவை வீரசைவ மரபில் முக்கிய இடம்பெறும் அம்சங்களாகும். அவை பற்றி சுருக்கமாக இங்கு நோக்குவோம்.

அந்த வகையில் ஐவகை ஒழுக்கமாகிய பஞ்சாசாரம் பற்றி முதலில் நோக்குவோமானால் இத்துறை சமூகத்தை உள்ளீடாக கொண்டு அன்பு, அறிவு, அறம், என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நற்பண்பையும், பணியையும் உருவாக்கும் வண்ணம் அமையப் பெற்றது. இவ் ஐவகை ஒழுக்கங்களுமாவன

1. இலிங்க ஒழுக்கம் – (இலிங்காசாரம்)
2. நன்நிறுத்தல் – (சதாசாரம்)
3. சிவ ஒழுக்கம் – (சிவாசாரம்)
4. பணிவெனும் ஒழுக்கம் – (பிருத்யாசாரம்)
5. கூட்டமைப்பு ஒழுக்கம் – (கணாச்சாரம்) என்பனவாகும்.

அந்த வகையில் இலிங்க ஒழுக்கம் என்றால் இலிங்க வணக்கத்தை மேற்கொண்ட வீரசைவர்கள் சாதி, குலம், உயர்வு, தாழ்வு, பொய்ச்சடங்கு என்பன இல்லாத ஒழுக்கமாக கூறப்படுகின்றது. அனைத்து உயிர்களும் இலிங்கங்களே நம் அனைவரையும் இணைக்கும் அண்டலிங்கம்

பற்றி உணர்ந்து அதனுடன் இணையும் பயிற்சி அன்புறவு இலிங்க ஒழுக்கம் எனலாம்.

" அன்பிலார் எல்லாந் தமக்குரியவர் அன்புடையவர்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்று வள்ளுவர் கூறும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அன்பால் சூழ்நிலை, அகஅமைவு வழிபாட்டால் உடலை ஒளிபெறச் செய்தலே இலிங்க ஒழுக்கமாகும்.

தன்னிறுத்தல் ஒழுக்கத்தை நோக்கின் தான் வாழ்ந்து பிறரையும் வாழச் செய்யும் ஒழுக்கம் தன்னிறுத்தல் ஒழுக்கமாகின்றது. வீரசைவர்கள் தனது முயற்சியினால் தக்கதொரு பணிசெய்து அதன் மூலம் வரும் வருவாயை கொண்டு அறவாளனாகவும், ஒழுக்கமுடையவனாகவும் வாழ வேண்டும். உழைப்பில்லாத வாழ்க்கையை வீரசைவம் ஏற்காது. இக்கருத்தினை வள்ளுவர் ஊக்கம் உடைமை என்ற அதிகாரத்தில் குறிப்பிட்டு விளக்கியுள்ளார். உதாரணமாக உடையவர் என்று சொல்லத்தக்கது ஊக்கம் உடைமையாகும். என்பதை

"உடையரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று"

என மிக அழகாக குறிப்பிட்டுள்ளார். வீரசைவருள் நல்லாசான்களாயினும், ஐந்தவிந்தாராயினும், அருளாளராயினும் தமக்கேற்றதோர் உழைப்பினை மேற்கொண்டிருத்தல் வேண்டும். ஆயினும் அருளாளரே உழைப்பின் பெரும் பயனை அடைவர் முதல் இருவகையினதும் உழைப்பின் பயன் கருதாது அருளாளர் உழைப்பிற்கு துணைநிற்பர் அருளாளரே உழைப்பால் வரும் பொருளால் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதும் பின் தன்னிடம் எஞ்சிய பொருளை தக்கார்க்கு ஈந்து அவர்தம் வாழ்க்கையை நிலை நிறுத்தலுமே தன்னிறுத்தல் ஒழுக்கமாகும். இன்றும் வீர சைவர்கள் தம் செல்வத்தின் ஒரு பகுதியை வீரசைவ மடங்களுக்கு ஈந்து கல்வியாளர்களையும், மருத்துவப் பணியாளர்களையும் காத்து அவர்களது வாழ்க்கையை நிலைநிறுத்தும் பணிகளை செம்மையாக செய்கின்றனர்.

சிவ ஒழுக்கம் பற்றி நோக்கின் ஊருக்கோ, நாட்டுக்கோ ஏற்படும் கேடுகளை நீக்கும் பணிகளில் வீரசைவர்கள் முன்னணியில் செயற்படுவதைக் கூறுவதே சிவ ஒழுக்கம். ஒருவர் மற்றொருவருக்குச் செய்யும் தீமை அவர்தம் அங்கலிங்கத்திற்குச் செய்யும் தீமையாகும். தம் மனைவியும் தம்மைப் போல் அங்கலிங்கத்திற்கு ஆட்பட்டவள் என்றே எண்ணி அன்பு பேணல் வேண்டும். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பதே சிவ ஒழுக்கம். தொடர்ந்து பணிவெனும் ஒழுக்கம் பற்றி நோக்கின் எவரிடத்தும் பணிந்து பெருந்தன்மையுடனும் பழகுதல் வேண்டும். வீரசைவர் உலகின் மற்ற உயிர்களுக்குத்தான் ஒரு பணியாளன் எனக் கருதுதல் வேண்டும்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

என்ற வள்ளுவர் கருத்து அடங்காமையை விட அடக்கம் ஒருவனுக்கு உயர்வைத் தரும் என்பதை புலப்படுத்தி வீரசைவ பணிவெனும் ஒழுக்கத்தை புலப்படுத்துகின்றது.

ஐவகை ஒழுக்கங்களில் இறுதியாக கொள்ளப்படும் கூட்டமைப்பு ஒழுக்கம் பற்றி நோக்குகின்ற போது பொது அறம் வளர்க்கும் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அத்தன்மையில் ஈடுபடுபவர்களில் கூட்டத்தில் எப்போதும் பழகும் வாய்ப்பபைப் பெற வேண்டும். அதற்கே வீரசைவர்கள்

அடிக்கடி கூடிப் பொது அறம் வளர்த்தல் வேண்டும். தனியறத்திலும் பொது அறமே காப்பாற்றப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே வீர சைவம் கூறுகின்ற ஐவகை ஒழுக்கம் ஒரு மனிதனை அறிவுடையவனாக்கி அவனது வாழ்க்கை செம்மையாக அமைய உதவுகின்றது எனக் கூறுதல் மிகவும் பொருத்தப்பாடான ஒன்றாகும்.

வீரசைவ கொள்கைகளில் அடுத்து குறிப்பிடப்படுவது எண்வகை காப்பு எனும் அஷ்டாவரணம். ஆரம்ப காலத்தில் வீரசைவத்தில் ஐவகை ஒழுக்கமும் ஆறு நிலைகளுமே இருந்தன, எண்வகை காப்பு பிற்காலத்தில் இணைந்தது. ஆதலால் ஏனைய இரண்டிற்குமுள்ள சிறப்பு எண்வகை காப்பிற்கு இல்லை. இருப்பினும் வீரசைவம் ஒரு சமயமாக உயர்வதற்கு இதுவே காரணமாக அமைந்தது. ஐவகை ஒழுக்கங்களில் வாழ்வில் வெற்றி பெற்ற வீரசைவன் தன்னை எண்வகைத் தற்காப்புக்களால் மேலும் உயர்த்திக் கொள்வதை கூறுவதே எண்வகை காப்பாகும். அவையாவன நல்லாசான் (குரு) இலிங்கம், ஐந்தவிந்தாள் (சங்கமம்), திருவடித்தூ நீர் (பாதோகம்), படையல்(பிரசாதம்), திருநீறு, அக்கமணி, திருமந்திரம், ஆகிய மூன்றும் வழிபாட்டிற்குரியவை. திருநீறு, அக்கமணி, திருமந்திரம் ஆகிய மூன்றும் வழிபாட்டில் பயன்படுவன. வழிபாட்டினால் பெறும் பயன்கள் திருவடித்தூநீரும், படையலுமாகும். இவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக இங்கு நோக்குவோம்.

நல்லாசான் (குரு) பற்றி முதலில் நோக்கில் வீரசைவர்கள் குருவை போற்றி வணங்குகின்றனர். அறவாழி அந்தணன் என்று வள்ளுவர் கூறியுள்ளார்.''அந்தணர் ஆவோர் அறு தொழில் பூண்டுளோர்'' என்று திருமூலரும் குறிப்பிட்டமையும் இங்கு நோக்கத்தக்கது. குருவின்றேல் இட்டலிங்கமில்லை இறையருள் பெற்ற பயிற்சியும் இல்லை. குருவின் அருள் பெறாதவன் தலையற்ற உடல் போன்றவனாவான். வீரசைவர்கள் வீரசைவரின் அங்கத்திற்கும், இலிங்கத்திற்கும் பிரிக்க முடியாத பிணைப்பை ஏற்படுத்தி உடலை தெய்வீகமாக்கி உள்ளத்திலுள்ள அறியாமையை அகற்றி ஞான ஒளியை ஏற்றிவைக்கும் நல்லாரே குரு என்று அழைப்பதற்குரியவர் என்று குரு பற்றி விளக்கியுள்ளார்.

உருவமில்லாத அருவமான இறைவனை மனம் பக்குவப்படும் வரை சிந்திப்பதற்கு உதவியாயிருக்க இறைவனின் அடையாளமே அருட்குறியாகிய இட்டலிங்கமாகும். இட்டலிங்கம் அணிந்தவர்கள் ஒரு கடவுள் நெறியில் நிற்பவர்கள் சாதி வேறுபாடுகளை பாராட்டாதவர், உயர்வு தாழ்வுகளை மதிக்காதவர்கள் இட்டலிங்க வழிபாடு கோயில்களில் சென்று அங்குள்ள சிலைகளை வழிபடுவது போன்றதன்று. சீவான்மாவை கண்டுணர்ந்து அதனை பரமான்மாவுடன் ஒன்றிணைக்கும் நெறிமுறையாகும். இவ்வாறு இலிங்கம் பற்றி கருத்துக் கூறப்படுகின்றது.

அடுத்து ஐந்தவித்தார் எனும் சங்கமர் பற்றி நோக்கின் சங்கமர் ஒரு குறிப்பிட்ட சாதியினரால் பிறப்பிறப்பைக் கடந்த உணர்வுடையவரே சங்கமர். தன்னை உணர்ந்து தலைவனையும் (குரு) உணர்ந்த அருளாளர்களே - அடியார்களே சங்கமர் ஆவார். இட்டலிங்கத்தை திருமுழுக்காட்டி அப்பொருளின் திருவடிகளின் வழிக்கிடக்கும் தூ நீர் திருவடித்தூ நீர் எனப்படும் இத்திருவடித்தூ நிரினை வீரசைவர்கள் கடவுளின் அருட்படையலாகக் கருதி குடித்து மகிழ்வர். பிற்காலத்தில் இறைவனாகவே கருதப்படும் குருவின்

திருவடிகளுக்கு வழிபாடு இயற்றி பெறப்படும் நீரை திருவடித்தூ நீர் என்று கருதிவிட்டனர். இட்டலிங்கப் பெருமானுக்கு படைத்துப் பெறப்படும் எதுவும் படையல் என்ற நற்பெயரைப் பெறுகின்றது. தான் உட்கொள்ளும் எந்த உணவும் இட்டலிங்கத்துக்கு என்ற உணர்வில் உண்பதால் உணவு, படையல் நிலையை அடைகின்றது. எண்வகைக் காப்பில் அடுத்து திருநீறு பற்றி நோக்கில் நெருப்பானது முற்றிலும் அணையாமல் பாதுகாப்பது அதன் மேல் பூத்திருக்கும் நீறே. அதுபோல் ஆன்மீக ஒளிபடைத்த உடலைக்காப்பதற்கு வீரசைவர்களால் திருநீறு பூசப்படுகின்றது.

தீயன நோக்காத பேராண்மை படைத்தவர் அணிவது அக்கமணி. வீர சைவர்கள் முதற் பொருளின் அருளைப் பெறுவதற்கு திருநீறு, அக்கமணி அணிவதுடன் நாவிற்கு அருங்கல மாயிருக்கும் சித்தன் சிவனைக் குறிக்கும் நமசிவாய ஓம் சிவ ஓம், ஆகிய அருள் ஒலிகளை எப்போதும் மறவாமல் நாவால் நவின்று கொண்டிருப்பர். அறவாழி அந்தணர் ஆன பசவரின் திருப்பெயரையும் அருள் ஒலியாகவே கொள்ளலாம். இவ்வாறாக வீரசைவ அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றான எண்வகைக்
காப்பு சிறப்புடன் பெற்று விளங்குகிறது.

வீரசைவ மரபில் அடுத்து குறிப்பிட்டு கூறக்கூடிய அம்சம் ஆறு நிலையாகும். இந்த ஆறு நிலைக்குப்பின் தான் இறைவனோடு இரண்டறக் கலக்க முடியும். அவையாவன அருள்நிலை(பக்தித்தலம்), சிவநிலை(மகேசுவரத் தலம்), தன்னீதல்நிலை(பிரசாதித்தலம்), ஆக அமைவநிலை(பிராணலிங்கித்தலம்), இணையும் நிலை(சரணத்தலம்), ஒருப்படு நிலை (ஐக்கியத்தலம்) என்பனவாகும். சுருங்கக்கூறின் அங்கம் என்று அழைக்கப் படும் ஜீவான்மா பரமான்மாவுடன் சென்று கலக்கும் நெறிநிலைகளே ஆறுநிலை களாகும். அருள் நிலையில் அகப்பற்று, புறப்பற்று, பொருள் பற்றுக்களை விட்டு விடுகிறான். சிவநிலையில் கள்ளாமை, வெஃகாமை, பிறனில் விழையாமை ஆகிய மூவறங்களையும் கடைப்பிடிக்கின்றன. தன்னீதல் நிலையில் எல்லா வகையான இன்பங்களையும் துறந்து விடுகிறான். அக அமைவு நிலையில் உடற்பற்றை முற்றிலும் ஒழித்து தன்னை முழுதும் பரமான்மாவிற்கே ஈந்துவிடுகிறான். மாயையை வென்று இன்பதுன்பங்களை கடந்து இறைவனோடு கலப்பதற்கு அணியமாயிருக்கும் நிலையே இணையும் நிலையாகும். ஈற்றில் சிவபரம்பொருளோடு இரண்டறக்கலத்தலே ஒருப்படுநிலையாகும். இங்கு கூறப்பட்ட ஆறு நிலைகளிலும் பற்பல உட்பிரிவுகள் உள்ளன. அவற்றை வீரசைவத் தமிழ்ப்பெரும் கவிஞர் சிவப்பிரகாசர் இயற்றிய சித்தாந்த சிகாமணி என்ற நூலில் விரிவாக அறிந்து கொள்ளலாம். இவ்வாறாக வீர சைவ நெறியில் கருத்தலம் எனும் ஆறு நிலைகளும் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. எனவே வீரசைவ மரபில் ஐவகை ஒழுக்கம் எண்வகைக் காப்பு, ஆறுநிலைகள் என்பன சிறப்பிடம் பெற்று விளங்குவது தெரிய வருகின்றது.

வீர சைவ நெறியில் காணப்படும் சமூகம் சார்பான கொள்கைகள் பற்றி நோக்கின் நவீன கால சீர்திருத்த இயக்க வாதிகள் கூறிய சிந்தனைகளுக்கு ஒப்பான பல விடயங்களை கண்டுகொள்ளலாம். அந்த வகையில் வீரசைவர்கள் வேதங்களை ஒப்புக்கொள்ளாதவர்கள் சாதி வேறுபாடு இல்லாதவர்கள். வேதங்களை முற்றாக எதிர்ப்பது வீரசைவரின் நோக்கம் அன்று சாதி சமய கட்டுக்கோப்பு, உயிர்ப்பலி கொடுக்கும் யாகம் இவை போன்ற செயல்களுக்கு ஆதரவாக வேதக் கருத்துக்கள் கூறப்படுமானால் அவைகளை ஏற்றுக் கொள்ளாது மறுப்பது வீரசைவரின் கொள்கையாகும். சாதி வேறுபாடு வீரசைவர்களுக்ககு உடன்பாடு அற்றது.

உலக மக்கள் உயிர்கள் அனைத்துமே லிங்கத்தின் அங்கம் எனக் கொள்வர். தேவையற்ற சடங்குகள் இறைவனோடு நேராக இணங்குவதற்கு தடையாக இருந்த பழக்கவழக்கங்களும் வீரசைவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

இவை மட்டுமன்றி உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்பனவற்றை நீக்கி கலப்பு திருமணத்தினை நடத்தினர். அத்துடன் விதவைகள் மறுமணம் புரியலாம் எனும் கருத்தினையும் வலியுறுத்தினர். இவ்வாறாக நவீன போக்குடைய வீரசைவர் சமூகத்தில் ஏற்படுத்திய புரட்சி சைவமத வரலாற்றிலே மிகவும் குறிப்பிட்டுக் கூறக்கூடியதொன் றாகும். பசவண்ணரின் இந்த முயற்சி சைவ சமயத்திற்கு ஒரு புதிய சமூகநிலை பரிமாற்றத்தை கொடுத்தது எனலாம். வீர சைவம் கடவுள் நம்பிக்கையை அடித் தளமாகக் கொண்டு வெளிப்படுத்திய சிந்தனைகள் அக்காலத்துக்கு ஏற்புடைய தாக இருந்த போதிலும் இன்றைய நிலையில் வீரசைவ கொள்கைகள் அருகி வருவதை அவதானிக்கலாம். இருப்பினும் இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் இக்கொள்கைகள் நடைமுறையில் இருந்து வருவதுடன் இன்று வீரசைவத் திருமடங்களும், நிறுவனங்களும் இவ்வீரசைவ கொள்கைகளை பரப்பி வருவது பெருமைக்குரியதொன்றாகும். எனவே வீரசைவம் சைவமதப் பிரிவுகளில் ஒன்றாக கொள்ளப்படுவதால் அதிலுள்ள கொள்கைகளை அடியொற்றி வாழ்வது மனித வாழ்வில் உயர்வைத் தரும் என்பது எனது கருத்து. அத்துடன் எதிர் காலத்தில் வீரசைவம் ஒரு சமயமாகவா? அல்லது தத்துவமாகவா ஏற்றுக் கொள்ளப்படும் என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

## உதவிய நூல்கள்


01. **வீரசைவ நெறியும் அதன் வரலாறும்**
- வேலா இராசமாணிக்கம்
- தமிழ்நாடு வீரசைவபசவ சங்கத்தாரின்
- சார்பில் வெளியிடப்பட்டது. 1978

02. **இந்திய சிந்தனை மரபு**
- கலாநிதி, நா.சுப்பிரமணியன்
- South Asian Books
- Chennai 1996.

03. **திருக்குறள்**
- சமூகசேவை வெளியீடு விநாயகர் தர்ம நிதியம் 1997.

செல்வி.தயாளினி நவநீதகிருஷ்ணன்
உதவி விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

# ஓவியக்கலை மரபில் சித்தன்னவாசல் ஓவியங்கள்

கலை என்றால் பல பொருளொருசொல் எனப் பொருள்படும். கலை என்னும் சொல் செயல்திறன், ஆண்மான், ஆண்குரங்கு, சுறாமீன், மகரராசி, உடை, அமிசம், சந்திரனின் பதினாறு கூறு, ஒளி, சாத்திரம், நூலறிவு, மொழி, வண்ணபாட்டின் ஒருபாகம், வித்தியா தத்துவம் ஏழனுள் ஒன்று, மரக்கவடு, மேகலை, காஞ்சியென்னும் இடையணிகள், மரவயிரம், கர்ப்பூரவகை முதலிய பல பொருள்களில் இலக்கிய ஆட்சி கொண்டுள்ளது. கலை என்பது மக்களது உள்ளத்தில் பெருக்கெடுத்து வெளிப்படும் ஆற்றல் ஆகும். இவ்வாற்றலானது காவியமாகவோ, ஓவியமாகவோ, விழி களுக்கு விருந்தளிக்கும் தாஜ்மகால் போன்ற பேரெழில் மிக்க கட்டிடடமாகவோ வெளிப் படலாம். இக்கலைகளுள்ளே ஓவியக் கலையும் ஒன்றாகும். "ஓவியம்" என்ற சொல் "ஒவ்வு" என்னும் வினைச்சொல்லில் இருந்து பிறந்ததாகும். "ஒவ்வு" ஒன்றைப் பற்று அல்லது ஒன்றைப் போலவே இருப்பது என்பது பொருள். இதிலிருந்து பிறந்த ஒவ்வு, ஓவம், ஓவியம் என்ற சொற்கள் ஒன்றன் மறுவுருவமாக இருக்கின்ற மற்றொன்றைக் குறிக்கப்பயன்படும் சொற்களாகும். அதாவது கண்ணால் கண்ட பிற பொருள்களின் மீதோ தீட்டி, மூலப்பொருளின் தன்மையை அதில் எதிரொலிக்கச் செய்வதே ஓவியமாகும்.

மேலும் வடநூலாரும் இதே பொருளில் தான் எது ஒன்றன் பிரதிரூபமாக இருக்கிறதோ அதுவே சித்திரம் என்று கூறினார்கள். தாம் காணுகின்ற காட்சியை அப்படியே எழுதுவது "காட்சி ஓவியம்" ஆகும். தம் மனத்தில் ஒரு காட்சியைக் கற்பனை செய்து பின்னர் அதனை எழுதிக்காட்டுவது "கற்பனை ஓவியம்" ஆகும்.

உள்ளத்தெழுகை யாவும் தூரிகைகள் மூலம் ஊற்றெடுத்து தங்கு தடையின்றிப் பாய்ந்து செல்வதே ஓவியம் என்பது சீன மக்களின் ஆய்ந்தறிந்த கருத்தாகும். ஓவியக் கலையானது கண்ணுக்கு விருந்தாகி மனதிற்கு இன்பம் பயப்பதாகும். ஓவியக்கலை கருத்தின் உறைவிடம், அழகின் பிறப்பிடம், கற்பனையின் சிகரம், இதன் பயன் இன்பம். அறிவின்மையையும், துன்பத்தையும் அகற்றி இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தந்து இரச ஞான உணர்ச்சியை ஊட்டி அமைதியை நிலவச் செய்து ஆத்ம வளர்ச்சியை அடையச் செய்வது ஓவியக்கலை ஆகும்.

முற்கால மனிதன் தொடங்கிய கோட்டுருவக் குறியீடுகளே, உருவ அடையாளங்களே, பண்பட்ட மனித வாழ்வில் ஓவியமாக ஒழுங்கு பெற்றது. ஓவியத்தின் தோற்றக்காலமாக மனிதன் அநாகரிகனாய் குகைகளில் வாழ்ந்த காலம் எனலாம். காடுகளில் சென்று வேட்டையாடி இறைச்சி உண்டு குகைகளில் ஒதுங்கிய நேரத்தில் கைகளில் கிடைத்த கரித்துண்டை வைத்துக்கொண்டு குகைகளின் சுவர்களில் கிறுக்கிக் கொண்டிருந்த போதுதான் மனிதன் ஓவியனானான். கலைஞனுடைய அகக் காட்சியே புறத்தில் கவின்மிகு ஓவியமாக வெளிப்படுகின்றது.

மேலும் இக்கலையானது சிந்தனைக்கும் செவிக்கும் இன்பம் பயப்பதாக அமைகின்றது. ஆனால் ஓவியக்கலை கண்ணிற்கு விருந்தாகி மனத்திற்கு இன்பம் பயக்கின்றது. அத்துடன் ஓவியத்தின் மூலம் எந்தப் பொருளையும் விளக்க இயலும் என்பதை மணிமேகலை யின் சாத்தனாரின் கருத்து உறுதிப் படுத்துகின்றது. இதனை,

"மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்க்கும் உவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர்
இயற்றிய கண்கவர் ஓவியம்"

என்பதன் மூலமாக அறியக் கூடியதாக இருக்கின்றது.

அடுத்து ஓவியக் கலையினைப் பற்றி அறிய உதவுவனவாக இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், எச்சங்கள், நாணயங்கள், அயல்நாட்டார் குறிப்புக்கள் என்பன விளங்குகின்றன. இலக்கியங்களுள்ளே மிகவும் தொன்மையானது விஷ்ணுதர்மோத்ர புராணத்தில் உள்ள சிற்பசூத்திரம். இதனைவிட சில்பரத்தினம், நாரதசிற்பம், சிவதத்துவரத்தினகாரம் போன்ற இலக்கியங்கள் மூலமாகவும் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் ஓவியம் தீட்டுவதற்கு அடிப்படை வண்ணங்கள் ஐந்து ஆகும். அவையாவன கறுப்பு, சிவப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை என்பனவாகும். ஓவியம் வரைவதற்குத் தேவைப்படும் கருவிகளாக பின்வருவனவற்றைக் கூறலாம். அவையாவன தளம் அல்லது கிளி, வண்ணக்கலவை, வண்ணக்கலவையைப் பயன்படுத்தி ஓவியம் வரைவதற்கு உதவும் எழுதுகோல் என்பனவாகும். ஓவியங்களைச் சுவர்களில் வரைவதற்கு முன் நன்றாகக் குறைந்த வெண்சாந்தைச் சுவர்மீது தீட்டுவது வழக்கம் என்பதையும் அச்சாந்து மென்மையும், ஒளியும் பெற்று விளங்கியதென்பதையும் "வெள்ளியன்ன விளங்கும் சுதை" என்று நெடுநல்வாடையிலும், "வெள்ளி வெண்சுதை இழுக்கிய மாடத்து" என்று மணிமேகலை யிலும் கூறப்படுவதைக் கொண்டு அறியலாம். ஓவியங்கள் தீட்டுவதற்காக இரண்டுவகைத் தூரிகைகள் பயன்படுத்தப்பட்டன என்பதைச் சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலிருந்து அறியலாம். இந்த இரண்டு தூரிகைகளில் ஒன்று துகிலிகை எனப்படும். மற்றொன்று வட்டிகை எனப்படும். வண்ணங்களைக் குழைத்துப் பயன்படுத்தும் முறைகளும், திரையில் ஓவியங்களைத் தீட்டுமுன் மெழுகை அதன் மீது பூசி அதனை ஓவியத் திரையாக அணியமாக்கும் முறைகளும் சங்க நூல்களிலே காணப்படுகின்றன.

இந்த வகையிலே தமிழக ஓவியங்கள் வரிசையிலே, வளர்ச்சியிலே புதுக்கோட்டைக்கு அண்மையில் உள்ள சித்தன்னவாசல் ஓவியங்கள் மிகவும் சிறப்பானவையாகும். தொடக்கத்திலே இந்த ஓவியங்களை முதலாவது மகேந்திரவர்மன் காலத்தவை என அறிஞர்கள் கருதினர். இப்பொழுது இது பாண்டியர் காலத்திற் குரியவை என்பது சில அறிஞர் கருத்தாகும்.

சித்தன்ன வாசல் குடைவரையின் முன்மண்டபக் கூரை முழுவதும் தீட்டப்பட்டுள்ள ஓவியம் ஒரு தாமரைக் குளக் காட்சியைச் சித்தரிக்கிறது. இக்குளத்தில் செந்தாமரை, வெண்டாமரை, அல்லி, ஆம்பல் முதலிய நீர்ப்பூக்கள் பூத்து நிறைந்திருக்கின்றன. செழித்து வளர்ந்த தாமரை இலைகள் நீர் தெரியாதபடி குளத்தை மூடிக்கொண்டிருக்கின்றன. ஓதிமப் பறவைகளும், மீன்களும் இடையிடையே காணப்படுகின்றன. எருமையும், யானையும், நீரில் நிற்கின்றன. ஆழமற்ற இந்த குளத்தில் முழங்காலளவுள்ள நீரில் மூன்று ஆள்கள் இறங்கித் தாமரைப் பூக்களை நாளத்தோடு கொய்து கற்றையாகக் கட்டித் தோளின்மேல் வைத்துக்கொண்டு வருகிறார்கள். தாமரைக் குளத்தின் இனிய இயற்கைக் காட்சியானது

இந்த ஓவியத்தில் நன்கு அமைந்திருக்கிறது.

மேலும் அர்த்த மண்டபத்தின் தென்புறத் தூணின் மேல் அரசனும், அரசியும் பின்னால் பணியாள் தொடரக் கம்பீரமாகச் செல்லும் காட்சி உள்ளது. அரசன் அழகிய கிரீடத்துடன் காட்சி தருகிறான். இருவரும் அழகிய அணி கலன்கள் அணிந்துள்ளனர்.

மேலும் இக் குடைவரையின் தூண்களிலுள்ளவை கணிகையரின் ஈரோவியங்களாகும். ஒவ்வொரு தூணிலும் ஒவ்வொரு கணிகை மேனி இருவர் உள்ளனர். வலப்பக்கமுள்ள நடன மகள் தன் இடக்கையைத் துதிக்கை போல் வைத்துக்கொண்டு, வலக்கையில் உள்ளங் கையைச் சதுரவடிவில் காட்டுகிறாள். இத்தகைய பாணியிலான நடனம் சிறப்பானதென்றும், சிவன் ஆடிய "நாதாந்த" நடனத்தில் இவ்வமைப்பைத் தெளிவாகக் காணலாம் என்றும் கூறுவர். அடுத்து இடப்பக்க தூணிலுள்ள நடன மகள் "லதாவிரிசிக" நடனப்பாணியில் காட்சி யளிக்கிறாா்.

மேலும் இவ்விரு நடனமகளிரும் கூந்தலை ஒப்பனை செய்து கொண்டுள்ள முறையும், நிறையணிகலன்களையணிந் துள்ள முறையும் வியக்கத்தக்கனவாம். இவர்கள் தலைநிறையப் பூச்சூடி, கைகளில் வளைகளும், தோள்களில் கடகங்களும், கழுத்தில் பல்வேறு மாலைகளும், விரல் களில் கணையாளிகளும், ஓலைக்குண்டல மும், குதம்பையும் காதுகளில் அணிந்து, சீதேவி, வலம்புரி, பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லி முதலிய அணிகளை தலைக்கு அணிந்து இடுப்பில் மேகலையணிந்து காணப்படுகின்றனர். பொன்மணி. முத்து முதலியவற்றால் இவை செய்யப்பட்டுள்ளன. இவர்களின் கூந்தல் ஒப்பனைகள் வேறுபடுகின்றன. வலப்பக்கமுள்ளவளின் கூந்தல் நடுவில் வகிடெடுத்து முடியப் பட்டுள்ளது. அம்முடிப்பில் சில அணிகலன்களும் பல நிற மலர்க்கொத்துக் களும், தாமரையிதழ்களும் இலைகளும் ஒப்பனையாகச் சூடப்பட்டுள்ளன. இடப்பக்க முள்ளவளின் கூந்தல் சிறிது வேறுபாட்டுடன் ஒப்பனை செய்யப்பட்டுள்ளது. ஆயினும் ஒப்பனைப் பொருள்கள் யாவும் ஒரே மாதிரியாகவுள்ளன.

வலப்பக்கமுள்ளவள் இரண்டு மேலாடைகளை அணிந்துள்ளாள். ஒன்று மேலாக இடையில் கட்டப்பட்டுள்ளது. மற்றோர் ஆடை தோளைச் சுற்றிச் செல்கிறது. அதிலுள்ள சுருக்கமும், பிறவும் இயற்கையாகக் காணப்படுகின்றன.

மேலும் இம்மங்கையரை 'அடிகளார்" என்றும் "அப்சர மகளிர்' என்றும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இந்த ஓவியங்களால் நாம் அக்காலத்துப் பெண்கள் அணிந்த அணி கலன்களைப் பற்றியும், குறிப்பாகக் கணிகையர் அல்லது உயர்நிலையிலிருந்த பெண்களின் ஆடை அணிகலன்களைப் பற்றியும், கூந்தல் ஒப்பனைகளைப் பற்றியும், நடனக்கலையின் மெய்ப்பாட்டியல்களைப் பற்றியும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

அருகக் கடவுள் எழுந்தருளியிருந்து அறவுரை அருளுகிற இடம் "சமவசரணம்" என்பது. சமவசரணத்தில் ஒன்றுக்குள் ஒன்றாக ஏழுமாடவீதிகள் உள்ளன. இந்த மாடவீதிகளில் இரண்டாவதாகவுள்ளது "காதிகா பூமி" சமவசரணத்தைச் சூழ்ந்த அகழி போன்ற நீர்நிலையாகும். இரண்டு "குரோசர்" சுற்றளவுள்ளதாய் ஒன்றரைக்காத அகலமுடையதாயிருக்கும். பார்ப்பதற்கு மிகுந்த ஆழமுள்ளது போல் தோன்றினாலும் இதில் இறங்கினால் முழங்காலளவு மட்டும் நீருள்ளதாய் இருக்கும் மேடு பள்ளமில்லாமல் சமதரையாகவுள்ள இந்தக் காதிகாபூமி பலவகை நீர்ப்பூக்கள் பூத்துப் பார்வைக்கு இந்திரவில்லைப் போன்று

இந்த கணிகையருக்கும் அரசியாருக்கும் மூக்கணி இல்லையென்பது குறிப்பிடத் தக்கது. இங்ஙனமே அமராவதிச் சிற்பங்களில் காணப்படும் மகளிருக்கும் மூக்கணியில்லை. அருகக் கடவுள் எழுந்தருளியுள்ள இந்தச் சமணக் குகைக் கோயிலில் அரம்பையர் நாட்டியம் ஆடுவது போன்ற ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன. பலநிறமாகக் காணப்படும். அருகப் பெருமானை வணங்குவதற்குச் செல்வோர் இதில் இறங்கிச் செல்ல வேண்டும். செல்லும்போது அருகப்பெருமான் திருவடியில் இடுவதற்காகத் தாமரை அல்லி முதலிய பூக்களைப் பறித்து கொண்டு போவார்கள். இவ்வாறு சமவசரணத்திலுள்ள காதிகாபூமி எனும் அகழியைப்பற்றிச் சமணசமய நூல்கள் கூறுகின்றன. சித்தன்னவாசலிலுள்ள இந்தச் சமணக் கோயிலில் மண்டபத்தின் மேல் விதானத்தில் ஓவியமாக எழுதப்பட்ட இந்தத் தாமரைக் குளக்காட்சி காதிகாபூமியைக் குறிக்கின்றதென்பதில் ஐயமில்லை.

மேலும் குடைவரையின் மண்டபத்தையடுத்துள்ள உள்ளறையின் கூரையிலும் வண்ணம் பூசப்பட்டுள்ளது. அதில் சுவசுதிகாசூலம், சதுரம், தாமரை மலர் முதலிய குறிகள் கோலமாகத் தீட்டப்பெற்றுள்ளன.

எனவே அழியாமல் எஞ்சி நிற்கும் ஓவியங்கள் என்ற வகையிலே சித்தன்னவாசல் ஓவியங்கள் சிறப்புப் பெறுகின்றன. மேலும் இவ்வோவியங்கள் காலத்தால் தொன்மையானவையாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## உசாத்துணை நூல்கள்

1. பேராசிரியர்.புலவர் கோ.தங்கவேலு எம்.ஏ, **இந்தியக்கலை வரலாறு**, தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம்.1976
2. இராமசுவாமி மே.சு(தமிழாக்கம்), **இந்திய ஓவியம்** நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா புதுதில்லி.1974.
3. இராமசுவாமி மே.சு.(தமிழாக்கம்), **இந்திய ஓவியம்** யுனைட்டெட் பிரிண்டர்ஸ்.1972.
4. கலாநிதி காரை.சுந்தரம்பிள்ளை.செ. **இந்துநாகரிகத்திற்கலை** பாரதி பதிப்பகம்.1994.
5. வாழ்வியற் களஞ்சியம். தொகுதி ஆறு.

திருமதி தவச்செல்வி செல்வராஜா,
சிறப்புக்கலை இந்து நாகரிகம்,
இரண்டாம் வருடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# திருக்கோயில் விக்கிரக அமைப்புக்களும் பூசை வழிபாட்டு முறைகளும்

உலகெலாமாகி வேறுமாய் உடனுமாய் எங்கும் நிறைந்திருக்கும் இறைவனின் உருவத்தைப் பண்டைத் தமிழ் மக்கள் கல்லில் வடித்து முதன் முதல் மரத்தடியில் வைத்து வணங்கினர். இதனாலேயே பழைய தமிழ் நூல்கள் இறைவனை "ஆல் அமர் செல்வன்" எனக் குறிப்பிடுகின்றன. பின்னர் நாகரிகம் வளர வளர சிற்பக்கலையும் வளர வளர ஆகமம் பெருக பெருக மரத்தடிகள் மாளிகைகளாய், மண்டபங்களாய் கோபுரங்களாயின.

ஆதித் தமிழகத்துக் கோயில்கள் அழியத்தக்க மண், மரம், செங்கல், சுண்ணாம்பு இவற்றால் ஆனவை. பின்னர் மலையைக் குடைந்து கோவில் கட்டும் கலை பரவிற்று. விசித்திரதத்தன் என்ற பட்டப் பெயர் பெற்ற பல்லவ அரசன் மகேந்திரவர்மன் காலத்தில் என்றும் அழியாத நிலையில் இருக்கத்தக்க பெருங்கோயில், ஆலக் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், தூங்கானை மாடம் எனப் பல பெயர் பெற்றிருந்தன என்பது அப்பர், சுந்தரர், ஆளுடைய பிள்ளையார் ஆகிய மூவரினதும் திருப்பதிகங்களிலிருந்து அறியலாம். பண்டைய அரசர் இறைவனுக்கு எழுபது ஆலயங்கள் எழுப்புவித்தான் என்பதை,

"– – இருங்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்கு
எழில் மாடம் எழுபது செய்துலகம் ஆண்ட
திருக்குலத்து வளச் சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே'

என்று திருமங்கையாழ்வார் போற்றிப் பரவுகின்றார்.

பரம்பொருள் வீற்றிருக்கும் இன்றைய திருக்கோயில்கள் சக்தியை அதிகரித்துப் பக்தர்கள் பயனடைவதாகவும் நல்லெண்ணத்தை வளர்ப்பதற்காகவும் சிற்ப சாத்திர முறைப்படி அமைந்துள்ளன. ஆகம விதியின் படி அமையாத ஆலயங்கள் மடாலயங்கள் எனப்படும். ஆலயங்களின் அமைப்பு பற்றி பல அறிஞர்களும் அனுபூதிமான்களும் கூறி வைத்துள்ளனர். அவற்றின் அடிப்படையில் பெரியோர்கள் கூறிய குறிப்புக்களைக் கொண்டு சிலவற்றைப் பார்க்கலாம்.

"குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என் கொல் புகாததே"

என்கிறார் அப்பர் சுவாமிகள் தனது தேவாரத்தில் கோயில் வெறுங் கட்டிடமன்று அது தத்துவ அமைப்பு. இவ்வமைப்பில் நுட்பம் தெரியாது கும்பிட்டால் அது கல்லாக, மண்ணாக வேடிக்கையாகவே தோன்றும் ஒரு யோகி காலை நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் முறையாக அமைந்துள்ளது கோவில். யோகி. கோவில், யோகியின் காலைப் போன்றது முன் கோபுரம், மூலாதாரத்தை ஒத்தது கொடிக்கம்பம். தோப்புக்களை நிகர்த்தது பலிபீடம், சிரசு போன்றது கர்ப்பக்கிரகம், சிரசின் மத்தியை ஒத்தது மூலஸ்தானத்திலுள்ள தாமரைப்பூக் கண்ணாடியும் விளக்கும். அங்குள்ள தீப ஒளி இறைவனின் அருவுருவத்தை நினைவூட்டும், புறக் கோவில் அமைப்பு உடற் கோயிலின் பரிணாமம் என்பதற்கு

திருநாவுக்கரசரின் "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக " என்ற தேவாரமும் "உள்ளம் பெருங் கோவில் ஊனுடம் பாலயம்" என்ற திருமூலர் திருமந்திரமும் சான்றாகும்.

கோவில்களில் கோபுரம் கடவுளது விராட் சொரூபம், ஸ்தூபி இறைவனுடைய தூல ரூபம், உள்ளிருக்கும் திருமேனி சூக்குமலிங்கம், கோவில்களில் உள்ள முக்கிய மண்டபங்கள் கற்பக்கிருக மண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தான மண்டபம் அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்ற ஆறாகும். இவ்வாறு மண்டபமும் முறையே மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் குறிக்கின்றது என்பர். கோவில்களில் அமைந்துள்ள மூன்று வீதி தூலசூக்குமம் கரனதேகங்களையும், ஐந்து வீதி அண்ணமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற பஞ்ச கோசங்களையும் ஏழுவீதி - உடம்பிலுள்ள இரசம், இரத்தம், மாமிசம், மேதை, எலும்பு, மச்சை, சுக்கிலம் என்ற ஏழுதாதுக்களையும் குறிப்பதாகும். இவை எல்லாவற்றையும் குறிக்க கூடிய ஒரு வீதி அமைந்த கோவில்களுமுண்டு. இங்குள்ள கதவுகள் கோபம், ஆசை, அவா, அகங்காரம் என்பவைக்கு காரணமான அவித்தையை உணர்த்துகின்றன. சிவ சந்நிதானத்தில் மறைவாக இடப்படும் திரைச்சீலை மாயையைக் குறிக்கும். மூல மூர்த்தி, நந்தி, பலிபீடம் முறையே பதி, பசு, பாசத்தை குறிப்பவையாகும். கொடிக்கம்பம் மூலத்தான விம்பத்திற்கு நேராக நிறுத்தப்பட்டிருக்கும். கம்பத்தைப் போலச் சரீரம் நேராக இருந்து அசையாது தியானித்தால் பரமானந்த சொரூபியாகிய பரமசிவன் தரிசனமாகும் என்பதை அறிவிக்கின்றது. இக் கொடிக்கம்பம் இப்படியாக நமது திருக்கோவில்களின் அமைப்பு பல நுட்பமான உண்மைகளை சொல்லாமல் சொல்கின்றது.

உருவமற்ற கடவுளை உணர்வதற்கு உருவத்துணை வேண்டும். உருவம் உள்ளத்தில் பதிவது போல் அருவம் பதிவதில்லை. ஆதலின் மக்களுக்குச் சமயம் பற்றையும் அறிவையும் உண்டாக்க கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் அழகிய விக்கிரகங்களைப் பல வடிவில் அமைத்து கோவில்களில் வைத்து வணங்கினர். விக்கிரகங்கள் மூலவர் விக்கிரகம், உற்சவர் விக்கிரகம் என இருவகைப்படும். மூலவர் விக்கிரகங்கள் மரம் சுதை, கல், படிகம், மண் முதலிய பலவகைப் பொருட்களாலும் செய்யப்பட்டிருக்கின்றன. உற்சவர் விக்கிரகம் உலோகத்தால் செய்யப்பட்டிருக்கும் பிங் கலந்தைப் பாடல் ஒன்று விக்கிரகம் செய்யும் பொருட்களை வகுத்துச் சொல்கிறது அது பின்வருமாறு,

"கல்லும் உலோகமும் வெங்கல்லும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சர்க்கரையும் மெழுகும் என்ற இவை
பத்தும் சிற்பத் தொழிலுக்கு உறுப்பாகும்"

இவற்றுள் மண்ணும் மரமுமே நெடுங்காலமாக விக்கிரக அமைப்புக்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. மண்ணால் அமையும் விக்கிரகம் மிருண்மயி என்றும் மரத்தால் அமையும் விக்கிரகம் தாருகடிகம் என்றும் விக்கிரகம் சைலஜம் என்றும் அழைக்கப்பட்டது. ஆகமங்களும் மானசாரம் போன்ற சிற்ப நூல்களும் கல்லால் திருவுருவம் அமைக்கும் முறையினை விரித்து கூறுகின்றன.

இராமேஸ்வரத்து இலிங்கமாகிய இராமநாதசுவாமி மணலால் ஆனதென்றும் பழனிமலை மீதுள்ள தண்டாயுதபாணி நவபாஷணத்தால் ஆனதென்றும் அறிய முடிகிறது. உற்சவ விக்கிரகங்கள் செம்பு, பித்தளை, வெள்ளி, வெள்ளீயம், பொன்

ஆகியவை கலந்த பஞ்சலோகங்களால் செய்யப்பட்டன. விக்கிரகங்கள் பலவாக இருந்தாலும் அவை ஒவ்வொன்றிலும் தத்துவ அறிகுறிகள் அமைந்துள்ளன. விக்கிரகங்களில் உயர்வு தாழ்வு கருதக் கூடாது. ஒருவித மண்ணில் பலவகையான பாண்டங்கள் வனையப்பட்டாலும் அவைகள் உடைந்ததும் ஒரே மண்ணாவது போலவும் பொன்னால் பல நகைகள் செய்தாலும் அவை உருக்கப்பட்டதும் பழைய படி பொன்னாகுவது போலவும்,

"மறி கடலும் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்தொழிய தாரகையும் திசைகளெட்டும்
ஓரிரண்டும் பிறவுமாய பெருந்தகை"

யாம் இறைவனை அவரவர் மனநிலைக்கு ஏற்ப பல திற விக்கிரகங்களில் ஆராதித்து வருகின்றனர். அநுபூதிமான்கள் அர்ச்சவதாரமாம் இவ் விக்கிரகங்களுக்கு தரும் தத்துவங்கள் சிலவற்றை இங்கு காண்கின்றோம்.

## நடராஜர் விக்கிரகம்

சிவபிரானுக்கு சந்திரசேகரர், தட்சணாமூர்த்தி, அர்த்தநாரீஸ்வரர், உமாமகேஸ்வரர், பிட்சாடனார், சோமஸ்கந்தர், கஜசம்காரர், ரிஷபாரூடர், கங்காதரர், திரிபுரந்தகர் போன்ற மூர்த்தங்கள் உள. அவற்றுள் ஒன்று நடராஜர் விக்கிரகம். ஐந்தொழிலும் நிகழ அப்பன் கூத்தாடுகின்றான். அவரது திருநடனங்களில் பிரதானமானவைகள் கால் மாறியாடு நடனம், பாண்டுரங்கம், கொடுகட்டி, சந்தியாநிருத்தம், சண்ட தாண்டவம், வீரட்டாகாசம், கௌரிதாண்டவம், ஆனந்த நடனம், அனவரத நடனம், பிரதம மகாசங்கார நிருத்தம் என்பவைகளாம். எம் பெருமானின் இரண்டு முக்கிய நடனக் கோலத்தில் ஒன்று நடராஜனின் தூக்கிய கால் வான் நோக்கி நிற்கும் திருவாலங்காட்டு நெடுங்கோலம் மற்றையது எடுத்த பொற்பாதமாக இருக்கும் தில்லைத் திருக்கோலம் முன்னையது இரத்தப் புரட்சிக்கும் பின்னையது பஞ்சப்பாதி தொழில்களின் நிகழ்ச்சிக்கும் அறிகுறியென்பர்.

## விநாயக விக்கிரகம்

விநாயக விக்கிரகம் நினைக்க எளிது மறக்க முடியாதது. இவரது பேரருளைக் குறிக்க நீண்டதும்பிக்கை, எமது குறைகளை நன்றாகக் கேட்க பெரும் காதுகள், சர்வவியாபக சக்தியின் நினைவுக் குறி பெரு வயிறு, உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாட்டிற்கு அப்பாற்பட்டது. பரம்பொருள் என்ற உண்மையையும் விநாயக விக்கிரகம் உணர்த்துகிறது. விநாயக விக்கிரகங்கள் வலம்புரி விநாயகர், இடம்புரி விநாயகர், நர்த்தன விநாயகர் எனப் பல வகையில் அமைந்துள்ளன. நன் மக்களின் நோக்கும் ஞானிகளின் நோக்கும் குருமார்களின் நோக்கும் இவ் விக்கிரகங்களுக்கு ஆற்றொணா ஆற்றல் வாய்ந்த சக்தியை கொடுத்துள்ளன. சமய குரவர் நால்வராலும் பன்னிரண்டு ஆழ்வார்களாலும் வேறும் பலராலும் போற்றி வளர்க்கப்பட்ட தெய்வீக சக்தி வாய்ந்த விக்கிரக வழிபாடு எமது சமயத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

உலகெலாமுணர்ந்து ஓதுதற் கரியவன் ஆன இறைவன் விரும்புவது சிவாகமத்தினால் செய்யப்படும் பூசை என்பதை உணர்ந்து காஞ்சிபுரத்தில் உமாதேவியார் சிவபெருமானைப் பூசித்ததை

"என்னில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது
பூசனையென உரைத்தருள் அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயின் பெருந்தவக் கொழுந்து"

என்று பெரிய புராணத்தில் போற்றுகிறார் சேக்கிழார். அருச்சுனன் சிவபூசை செய்து பாசுபதாஸ்திரம் பெற்றான். முருகப்பெருமான் சிவபூசை செய்த இடம் திருச்செந்தூர் விநாயகப் பெருமான் பூசித்த தலம் திருச்செங்கட்டாங்குடி. பிரமன் பூசித்த இடம் சீர்காழி. திருமாலின் அவதாரமான இராமச்சந்திரமூர்த்தி இராமேஸ்வரத்தில் சிவனைப் பூசித்ததாகவும் அறிகிறோம். இவர்களையன்றி மேலும்

**"இய்க்கர் தின்னார் யமனொடுவருணர்**
**இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்**
**மயக்க மில்புரி வானர நாகம்**
**வசுக்கள் வானவர் தானவரென – --------"**

எண்ணற்றோர் இறைவனை அருச்சித்து அருள் பெற்றதாக சுந்தரமூர்த்தி சுவாமிகள் தனது தேவாரத்தில் குறிப்பிடு கிறார்.

கோவில்களில் நடைபெறும் பூசைகள் நித்யம், நைமித்யம், காமியம் என மூன்று வகைப்படும். கோவில்களில் தினந்தோறும் நடைபெற்றுவரும் பூசை நித்ய பூசை எனப்படும். வெள்ளிக்கிழமை, பிரதோஷதினம், கிருத்திகை, சதுர்த்தி மற்றும் ஆடிப்பூரம், ஆவணி மூலம், நவராத்திரி, விஜயதசமி போன்ற விஷேட தினங்களில் நடைபெறும் பூசை நைமித்தியபூசை எனப்படும். குறிக்கோள் ஒன்றினை மனதில் கொண்டு அது நிறைவேறியதும் தாம் எண்ணிய அர்ச்சனை அபிடேகம் திருவிழா முதலியவற்றை கோவில்களில் செய்விப்பதை காமியப்பூசை என்பர்.

பூசைகள் மூன்று வகையாக அமைந்தாலும் அபிடேகம், அலங்காரம், நைமித்தியம், தீபாராதனை, அர்ச்சனை தோத்திரம்கூறி வாழ்த்துதல் முதலியன அவற்றின்போது அம்சங்களாகும். பூசையில் முக்கிய நிகழ்ச்சி தீபாராதனை. எமது அறியாமையை ஒழித்து அறிவைப் பெருக்குவதற்காக தூபம், தீபம், அலங்காரதீபம், நாகதீபம், விருஷிகதீபம், சூலதீபம், ஆமைத்தீபம், மயூரதீபம், கும்பதீபம், நட்சத்திரதீபம், மேருதீபம் போன்ற 16தீபங்கள் தீபாராதனையில் இடம் பெறும். இத் தீபங்களை காட்டும் முறைமையும் இவற்றால் அடையும் பெறுபேறுகளும் ஆகமத்தில் கூறப்பட்டுள்ளன. கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம் போன்று உபசாரப் பொருட்களையும் தீபங்களைப்போல் காட்டிய பின்னர் கர்ப்பூர ஆரத்தி நடைபெறும். பூசை முடிவில் ஆச்சாரியார் இறைவனுடைய மூல மந்திரத்தை செபம் செய்து இறைவனிடம் சமர்ப்பணம் செய்தல் வேண்டும். இவ்வாறு சமர்ப்பணம் செய்யாத பூசையால் ஒருவித பயனுமில்லை. கோவில்களில் செய்யப்படும் பூசைகளில் அபிடேகம் படைத்தலையும் நைவேத்தியம் காத்தலையும் பலிபோடுதல் அழித்தலையும் ஹோமம் செய்தல் அருளலையும் ஆகிய ஐந்தொழிலையும் குறிப்பதாகும்.

உயிர்களைப் பிணித்திருக்கும் ஆணவமலம் மாயாமலம் என்ற இரு மாசுக்களினின்றும் விடுதலை பெற வழிபாடு ஒன்றே சிறந்த மருந்தாகும். வழிபாடாற்றுவோர் யாதாயினும் ஒரு பொருளால் இறைவனை வழிபடுதல் மரபு. சாக்கியார் கல்லாலும் நாவரசர் சொல்லாலும், சம்பந்தர் தமிழாலும் சுந்தரர் பாட்டாலும், பாணபத்திரர் இசையாலும் மாணிக்கவாசகர் வாசகத்தாலும், குசேலர் அவலாலும், கண்ணப்பர் ஊனாலும், வந்தி பிட்டாலும் வழிபாடாற்றி பெறுபேறு பெற்றார்கள். தமிழ் நாட்டில் தோன்றி செந்தமிழை வளர்த்த நால்வரும் தமது பாடல்களில் வழிபாட்டின் சிறப்புக்களை வற்புறுத்தியுள்ளனர்.

திருக்கோவில் வழிபாடு மனதை ஒரு வழிப்படுத்துவதற்கும் கீழ்ப்படிவு நீதிவழி நிற்றல், தன்னல மறுப்பு, பணிவு, இரக்கம்

ஆகிய சிறந்த பண்பாடுகளையும் உண்டாக்குவதோடு ஈற்றில் மோட்ச சாம்ராட்சியத்தையும் அடைவதற்கு வழி பண்ணுகிறது. திருக்கோவிலுக்குச் செல்வோர் அகமும் புறமும் தூய்மையுடையவராய்ச் சென்று கோவிலின் உள்ளிருக்கும் தெய்வத்தின் பருவவடிவமான கோபுரத்தை முதலில் வணங்கல் வேண்டும். உட்சென்றதும் திருச்சுற்றை வலம் வந்து கொடி மரம், பலிபீடம் முதலியவற்றை முறையே வணங்கல் வேண்டும். பலிபீடத்திற்கு இப்பால் நின்று வழிபடும்போது ஆணவ மலத்தின் காரியமாகிய அகந்தை, மமதை ஆசை, கோபம், மயக்கம், அஞ்ஞானம் இவைகளைப் பலியாக இடுகிறேன் ஏற்று இறைவனை வழிபடுவதற்கு ஞான ஒளியைத் தந்தருளுவாயாக எனச் சிந்தித்தல் வேண்டும். பின்னர் கருவறையை அணுகி மூலமூர்த்தியை நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்குதல் வேண்டும். கையுறையாக கொண்டு வந்த மலர்கள் முதலானவற்றை அர்ச்சகரிடம் அளித்த பின் இறைவனை நாம் மனதினால் நினைந்து கும்பிடுவதன் கருத்து யாது? கும்பிடும்போது இரண்டு கைகளும் ஒன்று சேர்கின்றன. இயற்கையாக நம்முடைய கைகள் விரிந்து பல பல செய்கைகளைச் செய்கின்றன. இறைவனுடைய சந்நிதானத்தில் அந்தச் செய்கைகளையெல்லாம் ஒழிந்து ஒன்று சேர்ந்து குவிகின்றன. கைகளை குவிப்பதனால் ஆண்டவனே இனி என்னுடைய செயல் ஒன்றுமில்லை என்பதை உணர்ந்தேன். எல்லாம் உன் அருட்செயலே என்று உணர்த்தும் அறிகுறியே கும்பிடு எனலாம்.

மூலமூர்த்தி வழிபாட்டின் பின்னர் அம்பாள் சந்நிதி மற்றும் பரிவார மூர்த்திகளின் சந்நிதிகளையும் முறைப்படி வணங்கி ஒன்பது கோள்களையும் வலம் வந்து அவற்றோடு தொடர்புடைய பிற தெய்வக் கருவறைகளையும் கண்டு வணங்குதல் முறையாகும். கடைசியில் சண்டேசுரர் சந்நிதியை அடைந்து சிவயோகத்தில் இருக்கும் அவரை விளிக்க செய்வதற்காக மும்முறை கைதட்டி தரிசனத்தை அவரிடம் ஒப்பித்து அதன் பலனைப் பெற்றுத்தர வேண்டுமென வேண்டிக்கொண்டு மீண்டும் கொடிமரத்தின் முன் நின்று மூலமூர்த்தியை அட்டாங்கமாகவோ, பஞ்சாங்கமாகவோ நிலந்தோய விழுந்து வணங்கி எழுந்து மண்டபத்தில் சிறு பொழுது அமர்ந்த திருவைந்தெழுத்தைச் செபம் செய்து எழுந்து புறப்படுதல் கோயில் வழிபாட்டு முறையாகும் என்பர் சான்றோர்.

எனவே நாம் கோவில்களை அவமதிக்காது

"ஆக்கையாற் பயனென் – னரன்
கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டில் போற்றியென்னாதவிவ்
வாக்கையாற் பயனென்"

என்ற அப்பர் திருவாக்கை நினைவில் நிறுத்தி எமது சமயத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது எனவாகிய தெய்வீக சக்தி வாய்ந்த பல நல்லெண்ணம் பெருகும். அதனால் நல்ல குடும்பம் அமையும் ஊரும் உலகமும் சிறப்புற்று ஓங்கும், அமைதி நிலவும். கலைகளும் வளம் பெற்று ஆண்டவன் அருளாட்சி புரிவதைக் காணலாம்.

## உசாத்துணை நூல்கள்

01. **சைவத் திருக்கோயிற் கிரியை நெறி - 1992** பேராசிரியர் :– கைலாசநாதக்குருக்கள்
02. **அகில இலங்கை இந்து மாமன்றம்** தலைமைக் கட்டட பூர்த்தி சிறப்புமலர் கட்டுரை.
03. **சைவ சமய ஒழுக்கங்கள்** ச. ஏகாம்பரநாதன்

வினையாற்றக் கடமைப்பட்டுள்ளாய் வினைப் பயனில் ஒரு பொழுதும் உரிமை பாராட்டாதே
வினைப் பயன் விளைவிப்பவன் ஆய்விடாதே வெறுமனே இருப்பதில் விருப்புக் கொள்ளாதே.

*– பகவத் கீதை –*

மு.தவேந்திரன்
3ம் வருடம் (சிறப்பு)
இந்து நாகரிகத்துறை.

# திருமூலர் காலமும் வரலாறும்

சைவம், சிவம் சம்பந்தமானது. சிவம் என்பது அன்பு, இன்பம், ஆனந்தம் என்னும் பொருளைக் குறிக்கின்றது. "அன்பே சிவம்" என கூறப்படுகின்றது. இத்தகைய தொன்மை நெறியாகிய சைவத்தினை விளக்க காலத்திற்குக் காலம் பல தோத்திர சாத்திர நூல்கள் தோற்றம் பெற்றன. பல ஞானிகள், சித்தர்கள், அருளாளர்கள் தோன்றி அருளினர். இந்த வகையில் சுந்தரநாதமுனிவர் என்ற இயற்பெயர் கொண்ட திருமூலநாயனார் தோன்றினார். நந்திமரபையும், நாதமரபையும், சைவ மரபையும், சிவ மரபையும் விளக்கும் பெருமானாக திருமூலர் விளங்குகின்றார்.

திருமூலர் நந்தியம் பெருமான் திருவருள் பெற்ற நான்கு மறைகளை அறிந்த யோகியருள் ஒருவர். இவர் அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியடமா, ஈசத்துவம், வசித்துவம் ஆகிய எண்வகைச் சித்திகளையும் கைவரப் பெற்றவர். இவர் பொதிகை மலையில் உள்ள அகத்திய முனிவருடன் சின்னாள் தங்குவதற்குக் கயிலையிலிருந்து புறப்பட்டார். இவ்வாறு புறப்பட்ட திருமூலர் வரும் வழியினிலே திருக்கேதாரம் - நேபாளம் - காசி - நீசைவம் - திருக்காளத்தி - திருவாலங்காடு - காஞ்சி - திருவதிகை வீரட்டானம் என்ற தலங்களை தரிசித்த வண்ணம் சிதம்பரம் வந்து சேர்ந்தார். பின் திருவாவடு துறையிலே தங்கிய வேளையினிலே காவிரிக் கரையிலே பசுக் கூட்டங்கள் புலம்புவதனைக் கண்ணுற்றார். அவ் ஆநிரைகளை மேய்க்கும் இடையன் வாழ்நாள் முடிந்த காரணத்தால் அவன் இறந்து இருப்பதால் அவனை சுற்றிக்கொண்டு பசுக்கள் அழுதன. இதைக்கண்ட திருமூலர் தமது உடம்பை ஓர் இடத்தில் பத்திரப்படுத்தி இறந்துவிட்ட மூலன் உடலில் தம் உயிரைச் செலுத்தினார். இதுவே கூடுவிட்டு கூடு பாய்தல் எனப்படும். இவ்வாறு செய்வது ஒரு சித்து இங்ஙனம் தம் உயிர் செலுத்தப்பட்டதும் மூலன் என்னும் இடையன் உயிருடன் எழுந்தான். உடம்பு மூலன் உடம்பு. உயிர் யோகியர் உயிர் இது கண்ட பசுக்கூட்டம் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை அவை நன்றாக மேய்ந்த பின் தம் கன்றை நினைத்து சாத்தனூருக்குச் செல்லும் வழியில் நடக்கையில் திருமூலரும் அவற்றின் பின் போனார். மூலனைக்கண்ட அவரது மனைவியார் அழைக்க அதைக் காதில் வாங்காதவராக யோகி திருமூலர் தமது உடலை நோக்கி சென்றார். அது கண்ட மூலனின் மனைவி வியப்படைந்தார். மூலர் ஊரில் உள்ள பொது மடத்தை அடைந்தார். பின் தனது உடலை தேடுகையில் அது மறைந்தது கண்டார். தமது மெய்ஞ்ஞான உணர்ச்சியினால் இறைவர் தாம் அருளிச் செய்த ஆகம சாஸ்திர நுண்பொருளைத் தம்மால் நிலவுலகில் தமிழ் மொழியின் மூலம் பரவச் செய்யத் தம் உடலை மறைத்தார் போலும் என்று உணர்ந்தார். பின் மூலன் உடல் தாங்கியவாறு திருவாவடுதுறை ஆலய மேற்குத் திசையில் அரசமரத்தடியிற் இறைவனைத் தம் உள்ளக்கமலத்தில் கொண்டு சிவயோக நிலையில் அமர்ந்து இருந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் "நம்பிரான் திருமூலர் அடியார்க்கும் அடியேன்" என்று பாடி இவரை "நம்பிரான்" என்று உரிமை கொண்டாடினார். நம்பியாண்டார் நம்பிகள்" முழுத் தமிழின்படி மூன்று வேதத்தின் சொற்படியே பரவிட்டு உன் உச்சி அடிமன்ன வைத்தபிரான் மூலன் ஆகின்ற அங்கணனே" என்று மொழிந்து அவரைப்போற்ற தாயுமான சுவாமிகள் "சக்கரவர்த்தி தவராச யோகி எனும் மிக்க திருமூலர் அருள் மேவுநாள் எந்நாளோ என்று பாடி அவரை போற்றுகிறார். சேக்கிழார் பெருமான் திருமூலரை 'நந்தி அருள் பெற்ற நான்மறை யோகிகள்" என்றும் "அணிமாதிவரும் சித்தி பெற்றுடையார்" என்றும் "பொங்கு தவத்தோர்" என்றும் "என்நிறைந்த உணர்வுடையோர்" என்றும் "நலம் சிறந்த ஞானயோகக் கிரியாசரியை எல்லாம் மலர்ந்த மொழித் திருமூலர் என்றும் போற்றும் சிறப்பிற்குரியவராகத் திருமூலர் பெருமான் விளங்குகின்றார்.

திருமூலர் இயற்றிய நூல் திருமந்திரம் என்பதாகும். இது மூவாயிரம் பாடல் கொண்டதென்பதனை "முத்தி முடிவது மூவாயிரத்தில்" "மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்" என்று திருமூலர் கூறுவது கொண்டு அறிய முடிகின்றது. இதை திருமந்திரமும், பெரியபுராணமும் கூறினும் இப்போது உள்ளவையாக பாயிரம் உட்பட 3048 பாடல்கள் காணப்படுகிறது. இத் திருமந்திரம் என்பது ஆகம கருத்தை ஒன்பது தந்திரங்களில் கூறுகின்றது.

திருமூலர் காலம் பற்றிய சரியான காலக் கணிப்பு இன்னும் வரையறுக்கப் படவில்லை. திருமூலர் வரலாற்றை அறிந்து கொள்வதற்குத் துணை செய்வன சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகை. நம்பியாண்டார் செய்த திருத்தொண்டர் திருவந்தாதி, சேக்கிழார் செய்த பெரிய புராணம், உமாபதி சிவாச்சாரியார் பாடிய திருத்தொண்டர் புராண சாரம் என்பனவாகும். சுந்தரர் வாக்கால் திருமூலர் என்னும் பெயர் மட்டும் அறிய வருகிறது. சேக்கிழார் புராணம் இவரது வரலாற்றை கூறுகின்றது.

மருத்துவத் துறையில் திருமூலர் 18 சித்தர்களில் ஒருவராக வைத்தெண்ணப் படுகின்றார். இவர் செய்த திருமந்திரத்தில் மருத்துவ பகுதியும், கருத்தோற்றம், கரு வளர்ச்சி அமைப்பு, வாத, பித்த, சிலேத்துமங் களை பற்றிக்கூறுகின்றார். சித்தர் பரம்பரைக்கு மூத்தவர் என்ற வகையில் திருமூலர் என பெயர் பெற்றார் எனவும் இவரிலிருந்தே சித்தர் பரம்பரை உருவான தாகவும் கொள்ளப்படுகின்றது.

திருமூலர் திருக்கைலாயத்திலிருந்து புறப்பட்டார் என்பர் சேக்கிழார். அப்படி அவர் கயிலையிலிருந்து புறப்பட்டதாக திருமூலர் வாக்கில் இல்லை. "வளப்பில் கயிலை வழியில் வந்தேனே" எனும் அடி அவர் திருக்கைலாய பரம்பரையின் வழிவந்தவர் என்னும் பொருள் தரும் அடியாகும். திருமூலர் புறப்பட்டு இடையே பல தலங்களை கண்டு வணங்கினார் என்பர் சேக்கிழார். ஆனால் திருமூலர் சிதம்பரத்தை வணங்கியதாகக் கூறுகின்றாரே ஒழிய ஏனைய தலங்களைக் குறிப்பிடவில்லை. "மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர் என்றவர் என்றெரு எண்மருமாமே" என்றும் கூறுவர். இதில் எண்மர் எனப்படுவோர் சனகர், சனந்தர், சனாதரர், சனற்குமாரர், பதஞ்சலி, வியாக்ரபாதர், திருமூலர் என்போர் ஆவர். மேலும் திருமூலர் 'நந்தி அருளாளே மூலனை நாடிப் பின் நந்தி அருளாளே சிவன் ஆயினேன்' என்று கூறுவதில் மூலன் உடலில் புக நந்தி அருள் காரணம் என அவரே கூறுகின்றார். மேலும் திருமூலர் திருவாவடுதுறையிலிருந்து கயிலாயம் சென்றார் என்ற குறிப்பை சேக்கிழார் "சென்னிமதி அணிந்தார் தம் திருவருளாள் திருக்கயிலை தன்னில் அணைந்தொரு காலும் பிரியாமைத்தாளடைந்தார் என்று கூறுகின்றார்.

திருமூலரது மாணாக்கர்கள் யார் என்னும் விளக்கம் பெரிய புராணத்தில் இல்லை. ஆனால் திருமூலர் கூறும் குருபரம்பரை என்றும் இடத்து அவரது

மாணவர்கள் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், சத்துரு, காலாங்கி, கஞ்சமலையன் என்பது தெரியவருகின்றது. இவ்வாறு திருமூலர் காலவாழ்க்கைக் குறிப்புக்கள் பற்றிய கருத்துக்கள் அமைந்து செல்லுகின்றன.

திருமூலர் காலம் சரியான வரையறை செய்யாத நிலையில் அக, புற சான்றுகள் கொண்டு அறிஞர் பலவாறு கருத்துக் கூறுவர். திருஞானசம்பந்தர் சிறுதொண்டரைச் சந்தித்ததாகப் பெரிய -புராணம் கூறுகிறது. சிறுதொண்டரின் இயற்பெயர் "பரஞ்சோதியார்" என்பது. அப்பெயர் பெற்றிருந்த வேளையில் முதலாம் நரசிம்மவர்ம பல்லவனது படைத் தலைவராக இருந்தார் என்றும் அப்போது அரசாண்ட இரண்டாம் புலிகேசியுடன் போரிட்டு வெற்றி பெற்றார் என்றும் சேக்கிழார் கூறுவர். முதலாம் புலிகேசி பரஞ்சோதியாருடன் எதிர்த்ததைப் புலிகேசியின் வாதாபி நகரத்துக் கல்வெட்டும் சான்றாக நின்று மொழிந்து கொண்டிருக்கிறது. அப்புலிகேசி யின் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பது வரலாற்றாசிரியர்களின் முடிந்த முடிவு நரசிம்மவர்மபல்லவன் மகேந்திரவர்ம பல்லவன் மகன். அவன் திருநாவுக்கரசர் காலத்தவன் அதாவது கி.பி.ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி. அவன் காலத்தவரான திருநாவுக்கரசரை திருஞானசம்பந்தர் சந்தித்தார் என்று பெரிய புராணம் பேசுகிறது. இக் காரணங்களால் சம்பந்தர் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு என்பது உறுதியாகிறது. திருஞானசம்பந்தர் திருவாவடுதுறைக்குச் சுவாமி வழிபாட்டிற்கு வந்திருந்தபோது திருக்கோயிலின் பலிபீடத்தின் அருகு வணங்கி வரும்போது "இங்குத் தமிழ் மணம் கமழ்கின்றது தோண்டிப்பாருங்கள்" என்று கட்டளையிட அவ்வாறு தோண்டி பார்க்கும்போது திருமூலரின் திருமந்திரப் பாடல்கள் கண்டெடுக்கப்பட்டனவாக ஒரு செவி மரபு வரலாறு கேட்கப்படுகிறது. இதனை நோக்குமிடத்து கி.பி. ஏழாம் நூற்றாண்டி னரான திருஞானசம்பந்தருக்கு முற்பட்டவர் திருமூலர் என கொள்ளப்படுகின்றது.

தமிழ் மூவாயிரமாகிய திருமந்திரத் தில் தமிழ்மொழிக்கு 16உயிர் எழுத்துக் களும், 35 மெய்களுமாக 51 எழுத்துக்கள் என்று திருமூலர் கூறுகின்றார்.

"ஓதும் எழுத்தோடு உயிர்கால மூவைந்து
ஆதி எழுத்தவை ஐம்பதோடொன்றென்பர்"

"விந்துவிலும் சுழிநாதம் எழுந்திட
பந்தந்த தலைவி பதினாறு கலையதாக்
கந்தர வகரம் காலுடம் பாயினாள்
அந்தமும் இன்றியே ஐம்பத்தொன்றாய்"

என்ற பாடல் மூலம் இதனை அறியலாம். ஆகவே சுந்தரநாதராகிய திருமூலர் தமிழ்மொழிக்கு 51 எழுத்துக்கள் உள்ள காலத்தில் இருந்து படித்தவராக வேண்டும். அது இடைச்சங்க ஆரம்ப காலமாகக் கொள்ளப்படுகிறது. எனவே இடைச்சங்ககாலம் கி.மு.6705 இல் வெண்டேர்ச்செழியனால் ஆரம்பிக்கப்பட்டு வட்டெழுத்துக்களால் ஆன நூல்களைக் கொண்டே கி.மு.6000 வரையில் இருந்து 805 ஆண்டுகள் வரை நடைபெற்றதாகக் கொள்வர். ஆகவெ திருமூலர் காலம் கி.மு. 6000 இற்கு முந்திய வட்டெழுத்துக் காலமே என்பர் ஒருசாரார்.

பூசை முறைகள் முடங்காதபடி பார்க்கவேண்டியது அரசருடைய கடமையே இல்லாவிட்டால் நாட்டில் பஞ்சம் வந்து விடும். அரசாங்கம் அழிந்து விடும் என்று எச்சரிக்கை செய்கிறார் திருமூலர். இதில் இருந்து கோயில் முடங்குவதற்குரிய அரசாட்சி அன்று அதாவது திருமூலர் காலத்தில் இருந்திருக்க வேண்டும். இந்து சமயம் என்று சொல்லப்படும் சமயத்தில் கட்டுப்பாடில்லாது குழம்பி இருந்திருக்கிறது

என்றும் தெரிகிறது. பிராமணர்கள் பற்றிச் சொல்லும் போது நிரம்பிய ஒழுக்கம் உடையவர்களாக இல்லை என்று வருந்துகிறதாகச் சொல்லுகிறார் எனவே சமயம் நன்றாக காக்கப்படாத நிலை தெரிகின்றது. இத்தகைய சூழ்நிலை பல்லவர் காலம் வருவதற்கு முன்னாலே பிறமதத்தவரின் ஆட்சிவரத் தொடங்கிய காலத்தில் இருந்தே அப்பொழுது இந்நூல் செய்திருக்கலாம் என ஊகிக்க இடம் இருக்கிறது. எனவே இதனைக் களப்பிரர்காலமாகவும் சிலர் ஏற்கின்றனர்.

வேதாகமங்கள் மந்திரமெனவும் தந்திரம் எனவும் பெயர் பெறும். அந்த இரண்டு நூல சூட்சுமமாக ஒரே பொருளை உணர்த்துவன. அவைகளின் சாரமே திருமந்திரம் ஆகும். அவற்றுள் மந்திரம் வேதமும் தந்திர சிவாகமுமாம். இவற்றைப் புலப்படுத்தலே இப்பெருநூல் திருமந்திரம் எனவும் இவற்றின் உட்பகுதி தந்திரம் எனவும் பெயர் பெறும். ஆகமங்களை விரிவாகக் கூறுவதனால் ஆகமங்கள் தோற்றம் பெற்ற காலத்திற்குப் பின்னரே திருமந்திரமும் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர். திருமூலர் தமது திருமந்திரத்தினில் ஒன்பது ஆகமங்களின் பெயரினைக் குறிப்பிடுகிறார்.

"பெற்ற நல் காரணம் காமிகம்
உற்ற நல் வீரம் உயர் சித்தம்
மற்ற அவ் வியாமளம் ஆகும் காலோத்தரத்து
உற்ற நல் சுப்பிரம் சொல்லு மகுடமே"

என்ற பாடலின் ஊடாக திருமூலர் குறிப்பிடும் ஆகமங்களாவன காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் ஆகும்.

மணிவாசகர் காலம் கி.பி.4ம் நூற்றாண்டு எனக் கொண்டால் இவர் கண்ணப்பர், சண்டேசுரர் ஆகிய இருவரைக் குறிப்பிடுகிறார். இவர்களுள் திருமூலர் சண்டேசுரரை மட்டும் குறிப்பிட்டுக் கண்ணப்பரைக் குறிப்பிடாததை உற்று நோக்கும்போது கண்ணப்பருக்கு முற்பட்டவர் திருமூலர் என்பது பெறப்படுகிறது.அத்தோடு திருவாதவூரருக்க முற்பட்டவர் திருமூலர் என்பதும் பெறப்படுகின்றது. திருமூலர் சண்டேசுரரைக் குறிப்பிட்ட திருமந்திரப்பாடல் வருமாறு

"உறுவ தறிதண்டி ஒண்மணல் கூட்டி
அறுவகை ஆனைந்தும் ஆட்டத்தன்தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழுவாமல் வெட்டி மாலை பெற்றாரே"

திருமூலர் கூறும் யோகம், சக்கரம் என்பன பற்றி சைவ சமயம் பற்றி பாடியவர்கள் பாடவில்லை என்கின்றனர். தேவார முதலிகள் காலத்தில் வழக்கில் அதிகம் இல்லாத ஆகமங்கட்கு இவர் தரும் இடம் மிக அதிகமானதாகும். சம்பந்தரும் நாவுக்கரசரும் தில்லை என்றே கூறவும். திருமூலர் சிதம்பரம் என்ற சொல்லால் கூறுவதனால் இவர் தேவார முதலிகளுக்குப் பிற்பட்டவராக கொள்ள இடமுண்டு என்பர் ஒரு சாரார்.

அடுத்து திருமூலர் காலம் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல காலப் பகுதிகளைக் கூறியுள்ளனர். அ.சிதம்பரனார் கி.மு. 6ம் நூற்றாண்டு என்றும் உமாஸ்கரானந்தா சரஸ்வதி ஷி ஓம் சத் என்பவர் திருமூலர் கால ஆய்வில் கி.மு.12ம் நூற்றாண்டுக்குரிய தென்கிறார். சுரேந்திரநாத் டாப்ஸ் குப்தா தனது இந்திய மெய்யியல் வரலாறு என்ற நூலில் கி.மு.1ம் நூற்றாண்டுக்கு உரியதாகக் காட்டுகின்றார். சீ.வி.நாராயணஐயர் என்பார் சைவசித்தாந்த மூலவரலாறு என்ற நூலில் கி.பி.4-6ம் நூற்றாண்டு கட்சி இடைப்பட்ட காலப்பகுதி என்கிறார். இராச மாணிக்கனார் பல்லவர் கால ஆரம்பகாலப் பகுதியாகச் செல்கிறார். இது 6-9 நூற்றாண்டு வரையான காலப்பகுதியாக எடுத்துரைக்கிறார்.

மன்று தொழுத பதஞ்சலி தம்மோடு நந்தியருள பெற்றவர் என்று திருமூலர் கூறுகிறார். மகாபாஷ்யம் இயற்றிய பதஞ்சலி வேறு யோக சூத்திரம் இயற்றிய பதஞ்சலி வேறு என்பது கீத் என்பாரது கருத்து. கீத் மகாபாஷ்யம் செய்த பதஞ்சலி கி.மு.7ம் நுற்றாண்டினராகிய மாகன் என்ற கவிக்கு முந்தியவர் என்கிறார். கி.மு.150 இல் இருந்த பதஞ்சலிதான் திருமூலர் குறிக்கும் பதஞ்சலி எனக் கொண்டாலும் திருமூலர் காலம் கி.பி.150 ற்கு முற்பட்டது எனக் கொள்ள முடியாது என்கிறார்.

ஆறு சமயங்கள் திருமந்திரத்தினில் கூறப்பட்டதை வைத்து இதனால் இவர் ஆறு சமயப் பகுப்பு ஏற்பட்ட பிறகு இருந்தவராதல் வேண்டும் எனவும் கொள்ள இடமுண்டு. மேலும் "சதாசிவன் தத்துவம் முத்தமிழ் வேதம்" என்றும் "தமிழ் சாத்திரம் பொங்கிமிகாமையும்" என்று கூறுவதனூடாக முத்தமிழ் வேதம் தேவாரமாகில் திருமூலர் தேவார காலத்திற்கு பிற்பட்டவர் எனக்கொள்ள இடமுண்டு.

இவ்வாறாக பெரும் யோகியாகிய திருமந்திர நூலின் ஆசிரியரான திருமூலரது வரலாறும் காலமும் பற்றிய கருத்தமைவு இதுதான் எனச் சரியான முறைப்படுத்தப் படாத நிலையில் அகச்சான்று புறச்சான்று கள் அடிப்படையிலே சைவ கால ஆய்வுகள் பல்வேறு அறிஞர்களால் பல்வேறு வகைபப்பட்ட நிலையில் அமைந் திருப்பதனைக் காணலாம்.

## உசாத்துணை நூல்கள்


1. ஞானசம்பந்தன் ஆ.ச.பெரியபுராண ஆராய்ச்சி தமிழ்ப் பல்கலைக்கழக தத்துவமையம், காஞ்சிபுரம்.1987
2. பாலூர் கண்ணப்பமுதலியார் தமிழ்மந்திரம்
3. சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஹி ஓம்ஷர் திருமூலர் திருமந்திரம் 1994
4. திருமூலர் சித்தாந்தம் 1950 மலர் 23
5. இரா.மாணிக்கவாசகம் (சித்தர் பாடல்களிற் குறிப்பு மொழியும் குழூஉக்குறியும்) ஐந்தாம் உலகத்தமிழ் மகாநாடு விழாமலர்.
6. இராசமாணிக்கனார் .மா பெரியபுராண ஆராய்ச்சி 1960.
7. திரு.ப. இராமநாதபிள்ளை திருமந்திரம்திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1962.

செல்வி.தாட்க்ஷாயினி கனகநாயகம்
3ம் வருடம்
இந்துநாகரிகத்துறை.

# இந்துப் பெண்

அவனியுய்ந்திட வேண்டும் ஆற்றலை
அன்னை சக்தியாய்க் கண்டு போற்றியே
உவந்து பூஜனை செய்வதுண்டு நாம்
உயிர்ப்பின் மூலமே பெண்மை என்பது

சிந்தை எங்கிலும் அன்பினாழமாம்
சிறந்த கற்பது வலிய சாதனம்
இந்து நன்னெறிப் பெண்களென்பர்
இதயத் தூய்மையால் ஒளி படைப்பவர்

அறங்கள் பற்பல அவளில் சங்கமம்
அன்பும், உறுதியும் ஆயுதங்களாம்
சிறந்த கல்வியும் உயர்ந்த பண்புமே
சிந்த மெங்கிலும் செழுமை கூட்டுமாம்

ஒருவனை மணங் கொண்டிருப்பதும்
ஒற்றுமை தனைப் பேணி குற்றலும்
அருமையான "தாய்" வடிவமாகியே
அகிலந்தனையே ஆளுமாற்றலும்

பெருகி நின்றிடப் பணிவு கொண்டவள்
பெண்ணறத்தினை நன்கு காப்பவள்
உருகு ஒளிதரும் தீபமாகிய
உறவு பேணிடும் உத்மம் அவள்!

திருமதி.ஸ்ரீகலா ஜெகநாதன்
சமஸ்கிருதத் துறை,
யாழ் பல்கலைக் கழகம்.

# காளிதாசர் காட்டும் தர்மம்

தர்மம் என்ற சொல்லுக்கு வடமொழியில் கடமை என்ற பொருளும் உண்டு. காளிதாசனின் படைப்புக்களில் மனிதன் பல்வேறு நிலைகளில் இருந்து ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றிய குறிப்புக்கள் நிறைந்திருப்பதைக் காணலாம்.

ராமகதையை மத்திய மணியாக வைத்து ரகுவம்ச காவ்யத்தை காளிதாசர் இயற்றினார். ராம கதையில் கடமையின் எல்லா அம்சங்களும் விளக்கம் பெறுகின்றன. தந்தையின் கடமை, நண்பன், மனையாள், தூதன், வேலையாள் இவர்களின் கடமைகள் எல்லாம் தெளிவாக நடத்திக் காட்டப்பெறுகின்றன. ரகுவம்சத்தில் காளிதாசர் ஆங்காங்கே மனிதனின் பல கடமைகளை கவிதைச்சுவை குன்றாமல் எடுத்துக் காட்டுகிறார். குசனின் புத்திரனான அதிதி சொன்ன சொற்படி நடந்து வந்தான். ஒரு தடவை அளித்த பொருளை எக் காரணம் கொண்டும் திரும்பக் கவர்ந்து கொள்ளவில்லை. தான் ஒரு முறை சொன்னதை மாற்றுவதில்லை என்பது அவனது விரதமாயிருந்தது. இத்தகைய விரதமுடைய அவன் ஒரே செயலில் மட்டும் தனது கொள்கைக்கு மாறாக நடந்தான் அது என்னவெனில் அடியோடு முறியடிக் கப்பட்ட அரசர்களை மறுபடியும் அவர்கள் ராஜ்யத்திலே ஸ்தாபித்தான். தான் முன் செய்த காரியத்தை மாற்றியது இது ஒன்றிலே தான். ஜனங்களின் உதவி மன்னனுக்கு எப்போதும் அவசியம். இந்த உதவி இருந்தமையால் தான் அதிதி வேரூன்றிய மரம்போல் உட்பகைவர், வெளிப்பகைவர் இல்லாது இருந்தான்.

"வித்தகரின் முதற்கடமை துன்புற்றவர்களின் கண்ணீர்துடைப்பதுதான்" என்று இரகுவம்சம் இரண்டாம் அங்கத்தில் திலீபன் கூறுவதை நோக்கலாம். ஷத்திரியம் பெண்களின் உள்ளத்தில் வீரத்தாயாக விளங்க வேண்டும் என்ற எண்ணம் தாயன்பு என்ற உணர்ச்சியோடு போராடுவதை இரகுவம்சத்தில் பதினான்காம் அருக்கத்தில் அழகுறக் காட்டுகிறார் காளிதாசர்.

காதல் கடலில் மூழ்கும் இயல்புள்ள துஷ்யந்தன் ஆச்சிரமவாசிகளுக்கு துன்பம் உண்டானபோது அவர்களின் துயர் துடைப்பதே தன்கடன் என்று உணர்ந்து வில்லேந்தி வீரச்செயல் புரிகிறான். மண்ணுலகில் தோன்றும் இன்னல்களை நீக்குவதோடு அமரர்படும் துயரினையும் நீக்கப் பாடுபடுகிறான் புரூரவஸ். தொண்டு புரிவதும், துயர்களைவதுமே ஷத்திரியர் தலையாய கடமை என காளிதாசர் தமது இலக்கியங்களில் வற்புறுத்துகிறார்.

பெண்பாத்திரங்களை சிருஷ்டிப்பதில் இணையற்றவர் காளிதாசர். சீதை பார்வதி, சகுந்தலை என்ற பழைய பாத்திரங்கள் இவரது கவிதையில் புதுப்பொலிவு பெறுகின்றன. இவர்களைக் கொண்டே பெண்ணின் கடமையை நன்கு சித்தரிக்கிறார் காளிதாசர். துஷ்யந்தன் கண்வர் ஆச்சிரமத்துக்கு வந்து சகுந்தலையைச் சந்திக்கிறான். தோழிகள் வெகுசாதுரியமாய்ப்பேசத்தொடங்குகின்றனர்.

புண்ணிய புருஷனுக்கு எதிரில் ஒரு

கன்னிகை நடந்து கொள்ள வேண்டிய முறை, அரும்பிய காதல் உணர்ச்சி இரண்டுக்கும் பெரும் போராட்டம். சகுந்தலை உள்ளத்தில் நடைபெறுகிறது. காதல் தடுக்க முடியாத வேகம் உடைய ஒன்றாலும் மரபுவழி தவறாத முறையில் சகுந்தலை கொண்ட அழகினை பெண்ணுலகுக்கு முன்மாதிரியாக கவி காட்டுகிறார். என்னோடு நேர்முகமாக இவள் பேசுவதில்லை. ஆனால் என்பேச்சை குனிந்த தலையோடு கவனமாகக் கேட்கிறாள். என்னைக் கண்களால் இவள் ஏறிட்டும் பார்க்கவில்லை. என்றாலும் இவள் கண்கள் வேறு எந்தப் பொருளையும் நாட்டமுடன் பார்க்கவில்லை என்று துஷ்யந்தன் வாயிலாக வழிவழி வந்த கற்புடைய மங்கையரின் அறத்தைக் கவி அழகுபடத் தெளிவாக்கிவிட்டார்.

மன ஒருமைப்பாடு என்பது மிகவும் முக்கியமானது. பார்வதி தன் இணையில்லாத வனப்பினால் தான் சிவனது உள்ளத்தைக் கவர முயற்சிக்கிறாள். அவளை அவமானப்படுத்துவது போல் இறைவன் காமதேவனை எரித்துச் சாம்பலாக்கினான். உள்ளக் கிளர்ச்சிக்கு அடிப்படையாக, தூண்டுகோலாக விளங்கிய காமன் இறந்த பிறகு அழகால் இறைவனைக் கவர முடியாது என்று உணர்ந்த பார்வதி புலனடக்கம் செய்து இயற்ற முடியாத பெரும் தவத்தால் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டாள் என்பது குமாரசம்பவக் கதை. புறத்தே தோன்றும் சிறப்புக்களை புறக்கணித்து அகத்தின் உயர்வை போற்றி வாழ வேண்டும். தவத்தைவிட பெரிய சாதனம் இல்லை என்பதை இந்தக் காவியம் எடுத்துக்காட்டுகிறது. சாகுந்தலமும் அப்படியே அமைந்திருப்பதை காணலாம். சகுந்தலையும், துஷ்யந்தனும் புற அழகை கண்டு மோஹித்து காந்தர்வ முறைப்படி திருமணம் புரிகின்றனர். ஆனால் விரைவில் பிரிவு ஏற்படுகிறது. முடிவில் சகுந்தலை செய்த தவத்தாலும், துஷ்யந்தன் தன் உள்ளத்தே கழிவிரக்கப்பட்டு தன் மாசினை நீக்கிக் கொண்டதாலும் இருவரும் ஒன்று சேர்கின்றனர். அதன்பின் பிரிவு என்பது இல்லை. உலகாயத்தமான முறைகளின் குறைவை எடுத்துக்காட்டி ஆன்மீக வழியில் பெருமையை நிலை நாட்டுவதே காளிதாச னின் பெருநோக்கமாய் அமைந்திருந்தது.

காசிபர் வாயிலாக கணவர் இல்லத்துக்குப் போகும் பெண்களின் கடமையைக் கூறுகிறார் காளிதாசர் இங்கிருந்து நீ கணவன் இல்லத்தை அடைந்த போதும் இரு பெரும் குரவர்க்குப் பணிவிடைசெய். சபதீதினிகளோடு அன்பாய் இரு. கணவன் உன்னைக் கோபித்துக் கொடுமைப்படுத்தினாலும் நீ அவனைக் கோபியாதே. உனக்குப் பணிபுரிவோர்க்கு மிகுந்த மரியாதை காட்டு. செல்வத்தில் செருக்கடையாதே. இவற்றுக்கு மாறாக நடப்போர் தங்குலத்திற்கே தீமை புரிந்தவராவார்'' இவ்வாறு கூறுகிறார்.

ஒரு மனைவி தனது கணவனுக்கு எவ்வாறு இன்றியமையாத துணையாவாள் என்பதை இரகுவம்சத்தில் மிகவும் சுவைபட எடுத்துக் கூறுகிறார் காளிதாசர்.

''நீ எனக்கு குடும்பத்தை நடத்திச் செல்லும் மனைவியாகவும், ஆலோசனை கூறும் மந்திரியாகவும், தனிமையில் துணை செய்யும் ஆப்ததுணைவியாகவும், சங்கீதம் முதலிய கலைகளை நன்கு பயின்று என்னை மகிழ்விக்கும் மாணவியாகவும் இருந்தாய். இவ்விதம் எல்லாப் பண்புகளுடனும் இருந்த உன்னை மரணமடையச் செய்ததால் யமன் என்னிடமிருந்து எல்லாவற்றையும் கவர்ந்து விட்டான். எனக்கு மந்திரி இல்லை. துணைவி இல்லை. மாணவி இல்லை. யாருமே யில்லை. இவ்வாறு இந்துமதி இறந்த பின் அஜன் இவ்வாறு புலம்புகிறான்.

பிரமச்சாரிய நிலையில் இருப்பவர்கள் மனக் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும். இதனால் தான் பிரமச்சாரிகள் வாழ்ந்த குருகுலங்கள் எல்லாம் பட்டணத்துக்கு வெளியே இருந்தன. நதிக்கரைகளும், நீர் வளம் நிறைந்த அபாயமில்லாத வனங்களும், மலையடிவாரங் களும் பிரமச்சாரிகள் வாழும் ஆச்சிர மங்களுக்குரிய இடங்களாகும். இங்கு தான் சிஷ்யர்களுக்கு ரிஷிகள் வேதம், சாஸ்திரம் முதலிய கல்வியை அளித்து வந்தார்கள். அதாவது ஒரு காரியத்தின் பொருட்டு பட்டணம் சென்றாலும் உடனே திரும்பி விடுவார்கள். சகுந்தலையை துஷ்யந்தனிடம் அனுப்பும்போது ரிஷிகளைப் பயர்ந்து அரண்மனைக்கு இரண்டு யோசனை தூரமுள்ள கங்கை, யமுனை சங்கமம் செய்யும் இடமாகிய பிரதிஷ்டான என்ற நகரம் வரை போய்க் கிளம்புங்கள். நகரப் பிரவேசம் செய்யக்கூடாது என்று கண்ணுவர் கட்டளையிடுகிறார். இதனை மீறி ரிஷிகள் அரண்மனை வரை சென்று அவமானப்பட்டு "நக்ரத்தில் பந்தக்களை ஒழித்த ரிஷிக ளுக்கு என்ன காரியம் என்று சொல்லி வனத்திற்கே திரும்பினர். மனுவினால் பிரமச்சாரிய விதிக்கப்பட்ட பிரமச்சாரிய நிபந்தனைகள் எல்லாம் காம இச்சையின் வேகம் கிளம்பாமல் இருக்கவே ஏற்பட்டு ள்ளன. வேகம் உண்டானால் அடக்குவது மிகக்கஷ்டம்.

தகுதியுடைய பெண்ணை தக்க வனிடத்தில் ஒப்படைக்கும் இந்துத் தந்தையின் கடமையை, "சகுந்தலையை கணவன் இல்லத்துக்கு அனுப்பிய பின்தான் என் உள்ளம் நிம்மதியடைந்தது ஏனெனில் உண்மையில் பெண்கள் பிறர்க்குரியவரே. இன்று இவளை கணவன் வீட்டுக்கு அனுப்பியதால் தான் அடைக்கலப் பொருளை உரிய இடத்தில் ஒப்படைத்த வனாகின்றேன்," என்று கண்ணுவர் வாயிலாக உணர வைக்கிறார் காளிதாசர்.

ஒவ்வொரு மனிதனும் தர்ம அர்த்தம் காமங்களை அவ்வவற்றின் தன்மைக்கு ஏற்ப உரிய அளவில் சம்பாதித்தும் அனுபவித்தும் வரவேண்டும், என்பதை தமது இலக்கியங் களில் வலியுறுத்துகிறார் காளிதாசர். பொருளிலும் இன்பத்திலும் கருத்தை வைத்து தர்மத்தை கைவிடலாகாது. அதேபோல் தர்மத்தில்

மிகப்பற்றுக்கொண்டு பொருளையும், இன்பத்தையும் இழக்கலாகாது. மிக இன்பம் நுகரவேண்டும் என்பதற்காக பொருளை இழக்கலாகாது. பொருள் ஈட்டும் விருப்பத்தால் இன்பம் தூக்காமலும் விடலாகாது என்பது அவரது கருத்து.

"சாஸ்திரங்கள் முக்திக்கான வழிகள் பலவற்றை கூறினும் இறுதியில் ஒருவனாக இறைவனிடத்தே தான் மனிதனைச் சேர்ப்பிக்கின்றன". இவ்வாறு கூறும் தனிமனிதன் சமூகம், இல்லத்தான், துறவறத்தான் என்ற பல்வேறு நிலையினரும் காளிதாசர் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை கூறுகிறார்.

**உசாத்துணை நூல்கள்**

1. ரகுவம்ச மஹாகாவ்யம், (உரை) வேங்கட ராகவாச்சாரியார், தலிட்டில் ப்ளவர் கம்பனி, சென்னை 1952.

2.The Abhijnana Sakuntalam, (Ed) kala M.R.Matilal Banarsidas, Delhi, 1994.

இ.கந்தவேள்
இந்துமெய்யியல்
4ம் வருடம்,
இந்து நாகரிகத்துறை.

# அறிவாராட்சியல் நோக்கில் அனுமானப் பிரமாணம்.

இந்து மெய்யியல் நோக்கில் ஒவ்வொரு தத்தவமும் முறையான வகையில் எடுத்தாளப்படுவதற்கு அளவை யியல் அடிநிலையாக அமைந்துள்ளது. பல்வேறுபட்ட தத்தவப் போக்குகளைக் கொண்ட இந்திய தத்துவப்பரப்பிலே ஒவ்வொரு தத்துவக் குழுக்களும் கருத்து நிலையில் ஒன்றுக்கொன்று வேறுபட்டு விளங்குகின்றபோதிலும் குறிப்பிட்ட சில பிரமாணங்களை அவை ஏற்றுள்ளன. இப் பிரமாணங்கள் அவர்களது தத்துவச் சிந்தனையைத் தர்க்கரீதியாக எடுத்தாளு வதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. பிரமாணங்கள் அறிவைப் பெறவல்ல மூலங்களாகவும் வழிமுறைகளாகவும் விளங்குகின்றன. பிரமாணம் என்பது அளவை, அளவு போன்ற சொற்களாலும் பயன்படுத்தப்படுகின்றது. அளவை என்றால் அளந்தறியப்படுவது ஆகும். இப்பிரமாணங் களின் முதன்மை நோக்கி வேறுபட்டுக் கூடிக்குறைந்த எண்ணிக்கையான பிரமாணங் களையே ஏற்று நிற்கின்றனர்.

இந்திய மெய்யியலில் அறிவைத்தர வல்ல பிரமாணங்களாகப் பத்துப் பிரமாணங்கள் எடுத்தாளப்படுவதுண்டு. பிரதியட்சம் (காட்சி) அனுமானம் (கருதலளவை) ஆப்தம் (உணயளவை) அனுப்பலத்தி (இன்மையளவை) அருப்தாப்பதி (பொருட்பேளவை), உபமாணம், ஐதிகம், சம்பவம், மீட்சி, இயல்பு எனும் பத்துமே அளவையாகும்.

மேலே கூறப்பட்ட அறிவுப் பிரமாணங்களாகப் பத்துப் பிரமாணங்கள் எடுத்தாளப் படுவதுண்டு. பிரதியட்சம (காட்சி) அனுமானம் (கருதலளவை) ஆப்தம்(உரையளவை) அனுப்பல்த்தி (இன்மையளவை) அருப்தாப்த்தி (பொருட்பேரளவை) உபமாணம், ஐதிகம், சம்பவம், மீட்சி, இயல்பு எனும் பத்துமே அவையாகும்.

மேலே கூறப்பட்ட அறிவுப் பிரமாணங்கள் வரிசையிலே முக்கியமானதும் அவசியமான துமான பிரமாணமாயும் தத்துவநோக்கில் வாதங்களை வளர்த்தெடுப்பதற்காக பாவிக்கப்படும் பிரமாணமே அனுமானப் பிரமாணமாகும். அனுமானம் (INFERENCE) என்பது அறிந்த அறிவைக் கொண்டு அறியாமையை அறிவதாகும். அதாவது 'கண்ட ஓர் உண்மையை அடிப்படையாக வைத்து காணாத பொருளை அனுமானித்து அறிவதாகக் கொள்ளப் படுகிறது". இது ஒரு ஊடக அறிவாகும். புலக்காட்சி வழி பெறப்படும் அறிவு ஊடகமாகும். 'அது நேரகாகக் கிடைக்கும். அறிவிலிருந்து வேறுபடுகின்றது. இதை அருணத்திசிவாச்சாரியார் குறிப்பிடுகையில், "அனுமான மவினாபாவம் பேசுறு மேதுக் கொண்டு மறைபொருள் பெறுவதாகும்" எனக் குறிப்பிடுகின்றார்.

காட்சியானது நேரடியறிவாக அமைகின்ற போது அனுமானமானது நேரடியாக அறியப்படுவதன்றிப் சாதித்துப் பெறற் பாலதாய் மறைந்து நின்ற பொருளை அப்பொருளோடு விட்ட நீக்காது உடனாய் இருக்கின்ற ஏதுவைக் கொண்டு உணர்வதான அறிவாக இருப்பதால் இந்த

மெய்யியல் நோக்கில் சிறப்பாக அறிவாராட்சியல் ரீதியில் முக்கியம் பெற்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. நெருப்பையும் புகையையும் ஓரிடத்தில் கண்டறிந்த அறிவானது பிற்பட்ட புகையைக் கண்டவிடத்து நெருப்பை அனுமானித்து அறிந்து கொள்ளுதலையே அனுமான அறிவு சுட்டுகிறது. மலையின் கண் புகையை காண்பதை ஆதாரமாகக் கொண்டு மலையின் கண் நெருப்பு உள்ளதை இங்கே தான் அனுமானிக்க முயல்கிறோம். புகைக்கும் நெருப்புக்கும் இடையே இணைந்தே வரும் பொதுமை இயல்பானது (UNIVERSAL CON COMITANCE) இருப்பதனால்தான் அனுமானம் ஏற்புடைய தாக அமைகின்றது.

நெருப்பையும் புகையையும் ஓரிடத்தில் கண்டறிந்த அறிவானது பிற்பட்ட புகையை கண்டவிடத்து நெருப்பை அனுமானித்து அறிந்து கொள்ளுதலை அனுமான அறிவு சுட்டுகின்றபோது இங்கு நெருப்பும் புகையும் ஓரிடத்தில் அமையும் தன்மையைக் கண்ட அறிவானது காட்சிக்குரியதாகும். பிற்பட்ட புகையைத் தனித்துக் காண்பது காட்சிக்குரிய செயற்பாடாக அமைவுற்றாலும் அக் காட்சியில் காணப்படாது ஒரு பொருளினைக் காணப்பட்ட பொருளின் உறவினை அனுமானித்து அறிவது அனுமானிப் பிரமாணத்தின் சிறப்பியல்பு ஆகும். தூரத்தே ஓரிடத்தில் புகை தெரிகிறது ஆனால் நெருப்பு இருப்பது நமது கண்ணுக்கு தெரியவில்லை எனினும் அங்கு நெருப்பு இருக்கிறது என்பதை அறிகின்றோம். கண்ணால் நாம் சாதாரணமாகப் புகையை யும் நெருப்பையும் கண்டுள்ளதுடன் நெருப்பி லிருந்து தான் புகை எழுகின்றது என்பதைப் புரதியட்சமாக பல தடவைகள் கண்டதைக் கொண்டு நாம் நெருப்பைக் காணாமல் புகையுள்ளதைக்கண்டு நெருப்புள்ளது என்கிறோம் ஆதலால் இத்தகையதான ஓர் அறிவுக்குத்தான் நாம் அனுமானம் என்று கொள்கிறோம் ஆதலால் அனுமானப் பிரமாணமானது சிறப்பிடம் பெறுகின்றது.

ஆப்தம் தவிர்ந்த ஏனைய பிரமாணங்கள் எல்லாம் பிரதியட்சப் பிரமாணத்தின் செல்வாக்கினை அல்லது தாக்கத்தினைக் கொண்டு விளங்குகின்றது. இதற்கு அனுமானம் விதிவிலக்கானது அல்ல, அனுமானம் கூட காட்சியளவையின் சில கூறுகளினை தன்னகத்தே கொண்டுள்ள தென்பது நுணுகி ஆராயுமிடத்து அறியக் கூடியதாக உள்ளது. அனுமானம் தரும் நியாய வாதத்தில் எதுவும் உபநயமும் காட்சிப் பிரமாணத்தின் சார்பின்றி பெற்றதாகக் கொள்ளமுடியாது. மலையின் கண் புகையைக் கண்டு அங்கு தீயை அனுமானிக்கின்றபோது புகையுண்டு என்பதனைக் கொண்டு அவ்விடத்திலேயுள்ள தீயை அனுமானிப்பது அனுமானப் பிரமாணத்தினைத் சார்ந்ததாயினும் "புகையுண்டு" என்னும் அறிவானது காட்சியளவை யாலன்றிப் பிறிதொரு நிலையில் பெற்றிருப்பதற்குச் சாத்திய மில்லை என்பது புலனாகும். இந்த வகையில் அனுமானப் பிரமாணமானது பிரதியட்சப் பிரமாணத்துடன் இணைந்த வகையில் இருப்பது அதன் சிறப்பியல்பைக் காட்டுகின்றது.

அளவைகள் பொதுவாக இரு வகையாக நோக்கப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது. இக்கருத்தை பௌத்தமும் ஏற்புடையதாகக் கொண்டு விளங்குகின்றது.

(01) பொதுப்பொருள் (சாமானியம்)

(02) சிறப்புப்பொருள் (விசேடம்)

இவற்றில் பொதுப் பொருளானது அனுமானத்தினால் பெரிதும் நோக்கி அறியப்படுகின்றது.

அனுமானம் பொதுவாக இரு

(01) தன்பொருட்டனுமானம் (சுவார்த்த அனுமானம்)

(02) பிறர்பொருட்டனுமானம் (பரார்த்த அனுமானம்)

தன்பொருட்டனுமானம் என்பது தண்ணுணர்வில் ஏதுவாகும். அதாவது மலையில் தீயிருப்பதற்கு ஏதுவாக அங்கு புகையிருக்கின்றது எனக் கூறுவதாகும் இங்கு புகை என்னும் அனுமானியத்தால் தீயை அனுமானிப்பதாகும். இதனால் தன் பொருட்டனுமானமானது இயல்பு, காரியம், அனுபலத்தி என்றும் மூன்று ஏதுக்களுள் ஓர் ஏதுவையுடைய பொருளை பக்கம், சபக்கம், விபக்கம் என்றும் மூன்றில் வைத்து அறிகிறது. பக்கம் என்பது ஐயம்துனிபற காயப் பொருள் இருக்கும் இடமாகும். இது உதாரணமாக மலை போன்றது. சுபக்கம் என்பது எடுத்துக் காட்டாக அமையும் துணியப்பட்டபொருள் இருக்கும் இடமாகும். இது மடுவுக்கு ஒப்பானது. இங்கு பக்கம், சுபக்கம், என்பன பொருள் உண்டு என அறிவதற்குரிய இடமாகவும் விளங்குகின்றது. இம்மூன்று ஏதுக்களினையும் பௌத்த நூலான மணிமேகலையும் எடுத்தாழ்கின்றது அது இயல்பு ஏது(சகசம்)

(01) இயல்பு ஏது(சகசம்)

(02), காரிய ஏது

(03) அனுப்தலத்தி ஏது என மூவகையாகக் கூறுகின்றது.

இயல்பு ஏது அல்லது சகசம் என்பது ஒரு அனுமானத்தின் உண்மையை உருவாக்குவதற்காக நிறுவப்படுவதாகும். உதாரணமாக "மா" என்ற பெயர் ஒரு நிலையில் மரமாயும் மறுநிலையில் குதிரை என்ற பெயரைப் பெறுதலைப் போல அனுமானித்தலாகும். காரிய ஏது என்பது காரண காரியத் தொடர்பின் ஊடகத்தன் கருத்தை நிறுவுதலாகும்.

அனுப்தலத்தி ஏது என்பது முடிவு நிலைத் தொடர்பைக் காட்டும் உதாரணமாக குளிர் இல்லாமையைக் காட்டும். பனி இல்லாவிடில் குளிர் இல்லை என உணர்த்தும். இது அனுமான இயல்புநிலைத் தத்துவமாகும். இதை விளக்கப் புகுந்த அருணந்திசிவாச்சாரியார்

"இயல்பு மாமரத்தைக் காட்ட ஓறுகாரியம் புகைதன்
அதியாய வனல் காட்டலாகு மநுபலத்தியது
சிசுமின்மை பனியின்மை காட்டல் போலுஞ்
செப்பிடினே"

எனக் குறிப்பிடுதலினை நாம் ஒப்பிட்டு நோக்க முடியும்.

தான் அறிந்ததை பிறர்க்கு அறியும் பொருட்டுச் சொல்வது பிறர்பொருட்ட னுமானம் ஆகும். பிறர் பொருட்டனுமானது நிறுவுதற்குரிய சாதனம் ஆகும். அதனால் இது அறிவிப்பதற்குரிய அனுமானமாக கொள்ளப்படுகின்றது. பிறர் பொருட்டனுமான மானது இருவகைப்படும் அவை,

(01) உடன்பாட்டு பிறர் பொருட்டனுமானம்

(02) எதிர்மறை பிறர் பொருட்டனுமானம் ஆகும்.

இங்கு உடன்பாடு என்பது

(01) பிரதிக்கை அல்லது மேற்கோள் - இந்த மலையில் நெருப்புள்ளது

(02) ஏது - ஏனென்றால் அங்கு புகை உள்ளது.

(03) உதாரணம் அல்லது திருட்டாந்தம் - எங்கெங்கு புகையுள்ளதோ அங்கங்கு நெருப்புள்ளது.

(04) உபநயம் - இங்கும் அவ்வாறே புகையுள்ளது.

(05) நிகமனம் - ஆகவே இங்கு நெருப்புள்ளது என நிறுவப்படுகின்றது(அடுக்களை போல)

எதிர்மறை பிறர் பொருட்டனுமானம் என்பது

(01) பிரதிக்கை அல்லது மேற்கோள் - புகையிலை

(02) ஏது - ஏனென்றால் அங்கு நெருப்பில்லை

(03) உதாரணம் அல்லது திருட்டாந்தம் -

எங்கு நெருப்பில்லையோ அங்கு புகையில்லை

(04) உபநயம் - நெருப்பில்லை

(05) நிகமனம் - ஆகவே இம்மலையில் புகையில்லை (தாமரைப் பொய்கைபோல நிறுவப்படுகின்றது)

உடன்பாட்டனுமானது ஒத்த தன்மையில் காரணத்தைக் காரியம் பின் தொடர்ந்தமைகிறது. புகையுள்ள காரியத் தால் எவ்விடத்து நெருப்புள்ளதோ என்பதான காரணத்தின் உடன்பாடாய் அனுமானித்துப் பெறப்படுகின்றது. எதிர்மறை அனுமானத்தில் காரிய இன்மை காரண இன்மையை புலப்படுத்துகின்றது. அதாவது புகையின்மை யிலிருந்து நெருப்பின்மை என்பது அனுமானிக்கப்படுவதைக் காணலாம்.

சைவசித்தாந்த அனுமானத்தில் பிறர் பொருட்டனுமானம் மூவகை உறுப்புக்களைக் கொண்டு விளக்கி நிற்கின்றது. அவை பிரதிக்கரை, ஏது, திருட்டாந்தம் ஆகிய மூன்றுமேயாகும். எனினும் உபநயம் திகமனம் என்னும் இரண்டு உறுப்புக்கள் ஊடாக எடுத்தாளப்படுவதைக் காணலாம். இதனையே சித்தியாரும்,

"தொகையா குறுப்பைந் தொடுகூடச் சொல்லலுவாருமுளர் துணிந்தே" எனக் குறிப்பிடுவதை நோக்கலாம். இதிலிருந்து ஐந்து உறுப்புக்கள் வழி தெளிவாகக் கூறுவதும் உள்ளது என்பதும் தெளிவா கின்றது. இவ்வைந்து உறுப்புக் களின் வழியே நியாயவாதிகளும், மூன்று உறுப்புக்களின் வழி பட்டாச்சாரியனும் ஈருறுப்புக்கள் ஊடாக பௌத்தரும் தமது கருத்தை விளக்குவர் என சித்தியார் உரையாசிரியரான மறைஞான தேசிகர் குறிப்பிடுகின்றார்.

நெருப்பையும் புகையினையும் ஒருங்கே ஒன்றுசேரக்கண்ட அனுபவத்தின் வாயிலாக புகையினைத் தனியே கண்ட மாத்திரத்தில் நெருப்பினை அனுமானிக்கின்ற அனுமானம் இந்திய தத்துவப்பரப்பில் பெரிதும் எடுத்தாளப்படும் ஒரு பிரமாணமாகும். இது ஐந்துறுப்புக்களின் ஊடாக காட்டப்படும். அவை பிரதிக்கை, 'ஏது, உதாரணம் அல்லது திருட்டாந்தம், உபநயம், திகமனம் ஆகும். இவற்றில் பக்கம் ஏது, திருட்டாந்தம் என்னும் மூன்று உறுப்புக்களும் சிவஞானசித்தியாரின்படி மூன்று படிநிலைகளைக் கொண்டு விளங்குகின்றது. எனினும் சிவஞானசித்தியார் உரையாசிரியர்களும், பௌஷ்கர ஆகமும் மேலே கூறப்பட்ட ஐந்து படிநிலைகளைக் கூறுகின்றது. இக்கருத்தையே ஏற்று நிற்பவர்களாக நியாயவைசேஷகர் காணப்படுகின்றார்.

பிரக்ஞை என்கின்ற முதலாவது அங்கமானது இந்திய மெய்யியலாளர்களால் பக்கம் எனவும் அழைக்கப்படுகின்றது. சாதிக்கப்படவேண்டிய துணி பொருள் உடையதை பக்கம் அல்லது மேற்கோள் என்பர். இங்கு துணிய வேண்டிய பொருள் நெருப்பு, அதனைப் பெற்றுள்ளதாகக் கொள்ளப்படும் மலை பக்கம் எனப்படும். உதாரணம்:- "இம்மலை நெருப்புடைத்து என்றல்"

இங்கு சிவாக்கிரயோகிகள் பக்கமும், பிரக்ஞையும் ஒன்றே எனக் கருதினாலும் இவ்விரு பதங்களும் ஒன்றில் ஒன்று வேறுபடுகின்றன என்று கூறுகிறார். அனுமானத்தினை ஒருவாத நிலைக்குரிய தன்மையில் நாம் பார்க்கிறபோது அது பிரக்ஞைக்குரிய ஒரு நிலையாக இருக்கின்றது. ஒருவர் அனுமானத்தினை ஒரு அறிகை முயற்சியாகப் பார்க்கின்றபோது அது பக்கம் என்ற உறுப்பு ஊடாகக் காட்டப்படுகின்றதுடன் அவர் அனுமானிப பதற்குரிய பொருளின் நிலையி டத்தினைச் சுட்டுவதற்கே பக்கம் என்ற உறுப்பு பிரயோகிக்கப்படுகிறது.

அனுமானத்தின் இரண்டாவது படிநிலை (உறுப்பு) ஏது எனப்படும். இது அனுமானத்தில் இருவிதப் பணயை ஆற்றுகின்றது. துணியப்பொருள் இல்லாத இடமெங்கும் இல்லாததாகவும், துணியப்படு பொருள் உள்ள இடமெங்கும் தானும் தோன்றுவதாகவும் உள்ள ஏதுவாகும். பக்க தர்மமும், வியாப்தியும் அனுமான செயலுக்கான இரு நிபந்தனைகளாகும். இங்கு ஏதுக்குரிய நிலையில் நாம் புகையை உதாரணமாகக் காட்ட முடியும்.

திருட்டாந்தம் அனுமானத்தின் மூன்றாவது அங்கம் ஆகும். இது உடன் பாடாகவும் எதிர்மறையாகவும் கூறப்படு கின்றது. நெருப்பாகிய துயிப்பொருளைச் சாதிப்பதற்கு ஏதுவாகிய புகையுள்ள இடங்களை ஆதாரமாக எடுத்துக் கூறுதலாகும். உடன்பாடாக வருகின்ற போதும் இங்கு நெருப்பை நாம் மலையின் கண் தீயைக் கண்டு அனுமானிக்கின்றபோது இங்கு அடுக்களை போன்று காணப்படு கின்றது. எதிர்மறையாக நோக்கும் போது நீருள்ள இடத்தில் புகையிருத்தல் இயலாது. நெருப்பில்லாத இடமெங்கும் புகையும் இல்லை இது பொய்கையைப் போன்று இருக்கும் என உதாரணம் கூறப்படுகின்றது. இங்கு உடன்பாட்டு வடிவிலமையும் உதாரணத்தின் நிலையில் சபக்கம் எனவும், எதிர்மறை வடிவிலமையும் உதாரணத்தின் நிலையிடம் விபக்கம் எனவும் அழைக்கப்படும்.

உபநயம் என்பது திருட்டாந்தத்துடன் தொடர்புபடுத்தி முடித்துக்காட்டும் உறுப்பினையே தான் சுட்டி நிற்கின்றது. "உபநயம் மலையும் புகையிடத் தென்றல்" என்பது போலவே காணப்படுகின்றது. இறுதியான உறுப்பான நிகமனம் பக்கத்தினை ஏதுவினாலும் எடுத்துக் காட்டினாலும் சாதித்து உறுதிப்படுத்தும் உறுப்பினைச் சுட்டி நிற்கின்றது. பொதுவாக இவ்விரண்டு உறுப்புக்களும் அனுமானத்தின் இறுதி இரு அங்கங்களாகும். இவையிரண்டும் ஒருவாதத்தின் நிறுவலுக்குரிய இரு படிநிலைகளாக வுள்ளன. திருட்டாந்தத்தினால் எடுத்துக்காட்டப்பட்ட சாத்திய சாதனங்களுக் கிடையிலான தொடர்பையும் வேண்டிநிற்கும். சாத்தியத்திற்குரிய குணாதிசயமாக உபநயம் எடுத்துக் காட்டப்படுகின்றது. இங்கு ஏதுவானது திருட்டாந்தத்துடன் தொடர்பு றுத்தி நோக்குவதன் மூலம் உபநயம் நிகமனத்தைப் பெறுவதற்கு வழி சமைக்கின்றது. பிரத்திஞை (பக்கம்) யில் கருதுகோளாக முன்மொழியப்பட்டது, இறுதி நிலையான நிகமனத்தில் ஐயத்துக் கப்பாற்பட்ட உண்மையாக நிறுவப்படுகிறது. இங்கு நிகமனம் என்பது முடிவாகவும் திருட்டாந்தம் காணப்பட்ட முடிவாகவும் அமைகின்றது. உபநயம், திருட்டாந்தம் கண்ட முடிவுக்குக் கிட்டக் கொண்டு போதல் என்பதாகவே அமைகின்றது. இதினின்று ஐந்துறுப்பு வடிவமைப்பானது அவசியம் என விளக்கப்படுகின்றது.

இந்த அளவையியல் வரலாற்றுப் போக்கிலே தின்னாகரே முதன் முதலில் வலிதான நிபந்தனைக்குரிய அம்சங்களைக் குறிப்பிட்டவராவார். இவர்களைத் தொடர்ந்து நையாயிகளும் மேலதிகமாக நிபந்தனை களை சுட்டிக்காட்டியுள்ளனர்.

தின்னாகர்:-

(01) ஏது பக்கத்திலிடம் பெறல் வேண்டும்

(02) அது சபக்கத்திலும் இடம்பெறல் வேண்டும்

(03) விபக்கத்தில் உள்ளடக்கப்படாதிருத்தல் வேண்டும்.

எனக் கூறுகின்றனர். மேற்குறித்த மூன்று நிபந்தனைகளுடன் நையாயிகர்கள் மேலும்,

(04) பக்கத்தில் ஏது மறுக்கப்படலாகாது

(05) எந்த ஏதுவைக் கொண்டு ஒரு சாத்தியத்தை நிறுவமுயல்கின்றோமோ அந்த அளவுக்கு முரணான பிறிதொரு ஏதுவால் அச்சாத்தியத்தை நிறுவுதல் இல்லாமல் இருத்தல் வேண்டும் என ஐந்து நிபந்தனைகளைக் கூறுகின்றனர்.

பிற்காலத்தில் சைவசித்தாந்திகள் அனுமானத்தை அறிக்கைக்குரிய பிரமாண மாகவும் மேலும் அதனை வாதமுறையாக வும் ஏற்றுக் கொண்டதால் மேற்கூறப்பட்ட ஐந்து நிபந்தனைகளும் அனுமானத்திற்குரிய நிபந்தனையாக ஆராட்சியாளர் கருது கின்றனர்.

அனுமானமானது பூர்வகாட்சி யனுமானம், அனுமா அனுமானம், உரைஅனுமானம் என்ற மூன்று வகையாகவும் விளக்கப்படுகின்றது. பூர்வகாட்சி யனுமானம் என்பது அறிந்த அறிவைக் கொண்டு கூறும் அனுமானம் பூர்வகாட்சியனுமானமாகும். ஒருவன் மலரைக் காணாத இடத்தும் அதன் மணம் இருக்கும் இடத்தைக் கொண்டு மலர் உண்டு எனக் கூறுதலாகும். காரணம் ஏலவே மலர், மணம், என்ற இரண்டையும் அறிந்திருப்பதனாலாகும். அனுமாஅனுமானம் என்பது ஒருவன் பேச்சின் அளவு, திறன் என்பவற்றையும் பேச்சின் உயர்வு தாழ்வுகளைக் கொண்டு ஒருவன் பேசும் முறையில் அவன் அறிவு எத்தகையது என அனுமானிக்கும் நிலையே இதுவாகும். உரைசால் அல்லது ஆகமலிங்க அனுமானம் என்பது வேதாகம, தர்மசாஸ்திரங்களிலும் கூறப்பட்டவற்றை கொண்டு அனுமானிக்கின்ற அறிவானது ஆகம அனுமானமாகும். ஒருவர் முற்பிறப்பில் செய்த நல்வினை, தீவினைகளுக்க ஏற்ப வருகின்ற பிறவிகளில் இன்பம், துன்பம், அமையும் என அனுமானித்தலே உரைசால் அனுமானமாகும்.

இவ் அனுமானம் பற்றிய சிறப்பம்சங்களில் வியாப்தி என்ற சொல் முக்கியமானது, அது ஒருசொல்லின் பொருட்குறி என விளக்கும். இது சாதனத்திற்கும் சாத்தியத்துக்கும் இடையிலான பொருட்குறி தொடர்பை சுட்ட வியாப்தி என்ற பதத்தினை அறிவாராட்சியலில் பயன்படுத்துகின்றனர். வியாப்தி பற்றிய கருத்தானது தின்னகராலே முதன் முதலில் முன் வைக்கப்பட்டது. எனினும் அது அனுமானத்திற்குரிய இன்றியமையாத நிபந்தனையாகும். புகை, நெருப்பு, என்பவற்றுக்கிடையிலான தொடர்பை கவனிப்பின் சாதனத்திலும் பார்க்க சாத்தியத்திற்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு சாத்தியத்தை சாதனத்திலிருந்து அனுமானிக்கக் கூடியதா யிருக்கிறது. இத்தொடர்பு வியாப்பிய வியாபகத் தொடர்பு என அழைக்கப் படுகின்றது. ஆனால் ஆனால் பௌத்த மெய்யியல் அளவையாளர்களால் வியாப்தி பற்றிய கருத்தானது நிராகரிக்கப்படுகின்றது. வியாப்தியை அவதானத்திலிருந்து நிறுவ முடியாது. அவர்களின் கருத்துப்படி நெருப்பும் புகையும் கடந்த காலங்களில் சேர்ந்தே காணப்படுமென கூறமுடியாது எனக்கூறி தமது கருத்தை முன் வைக்கின்றனர். சைவசித்தாந்தம் வியாப்தியை சககாரிய நியமமாக எடுத்தக் காட்டுகிறது. அது சாதன சாத்திய தொடர்பை தனி விதியாக விளக்குகிறது. இது தொடர்பான விளக்கம் பௌஷ்கர ஆகமத்தில் காணப்படுகின்றது. சிவஞானசுவாமிகள் இவ் வியாப்பதியை "அவிநாபாவத் தொடர்பு" என விளக்குகின்றனர். வேதாந்திகளும் வியாப்தி பற்றிய கருத்தைக் கொண்டு விளக்குகின்றனர். வேதாந்தக் கோட்பாட்டுக்கும் அனுமானத்தின் ஸ்திர தன்மையை தெளிவாக்குவதற்கு வியாப்தி பற்றிய கருத்து முக்கியமாகின்றது.

பௌத்தமானது அனுமானம் பற்றிய நோக்கில் ஒரு பொருளை அறிய உதவும் பக்கம், பக்கதன்மை வசனம் எனும் இரு தொடர்களுக்கிடையே காணப்படும் தேவையான வடிவத்தை மூவகையாகக் கூறும்.

(01) காரண காரிய முக்கூற்று முடிவு
(02) சுபாவ ஏது அல்லது ஏது சுபாவம்
(03) அனுவய அனுமான முக்கூற்று முடிவு.

என்பவையாகும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு காரணம் அல்லது ஒன்றின் பக்க காரணங்களைக்காட்டி நிலவும். இது

உடன்பாடு, எதிர்மறை என்ற இரு நிலைகளில் நிறுவப்படும். ஏது சுபாவம் என்பது அனுமான முக்கூற்று முடிவு எனப்படும். அனுமான முக்கூற்று முடிவானது இவ் வெள்ளிடைக்கண் குடமில்லை, தோன்றாமையின் முயல் தலையில் கொம்பு காணப்படாமை போன்றதாகும். இக் கூற்றுக்களில் ஏது சுபாவம் கூறுகருத்தினை தின்னாகரும் ஒன்றாகவே கருதுகின்றார்கள்.

அனுமானம் பற்றிய சிறப்பியல்பு களை நாம் தர்க்கவியல் ரீதியாக நோக்குகையில் முக்கூற்று முடிவுகளின்படி அடிப்படையில் நாம் நோக்கும் போது ஐந்து உறுப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு நிறுவ முயற்சிக்கின்றது. அளவையியல் நோக்கில் எல்லா மனிதர்களும் இறப்பர். சோக்கிரட்டீஸ் ஒரு மனிதன் ஆகவே சோக்கிரட்டீஸ் இறப்பான் என்ற முடிவுக்கு வரும்போது இங்கு ஐந்துறுப்புக்களை அடியாக வைத்தும் ஏனைய பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டும் விளக்கக் காணலாம்.

அனுமானப் பிரமாணத்தினுடைய சிறப்பை ஆராயமுற்படுகையில் அனுமானப் போலி பற்றிய கருத்துக்களும் முக்கியமுடையதாகிறது. போலி என்றால் போன்றிருப்பது என்பது பொருள், அதாவது "போலக் காணப்படுவதால் போலி" என அழைக்கப்படுகின்றது. போலிகள் பல பிரிவுகளாக அமைந்துள்ளது. இதை

"ஈண்டு பக்கப் போலி நான் எகதுப் போலி ஒரு மூன்றாய் வேண்டும் எழு மூன்று ஆகும். விளங்கு உவமைப்போலி ஈரென்பான் காண்டும் தோல்வித்தானம் இரண்டு இரபத்திரண்டாம் கருத்தில் இவை யாண்டும் ஒழிவர் அவையெல்லாம் அளக்கில் அறுபத்தைந்து ஆகும்"

என்ற சிவஞான சித்தியார் பாடலில் பக்கப் போலி, ஏதுப்போலி, உவமைப்போலி, தோல்வித்தானம் என போலிகளை எடுத்தாழ்வதுடன் அவற்றை வகைப்படுத்தி மொத்தம் அறுபத்தைந்தாம் என சுட்டுகிறது. எனவே நாம் முடிவாக நோக்குகின்றபோது அறிவினைப்பெற நாம் பெற்றுள்ள கருவிகளில் அனுமானத்தின் இன்றியமை யாமையானது சாருவாக மதத்தினரைத் தவிர ஏனைய அனைவரும் ஒப்புக்கொண்டு உள்ளனர். இது அனுமானத்தின் தனிச் சிறப்பாக அமைவதுடன் அதன் பகுப்பு, பிரதியட்சத் தொடர்பு, இருநிலை, ஐந்துறுப்புக்கள் அவற்றுக்கிடையேயான தொடர்புகள், போலிகள் என்பவற்றினை எவ்வாறு சிந்தாந்திகள், பௌத்தர், நியாயவைசேடிகர்கள், வேதாந்திகள் ஆராய்ந்துள்ளனர் என மேற்கண்டவாறு ஆராயும் வகையில் அளவைப் பிரமாணங்கள் வரிசையிற் அதன் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் அறிவாராய்ச்சியியல் நோக்கில் மேற்கண்டவாறு அறியமுடியும்.


**உசாவிய நூல்கள்**

(01) சிந்தாந்த தெளிவு – பேராசிரியர், கலாநிதி நா.ஞானக்குமரன், செல்வம் வெளியீடு பருத்தித்துறை – 1994
(02) (அளவைகள்) அளவையியல் – ஆர்ச்சி.ஜேஇபாம் – 1965
(03) பௌத்தம் – சோ.வே.கந்தசாமி
(04) தருக்கஇயல் விளக்கம் – முருகவேள்
(05) சைவசித்தாந்த அறிவாராட்சியியல் – பேராசிரியர், கலாநிதி சோ.கிரு 'ஷ்ணராஜா, இந்துக்கலாச்சார அலுவல்கள் திணைக்களம், இலக்கம் 98, போட் பிளேஸ் – கொழும்பு–07.
(06) தர்க்கபாஷ ' – பேராசிரியர் சோ.கிரு 'ஷ்ணராஜா, மெய்யியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1988.
(07) சைவசித்தாந்தம் – டாக்கடர்.முத்துராமன்: ஆயீ.என. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் - 1975
(08) இந்தியதத்துவ ஞானம் – லக் 'ஷ்மண ஐயர், பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு, நான்காம் பதிப்பு – 1987.
(09) சிந்தனை – 1995 – இதழ் – பேராசிரியர் நா.ஞானக்குமாரன், 2,3 அநுபலத்திப் பிரமாணம்
(10) வாழ்வியற் களஞ்சியம் – பகுதி – 1 கூ.ட.ரா.நா.
(11) இந்திய தரிசனத்தில் சப்தப்பிரமாணம்.ஆ.மகாலிங்கம் 2001 – விரிவுரையாளர் இந்துநாகரிகத்துறை
(12) **THE SIX WAYS OF KNOWLEDGE - DATA 1974 (Rep-1975)**


– செல்வி.மா.சிறிரதிதேவிஞாபகார்த்தக் கட்டுரை மலர் –

செல்வி.அபர்ணா பரமானந்த சர்மா,
3ம் வருடம்,
சமஸ்கிருதத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

# "சைவாலயக் கிரியை முறைகளில் இசைக்கருவிகளும் பண் அமைவுகளும்"

அனாதி மலமுத்தசித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாகினும் அனாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கி மோக்ஷசுகமடைய சாதனமாக கலைகள் இருந்து வந்துள்ளன. அந்த வகையில் இறை வழிபாட்டில் இசையும் அதனோடிணைந்து பண்ணும் அத்ன்வழி இசைக்கருவிகளும் ஆதிகாலந் தொட்டு இறையியலோடு இரண்டறக்கலந்து வந்துள்ளன. இசைவடிவான நாதனை இசையால் மகிழ்வித்தால் இசைவான் என்ற இசை ஞானிகளின் கருத்திற்கமைய இறை வழிபாட்டில் இன்றியமையாததாக விளங்கும் பஞ்சபுராணப் பாக்களோடு தாளமும், மேளமும், குழலும், யாழும் ஒன்றிணைந்த வகையில் பண் அமைவுகளுக்கமையப் பாடப்படும் பாடல்கள் பேரானந்தத்தின் தோற்றுவாயாக இறையுணர்வைத் தரவல்ல பொக்கிஷங்களாக இசைக்கருவிகள் விளங்குகின்றன.

ஆதிகாலந் தொட்டு இசைக் கருவிகளின் பயன்பாடு இறையியலோடு இணைந்த வகையில் இருந்து வந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. சங்ககாலந் தன்னில் இலச்சனைகள், கல்வெட்டுக்கள், எச்சங்கள் மூலம் கண்டறியப்பட்ட இசைக் கருவிகள் இளங்கோவடிகள் வாழ்ந்த சங்கமருவிய காலத்தில் தெய்வீகக் கலை வளர்க்கும் இசை ஆசான்களினதும், நாட்டிய மகளிர்களினதும் கைகளில் தவழ்ந்து தேவார திருவாசகங்கள் எழுந்த பக்தி நெறிக்காலமாகிய பல்லவர் காலந்தன்னில் அடியார்கள் கைகளிற் சேர்ந்து திருக் கோயில் வழிபாட்டில் இடம் பெறலாயின. தொடர்ந்து வந்த ஏனைய சோழ, நாயக்க, ஐரோப்பியர் காலங்களில் மட்டுமல்லாது இன்றும் இறை வழிபாட்டில் இசைக் கருவிகள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளமை கண்கூடு.

இந்துப்பண்பாட்டு மரபிலே இன்றியமையாத இடத்தை வகித்துவரும் விக்கிரகக்கலை மரபில் இடம்பெறுகின்ற விக்கிரகங்களையும் ஆலயங்களின் கருவறைகளில் காணப்படுகின்ற விக்கிரகங் களையும் அவதானிக்கும் போது இறை வழிபாட்டுடன் இசைக் கருவிகளுக்குள்ள நெருக்கத்தினை உணரமுடிகிறது. சான்றாக ஆலயங்களில் காணப்படுகின்ற நடராஜர், காளி போன்ற தெய்வங்களின் திருக்கரங் களில் அமைந்திருக்கின்ற "பிருதுவி" வாத்தியமான உடுக்கு வாத்தியத்தைக் கூறலாம். கலையரசி கலைமகளின் கரந் தழுவும் வீணையும், அவதாரபுருஷனான கிருஷணன் கரத்தை அலங்கரிக்கும் புல்லாங்குழலும் தெய்வீகத் தோடு இணைந்த வகையில், கலையுடனும் இறை வழிபாட்டுடனும் இக்கருவிகள் எத்துணை நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் இறைவனுக்கு நிகழ்த்தப்படும் நித்திய, நைமித்திய, காமிகக் கிரியைகளின் போது இசைக்கப்படும்' இசைக்கருவிகளை பொதுவாக ஐந்து வகையாகப் பிரிக்கலாம். மரத்தினால் செய்யப்பட்ட கருவிகளை "பிருதுவி வாத்தியங்கள்" எனவும், சங்கு முதலிய கருவிகளை "அப்பு வாத்தியங்கள்" எனவும், உலோகங்களால் செய்யப்பட்ட கருவிகளை "ஆக்னேய வாத்தியங்கள்" எனவும், துளை உள்ள கருவிகளை

"வாயவ்விய வாத்தியங்கள்" எனவும், ராகபேதம் காட்டும் வாத்தியங்களை "ஆகாச வாத்தியங்கள்" எனவும் பிரிக்கலாம்.

இவ் ஐந்துவகை வாத்தியங்கள் பற்றியும், அவற்றிற்கு வழங்கப்பட்ட பெயர்கள் பற்றியும் கிரியா நெறி விளக்கம் கூறும் நூல்கள் பல மிகத்தெளிவாக எடுத்துக்கூறியுள்ளன. அவற்றுள் மத்தளம், படகம், பேரிகை, சல்லரி, சங்கு, பேரி, பஞ்சமுகீ, வீணை, முகவீணை, தும்புரு வீணை, நாரத வீணை, குழல், மிருதங்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றோடு அண்மைக்காலங்களில் நாதஸ்வரம், தவில், தாளம், உடுக்கு, டமாரம், கின்னரி, கொம்பு, கெஞ்சிரா, சுத்தமத்தளம், திமிலி, பம்பை, பறை ஆகிய இசைக்கருவிகளும் இறை வழிபாட்டின்போதும், திருக்கோயிற்கிரியை நெறிகளின்போதும் இடம்பெற்றன. இன்றைய காலத்தில் இவ்வாத்தியங்களில் பல அற்றுப்போக சில வாத்தியங்களே ஆலயங்களில் இசைக்கப்பட்டு வருகின்றன. காலத்தின் தன்மைக்கேற்ப இக்கருவிக ளோ்டு மேலை நாட்டுக் கருவிகள் சிலவும் இணைந்துள்ளன. சான்றாக பிடில், கிளாரினெட் போன்ற வாத்தியங்களைக் குறிப்பிடலாம்.

அன்றுதொட்டு இன்றுவரை திருக் கோயில்களில் கிரியைகள் நடாத்தும் போது பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளாக சங்கும் மணியும் விளங்குகின்றன. மஹாவிஷ்ணுவின் கரத்திலிருக்கும் இச்சங்கு வாத்தியம் ஆலயங்களில் திருவிழாக் காலங்களிலும் நித்திய புஜையிலும் வெகுவாக ஊதப்படுவதைக் காணலாம். தேவர்களைக் கூவி அழைப்பதற்கும் அரக்கர்களைத் துாரவிரட்டுவதற்கும் பூஜை வேளைகளின் போது மணியொலி உண்டாக்கப்படுகின்றது. கம்பீரமான இனிய ஓசையை எழுப்பும் காண்டா மணி, கைமணி, கொத்துமணி என்பன ஆலயக்கிரியைகளில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

நாததத்துவமாய் விளங்கும் நாதனுக்கு நடைபெறும் பூஜைகளின் போது பொதுவாக அனைத்துச் சைவாலயங்களிலும் நடைபெறும் கிரியைகளின் போதும் "மங்கள வாத்தியம் " வாசிக்கப்படுவதை அவ தானிக்கலாம். இவ் இசைக்கருவியானது பிரமோற்சவம், நித்திய, நைமித்திய உற்சவ காலங்களில் இன்றும் இசைக்கப்பட்டு வருகின்றது. இந்நாகசுரக் கருவியில் "திமிரி", "பாரி" என இரண்டு வகைகள் உள்ளன. இன்று ஆலயக்கிரியைகளின் போது பயன்படுத்தப்படும் கருவி பாரி வகையைச் சார்ந்தது.

முதன் முதலில் நாகசுரம் பற்றி கி.பி.17ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் கூறபப்படும் "பாதசங்கிரகம்' என்ற நூலில் குறிப்புண்டு. ஆலயங்களிலே திருவனந்தற் பூஜையிலிருந்து இரண்டாம் ஜாமப்பூஜை வரை முறையே வசந்தா, பூபாளம், பிலகரி, கேதாரம், தன்யாசி, அசாவேரி, சுத்தசாவேரி, ஆரபி, சுருட்டி, ஸ்ரீராகம், மணிரங்கு, முகாரி, மந்தாரி, பூரிகல்யாணி, கல்யாணி ஆகிய ராகங்கள் நாதசுரத்தில் இசைக்கப் படுகின்றது. பிரம்மோற்சவ காலங்களில் சுவாமி வீதியுலா வரும்போது நவசந்தி களிலும் வர்ணம், ராகம், பல்லவி, கீர்த்தனை, பதம், ராமாலிகை ஆகிய உருப்படிகள் வாசிக்கப்பட வேண்டும் என்ற வரன்முறை காணப்பட்ட போதும் சென்ற சில ஆண்டுகளாக அம்முறை அருகியே வந்துள்ளது. இன்று நாகசுரம் வாசிப்பவர்கள் தமக்குத் தெரிந்த உருப்படியையே வாசித்து முடித்து விடுவார்கள்.

சைவத் திருக்கோயிற் கிரியை முறைகளில் மஹோற்சவக் கிரியையில் இடம்பெறும் நவசந்திகளின் போது ஒவ்வோரு சந்திகளுக்கும் முறையே இன்னென்ன வேதம், தாளம், ராகம், நிருத்தம், பண் வாத்தியம் என்பன நிகழ்த்தப்பட வேண்டும் என்ற விதிமுறை நடைமுறையில் உள்ளது. கோவிலின் கிழக்குத் திசையாகிய(முன்பக்கம்) பிரம்ம சந்தியில் 'பிரம்ம' தாளமும், 'பைரவீ' ராகமும் 'காமேஷம்' என்ற பண்ணும்,

'கச்சபுட' வாத்தியமும் வாசிக்கப்பட வேண்டும். இதே போல் கிழக்குத் திசையாகிய 'இந்திர சந்தியில்' சம தாளமும், 'பைரவி' ராகமும், 'காமேஷம் என்ற பண்ணும், 'சாசபுட' வாத்தியமும், தென்கிழக்குத் திசையாகிய 'அக்கினி' சந்தியில் 'மத்தாவரண' தாளமும், 'வராளி' ராகமும், பண் 'கொல்லியும்' வாத்தியம் 'உத்கடிதமும்', தென் திசையாகிய யம சந்தியில் 'பிருங்கிணீ' தாளமும், 'ராமகிரி' ராகமும், பண் 'கௌசிகமும்', வாத்தியம் 'மிளித மட்டயமும்', தென்மேற்குத் திசையாகிய 'நிருதி' சந்தியில் 'மல்ல' தாளமும், 'பைரவீ' ராகமும், பண் 'நட்ட பாஷாவும்'', 'லம்புக' வாத்தியமும், மேற்கு 'வருண' சந்தியில் 'நவ' தாளமும் 'கேசிக' ராகமும், பண் 'ஸ்ரீகாமரமும்' 'சிம்மநாத' வாத்தியமும் வடமேற்குத் திசையாகிய 'வாயு' சந்தியில் 'பலி' தாளமும், 'மகுடராமகிரி' ராகமும், பண் 'தக்கேசி'யும் 'ஜம்புட' வாத்தியமும், வட 'குபேர' சந்தியில் தாளம்'கொட்டரி'யும் ராகம் 'மாளவி'யும், பண் 'தக்கேசி' யும்,'பஞ்சதாள' வாத்தியமும், வடகிழக்கு திசையாகிய 'ஈசான்' சந்தியில் தாளம் 'டக்கரி'யும், ராகம் 'தேசாஷீ'' யும் 'சாலாபாணி' பண்ணும், 'கும்ப' வாத்தியமும் இசைக்கப்பட வேண்டும் என்பது விதி. இவ்விதியினை நோக்கும்போது இந்துப் பண்பாட்டு மரபில் சைவாலயக்கிரியை முறைகளில் இசைக்கருவிகளோடு சேர்ந்து பண்ணமைவுகளும் இன்றியமையாத இடத்தைப் பெற்று விளங்குகின்றன என்பதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் ஆலயங்களில் இடம்பெறும் துவஜாரோகண, துவஜாவரோகணக் கிரியைகளில் துவஜாரோகண (கொடியேற்ற) தொடக்கக் கிரியைகளில் அனைத்து இடையூறுகளையும் நீக்கும் கணபதிக்கு சமர்ப்பிக்கப்படும் வகையில் பண் 'பஞ்சமமும்', 'சசபுட' வாத்தியமும் 'கணபதி' தாளமும் 'வாகுள' இராகமும் வாசிக்கப்படுகின்றமை கவனிக்கத்தக்கது.

காலங்காலமாக திருக்கோவில் கிரியைகளின் போது நாகசுரக் கருவியோடு இணைந்த வகையில் தாள வாத்தியமாகக் கருதப்படும் தவிலும் தாளமும் வாசிக்கப்பட்டு வந்தன, வருகின்றன. நாகசுரம் வாசிக்கப்படும் இடங்களில் எல்லாம் பெரும்பாலும் இத்தவில் வாத்தியமும் இசைக்கப்படுகின்றது. நாகசுர தவில் இசைக்கேற்ப தாளவேறுபாடுகளைக் காட்டும் சல்லரி பெரிய மேளத்தோடு இணைந்த ஒரு கருவியானாலும் ஆலயங் களில் நிகழ்த்தப்படும் பஜனை நிகழ்வு களிலும் கூட்டுப்பாடல்களிலும் அதிகளவு பயன்படுத்தப்படுகிறது.

தஞ்சாவூர், திருவாரூர், பூண்டி போன்ற இடங்களில் அமைந்துள்ள ஒரு சில ஆலயங்களில் கிரியை நெறியின் போது 'பஞ்சமுகவாத்தியம்' எனப்படும் தாள வாத்தியம் இசைக்கப்படுகின்றது. இவ் வாத்தியம் ஐந்து முகங்களைக் கொண்டது. இதன் நடுமுகம் இறைவனின் சத்யோஜாத முகம் என்றும் மற்றைய நான்கு முகங்களும் முறையே ஈசானம், தற்புருஷம், வாமதேவம், அகோரம், என்றும் கொள்ளப்படுகின்றன. தற்போது இவ்வாத்தியம் சில ஆலயங்களில் இருந்தாலும் பெரும்பாலான ஆலயங்களில் அறவே இல்லாது போய்விட்டது.

இலங்கையில் சில ஆலயங்களிலும் தென்னிந்தியாவில் பல ஆலயங்களிலும் கிரியை வேளைகளில் முகவீணைவாசிப்பது வழக்கில் உள்ளது. வீணை என்ற பெயரை இது பெற்ற போதும் தற்போதைய தந்திக்கருவியாகிய வீணைக்கும் இதற்கும் தொடர்பில்லை. இதன் அமைப்பு நாகசுரம் போன்றது. ஆனால் அதைவிடச் சிறியது. ஆரம்பத்தில் இக்கருவி கோயிற் கிரியா வேளையில் நிருத்த நிகழ்ச்சியின் போது சின்னமேளத்திற்குப் பக்கவாத்தியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது அருகிப்போனதால் பெருமளவு இதன் பயன்பாடு அற்றுப்போய் விட்டது.

கோவில்களில் நடைபெறும் திருவிழாக் காலங்களிலும், விசேட தினங்களிலும் அனைத்து வாத்தியங்களும்

இசைக்கப்பட வேண்டும் என காமிக ஆகமம் சுட்டி நிற்கின்றது. மகோற்சவ காலங்களில் குறிப்பாக துவஜாவரோகண விழாவில் கொடிச்சீலையுடன் வீதியுலா வரும்போது கிரியை நிகழ்த்தும் சிவாச்சாரியார் அவர்களால் மௌனோற்சவ நிகழ்வின் முடிவில் சகல வாத்தியம் கரோதி அதாவது எல்லா வாத்தியங்களும் இசைக்கப்படட்டும் எனக் கூறப்படுகின்றது. இச்சர்வ வாத்தியங்களும் இசைக்கும் ராக, தாள, பண்கள் பற்றிய விளக்கங்கள் கிரியா நூல்கள் பலவற்றில் கூறப்பட்டுள்ளன. இச்சர்வ வாத்திய நிகழ்வின்போது இறைவன் கீதம், வாத்தியம், பண், நிருத்தியம், ஆகியவற்றால் வழிபடப்படுகின்றான். வேத மந்திர உச்சாடனங்களைத் தொடர்ந்து தேவார திருவாசகப் பராயாணம் பண்ணோடு பாடப்பட்டு அதைத்தொடர்ந்து மிருதங்கம், பிரம்மதாளம், திருச்சின்னம், முகவீணை, நகோரவாத்தியம், மல்லரி, முரளி, சங்கு, நாகசுரம், பூரி, நகரா, உடுக்கை, டமாரம், சுத்தமத்தளம், பஞ்சமுகவாத்தியம், பம்பை, குழல், கின்னரி, கொம்பு, தவில், கஞ்சிரா, தாளம், மத்தளம், ஆகிய திருக்கோவில் இசைக்கருவிகளும் ஒன்றாகச் சேர்ந்து இசைக்கப்படும் மரபு இன்றும் இருந்து வருகின்றது. இவற்றில் சில இன்று வழக்கில் இல்லை.

பிரதோஷ விழாக்காலங்களில் நிகழும் சந்தியா காலமாகிய மகாபிரதோஷ காலத்தில் பரமசிவன் நடனம் புரிவதாகச் சொல்லப்படுகிறது. இந் நடனத்தின் போது பிரம்மா தாளமிட மஹாவிஷ்ணு மத்தளம் வாசிப்பார் எனக் கூறப்படுகின்றது. சிவன் தாண்டவத்திருக்கோலமாகக் காட்சி தரும் திருக்கோயில்களில் இன்றும் இந்நடனத்தை அனுசரித்து சுத்தமத்தளமும், தாளமும் பிரதோஷ காலக்கிரியை நெறிகளின் போது வாசிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்து மாவிட்டபுரம் ஆலயம், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயம், யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் போன்ற ஆலயங்களில் மகோற்சவக் கிரியைகளின் போது மிருதங்க வாத்தியம் வாசிக்கும் வழமை இன்றும் உள்ளது.

இவை தவிர கிராமியத் தெய்வங்களாகிய காளி, வைரவர், மாரி அம்மன் போன்ற தெய்வாலயங்களில் நடைபெறும் கிரியைகளின்போது பறை, உடுக்கை, டமாரம், டவண்டை, பம்பை போன்ற வாத்தியங்கள் இசைக்கப் படுகின்றன. தென்னிந்தியாவிலுள்ள காளகஸ்தீஸ்வரர் கோயிலிலும் இலங்கை யில் யாழ்ப்பாணத்து பன்றித்தலைச்சி அம்மன் கோவிலிலும் இன்னும் பல கிராமியத் தெய்வங்களின் ஆலயங்களிலும் பறை மேளம் அடிக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. அநேகமான ஆலயங்களில் மகோற்சவத்தைத் தொடர்ந்து வரும் வைரவர் சாந்திக் கிரியைகளின் போதும் பறை மேளம் அடிப்பதுண்டு.

இவ்வாறு சைவாலயக் கிரியை முறைகளில் இசைக் கருவிகளின் பயன்பாடு அன்று தொட்டு இன்றுவரை இருந்து வந்துள்ளது. நித்திய பூஜையின்போது கூட சில ஆலயங்களில் பேரிகை, டமாரம், போன்ற வாத்தியங்கள் இசைக்கப்படுவதைக் காணலாம். சான்றாக இலங்கையில் யாழ்ப்பாண நல்லைக்கந்தன் ஆலயத்திலும் இணுவையம்பதி பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயம், இணுவில் கந்தசாமி கோவில் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இலங்கை, இந்தியாவில் மாத்திரமன்றி உலகின் பல நாடுகளிலும் அமைந்துள்ள ஆலயங்களிலும் இக்கலை மரபு இன்றும் இருந்து வருகின்றது. எங்கெல்லாம் சைவாலயங்களும் கிரியைமுளைகளும் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இசைக்கருவிகளும் இசைஞானிகளும் பாடல்களும் பண்களும் இருந்து வருகிறது.

இவ்வாறு சைவாலயக் கிரியை முறைகளில் இசைக்கருவிகளின் பயன்பாடும் இவற்றோடு சேர்ந்த வகையில் பண்ணமைவுகள் பற்றியும் நோக்கிய நாம் 'பண்' என்ற பதம் பற்றிய சில பல கருத்துக்களை அறிதல் அவசியமாகிறது. 'பண்' என்றால் 'இராகம்' எனப்பொருள்படும். தேவாரப்பதிகங்களையும் 'பண்கள்' என்று குறிப்பிடுவது மரபு. இன்றைய சங்கீதத்திற்கு இராகமே ஆதாரம் இக்கருத்தையே

'இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று' என ஔவையாரும் கூறியுள்ளார். இராகம் என்னும் இப்பதம் இசைப்பொருளுடன் பரதருக்குப் பிற்காலத்தில்தான் வந்தது. முதன் முதலில் இராகம் என்னும் பெயரை காளிதாஸர் (வடமொழிப்புலவர்) இயற்றிய வடமொழித் தாளங்களில் தான் காண்கிறோம்.

சைவாலயங்களில் கிரியைகளின் போது அதாவது நித்திய, நைமித்திய, காமிகக்கிரியைகளின்போது பண்ணோடு சேர்ந்த வகையில் பஞ்ச புராணங்கள் ஓதப்பட்டு வருவது கண்கூடு. இத்தேவார திருவாசகங்களின் எழுச்சி பல்லவகாலத்தின் ஆரம்ப கட்டத்திலிருந்தே தொடங்கி விட்டது. காரைக்கால் அம்மையாராலும் சமயகுரவர் நால்வராலும், ஆழ்வார்களாலும் பண்கலந்த பாடற்பபரிசு படைக்கப்பட்டது. இவை பிற்காலத்தில் திருமுறைகளாகவும் திவ்யபிரபந்தங்களாகவும் தொகுக்கப்பட்டன.

சம்பந்தப் பெருமானால் பாடப்பட்ட முதற் பதிகமாகிய 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் பதிகம் 'நட்டபாடை' என்ற பண்ணமைவுக்கேற்ப பாடப்பட்டதாகும். திருவானைக்காவில் பாடப்பட்ட 'வானைக் காவில் வெண்மதி' என்ற பதிகம் 'கௌசிகம்' என்ற பண் கொண்டது. இவை தவிர 'பஞ்சமம்', 'குறிஞ்சி', 'பழம்பஞ்சுரம்', 'காந்தார பஞ்சமம்'' எனப்பல பெயர் கொண்ட பல்வேறு பண்கள் இந்திய சங்கீதத்திலும் தேவார திருப்பதிகங்களிலும் காணப்படுகின்றன.

ஆலயக் கிரியைகளின் போது மகோற்சவக் கிரியைகளின் தொடக்கத்தில் நடைபெறும் கணபதி பூஜையில் 'பஞ்சமம்' எனப்படும் பண் பாடப்படுகின்றது. மேலும் கொடியேற்ற விழாவின்போது கொடியேற்றப் படும் முன் அந்தந்தத் தெய்வங்களுக்குரிய வாகனங்களுக்குரிய தாளமும், பண்ணும் ஓதப்பட வேண்டும் என்பது கிரியை மரபு.

மஹோற்சவக் காலங்களில் தீர்த்தத்திருவிழாவின் போது திருப்பொற் சுண்ணம் இடிக்கும் போது தாளமும் பண்ணும் வாசிக்கப்பட வேண்டும். மேலும் நவ சந்திகளில் நடைபெறும் கிரியைகளில் துவஜாரோகணம், துவஜாவரோகணத் தின்போது ஒன்பது சந்திகளுக்கும் முறையே ஒன்பது பண்கள் பாடப்பட்டுள்ளன.

1. பிரம சந்தி - பஞ்சமப் பண்
2. இந்திர சந்தி- காமேஷப்பண்
3. அக்னிசந்தி - கொல்லிப்பண்
4. யம சந்தி - கௌசிகப்பண்
5. நிருதிசந்தி - நட்டபாஷாபண்
6. வருணசந்தி - ஸ்ரீகாமரப்பண்
7. வாயுசந்தி - தக்கேசிப்பண்
8. குபேரசந்தி - தக்கேசிப்பண்
9. ஈசானசந்தி - சாலாப்பண்

என்பனவாகும்.

இதுவரை நைமித்தியக் கிரியை களுள் அடங்கும் மஹோற்சவக் கிரியையில் பண்ணமைவுகள் பற்றிப் பார்த்த நாமத் இனி நவக்கிரகக் கிரியைக்குச் செல்வோம். 'நவக்கிரக ஹோமம்' எனப்படும் நவக்கிரகங்களின் நன்மை வேண்டி செய்யப்படும் ஹோமமானது ஆலயங் களிலும், வீடுகளிலும், திருமண வீடுகளிலும், வியாபார ஸ்தலங்கள் திறப்பு விழாக்களிலும் செய்யப்படும் கிரியை முறைகளுள் ஒன்று. இந்நவக்கிரகங்களுக்கும் பண் கூறப்பட்டுள்ளது. நவக்கிர ஹோமத்தில் நவக்கிரகங்களால் ஏற்படும் எல்லாவித தோஷங்களும் நீங்கும் பொருட்டு பராயணம் செய்யப்படுவது ''கோளறு திருப்பதிகம்' இப்பதிகத்துக்குரிய பண் 'பியந்தைக் காந்தாரம்' என்பதாகும்.

ஆலயங்களில் நிகழ்த்தப்படும் நித்திய, நைமித்திய, காமியக் கிரியை யாயினும் சரி இல்லங்கள், பொது இடங்களில் நன்மை வேண்டி செய்யப்படும் கிரியையாயினும் சரி கிரியைகள் நடைபெறும் போது தேவாரத்திருப்பதிகங்கள் பாடுவது முறை. பண்ணாகவும், பண்ணின் இசையாகவும், பண்ணின் பயனாகவும் விளங்கும் இறைவனை பண்ணிறை பாடல்களால் பாடிப்பணிந்தனர் சமயப் பெரியோர்கள். அந்த வகையில் சம்பந்தப் பெருமானால்

"பண்ணும் பதமேழும்........" எனவும்
நாவுக்கரசரால்
"பண்ணின் இசையாக நின்றாய் போற்றி...... "
எனவும்,
சுந்தர மூர்த்திநாயனாரால்
"ஏழிசையாய் இசைப்பயனாய்....." எனவும்,
மணிவாசகரால்
" பண்களிகூர் தரு பாடலொடாடல் பயின்றிடு மாகாதே....." எனவும் சமய குரவர் நால்வராலும் பண்கொண்டு இறைவன் புகழ் பாடிப்பரவப்பட்டது.

சமயக் குரவர்கள் மட்டுமல்லாது சமயப்பெரியோர்கள் பலரும் பல்வேறுபட்ட இலக்கிய சமயஞ்சார் நூல்களும் 'பண்' பற்றிப் பாடியுள்ளன. சான்றாக 'ஆடினான் புகழ் அங்கை நரம்பினால் நாடிநற் பண்ணும் நயப்புற' (கம்ப / ஊர்தேடு.178)

'பண்ணிய விசையின் படிவமாந் தெரிவை பங்கனை'
(மஹாபாரதம் / சௌத்திக 6)
பண்ணும் பரதமும் தீஞ்சொற் பனுவலும் ..."
(குமரகுருபரர்)

இவற்றைக் கூறலாம். இவற்றைத்தவிர விடிகாலை வேளையில் 'மருதப்பண்ணும்', மாலையில் 'செவ்வழிப்பண்ணும்', நண்பகலில் 'பாலைப்பண்ணும்', நடுஜாமத்தில் 'குறிஞ்சிப்பண்ணும்' பாடப்பட வேண்டும் என உமாபதி சிவாச்சாரியாரின் திருமுறை கண்ட புராணத்தில் காணப்படுகின்றது. இவற்றோடு 'பகற்பண்', 'இராப்பண்', 'பொதுப்பண்' எனப்பலவகைகள் உண்டு.

ஐவகை நிலங்களின் பெயர் சுட்டும் பண்களும் உள. அவற்றில்

1. மருதப்பண்
2. குறிஞ்சிப்பண்
3. செவ்வழிப்பண்
4. விளரிப்பண்
5. பாலைப்பண்

போன்ற பண்களைக் குறிப்பிடலாம். இப்பண்கள் அந்தந்த நிலங்களுக்குரிய தெய்வங்களைப் போற்றிப்பாட பயன்படுத்தபட்டதாக அறியமுடிகின்றது.

எனவே தொகுத்து நோக்கும் போது ஆலயங்கள் அருள் சுரக்கும் இடங்களாக மட்டுமல்லாது அழகுக் கலைகளின் உறைவிடமாகவும், இசைவளர்க்கும் அரங்கமாகவும் இருந்துவந்தது, இருந்து வருகிறது, இருந்துவரும் என்பதில் ஐயமில்லை.

***உசாவியவை:-***


| | | |
|---|---|---|
| இலக்கிய இசைச்சாரல் | - | S.சிவானந்தராஜா |
| தோத்திரப்பாமாலை | - | தம்பையா சின்னத்துரை நினைவுமலர் 1997 |
| இசைப்பண்பு | - | K.C. தியாகராஜன் |
| தமிழர் சால்பு | - | பேரா.சு.வித்தியானந்தன் |
| தமிழர் இசை | - | Dr.A.N.பெருமாள். |

செல்வி.மகேந்திரகுமாரி கனகராசா
இந்துநாகரிக சிறப்புக்கலை,
இறுதிவருடம்.

# சிவனின் திருத்தாண்டவம்

இது விஞ்ஞான யுகம், எந்த வொன்றையும் அறிவின் துணை கொண்டு ஆராய்ந்து உண்மை காண வேண்டும் என்று நினைப்பதே விஞ்ஞானத் தின் அடிப்படை. மனிதன் எவ்வளவு தான் அறிவின் துணைக்கொண்டு மேலே சென்றாலும் சமயக்கொள்கைகளை என்றும் மறந்ததில்லை. மனித இனம் என்று தோன்றியதோ அன்றே சமயமும் தோன்றியது. இப்பிரபஞ்சம் சடப்பொருட்களாலும், உயிருள்ள பொருட்களாலும் சூழப் பெற்றுள்ளது. இதனால் இப்பிரபஞ்சம் முழுதுமே மனிதனின் சிந்தனைக்கு நிலைக் களனாக இருந்தது. மனிதனிடம் சமய ரீதியான தெய்வ நம்பிக்கை உண்டான பின்னரே அவன் நல்ல குடும்ப வாழ்வு, சமுதாயக் கட்டுப்பாடு, அரசியல் அமைப்பு என்பன தோற்றம் பெற்று மனிதனை அறவழியில் நடப்பதற்கும் வழிகாட்டியது.

நாம் வாழும் இப்பூமியில் காலையில் சூரியன் நியதிதவறாமல் உதிப்பதும், அது மறைவதும், இரவில் சந்திரன் நிலவைத் தருவதும், பருவம் மாறாது காற்று வீசுவதும், மழை பெய்வதும், தாவரங்கள் உண்டாகி விளைவைத் தருவதும் என்று, ஒரு நியதியில் நடைபெறுவதும், அந் நியதியை எமக்கு அமைத்துத் தந்தவன் ஒருவன் இருக்கின்றான் என்றும், திடமாக நம்பினர். இன்று அறிவு முன்னேற்றத்தால் மேல் நோக்கிச் சென்றாலும் தம்மை ஒத்த ஒரு வடிவத்தில்தான் இறைவனைக் கற்பிக்க முடியும். இக்கருத்தையே 19ம் நூற்றாண்டின் மாபெரும் மெய்ஞ்ஞானியாகிய விவேகானந்தர், "மீன்கள் எல்லாம் கூடித் தமக்குள் ஒரு கடவுளைப் படைத்தால், அதற்கு ஒரு மீன் வடிவம் தான் கொடுக்க முடியும் என்றார். மனிதன் நாமரூபமற்ற பரம்பொருளுக்கு ஒரு வடிவம் கொடுக்க விரும்பினான். அவனே இப் பிரபஞ்சத்தை ஆட்டுகின்ற சிவன் என்று கண்டுணர்ந்தான்.

இயங்காத ஒன்று உயிர்களைப் படைக்க முடியுமா? உலகங்களின் இயக்கங்களே, பருவமாற்றத்தையும், உயிர்களையும் தோற்றுவித்தன. இவ் இயக்கத்தைக் காட்டவே யோகநிலையில் இருந்த சிவனை ஆடும் நிலைக்குக் கொண்டுவந்தனர். ஆடும் நிலையில்ச் சிவனது தோற்றத்தில் சில மாற்றங்களையும் செய்தனர். யோகநிலையில் இருந்த சிவனை முத்தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களை மூன்று முகங்களின் வாயிலாக வெளிப்படுத்தினர். ஆடும் நிலையிலோ சிவனது முகத்தை ஒன்றாக்கி கைகளை நான்காக்கினர். படைத்தலைத் துதிக்கைக்கும், காத்தலை அபயக் கைக்கும், அழித்தலை அக்கினி ஏந்திய கைக்கும், அவற்றோடு மறைத்தலையும், அருளலையும் எஞ்சிய ஒரு கைக்கும் ஒரு காலுக்கும் அமைத்தனர்.

நாம் வாழும் பூமிக்கு 'ஜகத்' என்றொரு பெயர் உண்டு. ஜகத் என்றால் அசைந்து கொண்டிருப்பது என்பது பொருள். இப் பூமியைச் சார்ந்த ஏனைய கோள்களும் அசைந்து கொண்டே இருக்கின்றன. சூரியனையும் அதனை அண்டியுள்ள கோள்களையும் அண்டம் என்பர். (Solar system of sun family) நமது சூரியனைக் கொண்டுள்ள அண்டம் போல, பல கோடி

அண்டங்கள் வானில் உலாவிக் கொண்டிருக்கின்றன. இவை யாவும் வெறும் அனுமானமோ, கற்பிதமோ அல்ல. இவை பற்றி விஞ்ஞானிகள் ஆய்வு செய்து கொண்டே இருக்கின்றனர். 8 அடி, 16அடி, அளவுள்ள பெரிய தொலைநோக்கி (Telescope) வானவிற் கண்ணாடி(stereos cope) புகைப்படக் கண்ணாடி(cameras) என்பவற்றின் மூலம் கண்டு கூறப்பட்ட விடயங்கள் ஆதார பூர்வமான காட்சிகளாகக் காணப்பட்டவை.

சூரியனுக்கு மேல் 350 ஒளி வருடங்களுக்கு அப்பால் திருவாதிரை நக்ஷத்திரம் உள்ளது. இது 350 சூரியன்களைக் கொள்ளும் அளவு பருமன் உடையது. ஒரு லட்சம் சூரியர் ஒருமித்துத் தரக்கூடியளவு வெப்பத்தை இந்நக்ஷத்திரம் கொண்டுள்ளது. அதுவும் அசைந்து கொண்டே இருக்கின்றது. இந்தத் திருவாதிரையையே ஒரு நட்சத்திரக் குஞ்சாக்கி விடுமளவிற்குப் பெரியனவாக 'அன்றாறீஸ்', 'எப்சிலன்' என்ற நக்ஷத்திரங்கள் உள்ளன. அவையும் அசைந்து கொண்டே இருக்கின்றன. இவ் ஆதார பூர்வமான இக் காட்சிகளை அமெரிக்காவில் உள்ள வில்சன் மலைவான ஆராய்ச்சி மாளிகையில் (Mount wilson of servatory) காணப்படும். 100'' விட்டமுள்ள தொலைக்கண்ணாடி மூலம் வானத்தை நாற்புறமும் 10கோடி ஒளிவருட தூரம் பார்க்க முடிகிறதாம். கலிபோர்னியாவில் பலோமர் (palomer) மலையில் உள்ள வான ஆராய்ச்சி நிலையத்தில் காணப்படும் 200'' விட்டமுள்ள தொலைக் கண்ணாடி மூலம், 100கோடி ஒளி வருட தூரம் பார்க்க முடிகிறதாம். அவ்வாறு பார்க்கும்போது கோள்கள் யாவும் அசைந்து கொண்டே இருக்கின்றன. இவ்வாறு அசைந்துகொண்டே இருக்கின்ற கோள்கள் என்றேனும் தளம்பியதாகவோ, நழுவியதாகவோ இல்லை.

நாம் வாழும் பூமியானது 24மணிக்கு ஒருதடவை தன்னையும் சுற்றி, 365 நாள்களுக்கு ஒரு தடவை சூரியனையும் சுற்றுகின்றது. இந்நிலையில் நாம் நின்ற நிலையில் நின்றவாறும், அமர்ந்த நிலையில் அமர்ந்தவாறும், படுத்தநிலையில் படுத்தவாறும் எவ்வித சலனமும் இன்றி வாழ்கிறோம். இதன் அசைவு வேகம் சம்பந்தப்பட்டவற்றைத் தாக்காத வண்ணம் அவ்வேகத்தைத் தன்னசைவு வேகத்துள் மடக்கி வைத்துக் கொண்டே தன்னிலையில் மாறாமல் அசைகிறது. "சித்துப் பொருள் ஒன்றினால் அசையப்படாத வரை சட்டத்துக்கு அசைவில்லை" என்கின்றது. ஆகம வாக்கியம் இவ்வாறே சடப் பொருளாகிய பூமி சித்துப் பொருளின் ஆட்டத்தாலேயே அசைகின்றது. பூமி மட்டுமன்றி ஏன் இப் பேரண்டமே சித்தாகிய சிவனின் திருத்தாண்டவத்தாலேயே அசைகின்றது. இதனையே,

'சாட்டி நிற்கும் அண்டமெல்லாஞ்
சாட்டையிலாப் பம்பரம் போல்
ஆட்டி நிற்கும் ஒருவன்''

எனச் சித்தர்கள் குறிப்பிடுவதால் நியாயம் இருக்கின்றதே, இதனை நம்முன்னோர் அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது என்று குறிப்பிட்டனர். இவற்றினையே கவிஞர் கண்ணதாசன் பாடலில், "ஆட்டுவித்தார் யார் ஒருவர் ஆடாதாரோ" என்று குறிப்பிட்டுள்ளார். இதனையே மாணிக்கவாசகர் திருவாசகத்தில்

"அண்டைப் பகுதியின் உண்டைப் பிறக்கம்" எனத் திருவண்டப்பகுதியில்க் குறிப்பிட்டுள்ளார்.

ஆதியும் அந்தமும் இல்லாத நம் சிவன் பல்லாயிரங் கோடி பேரண்டங்களையும் தன் சக்தியால் ஆட்டிக்கொண்டே இருக்கின்றனர். பேரண்டமாக நாம் காண்பவை அனைத்தும் வெறும் உருவெளித் தோற்றமே. இவை யாவற்றுக்கும் உள்ளீடாக உள்ள அணுத்தரும் தன்மையிலேயே சிவனின்

திருத்தாண்டவம் அமைகின்றது. 'அணுவுக்கணுவாக' என மணிவாசகர் பாடியதும் சிவனையே. இன்றைய விஞ்ஞானம் உடைக்கமுடியாத அணுவை உடைத்தது. உடைக்கப்பட்ட அவ் அணுவுக்குள் இலத்திரன், நியூத்திரன், புரோத்தன் முதலிய பல மூலக் கூறுகளைக் கண்டனர். அணுவானது புரோத்தன் என்ற பொருளைச் சுற்றி இலத்திரன் என்ற சிறுபொருள் மிக மிக வேகமாகச் சுற்றி வந்ததை விஞ்ஞானிகள் கண்டுணர்ந்தனர்.

உலகில் உள்ள சரம்(Movable) அசரம் (Immovable) ஆகிய எல்லாப் பொருட்களும் அணுக்களால் ஆக்கப் பெற்றவை. இந்த அணுவில் நடைபெறும் புரோத்தனைச் சுற்றிய இலத்திரன் மூலக்கூறுகளின் ஓட்டம் நின்றுவிட்டால் அழிவைத்தவிர வேறு வழியில்லை என்ற உண்மையை விஞ்ஞானம் கண்டது. அசைவு மயமான அணுவைப் போன்று, ஒழுங்கு தவறாமல் இப்பிரபஞ்சத்தை சற்றும் சலனமற்று உறுதியான முறையில் நிலைக்க வைக்கும் பாங்கில் சிவன் தாண்டவம் ஆடிக்கொண்டே உள்ளான்.

சிவனின் திருநடனத்தை எவரும் கண்டனர் இல்லை. இதனையே அப்பர்

"அரங்கிடை நூலறிவாளர்
அறியப்படாததோர் கூத்தும்"

எனக் குறிப்பிடுவதன் மூலம் ஆடவல்ல வனாகிய சிவனின் திருத் தாண்டவம், நடராஜவடிவத்தையே முக்கிய மாகக் கொண்டுள்ளது. அத்திருத் தாண்டவம், அண்டம் பிண்டம், இகம் பரம், தூலம் சூக்குமம், சேதனம் அசேதனம் அனைத் தையும் தன்னுள் அடக்கிப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலிய பஞ்சகிருத்தியத்தினை செய்ப வனாக இப்பிரபஞ்சத்தை ஆட்டுகின்றான். சிவனின் ஐந்தொழில்க் குறியீடுகளாகிய துடி, அபயகரம், அக்கினி, ஊன்றிய திருவடி, தூக்கிய திருவடிகளை கொண்டு நடனமாடுகிகின்றான்.

இவ்வாறாக ஆடும் சிவனைச் சுற்றிலும் அமைந்துள்ள வளைவுச்சுடர் திருவாசியாகும். இதில்க் காணப்படும் ஒளிச் சுடர்கள் (அனற்பிழம்புகள்) பிற பேரண்டங் களைக் குறிப்பன ஆகும். இப் பேரண்டத்தை பலவாயிரம் பேரண்டங்கள் சூழ்ந்துள்ளன என்பதைக் குறிக்கவே இருள்வாசி எனப்படும் திருவாசி அமைந்துள்ளது. இதனை நம்மவர் வேறு பெயரில்க்குறித்தனராயினும் எரியும் சுடுகாட்டின் இடத்தில்தான் சிவன் தாண்டவமாடுகின்றான்.

பேரண்டத்தில் உள்ள பத்தாயிரம் கோடி நட்சத்திரங்களையும் இயக்கும் சக்தி சூரியனிடத்தில் காணப்படும் சக்தியைக் காட்டிலும் பரந்ததாகும். இதனாலேயே அச்சக்தியைப் பராசக்தி என்றனர். அவளே திருநடனகாரணனின் மனைவியாவாள். நாம் வசிக்கும் பேரண்டம் போலவே பல்லாயிரம் பேரண்டங்களையும் தோற்றுவித்து, அவற்றை முறையாக இயக்கும் மிகப் பரந்ததும் தொன்மையானதுமான சக்தியை ஆதி-பராசக்தி என்றனர். அவள் உலகங் களைத் தோற்றுவித்ததால் உமை என்றும், அகன்ற அண்டங்களுக்கு இறைவியானதால் அகிலாண்டேஸ்வரி என்றும், பரந்த வெளியில் அவளது ஆட்சி நடைபெறுவதால் விசாலாட்சி என்றும், காமாட்சி என்றும் பல பெயர்களைக் கொண்டவள் ஆகின்றாள். இவ்வாறு பல பெயர்களைத் தன்னகத்தே கொண்ட இவள் விசும்பாகிய இறைவனுக்கு மனைவியாவாள்.

இவ்வாறு பரந்து விரிந்து சென்ற மனித அறிவு ஓர் எல்லைக்கு மேல் செல்ல முடியவில்லை. அவனது கற்பனை கூட அவ் எல்லையைக் கடக்க முடியவில்லை. இந்நிலையில்த்தான் சிவனின் அடியில் மிதிபடும் முயலகனாக மனிதன் காணப்படுகின்றான். அவனின் கண்ணும் முகமும் மேல்நோக்கி முயல்கின்றன. இறைவனோ பாரொடு விண்ணாய்ப் பரந்த

நம்பரனாக, மனிதனின் மனம், வாக்கு, காயத்துக்கு அப்பாற்பட்டவனாக அம்பலத்தில் ஆடும் கூத்தப்பிரானாக ஆடி தாம் வளர்த்த இப் பிரபஞ்சத்தையும் ஆட்டியவாறே இருக்கின்றான்.

ஆன்றோர்கள் அமைத்த சிவவடிவின் உண்மையைத் தெரிந்துகொள்ள தாயுமான சுவாமிகள்,

"பாரறியாது அண்டப்பரப்பறியாது உன்பெருமை
யார் அறிவார்? நானோ அறிவேன் பராபரமே"

என்று பாடியுள்ளார்.

'எங்கும் சிதம்பரம், எங்கும் திருநடம்' என்கின்றது திருமந்திரம். அண்டத்தில் நமக்கு கட்புலனாகும் வெளி தூல ஆகாயம் ஆகும். அதனுள் அடங்கிச் சூக்குமமாய், தூய்மையாய் உள்ள ஆகாயமே சிதம்பரம் ஆகும். இதனை

"வெட்ட வெளியினைச் சதமென்று இருப்போர்க்குப் பட்டயம் ஏதுக்கடி? குதம்பமாய் பட்டயம் ஏதுக்கடி? எனச் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளமை சிவனின் திருத்தாண்டவமும் சிதம்பர இரகசியமுமே.

## உசாவியவை


1. பேராசிரியர் - ஞானசம்பந்தன்-அ.ச. அருளாளர்கள் கங்கைபுத்தக நிலையம் சென்னை - 1998
2. பேராசிரியர் - வேலாயுதம் - பே.க "விண்வெளியில் அமைப்பே சிவநெறியின் செல்வம்" சிவநெறி-இதழ்-4-சஞ்சிகை இந்துஇளைஞர் வெளியீடு திருகோணமலை - 1995
3. சிற்பவானந்தர் திருவாசகம் ஆராய்ச்சி உரை தபோவன வெளியீடு திருப்பராய் துறை - 1970
4. கே.கே.சுப்பிரமணியம் 'தில்லைக் கூத்தன்' 'காரைநகர் மணிவாசகர் சபை பொன்விழா மலர் - 1990
5. க.சி.- குலரத்தினம் இந்து சமய பாடத்திரட்டு விவேகானந்தசபை வெளியீடு கொழும்பு - 1972

செல்வி.பா.பாலசுதாஜினி,
இந்துநாகரிகம்(சிறப்பு)
3ம் வருடம்.

# இந்துப் பண்பாட்டு மரபில் சித்தர்கள்

பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்
டிதமுற்ற பாச இருளைத் துறந்து
மத மற்றென தியான மாற்றி விட்டிங்கே
தித முற்றவர்கள் சிவ சித்தர் தாமே.

~ திருமந்திரம் ~

"சித்" எனும் வடமொழி வேர்ச் சொல்லில் இருந்து தோன்றியது. சித்தர் எனும் சொல் "சாரணர்" என்ற சொல்லால் சமணத்திலும், பௌத்தத்திலும் குறிக்கப் பெற்றவர்களும் இச் சித்தர்களே. சித்து எனும் சொல் சித்தர் எனும் சொல்லிலிருந்து தோன்றியதாக இருக்கலாம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் நான்கும் அந்தக் கரணம் என்பர். இவற்றில் மனம் ஒன்றை நினைக்கும், புத்தி நிச்சயிக்கும், அகங்காரம் முனைப்பைத் தோற்றுவிக்கும். சித்தம் இம் மூன்றுக்கும் காரணமாகும். எனவே சித்தத்தின் சலனமே அனைத்துத் தத்துவார்த்தத்தின் தோற்றத்திற்கும் காரணம். ஆதலால் சித்தத்தை வெல்லுதல் வேண்டும். சித்தத்தின் சலனம் பிராணவாயுவின் அசைவே. இவ் உண்மையை உணர்ந்தே சித்தர்கள் பிராணாயாமத்தை வலியுறுத்துகின்றனர். எனவே பிராணயாமம் மூலம் சித்தம் ஒடுங்கிய நிலை சித்தர் நிலையாகும். அதாவது "திரையற்ற நீர் போல் சிந்தை தெளிந்த நிலை". இந்நிலையில் சித்தமும் இல்லை, செயலும் இல்லை. இதனை யோகநிலை எனவும் கூறுவர். திருமூலர் இதனைச் "செத்தார்நிலை" என்கிறார். மணிவாசகர் இதனை

"சித்தமல மறிவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தெனெனக் கருளிய வாறார் பெறுவாரச் சோவே".

எனவே பெறத்தக்க பேறு எனக்கருதப் பெறுகின்ற சாயுச்சிய நிலை கைவரப் பெறுதலே சித்தி எனவும், இதனை அடைந்தவரே சித்தர் எனவும் கருதலாம். இறைவனை சத், சித், ஆனந்தம் எனக் குறிப்பர். "சத்" என்பது என்றும் உள்ள பொருள் (Reality), "சித்" என்பது பேரறிவு (Intelligence), ஆனந்தம் என்பது (Billss) எனவே பேரறிவு பெரும் பொருளான இறைவனை உணர்த்தும் "சித்" என்ற அடிச் சொல்லாகக் கொண்டு சித், சித்தர் எனும் சொற்கள் தோன்றியிருக்கலாம்.

இச் சித்தர்களின் காலம் பற்றி நோக்கின் அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஏனெனில் இவர்கள் எக்காலத்தில் வாழ்ந்தார்கள் என்று எவரும் அறுதியிட்டுக் கூறவில்லை. இருப்பினும் மு.இராதாகிருஸ்ணன் எனும் இந்திய அறிஞர் "கி.பி.14 நூற்றாண்டைக்" கால எல்லையாக வரையறுக்கின்றார். ஆனால் "கி.பி.15ம் நூற்றாண்டைச் சித்தர்களின் காலமாக தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகின்றார். ஆனால் சித்தர் மரபு திருமூலர் காலத்தில் இருந்தே தொடங்கியிருக்கலாம். இவ்வாறு சித்தர்கள் காலம் இன்னதுதான் என வரையறுக்க முடியாது உள்ளது. எது எவ்வாறு இருப்பினும் அவர்கள் பலர் பல்வேறு காலப்பகுதியில் வாழ்ந்து இந்துப் பண்பாட்டிற்கு பல பங்களிப்பினை நல்கியுள்ளனர் எனின் மிகையாகாது.

இச் சித்தர்கள் பல வகையாகக் குறிப்பிடப்படுகின்றனர். எனினும் தமிழ் நாட்டுச் சித்தர்கள் பதினெண்மர் என்பது பொதுவான அறிஞர் கருத்து இதனை,

"ஆசப்பா இந்த முறை பதினெண்பேரும்
அயன்மாலும் அரனோடுந் தேவரெல்லாம்
மூசப்பா தெய்வ மொன்றே யறியச் சொன்னார்"

என்ற பாடலில் அறிய முடிகிறது. திருமூலர், இராமதேவர், கும்பமுனிவர், இடைக்காடர், தன்வந்திரியர், வான்மீகியர், கமல முனிவர், போகநாதர், மச்சமுனிவர், கோரகீசர், கொங்காணர், நந்திதேவர், மோதகுரு, பாம்பாட்டியார், சட்டைமுனிவர்,

சுந்தரானந்த தேவர், அகத்தியர், குதம்பைச் சித்தர் இவர்களைப் பதினெண் சித்தர் எனக் குறிப்பிட்டாலும் இப்பதினெண் சித்தர்கள் யார்? எவர்? என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இதுவரை வந்துள்ள பதினாறு ஆய்வறிவுகளின் பட்டியலில் அகத்தியர், திருமூலர், போகர் தவிர பிற சித்தர்களின் பெயர்கள் ஒன்றாகக் காணப்பெறவில்லை. சித்தர்கள் பலர் என்ற கருத்தும் காணப்படுகிறது. இதனை"..........மேவுமென்று சித்தரிலே யனேகங்கோடி" என்ற சட்டை முனிச் சித்தர் கருத்து அரண் செய்கின்றது எனின் மிகையாகாது, எவ்வாறு இருப்பினும் பதினெண் சித்தர் யாவர் என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. தெற்கில் பதினெண் சித்தர் போல், வடக்கில் நவநாத சித்தர்கள் எனும் ஒன்பது பேர் இருந்ததாகக் கொண்டு அவர்களின் சமாதிகளையும் காட்டுகின்றனர். அவர்கள் நாதர் `என்று பெயர் முடிகின்ற சத்தியநாதர், ஆதிநாதர் ஆகிய சகோதரர்களாக ஒன்பது பேர் ஆவர். திருமூலர் சொல்லுகின்ற சித்தர்கள் நந்தி அருள்பெற்ற நாதர்கள் சனகர், சனந்தனர்,...... சிவயோகமுனி, பதஞ்சலி வியாக்கிரபாதர், திருமூலர் ஆகிய எண்மர். மேலும் முதலை வாயில் இருந்து பிள்ளையை மீட்டமை, சாம்பலில் இருந்து பெண்ணை உருவாக்கியமை போன்ற அற்புதங்களை அதாவது சித்துக்களைச் செய்ததாகக் கூறி அவர்களையும் சித்தர் வரிசையிலே சேர்க்கலாம் என சித்தர் இலக்கியம் எனும் நூலில் மி.ப.சோமசுந்தரம் குறிப்பிடுகின்றார்.

எனவே சித்தர்கள் யார்? எவர்? எத்தனை பேர் என வரையறுப்பது கடினமான ஒரு காரியமாகவே உள்ளது.

இந்தியாவில் மட்டுமன்றி ஈழத்திலும் இத்தகைய சித்தர் மரபு தோன்றி வளர்ந்து கொண்டு இருக்கின்றது எனின் மிகை யாகாது. இன்று சித்தர் பெயர்களில் பாரதத்தில் நான்கு திசைகளிலும் நான்கு ஆச்சிரமம் விளங்குவதுபோல ஈழத்திலும் வடக்கே யாழ்ப்பாணத்தில் நீராவியடியில் கடையிற் சுவாமிகளின் சமாதியும், தெற்கே நாவலப்பிட்டி குயின்ஸ் பரியில் நவநாத சித்தரின் சமாதியும், கிழக்கே காரைதீவில் சித்தானைக் குட்டியின் சமாதியும் விளங்குகின்றது. இவர்கள் வழிவந்த செல்லப்பாச் சுவாமி, யோகர் சுவாமி, பரம்பரை இன்றும் ஈழத்தில் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இவ்வாறு காணப்படுகின்ற சித்தர்களின் பண்புகளை மூன்று வகைக்குள் உள்ளடக்கலாம்.

1. தம்முள் இருக்கின்ற தெய்வீக ஆற்றல்களை வெளியிடாது ஆத்மீக வழி நடந்து, மற்றவர்களை அணுகவிடாது காணப்படுவதால் மற்றவர்களின் கேலிக்கு உள்ளானவர்கள் இவ்வகைக்கு செல்லப்பாச் சுவாமி போன்றவர்களை எடுத்துக் காட்டலாம்.

2. தாம்பெற்ற தெய்வீக அனுபவங்களை மக்களுக்கு வெளிப்படுத்திச் சென்றவர்கள். திருமூலர், அகத்தியர் போன்றவர்களை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

3. இவ் வகையினர் மக்களை அணுக விடுவர். தம் சக்தியை ஆற்றலைக் சொல்லமாட்டார்கள். அணுகி இருப்போருக்கு அருள் வழங்குவர். நவநாத சித்தர், கடையிற் சுவாமிகள், சிந்தானைக் குட்டிச் சுவாமி போன்றோரை இவ்வகைக்கு எடுத்துக் காட்டலாம்.

மேலும் யோக சாதனைகளில் தெளிதல் மந்திரங்களைச் செபித்தல் மௌனத்தில் இருத்தல், இறைவழிபாடு முதலானவற்றினால் சித்திகளைப் பெறலாம் என்பர். சித்தர்கள் அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனும் அட்டமா சித்திகள் கைவரப் பெற்றவர்கள். இமயம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் யோகச் செயல்களால் உடலினை நிலைக்கச்செய்து மெய்மையுணர்ந்து சமுதாய மக்களை நன்னெறியில் செலுத்த விரும்பிய சித்தர்கள் தம் குருவின் ஆணையின்படி இவ்வுலகில் வெளிப்படுவர். தமக்கென எந்தப் பற்றும் இல்லாத பேராண்மையாளர். உண்ணாமல் ஊறங்காமல் இடம் பெயராமல் மழை வெயில், பகல், இரவு என்று பாராமல் இருப்பதே சித்தர்களின் சமாதி நிலை. இவ்வாறு சமாதிநிலையில் இருந்து பின் வெளிவரும் போது தாம் பெற்ற ஞானத்தை மக்களுக்கு எடுத்துரைப்பர். அதன் பயனைப்

பற்றி அவர்கள் கவலைப்படுவதும் இல்லை. தம்மிடம் வியத்தகு ஆற்றல்கள் இருப்பதை தம் வியத்தகு செயல்கள் மூலம் காட்டினர். இவர்களிடம் இருந்த இன்னொரு ஆற்றல் கூடுவிட்டு கூடுபாயும் இயல்பாகும்.

இவர்களின் கடவுள் கொள்கைகள் எளிய மக்கள் யோகியர், ஞானியர் என்னும் மூவர்க்கும் உரிய வழிபாட்டு முறையாக விளங்குகின்றது. அருவமாக இறைவனைக் காணும் திறமற்ற எளிய மக்கள் வணங்குவதன் பொருட்டு உருவ வழிபாட்டினை வழிபடுகின்றனர் எனலாம். உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், தரையில் தலைபட வணங்குதல், ஐம்புலன்களை இறை வழியில் செலுத்துதல், பொய் கூறாது உண்மையுடன் ஒழுக்க நெறியில் நின்று இறைமாட்டு பக்தியும் அன்பும் கைக்கொள்ளுதல், இறைவனை வணங்குவதால் ஏற்படும் பயன்கள் முதலானவற்றை எளிய மக்களுக்கு ஏற்ற நெறியாகத் தருவர். யோகிகளுக்கு உரிய நெறியாக தியானம் முதலிய யோக முறையில் இறைவனை அடையும் தன்மைகளைக் குறிப்பர். ஞானியர்க்கு உரிய நெறியில் உண்மைக் குருவின் தன்மை, செயல்கள் ஞானநிலை கைவரப் பெற்றவுடன் தாமே சிவமாய் அமர்ந்து இருத்தல் முதலானவற்றைக் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு பல சிறப்புக்களை கொண்டுள்ள சித்தர்கள் இந்துப் பண்பாட்டிற்கு ஆற்றிய பங்கினை நோக்கின் இந்துப்பண்பாடு எனும்போது பண்பாடு எனில் பண்படுத்துதல் என்பதாகும். அதாவது இந்துக்களின் வாழ்க்கையைப் பண்படுத்தி சீராக அமைத்தல் என்பதாகும். இந்துப் பண்பாட்டிற்கு எவை அவசியம் என திருமூலர் எனும் சித்தர் கூறுமிடத்து "ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், தவம், தானம், வாய்மை வளங்கல், வந்தித்தல்

இவை இந்துப் பண்பாட்டிற்கு அவசியமானவை எனக் குறிப்பிடுகின்றார்.

இந்துப்பண்பாட்டின் சிறந்த விழுமியமாகக் கருதப்படும் அன்பு பற்றி நோக்கும்போது,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவதாரும் அறிகிலார், எனவும்

"அரனடிக்கன்பர் செய்த பாவமும் புண்ணியமாகும்
அரனடிக்கன்பிலார் செய்த புண்ணியமும் பாவமாகும்"

என அன்பின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றனர். அடுத்து ஒழுக்கம் பற்றிய கருத்தினை நோக்கின் தவத்தில் மேம்பட்டவர்களைக் கூட இந்திரியங்கள் வரம்பு கடந்து இழுத்துச் செல்கின்றன. ஆதலால் அவற்றை வெல்வதற்கு சிவத்தியானம் செய்க. ஆதலால் மாத்திரம் தான் புலன்களைத் தன்வசப்படுத்த முடியும். இதனை ஈழத்துச் சித்தர்களில் ஒருவரான யோகர் சுவாமிகள்

"ஒழுக்கம் விழுப்பம் தரும் தம்பிமாரே
ஓம் என்று சிந்தை செய்வீர் தம்பிமாரே
அழுக்காறவா வெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்கும் தம்பிமாரே
வழுக்கிவிழுந்திடலும் தம்பிமாரே
மலரடியைச் சிந்தை செய்வீர் தம்பிமாரே"

எனக் குறிப்பிடும் அடிகள் சிந்திக்கத்தக்கது ஆகும்.

மேலும் ஒன்றுபட்டு இருக்கின்ற மக்கட் சமுதாயத்தைப் பிரிப்பதில் பண்டைய காலத்தில் இருந்து இன்றுவரை மக்களை ஒன்றுசேரவிடாது செய்பவை சமயபேதமும், சாதிபேதங்களுமாகும். சமயங்கள் போதிப்பது அன்பு நெறியாக இருக்கலாம். ஆனால் அதன் பழங்கணக்கைப் பார்த்தால் மனிதரத்தத்தை உறிஞ்சாமல் வளர்ந்த சமயங்களைக்காண முடியாது. சாதி வேற்றுமை காரணமாக இன்றும் மக்களிடையே இடம்பெறும் சண்டை சச்சரவுகளைக் காண்கின்றோம். ஆகையால் சமய வேற்றுமைகளும் சாதி வேற்றுமை களும் மனித சமுதாயத்தை விட்டு ஒழிய வேண்டும் என்று பகுத்தறிவு வாதிகள் கருதினர். பகுத்தறிவாதம் பேசும் சித்தர் களும் இதனையே சொன்னார்கள். இன்று அறிவாளிகள் இதனையே விரும்புகின்றனர்.

"சமயபேதம் பலவான சாதி பேதங்கள்
சமயத்தோர்க்கே யல்லாது சற்சாதுக்களுக்கோ"

மேலும்,

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்
நன்றே நினைமின் நமனில்லைநாளும்"

எனவும்

"சாதிப்பிரிவினில் தீயை மூட்டுவோம்
சாதிகுலமில்லை சற்குருவையறிந்தால் "

எனச் சாதியினையும், சமய பேதங்களையும் கண்டிக்கின்றனர். உண்மை நெறியறிந்தவர்க்கு சமய பேதமோ, சாதி பேதமோ இல்லை. அவர்கள் இப்பேதங்களை நம்பமாட்டார்கள். இப்பேதங்களை விட்டவர்களே சிறந்த மனிதத்தன்மை படைத்தவர்கள் என்று கூறுவதன் மூலம் இந்துப்பண்பாட்டை வளம்படுத்திச் சென்றுள்ளனர். மேலும் ஓயாமல் பொய் சொல்லுதல், நல்லோரை நிந்தித்தல், தாயாரை வதைத்தல், சதி ஆயிரம் செய்தல், தீதுக்கு துணைபோதல், தான் என்ற ஆணவத்தை அடக்காமல் விடல், இவை எல்லாம் மக்களிடையே காணப்படும் குறைபாடுகள் எனக்குறிப்பிட்டு, இவற்றினைக் கண்டிப்பதன் மூலம் இந்துப் பண்பாட்டினை வளம்படுத்திச் செல்கின்றனர். மேலும் இவர்களது அறிவுரைகள் இன்னதைச் செய், இன்னதைச் செய்யாதே என்கிற ரீதியிலும் அமைகிறது.

"கூடிய பொய்களைச் சொல்லாதே
பொல்லாக்கொலை களவு செய்யாதே
கண்டதும் கேட்டதும் சொல்லாதே
கண்ணால் காணா உத்தரம் விள்ளாதே
பெண்டாட்டி குற்றம் சொல்லாதே
பிள்ளைக் கிளப்பம் கொடுக்காதே"

எனவும் கூறி மக்கள் குறைகளைக் கடிந்து இந்துப் பண்பாட்டினை வளம் படுத்தியுள்ளனர்.

அடுத்து இந்துப் பண்பாட்டின் சிறந்த விழுமியமாகக் கொள்ளப்படும் கல்வி பற்றிய சிந்தனைகளும் சிறப்பிற்கு உரியதாகும். அதாவது

"ஒன்றாக காண்பதே காட்சி, புலனைந்தும்
வென்றான் தன் வீரமே வீரமாம் என்றும் தான்
சாவாமற் கற்பதே கல்வி தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்"

எனக் குறிப்பிடுவதன் மூலம் பல அரிய கருத்துக்களை வழங்கி இந்துப் பண்பாட்டினை மேன்மையடையச் செய்திருக்கின்றனர்.

இன்று மக்களிடையே நாகரிகம் என்ற போர்வையில் காணப்படும் மது அருந்துதல், புகைத்தல் என்பவற்றினையும் தீங்கானது எனக் கூறி அவற்றினை விட்டுவிடும்படி அறிவுரை வழங்குகின்றனர்.

"கஞ்சாப்புகை பிடிக்காதே - வெறி
வெறி காட்டி மங்கிய கட்குடிக்காதே'

எனக் குறிப்பிடுகின்றனர். மேலும்

"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் –
செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடு நீங்காமல் நமக்கு இட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே"

எனக் குறிப்பிடுவதன் மூலம் மக்களுக்கு பல அரிய கருத்துக்களை வழங்கி இந்துப்பண்பாட்டினை வளம்படுத்தியுள்ளனர்.

யோகப் பயிற்சியினால் இம்மை இன்பத்தைப் பெறலாம் என்பதே சித்தர்கள் கருத்து. இவ்வுலகில் நீண்ட நாள் நோயின்றி வாழ்வதற்கு யோகப் பயிற்சியினைச் சித்தர்கள் வலியுறுத்துகின்றனர். இதன் சிறப்பினை

"ஆயுள் கொடுப்பான் நீரழிவு முதல்
கண்டனமற்ற வியாதிகள் எல்லாம்
பிசாசு பறந்திடும் பில்லிபோம் எடி
பத்தினி வாலைப் பெண் பெயரைச் சொன்னால் "

எனக் குதம்பைச் சித்தர் குறிப்பிடுகின்றார். இன்றைய மருத்துவர்கள் கூட நீரிழிவு நோய்க்கு யோகப் பயிற்சி சிறந்த மருந்து என்பதனை ஒப்புக்கொள்கின்றனர். இம்முறையினை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னமே சித்தர்கள் அறிந்து கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் ' என்ற கூற்றுக்கு இணங்க நோயற்ற வாழ்விற்கு உரிய முறைகளை, வழிவகைகளை வழங்கி மக்களை நோயற்றவர்களாக வாழ வழி செய்து இந்துப்பண்பாட்டினை வளம்படுத்திச் செல்கின்றனர் சித்தர்கள்.

இச் சித்தர்கள் கண்டறிந்த இந்த வாதவித்தை சிறந்த விஞ்ஞான

ஆராய்ச்சியாகும். உலோக வகைகள், உப்பு வகைகள், பாஷண வகைகள், வேர் வகைகள். முத்து. பவளம் முதலிய கடல்படு திரவியங்கள் பிராணிகளின் உடம்பில் உற்பத்தியாகும் கோரோசனைகள், கஸ்தூரி இவற்றை எல்லாம் அக்காலத்தில் கண்டுபிடித்து இருப்பது அற்புதமான செயலாகும். இவற்றினைக் கொண்டு மருந்து வகைகளைச் செய்தனர். இன்னின்ன மருந்துகள் இன்னின்ன நோய்களைத் தீர்க்கும் எனக்கண்டனர். நோய்க்கு உள் எடுப்பது வெளியே பூசுவது, பலவீனத்திற்கு, நீண்டநாள் உயிர் வாழ்வதற்கு என இவ்வாறு பலவகையான மருந்துகளைக் கண்டறிந்தனர். இதுதான் ரச வாதம் எனும் இரசாயன ஆராய்ச்சியாகும். இன்று இருப்பது போன்று அக்காலத்தில் பரிசோதனைக் கூடங்களோ, கருவிகளோ, வசதிகளோ இல்லை. இவர்கள் காடுகளில் மலைகளில் அலைந்து திரிந்து கண்டுபிடித்து இந்த மூலிகைகள் மருந்துகள் இன்றைய விஞ்ஞான யுகத்தில் கூட சித்த மருத்துவம் என்கின்ற பெயரில் பல நோய்களைக் குணப்படுத்திக் கொண்டு தான் இருக்கிறது எனின் மிகையாகாது.

இவ்வாறு சித்தர்கள் பல அரிய செயல்களைச் செய்து மக்களையும் இந்துப் பண்பாட்டினையும் வாழவைத்துக் கொண்டும் வளம்படுத்திக் கொண்டும் இருக்கின்றனர் எனின் மிகையாகாது. ஏனெனின் சித்தர்கள் அன்று மட்டுமல்ல இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கு அன்று அவர்கள் விதைத்த சித்த மருத்துவம் என்னும் விதை இன்று பெருவிருட்சமாகி விளைந்து நிற்பதனைக் காணலாம். எனவே சித்தர்கள் இந்துக்களது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பல்வேறு அம்சங்களை எடுத்துக்கூறியதோடு, இந்துக்களது பண்பாட்டு மரபுக்கு அன்று தொட்டு இற்றைவரை பெரும் பங்காற்றியுள்ளனர் என்று கூறுவது தவறாகாது.

## உசாத்துணை நூல்கள்


1. த.கோவேந்தன் - சித்தர் பாடல்கள்
   பூம்புகார் பிரசுரம், சென்னை, 1976.
2. சுவாமி சிதம்பரனார் - சித்தர் கண்ட விஞ்ஞான தத்துவம்.
   திருமதி. சாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம், சென்னை.
3. புலவர் சிவ கண்ணியப்பர் - சித்தர் பாடல்கள் திரட்டும் உரையும்
   முல்லை நிலையம், சென்னை.1997.
4. (மூன்றாம் பொதுநிலைப்பத்து நாள் கருத்தரங்காய்வுக் கட்டுரை - பெருங்காப்பிய சிற்றிலக்கிய பெருந்தமிழ் சென்னை பல்கலைக்கழக வெளியீடு 1975.
5. நா. முத்தையா - ஈழத்துச் சித்தர்கள்.
   ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி 1960.
6. இந்து மாணவர் சங்கம் - இந்து தர்மம் . பேராதனைப்பல்கலைக்கழகம், 1966-1967.

செல்வி.உ.லதாங்கி
இந்துநாகரிகம், சிறப்புக்கலை
3ம் வருடம்.

# சைவ சித்தாந்தம் கூறும் முத்திக் கோட்பாடு

முத்தி நிலையை சொற்களால் விளக்க முடியாது. பல மதத்தவரும் முத்தியைப் பலவாறு காண்கின்றனர். சைவ சித்தாந்திகள் காணும் முத்தி பேரின்ப நிலையாகும். அது வீடு, மோட்சம், விடுதலை, நிர்வாணம், அருகநிலை என்று பலவாறு அழைக்கப்படும். இதனை சிவப்பிரகாசம்,

"..........பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி பாடான முத்தி இவை பழிசேர் முத்தி....." எனக் கூறுகின்றது. அதாவது சைவ சித்தாந்திகள் உயரிய நோக்காகவும், உன்னத இலட்சியமாகவும் அமைவது விடுதலை ஆகும். இது பந்தம், கட்டு, மலம், பாசம் என சுட்டப்பெறும் அஞ்ஞான நிலையினின்று விடுபடுதலைக் குறித்து நிற்கின்றது. ஒளி எழுகின்ற வேளை எவ்வாறு இருள் அடங்கி ஒளி பிரகாசமாகத் தோன்றுகின்றதோ அதே போல ஆணவம் வலி குன்றும் போது இறையருள் பரவும் என்பது சைவ சித்தாந்தத்தின் முத்திக் கோட்பாடு உள்ளீடாய் விளங்கும் உண்மையாகும். இம்மல பந்தத்தினின்று விடுபட்டு ஆன்மா சுய ரூபத்தை உணர்ந்து உயரிய நிலையடைவதே முத்தி ஆகின்றது. "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வழிபட்டு முத்தி
இன்பம் பெறும் பொருட்டே ஆகும்....." என்கிறார் நாவலர்.

சைவ சித்தாந்தத்தின்படி 36 தத்துவங்களையும் கடந்து அப்பாற்பட்டு விளங்கும் சிவனின் திருவடிகளை அடைவதே முத்தி ஆகின்றது. இதனையே அருணந்தி சிவாச்சாரியாரும் "சிவனடியைச் சேரு முத்தி செப்புவதிங்கியாமே......" எனக் கூறுகின்றார். இதனையே சிவாக்கிர யோகிகள், "அறைந்தன முன்னே சைவசித்தாந்த முத்தி ஆன்மாவின் சிற்சக்தி அனாதி ஆணவத்தால்......."என எடுத்தாளுதல் காணலாம்.இருவினை ஒப்பு, மலபரிபாகமும் ஆன்மாக்களுக்கு சிவ ஞானத்தினால் வந்துற்ற வேளை மலத்தடைகள் நீங்கி, உப்பு நீருடன் நன்னீர் கலந்து இரண்டற்ற தன்மையில் பேரானந்தத்தை அடையப் பெறும். அந் நிலையில் பரிபூரணனான சிவனைப் பொருந்துதல் மாத்திரமன்றி அந்தச் சிவமாகவே நிற்பது சைவசித்தாந்த முத்திக்குரியதாகும் என விளக்கமாக விபரித்துள்ளார்.

ஆன்மாவின் அவத்தைகள் கேவலம், சகலம், சுத்தம் எனக் கூறலாம். அவற்றில் சுத்த அவத்தையே முத்தி நிலையாகும். இது துரிய நிலை எனவும் குறிப்பிடப்படும்.

பல பிறவிகளில் பிறந்தும், இறந்தும் இருவினைகள் புரிந்தும் அவற்றின் பயன்களை நுகருவது சகலம் எனப்படும். ஒரு ஜனனத்தில் வினைப்பயனுள்ள யாவும் புசித்தொழிய திரோதாயி கருணையாகிச் சத்திநிபாதந் தோன்றும். ஆன்மா வினைகள் செய்து அவற்றுக்கீடான இன்ப துன்பங்களை நுகர்ந்து இவற்றின் நிலையாமையை உணர்ந்து சலிப்படையும். இன்பம் எங்குண்டோ அங்கு துன்பமும் உண்டு என்பதை உணரும். இன்பத்தைக் கண்டு பூரிப்படையாதும் துன்பத்தைக் கண்டு கலங்காதும் இரண்டையும் சமமாக மதிக்கும். இஃது இருவினை ஒப்பு எனப்படும். பின்பு ஆன்மா இன்ப துன்பங்களுக்குக்

காரணத்தைத் திருவருளினால் உணருகிறது. அறியாமையும், ஆணவ மலமும், கன்மமுமே இவற்றுக்குக் காரணம் என்பதை அறிகிறது. தன்னை இறைவனுக்கு ஒப்படைக்கிறது. தன்னுணர்வற்று அவன் உணர்வாக நிற்கின்றது. எல்லாம் அவன் செயலே என நினைத்து செயற்படுகின்றது. ஆகாமியம் இல்லை. எஞ்சிய சஞ்சித கன்மத்தை அனுபவித்துக் கழிக்க கன்மமலமில்லை. தன்னையும் இறைவனையும் உணர மாயை நீங்குகின்றது. இப்போது திருவருள் தோன்றி ஆணவ மலத்தை எரித்து ஆன்மாவை இறைவனோடு சேர்க்கிறது. திருவருளினால் ஆன்மா மும்மலங்களையும் அறுத்து இறைவனடி சேர்கிறது. இதனை சித்தியார்,

**"இருவினைச் செயல்கள் ஒப்பின்**
**ஈசன் தன் சக்தி தோபக்**
**குரு அருள் பெற்று ஞான யோகத்தைக்**
**குறுக்கி முன்னைத்........"**

இருவினை ஒப்பு ஏற்பட்டதிலிருந்து சத்தினி பாதம் உண்டாகி இறைவன் அருளைப் பெற்று ஞானம் அடைந்து மும்மலங்களையும் அறுத்து சிற்றறிவு நீங்கிப் பேரறிவைப் பெற்று ஆன்மா இறைவன் பாதத்தை அடைவது சுத்த நிலையாகும்.

**"நாடிய சத்திநிபாதம் நாலுபாதம்**
**நண்ணும் வகை எண்ணரிய ஞானபாதம்..."**
என்ற சிவப்பிரகாசப் பாடல் கவனிக்கத் தக்கது.

ஆன்மா உயர்ந்த ஞானபாதமுடைய உணர்வுக்கு உணர்வாக நின்ற இறைவன் குருவாக வந்தருளிக் கேவல, சகல நிலைகள் இனிமேல் தோன்றாதவாறு தடுத்து மலங்களை அறுப்பான் இதுவே சுத்த நிலை.
**"சூரிய காந்தக் கல்லிடைற்றே செய்ய**
**சுடர் தோன்றியிடச் சோதி தோன்றுமா போல்..."**

எனச் சித்தியார் ஞாயிற்றின் முன்னிலையில் சூரிய காந்தக் கல்லின் கண் நெருப்புத் தோன்றுவது போல திருவருள் தோன்ற ஆன்ம ஞானம் தோன்றும். இந்த ஞானம் தோன்ற ஆன்மா தன்னையும் இறைவனையும் காணும். ஆன்மா மாயை உலகத்தின் உண்மை இயல்பை அறியும். இறைவன் உயிருக்குயிராய் எங்கும் நிறைந்து நிற்கும் நிலையையும் உணரும்.

**'இரும்பைக் காந்தம் வலிந்தாற் போல்.....**
**கரும்பைத் தேனைப் பாலைக்**
**கனியமுதைக் கண்டைக் .......... என்று**

சித்தியார் காந்தம் இரும்பைக் கவர்ந்து சேர்வது போல முத்தியில் இறைவன் ஆன்மாவை தன்வயப்படுத்தி நிற்பான். அனல் இரும்பின் கறையை நீக்குவதுபோல் இறைவன் உயிரைத் தானாக்கி மும்மலங் களையும் அறுப்பன். உப்பையும் நீரையும் போல இறைவன் ஆன்மாவோடு இணைந்து நிற்பன். பின்னர் தனது வியாபகத்துள் அடக்கி ஆன்மாவின் இயல்பு தோன்றாது நிற்பன். இம் முத்தி பேரானந்தமாகும்.

முத்தியடைவதற்கு மரணம் வரையும் காத்திருக்க வேண்டியதில்லை. இவ் உலகிலே இவ் உடலோடு இருக்கும் போதே முத்தியடையலாம். இவ்வாறு முத்தியடைந்தவர் சீவன் முத்தர் எனப்படுவர். சீவன் முத்தர் வேறு இறைவன் வேறல்ல. இதுவே ஒன்றான நிலை. அவர்களுடைய வாக்கு இறைவன் வாக்காகும். செயல்கள் இறைவன் செயல் ஆகும்.

முத்தி 4 வகைப்பட்டது என சைவ நித்தாந்திகள் கூறுகின்றனர். சாலோக்கிய, சாமிப்பியம், சாரூபியம், சாயுச்சியம் என்பன. சாலோகத்தில் ஆன்மா - இறை உலகில் இருக்கும். சாமீபத்தில் ஆன்மா - இறைவன் அருகில் இருக்கும். சாரூபத்தில் ஆன்மா - இறைவன் உருவத்தில் இருக்கும். சாயுச்சியத்தில் ஆன்மா - இறைவனோடு இரண்டறக் கலந்திருக்கும். முதல் மூன்றையும் பதமுத்தி அல்லது அபரமுத்தி

என்றும், சாயுச்சியத்தை பரமுத்தி என்றும் கூறுவர். இதனைச் சித்தியார்,

"......சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய
சாரூபிய சாயுச்சியம் என்று சதுர்விதமாம் .........."
என்பர்.

முத்தி நிலையைத் திருமூலர் கூறும்போது,
"காணாத கண்ணுடன் கேளாத கேள்வியுங்
கோணாத போகமுங் கூடாத கூட்டமும்..." என்றும்

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்......."

எனக் கூறுகின்றார். மாணிக்கவாசகர் முத்திபற்றிக் கூறும்போது இது சொற்களாலே கூற முடியாது. மனத்தினால் சிந்திக்க முடியாது எனக் கூறுகின்றார். இதனை
"சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்........."
எனக் கூறுகின்றார்.

ஆன்மா முத்தியடைவதற்குச் சைவ சித்தாந்திகள் 4 மார்க்கங்களைக் கூறுகின்றனர். இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும். எனினும் இவை தனிப்பட்ட வெவ்வேறு மார்க்கங்கள் அல்ல. ஒன்றுக் கொன்று ஆதாரமாகும். முத்தி அடைவதற்கு மெய்யுணர்வாகிய ஞானத்தைப் பெறுதல் வேண்டும். எல்லா மார்க்கங்களும் ஞானத்தில் முடிவடைகின்றன. இதனைத் தாயுமானவர்,
"விரும்பும் சரியை முதன் மெய்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனி போல் அன்றோ பராபரமே"
எனக் கூறுகின்றார்.

ஒவ்வொரு மார்க்கத்திலும் 4 பாதங்கள் காணப்படுகின்றன. அவை சரியையிற் சரியை. சரியையிற் கிரியை. சரியையில் யோகம், சரியையில் ஞானம், யோகத்திற் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம், ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் எனப் பேசப்படுகின்றது.

ஒவ்வொரு பாதமும் உபாயநிலை, உண்மை நிலை என 2 வகைப்படும். உபாய நிலை பக்தியிற் குறைந்தது. உண்மை நிலை பக்தியிற் கூடியது. பக்தியினால் இறைவனை மறவாது உணர்ந்தார்க்கு இறைவன் பாசத்தை நீக்கி முத்தியளிப்பான். இதனைச் சிவஞானபோதம்,
"செம்மலர் நோன் தாள் சேரல் ஒட்டா
அம்மலங்கழி அம்பரொடு மா......" எனக் கூறும்.

ஆன்மா ஒவ்வொரு மார்க்கத்தையும் படிப்படியே கடைப்பிடித்தால் முத்தி கிடைக்கும். ஆனால் முற்பிறப்பில் விட்ட குறையை இப்பிறப்பிலே தொடருவோர் சிலர் எடுத்த எடுப்பிலே ஞான நெறியேனும், யோக நெறியேனும், கிரியை நெறியேனும், கடைப்பிடித்து விரைவில் முத்தி எய்திவிடுவர். அத்தகையோர் சரியை நெறியைக் கடைப்பிடித்தாலும் விரைவிலே ஞானப்படியேறி முத்தி பெற்றிடுவர். உதாரணமாக முன்புசெய்தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக் காட்ட 6 நாளிலே ஞானம் பெற்று பரமுத்தி அடைந்தார் வேடரான கண்ணப்பர். இவை போன்ற நிகழ்ச்சிகளை புறநடையாகக் கொள்ள வேண்டும். அப்பர் சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரும் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய தனித்தனி நெறிகளைக் கடைப்பிடித்து இறைவழிபாடு செய்தாராயின் எல்லோரும் ஞானத்தால் பரமுத்தி எய்தினர் என்பதை நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும். இதையே சிவஞானசித்தியாரும்,
"சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்
தாதமார்க்கம் என்றுஞ் சங்கரனை யடையும் .........."
என்றும்
"...... அருங்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத....."
என்றும்
சார்ந்த மெஞ்ஞானத்தோர் தானவனாயினோர்
சேர்ந்த வெஞ்ஞ யோகத்தோர் சித்தர் சமாதியோர்......"
என்றும்

"சரியையிற் ஆணவம் கால் சரிந்திடும்
கிரியையில் அரைமலம் கெந்தியுற்றிடும்
மருவுயோகத்தில் முக்கால் மடிந்திடும்
விரிசிவஞானத்தில் முற்றும் வியுமே" என சித்தாந்த நூல்கள் தெளிவுபடுத்தும்.

ஆற்று நீரை வரம்புகட்டி வயலுக்குச் செலுத்துவது போலச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற 4 வகை ஒழுக்கங்களையும் மனம் போன போக்கிலே போகாமல் ஒரு ஒழுங்கு முறையில் போனால் முத்தி கிடைக்கும் எனச் சுட்டுகிறார்கள். அந்த வகையில் சரியை மார்க்கத்தை விளக்கும் போது, உடம்பு சார்ந்த புறத் தொழிலாற் சிவனுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியை எனப்படும். இவ்வழிபாட்டிலே சாதகன் தன்னை அடிமையாகவும் சிவனை ஆண்டவனாகவும் பாவனை செய்கிறான். இம் மார்க்கம் எமது ஆணவத் தடிப்பைக் குறைக்கும். இந் நெறி பற்றி சிவஞான சித்தியார் கூறும் போது,

"தாத மார்க்கம் சாற்றிச் சங்கரன் தன் கோயில்
தலம் அலகிட்டு இலகு திரு மெழுகுஞ் சாத்தி............"

அதாவது கோயிலைக் கூட்டிச் சுத்தம் செய்தல், மெழுகுதல், பூ எடுத்தல், பூமாலை தொடுத்தல், சிவனைப் புகழ்ந்து பாடுதல், கோயிலில் விளக்கு ஏற்றல், நந்தவனம் அமைத்தல். சிவனடியாரைக் கண்டால் அவர்களுக்கு வேண்டிய பணிவிடை செய்தல் என்பன பற்றி இப்பாடல் கூறும். இந்நெறியில் நின்றவர் அப்பர். அவர் திருத்தாண்டகத்தில்,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா.........."
என்றும்

"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தற்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தையுள்ளே
வைத்து......" எனவும்

"எளி அனல் தீபம் இடல் மலர் கொய்தல்
அளிதின் மெழுகல் அது தூர்தல் வாழ்த்தல்......"
எனத் திருமூலரும் தாசமார்க்கம் பற்றிக் கூறுகின்றார். அடுத்து சரியை என்பது மெழுகுதல், கழுவுதல், ஆலய தரிசனம் செய்தல், நந்தவனம் அமைத்தல், மாலை கட்டுதல், குருவுக்கும், சிவனடியார்களுக்கும் தொண்டு செய்தல் என்பன. சரியையில் கிரியை என்பது மூர்த்தியை வழிபடுதல். சரியையில் யோகம் என்பது வழிபடும் கடவுளைத் தியானித்தல், சரியையில் ஞானம் என்பது இச் செயல்களால் ஓர் அனுபவம் வாய்க்கப் பெறுதல் என்பன. இந் நெறியில் நின்றவர் உழவாரத் தொண்டு செய்து இறைவனை வழிபட்டு சாலோக முத்தியை அடைந்தவர்.

அடுத்து சரியையில் நின்று தனது உடம்பைச் சிவனுக்கு உரியதாக்கிய சாதகன் 2வது சாதனமாகிய கிரியை நெறியில் இந்திரியங்களை சிவார்பிதஞ் செய்கின்றான். சிறப்பாக அகம் புறம் எனும் இரண்டாலும் சிவனுடைய அருவுருவத் திருமேனியை வழிபடுதலே கிரியை ஆகும். சாதகன் மகனாகவும், இறைவனை தந்தையாகவும் பாவித்து அன்பு செலுத்துவான். இது சற்புத்திரமார்க்கம் என அழைக்கப்படும். இதை சித்தியார்

"புத்திர மார்க்கம் புகலியில் புதிய விரைப் போது
புகையொளி மஞ்சனம் அமுது முதல் கொண்டைந்து ......"
எனக் கூறுகின்றார்.

"நம்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான் ......" எனச் சம்பந்தரும்,

"பூவார் மலர் கொண்டடியார் தொழுவார் ......"
என்பதில் புறநிலையில் கண்ட எதனையும் அகத்தில் வைத்து உணரப்படுகின்ற உயர்நிலை கிரியைக்குரியதாகின்றது.

**"காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக**
**வாய்மையே தூய்மையாக ......"** இறைவனை ஏற்றிப் போற்றிப் பார்க்கும் பாங்கு புறநிலையுடன் அகநிலையில் இறைவனுக்கு ஆற்றும் பூஜையாக, வழிபாடாகக் கண்டு உணரல்.

**"ஒருமையுடன் நினது ஒரு மலரடி நினைக்கின்ற**
**உத்தமர் தம் உறவு வேண்டும்"**
என ராமலிங்கர் இறைவனைப் புறத்து கண்டு அகநிலையில் வைத்து உணரும் பான்மைக்குச் சான்றாகும். திருமூலரும் சற்புத்திர மார்க்கம் பற்றிக் கூறும் போது,

**"பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்**
**ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை ........"**
எனக் கூறுகின்றார்.

சிவலிங்கப் பூஜை செய்தல், திருமுறை ஓதல், திருவைந்தெழுத்து ஜெபித்தல், உண்மை பேசல், மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களையும் தூய்மையாக வைத்திருத்தல், வேறு உயிர்களிடம் அன்பும் பரிவும் காட்டல், அன்னதானம் செய்தல், வாசனை உள்ள புதிய மலர்கள் தூபம் என்பன எல்லாம் கிரியை வழிபாட்டின் பாற்படும். நாடொறும் இக்கிரியை முறையை அனுட்டிப்பவர் சிவனோடு அருகில் இருந்தவராகிய சாமிப முத்தியைப் பெறுவர். இந்நெறி நான் எனது எனும் அகங்கார மமகாரத்தையும் தகர்க்கும் நெறியாக விளங்குகின்றது. சம்பந்தர் இந்நெறியில் நின்று முத்தி அடைந்தார். இன்னும் சண்டேஸ்வரர் கிரியை நெறியில் உயர்ந்தவர். சிவபூஜையில் அவருடைய மனம் முற்றாக ஒன்றியிருந்தார் தம் பூஜைக்கு இடையூறு செய்தவர் தம் தந்தை என்பது அவருக்கு தெரியவில்லை.

ஆகவே சிவபூஜைக்கு இடையூறு செய்த காலை வாளால் வெட்டி **"தந்தையைத் தாளற வீசிய சண்டி......"** ஆனார். அதுபோக புற விளைவுகள் அற்று பூஜையில் ஈடுபட்டு இருப்பதனால் அவருக்கு நாம் செய்யும் வணக்கம் தெரியாது என்பதற்காகவே அவரை வணங்கும்போது கைதட்டும் வழக்கம் உண்டாயிற்று. இத்தகைய மன ஒழுக்கத்தோடு செய்யும் பூஜைக்கு இடையூறு நேரக்கூடாது என்பதற்காகவே இன்றும் அவரது சந்நிதிக்கும் இறைவனது சந்நிதிக்கும் இடையால் அடியார்கள் செல்வதில்லை. கிரியையில் கிரியை என்பது புறத்தில் பூஜித்தலும், கிரியையில் யோகம் என்பது அகத்தில் பூஜித்தல் எனவும் இவற்றினால் ஏற்படும் அனுபவ உணர்வைப் பெறுதல் கிரியையில் ஞானம் எனவும் கூறுவர். இவ் வழிபாட்டைப் பெறுவோர் சாமீப முத்தி பெறுவர்.

3வது சாதனமாகிய யோகத்தில் சாதகன் தன்மனம் முதலிய அகக் கருவிகளைச் சிவனுக்கு அர்ப்பிதஞ் செய்கின்றான். அதாவது அகத்தொழிலால் சிவனது அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடே யோக நெறியாகும். யோகம் என்பது உயிரானது இறைவனோடு சேர்தலைக் குறிக்கின்றது. அத்தகைய பக்குவம் பெறுவதற்குச் சாதகன் மேற் கொள்ளும் பயிற்சியே அட்டாங்க யோகம் எனப்படுவது. யோகத்தின் 8 அங்கங்களும் இயமம், நியமம், அசனம் பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. சமாதி நிலையிலே உடல் மரக்கட்டை போல உணர்வின்றியிருக்க மனம் ஆனது பொறிபுலன்களின் தடுமாற் றத்தில் இருந்து விடுபட்டு சிவசோதியிலே பொருந்தி இருக்கும்.

யோகத்தைச் சகமார்க்கம் எனவும் அழைப்பர். சாதகன் இறைவனைத் தோழனாகப் பாவித்து அன்பு செய்யும் முறையே இது. இதனைச் சிவஞான சித்தியார்,

**"ஒரு மார்க்கம் புலன் ஒடுங்கித் தடுத்து வளி இரண்டும் சலிப்பற்று முச்சதுர முதல் ஆதாரங்கள்......"** என்றும்

திருமூலர்

"யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே உளர்ஒளி..."
எனக் கூறுகின்றார்.

இந்த நிலையிலே ஐம்புலன்களை ஒடுக்கி 6 ஆதாரங்களை அடக்கிச் சிந்தையில் சிவனை இருத்தி வினையின் நிலையை ஒடுக்குவதைக் காணலாம். இங்கு மனதால் சிந்தித்து வழி தியானித்து இறைவனைத் தரிசிக்கும் பக்குவம் ஏற்படுகின்றது. இறுதி சமாதி நிலையில் யோகியின் உள்ளத்திலே முழு உலகமும் அடங்கிவிடும். இவர்கள், எல்லாம் பெற்ற யோகிகள் ஆவார். அந்நிலையில் அட்டமா சித்திகளையும் செய்ய வல்ல சித்தராய் திகழ்வர். சுந்தரர் இறைவனைத் தோழனாக நினைத்து "பித்தா" எனக் கூறி "பித்தா பிறை சூடி பெருமானே......." எனப் பாடுகின்றார். சுந்தரர் சாரூப முத்தியைப் பெற்றார். யோகத்தில் சரியை என்பது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் எனும் நாலும் யோகத்தில் கிரியை என்பது பிரத்தியாதாரம், தாரணை என்ற 2ம். யோகத்தில் யோகம் என்பது தியானம், யோகத்தில் ஞானம் என்பது சமாதி நிலையில் இறைவனுடன் ஐக்கியப்படுதல் என்பன ஆகும்.

மேலும் ஞான மார்க்கம் ஆன்மாவாகிய தன்னைச் சிவார்ப்பிதஞ் செய்தல், அதாவது சிவனை உருவம், அருவம், அருஉருவம் ஆகிய முத் திருமேனிகளையும் கடந்து சச்சிதானந்தப் பிழம்பாய் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் திருமேனியுடையவராகக் கண்டு அறிவால் வழிபடுதலாகும். இந்த வழிபாட்டில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் எனும் 4 அங்கங்கள் உள்ளன. இதை சித்தியார்,

"கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை
கிளத்தல் என ஈரண்டாம் கிளக்கின் ஞானம்......."
எனக் கேட்டுச், சிந்தித்து தெளிந்த பொருளை நிட்டை கூடி உணர்ந்து அறிதல் ஞானத்தின் முடிவு நிலையாய் அமைகின்றது.

ஞானநெறிக்கு சன்மார்க்கம் என்ற பெயருமுண்டு. பரமுத்தி அடைவதற்கு நேர்வழி ஞானமார்க்கமே. அன்பு மேலீட்டால் தன்னை மறந்து தன் நாமங்கெட்டு தலைவனைத் தனைப்படும் தலைவி போல் ஆன்மா பதியை அடையும் மார்க்கம் சன்மார்க்கம் என அழைக்கப்படுகின்றது. இதை சித்தியார்

"சன்மார்க்கம் சகல கலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம் பலவும் உணர்ந்து........"
எனக் கூறுவர்.

சமய குரவருள் மாணிக்கவாசகர் ஞானமார்க்கம் நின்று பரமுத்தி அடைந்தவர் இவர் சீவன் முத்தராய் இருந்து பெற்ற அனுபவத்தை 'சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட அத்தன்........ என தமது ஞான குருவைப் பாடியுள்ளார்.

ஞான சாதனை செய்து வருகையில் அஞ்ஞானம் ஆதவனைக் கண்ட இருள் போல அகன்றுவிடும். ஆன்மா மெய்யறிவு பெற்று நிற்கும் நிலையே சிவத்தோடு சேர்ந்திருக்கும் நிலை. சிவமாம் தன்மை பெற்ற ஆன்மா சிவத்தையன்றிப் பிறி தொன்றையும் காணாது அது தன்னை சத்தாகவே காணும். பழுக்கக் காய்ச்சிய இரும்பு எவ்வாறு தன் கருமை நிறம் மாறித் தீயின் நிறங்கொண்டு திகழ்கின்றதோ அவ்வாறே முத்தி நிலையில் ஆன்மா சிவநாமம் தன்மை பெற்று நிற்கும். அப்போ சிவன் ஒன்றாய் வேறாய் உடனாய் ஆன்மாவுடன் நிற்கும். ஆன்மா சிவத்துடன் கலந்து அனுபவிக்கும் இன்பமே பேரின்பம். இந்தக் கலப்பே அத்துவித முத்தியாகும். இதனையே சாயுச்சியம் என்றும் பரமுத்தி என்றும் சைவ சித்தாந்தம் கூறும்.

எல்லா வேதங்களும் பண்டைய சாத்திரங்களும் ஞானத்தையே முத்திக்கு நேரான மார்க்கமாகக் கூறுவர். அந்த வகையிலே "ஞானத்தால் வீடென்றே நான் மறைகள் புராணம்" எனச் சித்தியாரும் கூறுவர்.

ஞான நிலையில் உள்ள சாயுச்சிய முத்தியே. சிவனுடன் கலத்தல் என சொல்லப்படுகின்றது. அந்த வகையிலே "தாடலை போற் கூடியவை தானிகழா வேற்றின்பக் கடலில் நீ யோகமெனக் கொள்' எனத் திருவருட் பயன் கூறுவதில் இருந்து ஆன்மாவும் இறைவனும் இரண்டறக் கலந்து நிற்கும் நிலைதான் முத்தி என கூறுவர். இதில் தாள் - தலை - தாடலை - தாள், தலை என்பன இருவேறு சொற்கள். அவை சேரும்போது இரண்டாகும் தன்மை அற்று ஓர் சொல் நீர்மை பெற்று தாடலை என்றாகும். இறைவனுடைய தாளும், உயிரினது தலையும் பொருந்துவதை உவமையாகக் கூறியதனால் இறைவன் தலைவன் என்பதும் உயிர் அடிமை என்பதும் குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது.

பெத்த நிலையில் மலத்துடன் ஆன்மா எவ்விதம் அத்துவிதமாய் இணைந்திருந்ததுவோ அதுபோல முத்தி நிலையில் பரிபூரணமான மெய்ஞ்ஞானத் தோடு அத்துவிதமாய் இணைந்து உள்ளது என்பது தெளிவாகின்றது. இதனையே மெய்கண்டாரும் "அயரா அன்பின் அரண் கழல் செலுமே....." என்றும் "மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்......" என மணிவாசகரும் கூறுவர்.

எனவே ஆன்மா நான்கு மார்க்கங்கள் மூலமும் முத்தி பெறும் என்பது மேற்சொன்ன கருத்துக்கள் மூலம் அறியலாம்.

## உசாத்துணை நூல்கள்


சைவசித்தாந்த தெளிவு- கலாநிதி நா.ஞானக்குமரன்.
சைவசமய விளக்கு - பேராசிரியர் டாக்கடர்.ந.சுப்புரெட்டியார்.
சைவசித்தாந்த மெய்ப்பொருளியல் - திருமதி.கலைவாணி.ராமநாதன்.
முப்பொருள் விளக்கம் - ஶ்ரீ.ஶ்ரீ.ச.குமாரசாமி குருக்கள்.

செல்வி.சி.கஜேந்தினி
3ம் வருடம்
இந்துநாகரிகச் சிறப்புக்கலை
யாழ் பல்கலைக்கழகம்.

# காயத்திரீ மந்திர மகிமையும் அதன் விளக்கமும்

மக்களுடைய மந்திரமாகவும், இலட்சியமாகவும் அதனை விளக்குவன வாகவும் காயத்திரீ மந்திரம் அமைகின்றது. பிரார்த்தனை, தியானம், யோகம் முதலியவற்றிற்கு ஆணித்தரமாக அமைந் திருப்பதுடன் வேதத்தின் பொருளையும் விளக்கி நிற்கின்றது. பொதுவாக எல்லோரும் ஓதும் மந்திரமாகவும் சிறப்பிக்கப்படுகின்றது. அதே வேளை பொதுவாக உள்ள மந்திரமும் இக்காயத்திரீ மந்திரத்தையே சாரும். இது பிரம்ம காயத்திரீ அல்லது சூரியகாயத்திரீ என அழைக்கப்படும். பரமகம்சகாயத்திரீ துறவிகளுக்கு உரிய காயத்திரீ மந்திரமாம். காயத்திரீ எனும் சொல்லின் பொருள் என்ன? எனில் இதனை காயத்திரீ என வகுத்து காய - கானம் அல்லது இசை எனப் பொருள் கொள்ளமுடிகிறது.

வேதங்களும் திருமுறைகளும் இசை வடிவமாக அமைந்துள்ளன. தமிழோடிசைப்பாடல் மறந்தறியேன் எனும் மேலான கருத்தை இசை மூலம் மனதில் பதியச் செய்வது. இசை மனத்திற்கு இனிமையை அளிக்கவல்லது. எனவே காயத்திரீ கான சொரூபமாக அமைந்து உயிர்களை உயர் நிலைக்கு கொண்டு வரும் வலிமையை உடையது. தேவார திருவாசகங்களை பண்ணொடு பாடும் போது உயிரினங்களிடையே பாரிய சக்தி பரவுகிறது. காயத்திரீ மந்திரத்திற்கும் இத் திறமை உள்ளது.

த்ரீ - "த்ராயதே" என விரிவு படுகிறது. பயத்தினின்று காப்பாற்றுகிறதே என்பது இதன் பொருள். (காயத்தே திறாகதி இது காயத்திரீ) ஜெபிக்கும் தோறும் காப்பது காயத்திரீ நினைக்கும் தோறும் காப்பது மந்திரம் மன்னியதே திறாகதி இதி மந்திரம் பயப்படும் பாங்கிலே சீவன்கள் வாழ்கின்றன. இறப்பும் பிறப்பும் பயம் வாழ்வில் இன்னல்கள் பற்றிய பயம் இப்படி பல இன்னல்கள் மத்தியில் உயிரினங்கள் வாழ்கின்றன. நாம் இறைவனை நினைக்கும் போது அல்லது அணுகும்போது அஞ்சாமையைப் பெறுகிறோம். அபய கரத்தோடு இறைவன் நம்மை காப்பாற்றுகிறார். காயத்திரீ மந்திரத்தை ஓதுவோர் அபயத்தில் நிலை பெற்றவர் ஆகின்றார். வாழ்க்கைப் பிரச்சனைகளை எல்லாம் விளக்கிவைக்க வல்லது காயத்திரீ. தன்னைச் சாந்தவர்க் கெல்லாம் சகல சுகத்தையும் அளிக்க வல்லவன் "சங்கரன்" நாள்தோறும் காலையிலும் மாலையிலும் நண்பகலிலும் நாங்கள் காயத்திரீ மந்திரத்தை ஓத வேண்டும். இவ்வாறு அபயத்தை தந்து பிரச்சனைகளை விளக்க வல்ல காயத்திரீ மந்திரம் பின்வருமாறு.

ஓம் பூர் புவஸ்ஸுவ
ஓம் தத் ஸ்விதூர்வ ரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
த்யோ யோ ந ப்ர சோதயாத்

OM BHUR BHUWAH SWAH
OM TAT SAVITUR VARENYAM
BARGO DEEVASYA DHEEMAN
DHIYO YO NAH PRACHODAYAT.

யார் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக!

"The Gayatri worship is the worship of god a manifest in the light of the sun, Sri Ramakrishna used to say. The veda loses itself in Gatri. Gatri loses itself in the pranava (OM) and pranava loses itself in samadhi the Superconcious state"

"gatri is a very exalted vedic prayer. Its meaning is : Let us meditate on the glorious effulgonce of that divine being who has Created the three world terrestrial or early region intermediate on Atmospheric region, Celestial or heavenly region MAY HE direct our understanding"

பூ, புவ, ஸுவ ஆகிய மூன்றும் நம்மிடத்தில் இருக்கின்றன. இவை மூன்றும் பூலோகம், புவர்லோகம், சுவர்க்கம் என்று சொல்லப்படுகிறது. இந்த மூன்று லோகங்களும் அகத்திலும் புறத்திலும் இருக்கின்றன. பண்பாடு இல்லாதவர்க்கு இம் மூன்றும் புறத்தே உள்ளன. மலபரிபாகம் உடையவர்க்கு இவை மூன்றும் அகத்தே உள்ளன. உயிரினங்களுக்கு நாள்தோறும் அனுபவத்தில் உள்ளது மூன்று நிலைகளும் ஆகும். இவை மூன்றும் ஜாக்கிரதம், சொர்ப்பணம், சுஸுபதி ஆகும். விழிப்பு, களவு, உறக்கம் எனவும் கூறலாம். விழிப்பு நிலையில் ஐம்புலன்களோடு மனமும் தொழிற்படுகின்றது. எமக்கு புறம்பாக உலகம் இருப்பதனை புலன்கள் புலப்படுத்துகின்றன. கனவு நிலையில் புலன்கள் செயற்படுவதில்லை. மனது மட்டும் தொழிற்படுகின்றது. மனதில் பதிவு செய்யப்பட்ட எண்ணங்களே நாம் கனவில் காணும் உலகமாக அமைந்துள்ளது. கனவில் காணும் உலகம் நமக்கு வெளியே இல்லை. கனவற்ற உறக்க நிலையில் மனதும் புலன்களும் தொழிற்படுவதில்லை. ஆழ்ந்த உறக்க நிலையில் எல்லாவற்றையும் விட்டுவிலகி நாம் மட்டும் இருக்கிறோம். நாம் இருப்பதை உணராதது அறியாமை இந்த மூன்று நிலைகளுக்கு அப்பாலுள்ள நான்காவது நிலையினை துரிய நிலை எனபோம். இது நமது நாளாந்த அனுபவத்தில் இல்லை. ஆத்ம போகத்தில் ஈடுடையவற்குத்தான் துரிய நிலை விளங்கும். துரிய நிலையிலே நமக்கு சத்சித் ஆனந்தம் அனுபவமாகிறது. இந் நிலையிலேயே பரம்பொருளின் காட்சி கிடைக்கின்றது. இதற்கும் அப்பாற்பட்ட நிலையே துரியாதீததமாகும். இதனை நிர்விகல்ப சமாதி எனலாம். சாதகர்களை இந்த நிலை அடையச் செய்வதே காய்த்திரீ மந்திரத்தின் நோக்கமாகும்.

பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம் ஆகிய மூன்றையும் நாம் நமக்கு அமைத்துக் கொள்ள முடியும். உடல் வாழ்க்கையை ஒழுங்காக அமைப்பது பூலோக வாழ்க்கை. மனதில் மேலான எண்ணங்களை எண்ணுவதும் புவர்லோக வாழ்க்கை. எண்ணத்தை கடவுள் பால் வைத்திருப்பது சுவர்க்கலோக வாழ்க்கை இம் மூன்று உலகங்களிலும் இறைவனைத் தியானித்து இருப்பவன் இரு பிறப்பாளன் அல்லது துவிஜன் ஆகின்றான்.

சிவ காயத்திரீ

ஓம் தத் மகேஸாய வித்மஹே
வாக் விஸுத்தாய தீமஹி
தந்தோ சிவ ப்ரபோதயாத்

விஷ்ணு காயத்திரீ

ஓம் நாராயணாய வித்மஹே
வாஸு தேவாய தீமஹி
தந்தோ விஷ்ணு ப்ரசோதயாத்

கணபதி காயத்திரீ

ஓம் தற்புருவாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தந்தோ தந்தி: ப்ரசோதயாத்

தேவி காயத்திரீ

ஓம் கானாம்பிகாய வித்மஹே
சக்தி ஹ ஸ்தாய தீமஹி
தந்தோ சக்திப் ப்ரசோதயாத்

சுப்பிரமணிய காயத்திரீ

ஓம் தற்புருஷாய வித்மஹே
மஹோ சேனாய தீமஹி
தந்தோ சண்முகப் ப்ரசோதயாத்

ஒரு மந்திரத்தினுடைய பொருளை அறிந்தோ அறியாமலோ அதை உச்சரிக்கின்ற அளவு உச்சரிக்கின்ற வர்களை அது பக்குவப்படுத்துகின்றது. இது மந்திரசக்தி எனப்படுகின்றது. மந்திரத்தின் ஓசைக்கு அலாதியான சக்தி உண்டு. இல்லறத்தார் துறவறத்தார், என எல்லா மகக்ளும் வழிபடும் மந்திரமாகவும் காயத்திரீ விளங்குகின்ற போதும் இடைக்காலத்தில் இந்த மந்திரத்தை சூத்திரர்களும் பெண்பாலரும் சொல்லக்கூடாது என்ற கொள்கை நிலவியது. இது அறியாமையால் தோன்றிய கொள்கையாகும். ஸ்ரீ இராமகிருஷ்ணர் விவேகானந்தர் இக் கொள்கையை மாற்றியமைத்தனர். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் என்பதற்கு இணங்க எவரும் இம் மந்திரதைத்தைப் பயன்படுத்தலாம். இதை அறிந்து பயன்படுத்துகிறவர்கள் எல்லோரும் இரு பிறப்பாளர் ஆகின்றனர். இதற்கு உறுதுணையாக அமைந்திருப்பது காயத்திரீ மந்திரமாம்.

**ஓயாதே யுள்குவா நள்ளிருக்கு முள்ளனைச்**
**சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்**
**மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை**
**நாயான தத்துவனைத் தானே யுலகேழு**
**மாயானை யாள்வானைப் பாடுதுங்கா ணம்மானாய்**

எல்லா மூர்த்திகட்கும் தனித்தனி காயத்திரியிருப்பினும் பிரம்ம/சூரிய காயத்திரி எல்லாவற்றிற்கும் பொதுவாய் அமைந்த காயத்திரியாகும். பல காலங்களாக பொதுமக்கள் ஜெயித்தும், பிரார்த்தித்தும், தியானித்ததும் இம் மந்திரமாகும். எனவே இதை உலக பிரார்த்தனை யென்று சொல்லப்படுகிறது. பொருளை உணர்ந்து தியானிப்போரிடத்துப் பேரறிவு உண்டாகிறது. அருள் உணர்வை ஊட்டுதலில் இந்த காயத்திரியும் மேலேயுள்ள திருவாசகமும் ஒன்றை ஒன்று ஒத்திருக்கின்றன.

பூலோகம், புவர்லோகம், சுவர்க்கம் என்பன உயிரினங்களின் அமைப்பில் விழிப்புநிலை, கனவுநிலை, கனவற்ற உறக்க நிலை ஆகிய மூன்று நிலைகளை யும் குறிக்கின்றது. இப்பாடலில் ஓயாதே என்ற சொல் இதனை விளக்குகின்றது.

ஸவித்ரு என்னும் சொல் சூரிய தேவனையும் பரமாத்மாவின் கிருஷ்டி சக்தியையும் குறிக்கின்றது. மாயா சக்தியின் துணை கொண்டு பரமாத்மன் உலகைத் தோற்றுவிக்கின்றான். அதை ஒழுங்காக நடாத்தவும் செய்கிறான்.

இப் பாடலில் மாது இருக்கும் பாதியனை என்ற பகுதியும் தாயன தத்துவனை, தானே உலகேழும் ஆயானை, ஆள்வானை என்ற பகுதிகளும் இதே கருத்தை விளக்குகின்றன.

வரேண்யம் என்பது மிக நல்லது என்றும் போற்றுதற்கு உரியது என்ற பொருள்படுகிறது. மனிதன் எதைப் போற்றுகின்றானோ அதன் மயம் ஆகின்றான் பாடுங்காண் என்றும் பதம் வரேன்யம் என்பதற்கு நிகரானது.

பாக் - என்ற சொல் அழுக்கை நீக்கி ஒளியை வளர்ப்பது எனப் பொருள் படுகிறது. உயிர்களின் அஞ்ஞான அழுக்கு நீங்குமளவு அவை சிவப்பிரகாசம் பெறுகின்றன. சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிப்பதற்கு ஞான ஒளியே

முகாமையாகிறது. "நாயான நந்தம்மை ஆட் கொண்ட நாயகனை. என்றும் பதத்தில் சாதாரண ஜீவன் பரித்துக்கு உரிய ஜீவனாக பிரகாசம் பெற்றுப் பெருநிலை அடையும் நிலையை விளக்குகின்றன.

தேவஸ்ய - சுடநடைய - எது திவ்யமானதோ அது தேவன் என்று கூறப்படுகின்றது. விளக்குவதற்கு உரிய சுடர் விளக்குகளாக அவைகள் மிளிர்கின்றன. கரணங்கள் பண்படுதற்கு ஏற்ப ஞானச்சுடர் வளர்கிறது. வேதியன் என்னும் சொல் இதனை விளக்குகின்றது. உண்மையை அறியவும் விளக்கவும் செய்கிறவன் வேதியன்.

தீமஹி - தியானிப்போமாக உள்வார் என்றும் பதம் இதனை விளக்குகின்றன. இறைவனை தியானிக்குமளவு இறைத் தன்மை மக்களிடத்து வளர்கிறது.

ந: திய: ப்ரசோதயாத் - நம்து அறிவை தூண்டுகிறார். சேவகனை என்ற சொல்லும் நாயகனை என்ற சொல்லும் இறைவனுடைய இந்தச் செயலை விளக்குகின்றன. உயிர்களைப் பண் படுத்துகிற முறையில் அவன் சேவகன் ஆகிறான். ஞான நிலைக்கு மக்களை இட்டுச் செல்கின்ற முறையில் அவன் நாயகன் ஆகிறான்.

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்திற்குள்.

செல்வி நந்தினி முருகேசு
இந்துநாகரிகம் சிறப்புக்கலை
இறுதி வருடம்.

# வள்ளலாரின் ஆன்மநேய ஒருமைப்பாடு

தில்லையின் வடமேற்கு மருதூரில் குக்கிராமன் என்ற கிராமத்தில் இராமையாபிள்ளை, சின்னம்மாள் என்பவர் களுக்குப் பிறந்த இராமலிங்கம் எனும் இயற்பெயர் கொண்டவரே வள்ளலார். வள்ளலார் என்பது ஒரு பெரிய அன்மீகத்தி னுடைய குறியீடு ஆகும். ஆன்மீகத்தி னுடைய குறியீடாக விளங்கிய வள்ளலார் 1823ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23ம் நாள் பிறந்தார். இவரது தந்தை ஒரு சிவனடியாரது பசியைப் போக்கியபோது அவருக்கு ஞானி ஒருவர் மகனாகப் பிறப்பார் என்று சிவனடியார் கூறிச்சென்றதாகவும் அவ்வாறு பிறந்தவர் தான் இராமலிங்கம் என்கின்ற வள்ளலார் எனவும் கூறப்படு கின்றது.

வாழ்வில் இறைவனைக்கண்டு இறவா நிலையைப் பெற எத்தனையோ ஆன்ம ஞானிகள் முயன்ற போதும் அவர்களில் வெற்றி கண்ட, மற்றவர்களுக் கெல்லாம் வழிகாட்டுகின்ற ஓர் ஆன்மீகச் செல்வராக விளங்குபவர் வள்ளலார். ஆன்மீக வேட்கை உடைய ஒருவருடைய வாழ்வு எவ்வாறு அமையும் என்பதை இவரது வாழ்வில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இவர் உலகியல் சாதனை, ஆன்மீக சாதனை என இருவகை சாதனைகளை மேற்கொண்டி ருந்தார். இவற்றை விளக்கும் சான்றுகளாக வரலாற்றுச் சான்றுகள், திருவருட்பா, வள்ளலாரோடு சம காலத்தில் வாழ்ந்தவர் கள் எழுதி வைத்தவைகள் என்பன உள்ளன.

சுத்தான்மா ஒன்று. யாவருள்ளும் அது துலங்கும். யாவரும் அதைப் பெறலாம். அதன் சட்டையே பூதவிகாரம், ஒவ்வொன் றிலும் ஆன்மாவைக்கண்டு அன்பு செய்க. அவ்வாறு செய்யின், வேறு சாதி, சமய, சாத்திர கோத்திரச் சண்டை வேண்டுவ தில்லை. இதுவே ஆன்மநேய ஒருமைப்பாடு என்கின்றார் வள்ளலார். இவர் ஆன்மீகம், இலக்கியம், சமூகவியல் ஆகியவற்றின் மூலமாக ஆன்மீக ஒருமைப்பாட்டை வேண்டி நின்றவர். இதனை அவரது பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

வள்ளலார் ஆன்ம நேய ஒருமைப் பாட்டையும் ஜீவ காருண்ய ஒழுக்கத்தையும் மையமாகக் கொண்ட அருட் செய்தியை உலகிற்கு எடுத்துக் கூறியவர். அதாவது தன்னுயிர் போல பிற உயிர்களையும் நேசித்து அவற்றுக்கு நேரிடுகின்ற துன்பங்களைத் துடைத்து, நேர்மை உள்ளத்தோடு தம்மால் இயன்றவற்றைச் செய்ய வேண்டும் என்கிறார்.எங்கும் பேத உணர்ச்சிகள் சிறிதுமே இன்றி அன்பே ரூபமாகக் கொண்டு எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டி வாழ வேண்டும் என்று கூறியதுடன் இதனை நிறைவு செய்யும் வகையில் 1865ல் "சமரச சுத்த சன்மார்க்கம்" என்ற பெயரில் ஒரு சங்கத்தை நிறுவி ஜீவகாருண்யமுடைய, உயிர்க் கொலையை விடுத்தவர்களும், புலாலை மறுத்தவர்களும் அதில் உறுப்பினராகச் சேர வாய்ப்புக் கொடுத்தார்.

திருமந்திரம் கூறுகின்ற "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கோட்பாட்டிற்கு இணங்க சமரச சன்மார்க்கத்தை நிலை நிறுத்தி சமரசக்கோட் பாட்டிற்கு புத்துயிர் அளித்தார். சமுதாய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்ற சாதி, சமய வேறுபாடுகள் ஒழிய வேண்டும் எனச் சுட்டிக்காட்டினார். அவர் தம் அருட்பாக்களில் பல இடங்களில் ஜாதி, சமயம் எனும் வேறுபாடுகள் வெறும் பொய் என்பதை பின்வருமாறு கூறுகின்றார்.

"ஜாதியும் மதமும் சமயமும் காணா ஆதி
அநாதியாம் அருட்பெரும் ஜோதி"

என்று கூறியுள்ளார். ஒவ்வொரு மனிதனும்

ஒவ்வொரு மனிதர்களிடமும் தொடர்பு கொள்ளும் போது எல்லோரும் இறைவனது குழந்தைகள் என்ற பெருநோக்குடன் விளங்க வேண்டும் எனக் கூறுவதன் மூலம் ஒருமைப் பாட்டை வலியுறுத்துகிறார். ஒருவன் இந்து என்றும், முஸ்லீம் என்றும், சமணன் என்றும், சைவன் என்றும் குறுகிய எல்லைக்குள் நின்று செயற்படுவது அறியாமையே எனவும் அதனை சமூகத்தில் இருந்து நீக்க வேண்டும் எனவும் கூறுகின்றார்.

ஒவ்வொரு மதத்தினரும் இறை வழிபாடு, குரு :தரிசனம், தியானம், அடக்கமாகப் பேசுதல், அடக்கமாக நடத்தல், சொல்லும் செயலும் ஒன்றாக இருத்தல், எச்செயலிலும் உறுதி குன்றாமை, ஊக்கம் குன்றாமை ஆகிய பண்புகளை கடைப் பிடிக்க வேண்டும் எனக்கூறியுள்ளார். மனிதன் முதலில் மனிதனாக வாழ வேண்டுமெனில் பசிக்கொடுமையை அகற்ற வேண்டும் எனக்கூறி 1867ல் தர்மசாலை ஒன்றை வடவூரில் நிறுவினார். அடுத்து அறிவுப் பசியை நீக்க அதே ஆண்டு "சன்மார்க்க போதினி கல்விச்சாலை" அமைத்தார். இதன் அடுத்த கட்டமாக ஆன்மீகப் பசியை அகற்ற அடிகள் ஜோதி தரிசனம் எனும் ஒரு புதிய வழிபாட்டு முறையை அமைத்தார். ஒரு முகப்பட்ட வழிபாட்டு முறை இல்லாத காரணத் தாலேயே மக்கள் பிளவுபட்டு நின்றதுடன் அவர்களிடையே ஒருமை உணர்வு உண்டாகவில்லை. அதனால் மக்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஜோதி வழிபாட்டை அடிகள் நடைமுறைபப் படுத்தினார்.

மனித நேயத்தை மட்டுமன்றி உயிர்க்கூடங்கள் அனைத்திலும் ஆன்மீக நோக்குடைய வள்ளலாருடைய நோக்கும் அதற்காக அவர் கொண்ட செயற்பாடும் அவருடைய சமசரசுத்த சன்மார்க்க சபையின் மூலமாகவும், சத்திய ஞான சபை வழிபாட்டின் மூலமாகவும் அறிய முடிகின்றது. ஆன்ம நேய ஒருமைப்பாடு பற்றி இவரது திருவருட்பா 6ம் திருமுறையில் காணலாம். அன்மநேய ஒருமைப்பாடு உலகை அமைக்க அவர் செய்த முயற்சிகள் இன்னும் வடவூரில் காணப்படுகின்றன. தன் உடலைப் பிறர் கண்ணிலிருந்து மறைத்துக் கொள்ள விரும்பிய காலத்திலும் தன்னை நாடி வந்தவர்க்கு ஆன்ம நேய ஒருமைப்பாட்டைப் பற்றியே பேசி வந்தவர். ஆன்ம நேய ஒருமைப்பாட்டைப் பூரணமாக அனுபவித்த நிலையிலேயே அடிகள் தம் உயிரை பிற உயிர்களிலும், பிற உயிர்களை தம் உயிரிலும் கண்ட நிலையிலேயே வாடிய பயிரைக் கண்டு வாடிப் பாடி இருக்கின்றார்.

இவ்வாறாக நோக்குகின்ற போது அடிகளாரின் முக்கிய கொள்கைகளாக நாம் பின்வருவனவற்றைக் கூறலாம். கடவுள் ஒருவர் உண்டு, அவரை ஜோதி வடிவில் வழிபட வேண்டும். சிறு தெய்வ வழிபாடு கூடாது, மனித வாழ்விற்கு ஜீவகாருண்யம் அடிப்படை. ஆகவே புலால் உண்பது கூடாது, ஜீவகாருண்யத்திற்கு அடிப்படை பிறர் பசி போக்குதல், எல்லோரும் ஓரினம், ஓர் குலம் எனும் பொதுமை உணர்வு மக்களிடையே தோன்றி வளர வேண்டும். இந்தப் பொதுமையுணர்வின் ஆன்மநேய ஒருமைப்பாட்டைச் சாத்திரக் கணிப்பினாலும், தர்க்க வாதங்களாலும் ஒருவன் அடைய முடியாது. இதய நெகிழ்ச்சியின் மூலமே ஆன்மீக நெறியில் முன்னேற முடியும். மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் ஒருவன் பரிசுத்தம் உடையவனாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவன் பேரின்ப வாழ்வு அடைய முடியும் என்பனவாகும்.

## உசாத்துணை நூல்கள்


வள்ளலார் வாழ்வும் தத்துவமும் - பேராசிரியர் க.அருணாசலம்
அருட்சுடர் வள்ளலார் - சுவாமி சுத்தானந்த பாரதியார்
அமுதசுரபி - தீபாவளி மலர் - 95

சௌ.சசிகுமாரசர்மா
3ம் வருடம், சிறப்புக்கலை
சமஸ்கிருதத்துறை.

# இருக்கு வேதத்திற்கு மேலை நாட்டவரின் பங்களிப்பு ஒரு பார்வை

வைதீக இலக்கியங்களே சமஸ்கிருத இலக்கியப் பரப்பில் மிகத் தொன்மையான இலக்கியங்கள். இவற்றுள்ளும் மிகவும் காலத்தால் முற்பட்டது இருக்கு வேதமாகும். இவ் வேதமானது சம்ஸ்கிருதத்தில் மட்டுமன்றி உலகின் அனைத்திலக்கியங்களிலும் தொன்மையானதும் முதன்மையானதும் என மொழியியல் இலக்கிய அறிஞர்கள் விதந்து கூறியுள்ளனர். இந்து சமயத்தவரினது இப் பொக்கிஷமானது இன்று அனைவரதும் கவனத்தை ஈர்ந்துள்ளதும் ஈண்டிங்கு கவனிக்கத்தக்கதே.

திரையீவித்யாவில் முதலாவதாக எண்ணப்படும் இவ் இருக்கு வேதமானது "ரிக்" என்னும் வினையடி கொண்டு பிறந்ததாகும். அதாவது பாடல்களின் தொகுப்பு என்ற பொருளியல் '1028' பாசுரங்களைக் கொண்டு பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப் பாடல்கள் இயற்கைத்தெய்வ வழிபாட்டுடன், சமயம், தத்துவம், ஒழுகலாறு, கலை, பண்பாடு, கேள்வி போன்ற இன்னோரன்ன விடயங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றது.

இவ்வாறான இதன் பல்வேறு சிறப்புக்களால் கீழைத்தேயத்தவர்கள் மட்டுமன்றி, இதனால் கவரப்பட்ட மேலைத் தேயத்தவர்களும் இவ் இருக்கு வேதத்திற்கு பெரும் பங்காற்றி உள்ளனர். இவர்கள் இவ் வேதம் பற்றிய தமது ஆராய்ச்சிகளை தனித்தும் கூட்டாகவும் இரு நிலைகளில் நின்று செய்துள்ளமையும் கவனிக்கத் தக்கதே. மேலை நாட்டவர்கள் தமது இருக்குவேத ஆராய்ச்சிகளை பின்வரும் நிலைகளில் வைத்து ஆராய்ந்துள்ளமையும் மனங் கொள்ளத்தக்கதே.

* வேத இலக்கிய ஆராய்ச்சி
* வேத இலக்கண ஆராய்ச்சி
* வேதகால ஆராய்ச்சி
* வேதப்பண்பாட்டுக் கலாச்சார ஆராய்ச்சி
* வைதீகத் தொடர்புடைய பிற்காலத்தவை பற்றிய ஆராய்ச்சி
* வேதப் பொருள் ஆராய்ச்சி
* வேத தத்துவ ஆராய்ச்சி
* வைதிக மொழி ஆராய்ச்சி

எனப் பல்வேறு புலங்களை பல்வேறு படிநிலைகளில் வைத்து ஆராய்ந்து நூல்களையும் எழுதி வெளியிட்டதோடு கட்டுரைகளையும் எழுதி, சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இந்த வகையில் மேலைநாட்டவர்கள் எதன் பொருட்டு இவ் இருக்கு வேதத்தின் பால் தமது பார்வையைச் செலுத்தினரெனில், ஆசியப் பண்பாடு வைதீகச்சார்புடையது. அவ் வைதீகத்தில் முதன்மையானது இருக்கு வேதம். எனவே ஆசியாவில் தமது சாம்ராஜ்யத்தை நிலைநாட்ட வேண்டும் எனில் அதன் பண்பாட்டு கோலங்களை தம்வசப்படுத்த வேண்டும். எனவே இருக்கு வேதத்தில் ஆழ்ந்த பரீட்சையம் அவர்களுக்கு தேவைப்பட்டது. இதற்கு சிறந்த ஒரு எடுத்துக்காட்டு "Warren Hostings" என்ற தேசாதிபதி இந்திய மக்களை இந்தியச்சட்டங்களாலேயே ஆட்சிசெய்ய வேண்டும் எனவிரும்பி பல பண்டிதர்கள் மூலம் மூலமொழியிலிருந்து மொழி பெயர்த்து 1776ல் "Code of Gentro[The Portuguese From of Hindu]" என்ற நூலைப் பதிப்பித்ததுவாகும்.

இவ்வாறு அரசியல் நோக்கங்களுக்காய் கீழைத் தேச நாடுகள் பற்றி

ஆராய்ந்த ஐரோப்பியர்கள் அங்குள்ள மக்களின் கலை கலாசாரங்களிலும் பண்பாட்டு விழுமியங்களிலும் அறிவியல் சிந்தனைகளிலும் பேர் ஆர்வம் கொண்டு அவைகள் பற்றி நேரடியாக அறிவதற் காகவும் அவற்றைப் பின்பற்றுவதற்காகவும் அவர்களின் இலக்கியங்களை கற்பதற்கு முன்வந்தனர். இவ்வாறான அவர்களின் முயற்சியானது இந்தியாவைப் பொறுத்த வரை இருக்கு வேதம் என்ற பெரும் சமுத்திரக் கரைக்கே அவர்களை இட்டுச்சென்றது. இச் சமுத்திரத்தின் அதிசயங்களைக் காணவும் அதன் அடி ஆழத்தினை நேரடியாக தாமே தொட வேண்டும் என்ற பேரார்வத்தினாலும் ஆராய்ச்சி செய்ய முற்பட்டனர். ஈற்றில் இதன் விளைவாய் இந்திய அறிஞர்களின் கருத்துக்களுக்கு கண்டனமும், விமர்சனமும் செய்யுமளவிற்கு வளர்ச்சி பெற்றனர்.

வைதீகமொழி ஆராய்ச்சி செய்த மேலை நாட்டவர், இந்தியாவின் வட, மத்திய பகுதிகளில் நிலவுகின்ற உறிந்தி, காஷ்மீரி, பஞ்சாபி, மராட்டி, ஒரிஸம், வங்கம், அஸ்ஸாமி முதலிய மொழிகளுக்கும் பாக்கிஸ்தானில் நிலவும் சிந்தி முதலிய வற்றிற்கும் இவற்றின் முன்னோடியான பிராகிருத மொழிக்கும் எவ்வாறு வடமொழி மூலமானதோ அதுபோல உலகின் தொல் மொழிகளான கிரேக்கம், லத்தீன், தியோத்தோனியம், ஜேர்மானியம், ரூசியம், சம்ஸ்கிருதம் முதலிய மொழிகள் இந்தே - ஐரோப்பிய மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவை என தமது முதலாவது கற்பனை மொழிக்குடும்பக் கருத்தை முன் வைத்தனர்.

பின்னர் இக்கற்பனை மொழிக் குடும்பத்தை வலு ஊட்டுவதற்காய் ஆராய்ந்தபோது வேதகாலம் பற்றிய ஒரு தெளிவான சிந்தனை தேவைப்பட்டது. எனவே வேதகால ஆராய்ச்சி செய்வது அவசியமானது இக்கால ஆராய்ச்சியில் முதன்முதல் ஈடுபட்டவர் இலக்கிய வரலாற்று நூலாசிரியரான "வேபர்" என்பவராவர். எனினும் இவர் அதனைக் கணக்கிட முடியாது அவ்வாறு முயலுதல் வீணே எனக்கருதினார். இது வேதத்தின் காலத்தை வரையறை செய்வதில் உள்ள கஷ்டத்தை தெளிவுபடுத்துகிறது.

இதனை அடுத்து வேதகாலத்தை ஆழ்ந்து ஈடுபட்டு விசாரணை செய்து நிறுவவந்தவர் "மக்ஸ்மூலர்" ஆவார். இன்றும் கூட வரலாற்று ஆய்வாளர்கள் இவரது காலநிர்ணயம் பற்றி சிலாகிக்கின்றனர். இவர் வேத உட்பிரிவுகளை எடுத்து அவற்றை ஒப்புநோக்கி அவற்றிற்கிடையான இடைவெளி இருநூறு வருடங்களாகலாம் என ஊகத்தினால் கணக்கிட்டார்.

இதன் அடிப்படையில் இவற்றிற் கிடையில் அவை தோன்றி வளர 800வருடங்கள் ஆகியிருக்கலாம். புத்தரது காலத்தில் வேதம்பற்றிய செய்திகள் தெளிவாக தெரிவதைக் கண்ட மக்ஸ்மூலர் அதற்கும் முற்பட்டது வேதம் எனக் கொண்டார். எனினும் இந்திய வரலாற்றில் புத்தரது காலம் கி.மு.500 எனக்கருதப் படுவதால் மக்ஸ்மூலர் இருக்கு வேதத்தில் காலத்தை கி.மு1500 என மட்டிட்டுள்ளார். எனினும் இவர் இக்காலத்திலும் இருக்கு வேதம் முந்தியதே என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதன் பின்னர் "விட்னி, ஷிராடர், போன்ற மாபெரும் அறிஞர்களும் தயங்கிக் கொண்டே இருக்கு வேதத்திற்கு காலம் கூறி உள்ளனர். இதன் பின்னர் இருக்கு வேத கால வானியல் கொண்டு ஆராய்ந்த ஜேர்மானிய அறிஞரான "ஜாகோபி" 1893 இல் வேதத்தின் காலம் கி.மு 4500 ஆகலாம் என்றார். இக்கால நிர்ணயமும் சரியானது அல்ல என்பதே "பீலர்" என்னும் அறிஞரின் கருத்தாகும்.

இதன் பின்னரும் "ஒல்டின்பேர்க், வின்டர் நிட்ஸ்" போன்றோரும் கால ஆராய்ச்சி செய்தனர். "உற்யூகோவிக்லர்" என்பவர்தான் கண்டு பிடித்த கல்வெட்டைக் கொண்டு வேதகாலம் கி.மு1500 ஆகலாம் என்கிறார். எனினும் "ஹெர்டல்" ஆராய்ச்சி வேறொரு கோணத்தில் திரும்பி இருக்கு வேதம் இந்தியாவில் தோன்றியதல்லவே என்றதோடு இது கி.மு 2ம்

நூற்றாண்டிற்குட்பட்டதே என்றும் கூறினார். எனினும் இறுதியாக "வின்டனிட்ஸ்" கூறியது போல கி.மு 2500- கி.மு 2000 இடைப்பட்டதாகலாம் என்பதும் இன்னும் ஆய்வுக்குரிய ஒன்றாகவே உள்ளது.

இவ்வாறு காலங்கள் பற்றிய ஆராய்ச்சி செய்த மேலைநாட்டார் வேதங்களின் பிரிவு, உட்பிரிவு என வேத இலக்கிய ஆராய்ச்சி மேற்கொண்டனர். இதன் பயனாய் வேத இலக்கியங்களில் மிகுந்த பரீட்சையம் ஏற்பட்டது. எனவே அவை கூறும் கருத்தை அறிய பெரிதும் முயன்றனர். இவர்களில் ஜேர்மானியரின் பங்கு அளப்பரியதே. இவர்கள் இந்தியரான யாஸ்கர், சாயனர் கூறிய உரைகளை ஏற்க மறுத்தனர் அதற்குப்பல காரணங்களையும் முன்வைத்தனர்.

இந்தியர்களால் வேதங்களுக்கு செய்யப்பட்டுள்ள உரை வேள்விக்கு முதன்மை கொடுத்து பிராமணிய முறையிலேயே அமைந்துள்ளது. இவை வேதகாலத்தில் எழுதப்படாததினால் வேதம் பற்றிய பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட பின்னரே செய்யப்பட வேண்டியது.

இவர்களுக்கு மொழிக்குடும்பப் பரீட்சையம் இன்மையால் நேரடிப்பொருள் கூறுவதும், சரியாய் விளங்குவதும் கடினமானது. இவர்கள் தற்போதய இந்துப் பண்பாட்டின் வழியிலேயே உரை செய்துள்ளனர் என்பதால் உரையில் நடுநிலைகிடையாது எனக்கூறி இவற்றினின்றும் தாம் செய்யும் உரை குற்றச் சாட்டுக்களுக்கு அப்பாற்பட்டது எனக் கூறினர்.

இவ்வாறு இருக்கு வேதத்தைப்பற்றி பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட தாமே உரை செய்யவல்லோம் எனக் கூறிய இவர்களுள் "ரொத், கிராஸ்மன்" போன்றோர் நடுநிலையில் நின்று இரண்டிற்கும் பொதுவாய் சிறந்த உரை செய்துள்ளனர். இதுபோல் அல்பிரட்லுட்விக்" "பிஷல்" "மக்ஸ்முலர்" போன்றோரும் கடைப்பிடித்த நடுவழியை அறிஞருலகம் இன்றும் ஏற்றுக் கொள்கின்றது. இவ் இருக்கு வேதத்திற்கு உரை செய்யும்போது இலக்கணம் கவனிக்கவேண்டியதும் அவசியமானதே எனவே இவர்கள் வைதீக இலக்கணம் பற்றிய ஆராய்ச்சியும் மேற்கொண்டனர்.

இன்றும் வைதீக இலக்கணத்தை கற்க முற்படுவோர் மேலை நாட்டவர் இலக்கணத்தை கற்பதும் கவனிக்கத் தக்கதே. இந்த வகையில் "Makonall, Bothling, Winternitz" போன்றோர் எழுதிய இலக்கண நூல்கள் குறிப்பிடத்தக்கது.

இலக்கணமும், இலக்கியமும் கைவரத்தொடங்கியதுமேயே வேத நடை முறைகள் பற்றி கட்டுரைகளும் நூல்களும் வெளிவரத்தொடங்கி விட்டன. இந்த வகையில் "ஆபிரகாம் றோகர்" என்னும் டச்சுக்காரர் 1651ல் 'Open Door to hedden jeathendom' என்னும் நூலை ஆக்கினார். இந்நூலானது பிராமணிய சமயத்தின் நடைமுறைகளை விளக்குவதோடு முதன் முதல் வேதங்களைப்பற்றி குறிப்பிடும் நூலாகவும் அமைந்தது.

மேலைநாட்டார் இவ்வாறு வைதீக இலக்கியமான ரிக்வேதம் பற்றி ஆராய்ச்சி செய்யும் போது தனித்தும், கூட்டாகவும் செயல்பபட்டுள்ளனர். கூட்டு என்னும் போது கழகம் அல்லது ஆராய்ச்சிமையங்கள் அமைத்து ஆராய்ந்துள்ளனர். இதற்கு ஒரு எடுத்துக்காட்டு 1789ல் பெங்களூரில் ஆரம்பமான வேத்தியல் கழகமாகும். இங்கு வைதீக இலக்கியங்களோடு பிற் கால செம்மொழி சம்ஸ்கிருதமும் ஆராய்ச்சிக்குட் பட்டது.

இவ்வாறான ஆராய்ச்சிகள் மட்டுமன்றி உலகின் தொல் இலக்கியமான இருக்கு வேதத்தின் முதல் எட்டுப் பகுதிகளையும் 1838ல் "Frosen" என்பவர் பதிப்பித்தார். தொடர்ந்து "மக்ஸ்முலர்" 1849 - 75 கலப்பகுதிகளில் சாயணருடைய உரைகளுடன் ஆறு பகுதிகளாக இருக்கு வேதத்தை பதிப்பித்தார். இவரது பல்வேறு விதமான இருக்குவேத ஆராய்ச்சி பங்களிப்பு என்பனவற்றால் கவரப்பட்ட சுவாமி

விவேகானந்தர் "மக்ஸ்மூலர் ஒரு வேதகால ரிஷி" என விதந்து கூறியுள்ளார். இவர் இவ்வாறு இருக்கு வேதத்தை ஆழ்ந்து கற்பதற்கு 30 வருடங்கள் செலவிட்டதும் குறிப்பிடத்தக்கதே. தொடர்ந்து 1862-75 களில் இருக்கு வேதம் முழுவதையும் பேராசிரியர் 'Theodor Aufaecht' என்பவர் பதிப்பித்தார். 1846ல் Rudolf Roth என்பவர் on the Literature and history of the veda என்னும் நூலை வெளியிட்டார். இவரே வேதமொழி பற்றி ஆராய்ந்த முதல் ஜேர்மானிய அறிஞராவார்.

வேத்தியல் கழகம் போல் செயற்பட்ட "ஏஷ்யா சொஸைடி" யும் குறிப்பிடத்தக்கது. இது கல்கத்தா ஹைகோட் ஜஜ்ஜாக இருந்த "Sir William Jones " (1746-94) என்பவரால் உருவாக்கப்பட்டது. இது இன்றுவரை வேதங்கள் முதல் சூத்திரங்கள் வரையான வற்றின் சர்ச்சைகளை வெளியிட்டு வருகிறது. H.T.Coledrooke (1765-1837) என்பவர் Miseellanim ssays என்று நான்கு volume உள்ள நூலை வெளியிட்டார். இந்நூல் சம்பிரதாயரீதியில் வேதங்கள் பற்றிய கருத்துக்களை விளக்குகின்றது.

இவ்வாறு நூல்கள் மட்டுமன்றி உபன்யாயங்களும் செய்யப்பட்டன. 19ம் நூற்றாண்டின் நடுவில் "Burnuf" என்ற French தேசத்துப் பேராசிரியர் வேதங்கள் பற்றி ஆராய்ச்சி செய்ய வழிவகுத்த முக்கிய சம்பவம் இதுவாகும். இவரது பிரசங்கத்தைக் கேட்ட ரஷ்ய, ஜேர்மனிய , பிரஞ்சு, பிரிட்டன் முதலிய தேசத்துப் பேராசிரியர்களும் ஒன்றுகூடி வேதங்களில் சிரத்தையோடு ஆராயத்தொடங்கினர். "Roth, Bohtling" என்ற இருவரும் இணைந்து "Peteyds burg Academy" என்ற அகராதியைத் தயார் செய்தனர். இதன் ஆறு பகுதிகளிலும் வேதங்களிலிருந்து ஏராளமான மேற்கோள் கள் எடுத்தாளப்பட்டது.

Encyclopedia of indo - Aryan Research என்ற பிரமாண்டமான நூல் வெளிவந்தது. இதிலும் வேதங்களை பற்றிய பல முக்கியமான ஆராய்ச்சிகள் இருக் கின்றன. இச்சம காலத்தில் "Weder" என்ற ஆசிரியரும் வேதங்கள் பற்றி எழுதியுள்ளார்.

1873 -75 காலப்பகுதியில் "Grassmann" என்பவர் ரிக்வேத அகராதி ஒன்றை வெளியிட்டிருக்கிறார். Kaefe's (1880) என்பவர் ரிக் வேதத்தைப் பற்றி விஸ்தாரமான வ்யாஸங்கள் எழுதியிருக்கிறார். இதனை Arrow snuth என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். Pisched and geldner என்பவரும் vedi studies என்ற நூலை ஜேர்மன் பாஷையில் எழுதி உள்ளார். Zummer என்பவர் வேதங்களுடைய பதத்தியங்களுக்கு வியாக்கியானம் எழுதியுள்ளார். Luding என்பவர் வேதம் முழுவதும் ஜேர்மன் பாஷையில் மொழிபெயர்த்திருக்கிறார்.

Muir என்பவர் எழுதிய Original sans krit Tradition என்று ஐந்து பாகங்கள் கொண்ட நூல் வேதத்தின் நித்தியத்துவம் வேதசாஸ்வரூபம் இவைகளைப்பற்றி ஆராய்ந்துள்ளது. இதில் வேதங்கள் பற்றி நம் தேசத்துப்பெரியோர்கள் கொண்ட பழங்காலத்து அபிப்பிராயங்களை ஒருங்கே காணலாம்.

H.H.Wilson என்பவர் ரிக்வேதம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். T.Griffith என்பவர் ரிக் வேதத்தையும் அதர்வ வேதத்தையும் மொழிபெயர்த்திருக்கிறார். A.A.macdonell என்பவர் ரிக்வேதம் பற்றி பல நூல்கள் எழுதியுள்ளார். இதில் Vedichs indm என்பது முக்கியமானது. Hermanold என்பவர் 1888ல் ரிக் வேதக் கருத்துக்களை விளக்கி ஒரு நூல் எழுதியுள்ளார். Lamman என்பார் ரிக்வேதப் பானையைப்பற்றி ஒரு நூல் எழுதினார். இவர் வேதவியாகரணம் பற்றியும் ஒரு நூல் ஆக்கியுள்ளார். Burgainine என்ற பிரஞ்சு பேராசிரியர் ரிக்வேத மதத்தை ஆராய்ந்தார். Hellifraut என்பவர் வேததேவதா தத்துவங்களைப் பற்றி நூல் எழுதியுள்ளார்.

Vedic Concurdence என்ற பிரமாண்டமான நூலை Bloom Field என்பவர் எழுதியுள்ளார். "ஸ்டீபன்" என்ற ஜேர்மன் ஆசிரியர் துருக்கி பாஷையில் ரிக்வேதத்தை மொழிபெயர்த்து உள்ளார்.

"ஸூப்லுவான் லெவி" என்ற பிரஞ்சு பேராசிரியர் கர்மாக்களைப் பற்றி சர்ச்சை செய்து நூல்கள் எழுதியுள்ளார். 'ரெனோ' என்ற பிரஞ்சு ஆசிரியரும் பலநூல்களை எழுதி உள்ளார். ஹாலந்திலுள்ள J.God என்பவர் "ஸஹஸ:ஸீநோ" என்ற வார்த்தையை வைத்துக்கொண்டு பெரிய நூல்கள் எழுதியிருக்கிறார். மற்றொருவர் ராஜசூர்ய யாகத்திற்கு விளக்கம் கூறி எழுதியுள்ளார்.

இது மட்டுமல்ல இன்றும் ரஷ்ய செக்கோஸ்லாவாக்கியா, டச்சு, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன், கிரேக், அமெரிக்கா முதலான தேசங்களில் orintal சஞ்சிகைகளில் வேதங்களைப் பற்றிய ஆராய்ச்சி நடந்து வருகிறது. Academy களிலும் University களிலும் வேதங்களைப்பற்றிய சர்ச்சைகள் நடக்கின்றன. இவர்களில் ஒரு சிலர் இந்து மதத்தையும் வைதீக நெறியையும் துதிப்பதற்கும் மக்களிடையே அவநம்பிக்கை ஏற்படுத்துவதற்கும் ஆராய்கின்றனர் என்பது உண்மையானாலும், இன்று வைதீகர்கள் பலரும் மேனாட்டார் வழியிலேயே பின்பற்றத் தொடங்கிவிட்டனர் என்பது மனங்கொள்ளத்தக்கது.

இவ்வாறாக மேலைநாட்டவர்கள் இருக்குவேதம் பற்றிய தமது கருத்துக்களை நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், உபன்னியாசங்கள் என்பனவற்றினூடாக தனித்தும், கூட்டாகவும் வெளியிடுகின்றனர். இவர்களது இவ் ஆய்வுகள் இந்திய தேசத்து இருக்கு வேதபாஷ்யங்களுக்கும், சம்பிரதாங்களுக்கும் உண்மைகளுக்கும் புறம்பாக வெளியிடப்பட்டாலும் அவைகளிலும் சில ஆக்கபூர்வ உண்மைகள் இருப்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இரண்டு மூன்று நூற்றாண்டுகளாய் பெருகிவரும் நூல்களில் வேண்டாத விஷயங்களை விட்டு விட்டு வேண்டியவற்றை எடுப்பதே சாலச்சிறந்தது.

மேனாட்டில் இவ்வளவு நூல்கள் வெளிவந்து ஆராய்ச்சிகள் நடைபெற்று கருத்துக்கள் வெளியிடப்படுகின்ற போதும் வைதீகர்கள் போதியளவிற்கு அதுபற்றிய யாதொரு சர்ச்சையும் செய்யாததும் கவனிக்கத்தக்கதே. இந்நிலையில் வேதங்களை வைதீகர்கள் கைவிட்டுவிட்டனர் எனக் கூறல் மிகையாகாது.

## உசாத்துணைகள்


1. வடமொழி இலக்கிய வரலாறு பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள்
   கலாநிலையம் கொழும்பு - 1962

2. சம்ஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள் - பேராசிரியர் வி.சிவசாமி
   நியூஈரா பப்ளிகேசன் லிமிட்டட் - 1989

3. கைலாசநாதம் - பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள்
   பவளவிழா மலர் -2000
   "கிழக்கிலும் மேற்கிலும் சம்ஸ்கிருத மொழி வளர்ச்சி - சில சிந்தனைகள்- கட்டுரை
   - ஸ்ரீகிருஷ்ணானந்தசர்மா

4. "வேதங்களில் மேனாட்டார் செய்துள்ள ஆராய்ச்சி'
   கட்டுரை - அக்னிஹோத்திரம் ஸ்ரீ உ.வே.ராமானுஜ தாசார்யஸ்வாமிகள்.

செல்வி.வானதி-தங்கையா
3ம் வருடம்
இந்து நாகரிகத்துறை.

# சர்வமத சம்மத சாயி

சகல ஜீவராசிகளும் உள்ளுறைந்து விளங்குகின்ற சர்வாந்தர்யாமி பரமாத்மாவே என அனாதியிலிருந்து இன்றுவரை வேதங்களும், சாஸ்திரங்களும், ரிஷிகளின் உபதேசங்களும் சந்தேகத்திற் கிடமின்றி ஒன்று சேரக் கூறுகின்றன. வேதங்களும் இதனை "ஏகம் ஷத் ஷிப்ரா பகுதா வதத்தி" என உரைக்கும். அதாவது உள் பொருள் ஒன்றே அதனை அக்கினி, யமன் என பலவாறு வழங்குவர் என்பதாம். பக்தி என்பதை இஷ்ட தெய்வம் ஒன்றிடம் செய்யும் ஆராதனையாகக் கொள்ளாமல் கடவுள் என்ற ஒரு பொதுச் சக்தியிடம் காட்டும் அன்பு எனக் கொள்கையில் எல்லா மதங்களும் கூறும். பக்தியானது வேதத்தின் வழி வந்ததேயாகும். எனவே சாயி வேத சாயியாக இருப்பதனாலேயே ஸர்வ மத சம்மத சாயியாக உலகெங்கும் கொழுந்து விட்டு பிரகாசிக்கின்றனர். "நான் ஓரிடத்திற்குரியவன் அல்லன் நான் ஒரு பெயருக்குட்பட்டவன் அல்லன் என்னிடம் "எனது" "உனது" என்பன இல்லை. நீ கைக்கொள்ளும் எந்தப் பெயர் மூலமாகவும் நான் விடை பகருகிறேன் எங்கே நான் வேண்டப்படுகிறேனோ அங்கே நான் செல்கின்றேன்" என்ற அவரது கூற்று இதனை உறுதிப்படுத்தும் இறை அவதாரமாக போற்றப்படும் சாயி உலக மதங்களுள் அனைத்தையும் ஒன்றிணைத்து "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமூலர் வாக்கிற்கு உயிர்ப்பளித்து வருகின்றார். அதில் வெற்றியும் கண்டுள்ளார். பஜனைகளில் ஸர்வமத பிரார்த்தனைகளை இடம்பெற வைத்து அன்பு ஒன்றே இறைவனை அடையும் வழி என இயம்புகின்றார் சாயி.

எங்கும் நிறைந்த இறைவனை நாம் எங்கெல்லாமோ தேடுகின்றோம். பக்தன் பிரகலாதன் கூறும் பாகவத சுலோகம் இக்கருத்தினை குறிப்பிடும் "இங்குள்ளோர் அங்கில்லை என்னும் சந்தேகங்களை விட்டுவிடு ஓ! தானவர் கோனே; கேள், எங்கு நீ தேடினும் எங்கு நீ காணினும் அங்கே... அங்கேதான்...... அவர் உறைகிறார்! என்பதால் அறியப்படும். இதனை வள்ளலாரும்

"ஜாதியும் மதமும் சமயமும் காணா ஆதி
அநாதியாம் அருட்பெரும் ஜோதி" என்றார்.

பரந்த சமுத்திரத்தின் சுவையானது சமுத்திர ஜலத்தின் துளியொவ்வொன்றிலும் சுவை குன்றாதும் குறையாதும் பூர்ணமாகக் காணப்படுகின்றது. இதனால் துளி தான் சமுத்திரம் என்பது பொருளல்ல. துளி நீரும் சமுத்திரமும் வெவ்வேறானவை என நாம் காண்பினும் இவை இரண்டினதும் இயல்பும், சுவையும் ஒன்றானவை. இதே போன்றே சர்வாந்தர்யாமியாகிய பரமாத்மா தன்னை அறிந்துரை எடுத்துக் கொண்ட வெளி ரூபமும், வெவ்வேறானவையல்ல அவை ஒன்றேயானவை. இவ்வாறான அற்புத சிந்தனையை, சமய சமரசத்தை விளக்குவதாகவே சாயியின் இலச்சினை அமைந்திருக்கிறது. இந்தவகையில் ஒவ்வொரு மத சின்னத்தின் தத்து வார்த்தத்தை ஐயம் செப்புகையில் "உன் இதயத்தில் ஆழ்ந்து, தானே அங்கு ஒலிக்கும் ஆதி சப்தமாம் ஓங்காரத்தைக் கேள் அப்போது அப்பிரமை ஒலியே பிரபந்தம் முழுவதின் இதயத்துள்ளும் ஒலிப்பதால் நீ அனைத்துமான ஒன்றினையே

உணர்ந்து விடுவாய்'' (இந்து சமயம்) கர்மா என்ற காரண பாதையிலேயே நம் காரியங்களை சகடம் செல்லும் என்ற தர்ம நியதியே சக்கரம்(பௌத்தம்), கீழான உணர்ச்சிகளை பொசுக்கித் தெய்வீகத்தில் புடமிடுவதுதான் தீ (பார்ஸியம்). பிறையை விட்டு அகலாமல் நிற்கும் நம்சத்தரத்தைப் போல் இறைவனிடம் நிலையான நம்பிக்கையில் ஊன்றி நிற்க வேண்டும் (இஸ்லாம்). நாம் என்ற உணர்ச்சியை, அகந்தையைச் சிலுவையில் அறைந்தால் நித்தியத்துவம் பெற்றுப் புத்துருவில் எழலாம (கிறிஸ்தவம்) என அழகாக விளக்கம் தருகின்றார்.

மொத்தத்தில் "எல்லாச் சமயங்களும் அன்பு, தூய்மை, தியாகம், தர்மம் என்ற கோட்பாடுகளைத் தான் வலியுறுத்துகின்றன. ஒன்றேயான சத்தியத்தின் பல்வேறு சாயல்கள் தாம் எல்லா சமயங்களும் அவையாவும் ஒரே இறைவனின் மகிமையைத்தான் போற்றுகின்றன'' என்கிறார். ஒவ்வொரு உபந்நியா சத்திலும் ஸ்வாமி முழங்கி வரும் ஐக்கிய வாசகம் "இருப்பது ஒரு கடவுள் தான் உலகெங்கும் பரவிய சர்வ வியாபியே அது. இருப்பது ஒரு மதம் தான், அன்பு மதமே அது'' என்கிறார். இதனை திருமூலரும்

"அன்பும சிவமும் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவதாரும் அறிகிலர்'' என்றார்.

எந்த உலகத்தை உள்ளபடி அனுசரித்தாலும் அது மெய்ப்பொருளில் கொண்டு சேர்த்துவிடும். இவ்வாறு உள்ளபடி அனுசரிப்பதானால் எம் மதத்தவரும் பிற மதத்தவரை பழிப்பதற்கில்லை என்று கூறுகிறார் பாபா. பிற மத நிந்தனை அறவே உதவாது என்கிறார். இங்கு இதுவரை எந்த ஆச்சாரியமும் கூறாத ஒரு அருமையான ஐக்கிய வாசகத்தை சாயி கூறுவார். "ஸர்வ தேவ நமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி'' என்கிறோம். அதாவது எந்த மதத்தினர் தெய்வத்தை எப்படி நினைத்து வழிபட்டாலும் அது ஒருவனேயான கடவுளைத் தான் சென்றடைகின்றது என்கிறோம். ஒருவன் எவ்வித மத வழிபாட்டை பழித்தாலும் அந்தப் பழி இவனது மதமும் கூறுவதான அந்த ஒரே இறைவனை நிந்திப்பதாகத் தானே ஆகும்'' என்று விளக்குகிறார்.

எந்த மத அனுஷ்டானமாயினும், சித்தாந்தமாயினும் அனைத்துக்கும் எலும்பு ஓடும் ஜீவரசமாக அன்பு என்ற ஒன்றையே கொள்ள வேண்டும் என்று லிதித்தே பாபா சர்வ மத சமரசத்தை நிலைநாட்டி வருகிறார். சர்வமத சமரசம் என்பது நமக்குப் புதிதான ஒன்றல்ல உலகின் ஆதி நூலாம் வேதத்தின் பெருமையே இதுதான் ஒரு குறிப்பிட்ட வழியாலன்றி, எவ்வழியில் சிரத்தையோடு சென்றாலும் மெய்ப்பொருளைச் சேரலாம் அந்த ஒரே சத்தியத்தைத் தான் ஞானியர் பல்வேறு விதங்களில் கூறியிருக்கின்றார்கள் என்று வேதம் முரசறையும். வேதத்திலும் சரி பிற்கால சாஸ்திரங்களிலும் சரி "தர்மம்'' என்றது "மதம்'' என்பதையே குறிக்கும். வாழ்க்கை நெறியான அறம் முழுவதையும் கூறுவதே சமயம்.

" அவரவர் தமதம தறிவறி வகைவகை அவரவர் இறையவன்'' என்று ஆழ்வார் திலகமும் சமய சமரசத்தை புகன்றார். இறைவனை "நம் தேசத்தவன் அவனே அந்நிய தேசங்களையும் சேர்ந்தவன்'' என்றும் மாமறை "ரா:ஸந்தேச்யோ ஷிதேச்ய'' இதைத்தான் மணிவாசகர் "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்றார்.

"எவன் எப்படி வழிபட்டாலும் அவ்வழிபாட்டை நானே வலுவாக்குகிறேன்'' என்றான் கீதாச்சாரி. ஆனால் அவனுக்கு பின்னும் பல்வேறு சமய பிணக்குகள் பல்லாயிரமாண்டு காலமாக தொடர்ந்து

இன்றுவரை தீர்த்தபாடில்லை. சென்ற நூற்றாண்டில் சர்வமத சமரசத்திற்கென ராமகிருஷ்ண பரமஹம்சரின் அற்புத அவதாரம் நிகழ்ந்தது. இவர் பிறமத அநுட்டானங்களையெல்லாம் பின்பற்றி, அவை ஒவ்வொன்றின் மூலமும் மெய்ப்பொருளை அடையலாம் என அனுபவ பூர்வமாக கண்டார். இதனை உலகிற்கு பிரகடனமும் செய்தார். பரமஹம்ச அவதாரம் முடியு முன்பே தோன்றிய ஷிர்டிசாயி அவதாரமும் சர்வமத சமரசத்தை வலியுறுத்தியது. குறிப்பாக அவர் முஸ்லீம் ஐக்கியத்தை ஏற்படுத்தினார்.

இந்து சமயத்தைச் சேர்ந்த சைவர், வைணவர் முதலிய பல்வேறு இஷ்ட தேவதையின் வழிபாட்டுக்காரர்கள், அத்வைதம் - த்வைதம் முதலான வெவ்வேறு சித்தாந்திகள், யோகத்தின் பல மார்க்கங்களை பின்பற்றுவோர் இவர்களைத் தவிர அந்நிய மதத்தவரும் சாயி என்ற அவதாரத்தின் பரஸ்பர ஐக்கியத்தை பெற்றிருப்பது அன்புச் சமயத்தின் அளப்பரும் வெற்றியேயாம். "நீ அனைவர்க்கும் ஒருபோல் பொதுவாய் இருக்கிறாய்" என்கிறது வேதம். "எல்லோர்க்கும் பொதுவில் நடம்" என்றார் அடிகளார் இப்படி லோகத்திற் கெல்லாம் மகா மங்கள ஜோதியாக அன்பொளியை பரப்பி வருகின்றார் பாபா. எல்லா மதங்களும் இறுதியில் கொண்டுபோய் சேர்ப்பது கடவுளிடம் தான் என்ற உணர்வால் தான் அவர் தமக்கென ஒரு மதத்தினை ஸ்தாபிக்காமல் சர்வ மதங்களையும் தமதாக ஏற்றிருக்கிறார். அத்வைதமே அவர் முடித்த முடிபாக கூறும் தத்துவம். உபதேசங்கள் என்று வரும்போது மதங்களுக்குள் மாறுபாடு இருக்கலாம். ஆனால் மௌனம் என்பது அனைத்து சமயத்தினருக்கும் ஒன்று தானே? இதனால் தானோ என்னமோ சாயி மௌனத்தை விஷேசமாக வலியுறுத்துகிறார். இந்த மௌனமே சாத்வம் பொருந்தியது என குறிப்பிடும் பாபா silence a sailence என்பார்.

"அன்பின் பாதையில் பகையின் தடை இருந்தாலொழிய அது அன்பாக இருக்க முடியாது. சத்தியத்தின் பாதையில் அசத்திய தடை இருந்தாலொழிய அது சத்தியமாக இருக்க முடியாது. அன்புச் சக்தியின் பெருமையும், சத்தியச் சக்கியின் மகிமையும் தெரிவதற்கே பகையும், பொய்யும் கற்பிக்கப்பட்டு உள்ளன. அஞ்ஞானத்தின் சாரம் என்னவென ஆராய்ந்தால் ஞானமே எனக் காண்போம். இப்படியே பாபத்தின் சாரம் புண்ணியமே என்றும் சாவின் சாரம் அமரத்வமே என்றும் காண்போம். எனவேதான் பாபா

"வாழ்க்கை ஒரு சவால் அதற்கு முகம்கொடு வாழ்க்கை என்பது அன்பு அதை அநுபவி வாழ்க்கை ஒரு கனவு அதை மெய்யாக்கு வாழ்க்கை ஒரு விளையாட்டு அதை விளையாடு" என்றார்.

எல்லா நாமங்களிலும் சம பாவம் உண்டாக வேண்டுமென்றார். "முதலில் மனம் விரும்பும் அந்த ஒரு நாமாவையே விடாமல் ஜபியுங்கள் அதுவே உங்களை சுத்தப்படுத்திவிடும் பிறகு நீங்களாகவே இதே மகிழ்ச்சியுடன் மற்ற நாமங்களையும் விரும்பத் தொடங்குவீர்கள். இதிலே இவன் தேர்ந்தபின் எல்லா சாலையிலும் சரளமாக சுலபமாக கார் ஓடுகின்றானல்லவா? அவ்வாறே என்கிறார்.

"பிரம்ம தத்துவத்தைப் பற்றி உண்மைகளை கோத்துத் தரும் சாரமாக உள்ள நூலை பிரம்ம சூத்திரம் என்கிறோம். பிரம்மமே சூத்திரம் தான் ஜீவாத்மாக்களான இத்தனை மலர்களையும் தொடுத்து உலக மாலையாகக் காட்டுவது இதனைத்திற்கும் ஆதாரமான அந்த பிரம்மம் தான், அந்த மாலைக்குள் உள்ள ஆதாரமான நார் தெரியாதது போல், உலகம் தெரிகிற தேயன்றி இதைச் சேர்த்து வைத்துள்ள பிரம்ம சூத்திரம் தெரியவில்லை. ஆயினும் மலர்கள் வாடி உதிர வாடாமலே இருக்கும் நார் போல் ஜீவர்கள் மாய்ந்தாலும் பிரம்ம தத்துவம் மாயாமலே, மாறாமலே இருக்கிறது" அனைவருக்கும் ஒரே சித்தாந்தத்தை, சாதனையை வெறுமனே பகட்டாக விதிக்காமல் எல்லாச் சமய சம்பிரதாயங்களையும் அதற்குரியவர்களுக்கு போதித்து அவற்றில் மக்களை

ஈடுபடுத்திவரும் மகா குருவாக சாயி விளங்குகின்றார்.

"தம் வர்த்தனீர் அநுவாவ்ருத ஏக இத்" என்ற வேத வாக்குக்கிணங்க பாதை எல்லாம் அவன் பாதம் சேருது
பாதையற்(று) ஏக அபேதம் பொலியுது
" யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகவர் தாம் வருவார்" என்ற உண்மையை பாபா தன் செயற்பாடுகளால் உணர்த்த முனைகிறார் என்பது தெளிவு.

பல்வேறு ஆறுகள் பலதிசைகளிலும் பாய்ந்து ஈற்றில் பரந்த சமுத்திரத்தில் சங்கமிக்கும். அவ்வாறே சமயங்களில் மார்க்கம் வேறுபட்டாலும் அவற்றின் குறிக்கோள் ஒன்றே. ஈஸ்வரன், யேசு, அல்லா, என்பன ஒரே பரம்பொருளுக்கான பல்வேறு வடிவங்கள் என்றார் பாபா. அவ்வவ் நிலங்களில் சூழல், பழக்கவழக்கத்திற்கேற்பவே யேசு, முகமதுநபி, புத்தர் போன்ற அவதாரங்கள் தோன்றி தம் கருத்தினை இயம்பின. அனைவருமே அன்பு என்ற ஒரு மதத்தினை ஏற்றுக் கொண்டமை கண்கூடு. இதனையே சாயி இன்று உலகளாவிய மத ஒருங்கிணைப்பாக பிரகடனப்படுத்தியுள்ளார். இவரை தெய்வ அவதாரமாகவே அந்த ஈசனாகவே போற்றும் பக்தர்களும் உள். இறைவனை அடைய வழி காட்டும் குருவாக நம்புபவரும் உள். இவரை நம்பாதவரும் உளர். இருப்பினும் பாபா அவரவர் விரும்பும் இஷ்ட தெய்வங்களினது உருவிலேயே அவர்களுக்கு காட்சி தந்து அவர்களை தெய்வீக நிலைக்கு இட்டு செல்ல முனைகின்றார். இதனாலேயே நீங்கள் என்னை வணங்க வேண்டாம் உங்கள் இஷ்ட தெய்வங்களை வணங்குங்கள் நான் அங்கெல்லாம் நிறைந்திருப்பேன் என்றார்.

இராமகிருஷ்ணர், விவேகானந்தர், சத்திய சாயி என ஏராளமான அவதாரங்கள் தோன்றி உபதேசித்த போதும் மதவேற்றுமைகளும், மதத்தாலான உயிர்ப்பலியும் இன்றளவும் உலகளாவிய ரீதியில் தொடர்ந்த வண்ணமே உள்ளது. "திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்பதுபோல நாம் ஒவ்வொருவருடைய மனங்களிலும் மத ஐக்கியம் எழ வேண்டும். அப்போது தான் பூசல்களை தடுத்து உண்மை ஞானத்தினை பெற முடியுமே தவிர மத வேற்றுமை பூசல் ஒருபோதும் முத்தியை நல்காது. இதனையே வள்ளலார்

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திர சந்ததிகளிலே தோத்திர சண்டையிலே
ஆதியிலே அபிமானத் தலைகின்ற உலகீர் அலைத் தலைத்து வீணே நீர் அழிதல் அழகல்லவே" என்றார்.

சர்வமத பிரார்த்தனைகளையும், பஜனைகளும் சாயி சமித்திகள் ஊடாக இடம் பெறுதலால் இன்று மக்களிடையே சமய சமரச சிந்தனை நன்கு முளைவிடத் தொடங்கி விட்டுள்ளது என்பதனை மறுக்க முடியாததுதான் இதனால் தானோ
"அல்லா ஈஸ்வர சாயிராம்
புத்தா யேசு சாயிராம்..." என எல்லா தெய்வங்களில் வடிவாக சாயிபக்தர்கள் பகவானை காண முனைகின்றார்கள் போலும்.


உசாத்துணைகள்

1. ஸ்வாமி -நா.கணபதி
பூம்புகார் பிரசுரம்,
சென்னை - 13
1977.

2. பிரேம வாஹினி -பாபாவின் சொற்பொழிவுகளிலிருந்து தமிழாக்கம்-
ஞா.குகஞானி
ஸ்ரீலங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்-1991

3. பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபாவின் அருளுரையிலிருந்து சில முத்துக்கள் - தொகுப்பு
செ.ஞானசேகரம்
சத்ய சபய்பாபா
சேவாசமித்தி,
திருநெல்வேலி.
இறுதிப்பதிப்பு-1991.

## இம் மலர் உருப்பெறுவதில் பல வழிகளிலும் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகள் பல


* புதுப்பொலிவுடன் வெளிவரும் எமது மெய்ப்பொருள் சஞ்சிகைக்கு ஆலோசனை வழங்கிய பெரும் தலைவர், பெரும் பொருளாளர், துறைத்தலைவர், துறைசார் விரிவுரையாளர்கள் அவர்களுக்கும்

* ஆசியுரைகள், வாழ்த்துச் செய்திகள் தந்துதவிய பெருந்தகைகளுக்கும்

* எமது அழைப்பினை ஏற்று சஞ்சிகைக்கான ஆக்கங்களை தந்துதவிய பெரும் தலைவர் துறைசார் விரிவுரையாளர்கள் துறைசார்ந்த மாணவர்களுக்கும்

* விளம்பர அன்பளிப்புக்கள் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும்

* கணனி வடிவமைத்து அழகுற அச்சிட்டு உதவிய மருதம் அச்சகத்தினருக்கும்


* மேலும் இம் முயற்சிக்காக முன்னின்று செயற்பட்ட மன்ற அங்கத்தவருக்கும், சக நண்பர்களுக்கும்

* மேலும் இம் முயற்சிக்காக பல்வேறு வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும்

**எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**இந்துப் பண்பாட்டுக்கழகம்,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

**இணை இதழாசிரியர்**

0774249067

[illegible]

*With Best Compliments from :*

பார்த்தால் வாங்குவீர்கள்!
வாங்கியதும் திருப்தியடைவீர்கள்!

கண்ணைப் பறிக்கிறது என்னை இழுக்கிறது வண்ணம்
நூறு விதமே! விண்ணோடும் மண்ணோடும் இல்லாத
வண்ணங்கள் பட்டோடும் நூலோடும் மிளிர்கிறது.

# மகாநதி
## புடவை அகம்

முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு
அதிர்ஷ்டமான இடம்

16, நவீன சந்தை, 16, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
4, நவீன சந்தை, 1, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.

## MAHANATHY TEX

16, New Market, 16, New Market (Upstair) Jaffna.
4, New Market, 1, New Market (Upstair), Chavakachcheri.
Tel : 021-2552

*With Best Compliments from :*

## இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்

T.V, டெக், றேடியோ, வீடியோ,
ஓடியோகருவிகள், கசெற் வகைகள்,
மணிக்கூடுகள், பிலிம் றோல்,
மிதிவண்டி, மிதிவண்டி
உதிரிப்பாகங்கள் போன்ற மற்றும்
அழகு சாதனப் பொருட்கள்
விற்பனையாளர்.

௫௦,௫௨,௫௪, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

*With Best Compliments from :*

எல்லா வகையான பாடசாலை
உபகரணங்களும், பாட
புத்தகங்களுக்கும் நாடவேண்டிய
ஒரே இடம்




## பூபாலசிங்கம் புத்தகசாலை

இலக்கம் 04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

*With Best Compliments from :*

மோட்டார் சைக்கிள் அதன்
உதிரிப்பாக விற்பனையில்
தன்னிகரில்லாத தனிப்பெரும்
ஸ்தாபனம்

# அருள் விநாயகர்
# மோட்டோர்ஸ்

108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
கிளை : பிரதான வீதி, சங்கானை.

## அருள் விநாயகர் ரேடேஸ்

106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.





# மருதம்

இரும்பகம்
தொலைத் தொடர்பகம்
பதிப்பகம் (தனி) வரைவுள்ளது

நெ.ம.ம.வீதி. நெல்லியடி கரவெட்டி

TP : 070-212229, 070-212329
FAX : 070-212371